பேச்சொலியியல்

சி.சுப்பிரமணியன்



நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்

பேச்சொலியியல்

பேச்சொலியியல்

சி. சுப்பிரமணியன்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி
பாளையங்கோட்டை - 627 002

Publication No.	: 02
Title	: Peccoliyial (பேச்சொலியியல்)
Subject	: Linguistics : Phonology
Author	: Dr. S. Subrahmanyan
© Copyright	: FRRC
Edition	: First : February 1998
Published by	: Folklore Resources and Research Centre St. Xavier's College, Palayamkottai - 627 002 Tamilnadu, India
Printed at	: Multi Craft, Chennai - 600 004
Cover design	: Freelance, Nagercoil
Back cover portrait	: T. Purushotham
Type set at	: FRRC
Price	: Rs.150
Size	: 1/8 Demi
No. of pages	: xxii + 318
No. of copies printed	: 1000
Sponsored by	: Ford Foundation, U.S.A.

நன்றியுரை

திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலுள்ள தூய சவேரியார் கல்லூரி இன்றைக்கு ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளின் முன் நிறுவப்பெற்றுக், கல்விப் பணியால் நல்ல சமூகப் பணி செய்து வருகின்றது. இதன்கண் கற்றோர் உலக நாடுகளில் உயர் பதவியிலிருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கதொன்றாகும். தென்னாட்டுப் பகுதிகளில் இது ஒரு சிறந்த கட்டுப்பாடும், அமைதியும் நிறைந்த கல்லூரியாகத் திகழ்ந்து வருவது, நாடறிந்த நற்செய்தியாகும். இக்கல்லூரியிலமைந்த முதுகலை வகுப்புக்களுள் ஒன்றாகிய, நாட்டார் வழக்காற்றியல் துறை *(Department of Folklore)*, பத்து *(1987)* ஆண்டுகளின் முன் தொடங்கப் பெற்று, வெளிநாட்டாரும் போற்றும் வகையில் (ஒரு சிறந்த கலைப் பகுதி ஆய்வு மையமாக) வளர்ந்துள்ளது, பல வகையிலும் பாராட் டற்குரியது. கள ஆய்வாக நாட்டின் பல பகுதிகளிலும் சென்று, நாட்டார் வழக்காற்றுக் கலைகளைப் பதிவு செய்தும், மாணவர்களைப் பங்கெடுக்கச் செய்தும், மக்களோடு தொடர்பு வைத்தும் மேற் கொண்டுவரும் கலைப்பணி கண்டு, அமெரிக்கப் போர்டு நிறுவனம் *(Ford Foundation)* பெரும் பொருள் வழங்கி, அக்கலைக்கு ஊக்கங் கொடுத்து வருவது, இத்துறையின் உலகறிந்த உயர்ச்சியைத் தெரிவிப்ப தாகும்.

இத்தகைய வளர்ச்சிக்கு முதன்மையாக அமைந்தவர்கள், தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரிக் கலைமனைகளின் முன்னாள் அதிபர், அருள்திரு. ஜேம்ஸ் சே.ச. அவர்களும், முன்னாள் கல்லூரி முதல்வர், அருள்திரு. பிரான்சிஸ் எம். பீட்டர் சே.ச. அவர்களுமாவார்கள்.

இவ்வாய்வு மையத்தின் சிறப்பு நிலை இயக்குநர், பேராசிரியர், டாக்டர். எஸ்.டி. லூர்து அவர்கள் கலையார்வமும், கடுமுழைப்பும், செயல் திறனும், சிந்தனையுங் கொண்டு இவ்வாய்வு மைய வளர்ச்சிக்கு வழி வகுப்பவர். இவ்வாய்வுக் கலைத்தேர்வுக்கு மொழியியற் கலையும் ஒரு பகுதியாதலினால் அதன் கலை வகைகள் யாவும் அடங்கத் தமிழில் நூல் சில வரவேண்டுமென்று எண்ணிக் குறிப்பிடப்பட்ட இருவரையும் அணுகி வேண்டிக்கொள்ள, ஊக்கத்தோடு ஒப்புதல் அளிக்கப் பட்டது.

தொடர்ந்து, ஆய்வு மைய இயக்குநர், அருள்திரு. பிரான்சிஸ் ஜெயபதி சே.ச. அவர்களும், ஆய்வு மைய ஆசிரியர்களும் தெரிவிக்கப் பட்ட முடிவுக்கு முனைப்புக் கொடுத்தார்கள். இத்தகையோர் எல்லோர் எண்ணங்களையும் செயல்படுத்தச், சிறப்பு நிலை இயக்குநர், டாக்டர். எஸ்.டி. லூர்து அவர்கள், மொழியியற் பகுதிகளைத் தமிழில் நூலாக்கும் பொறுப்பினை என்னிடம் ஒப்படைத்தார்கள்.

இந்நூல் ஆக்கம் பெற்று வெளிவர, ஆர்வத்துடன் அனைத்து முயற்சியும் எடுத்து, நூல் சிறக்க, நுட்பத்துடன், சிந்தித்துச் செயல் பட்டார்கள் கலைமதியோடு வினைத் திறம் வல்ல இயக்குநர், அருள்திரு. பிரான்சிஸ் ஜெயபதி, சே.ச. அவர்கள்.

இப்பொறுப்பினைத் தந்து, ஊக்கமளித்த இக்கல்லூரிக் கலை மனை அதிபர், அருள்திரு. ஆல்பர்ட் முத்துமாலை சே.ச. அவர்கள், கல்லூரி முதல்வர், அருள்திரு. அந்தோணி எ. பாப்புராஜ் சே.ச. அவர்கள், செயலர், அருள்திரு. செபாஸ்டின் சே.ச. அவர்கள், ஆய்வு மைய இயக்குநர்கள், ஆசிரியர்கள், அமெரிக்கப் போர்டு நிறுவனத்தார் அனைவர்க்கும் என் உள்ளார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவை

நாகர்கோவில் **சி. சுப்பிரமணியன்**

நூலாக்க நன்றியுரை

இந்நூல் ஆக்கம் பெறப் பல்லாற்றானும் உதவியோர் பலர். அவருள், தட்டச்சு, கணிப்பொறி, வரைவு, பிழை திருத்தம், அச்சு முதலிய பணிகளைச் செய்துதவிய கீழ்க் குறிப்பிடப் படுவோர், சிறப்பாகக் குறிப்பிடத்தக்கோராவர். அத்தகையோர் அனைவர்க்கும் என் நெஞ்சங் கனிந்த நன்றியுணர்வினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டாக்டர் ஆ. தனஞ்செயன்
டாக்டர் ஆ. செல்லப் பெருமாள்
டாக்டர் நா. இராமச்சந்திரன்
டாக்டர் ஞா. ஸ்டீபன்
திரு. காட்வின்
திரு. பெனட்
திரு. பாஸ்கர்
திரு. சேவியர்
திருமதி. டெய்சி
செல்வி. விமலா
செல்வி. அருள்மேரி
திரு. மாரியப்பன்
அருள்திரு. ஆ. அந்தோணிசாமி சே.ச.
அருள்திரு. விக்டர் சே.ச.
அருள்சகோ. குழந்தைராஜ் சே.ச.
திரு. சி. மோகன்
திரு. தி. புருஷோத்தம்

இவை

ஆசிரியர்

நூன்முகம்

திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலமைந்த தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையச் சிறப்பு நிலை இயக்குநர் டாக்டர் எஸ்.டி. லூர்து அவர்களின் சிந்தனை வழியே தமிழில்,

1. ஒலியியல் (Phonology)
2. உருபனியல் (Morphology)
3. சொற்றொடரியல் (Syntax)
4. சொற்பொருளியல் (Semantics)
5. சூழ்பொருளியல் (Pragmatics)
6. சமூக மொழியியல் (Sociolinguistics)
7. கிளை மொழியியல் (Dialectology)
8. இரட்டை மொழியியல் (Diglossia)
9. இரு மொழியியல் (Bilingualism)
10. பன் மொழியியல் (Multilingualism)
11. இன மொழியியல் (Ethnolinguistics)
12. பேச்சு வினை (Speech Act)
13. பேச்சுக் கூறுபாடு (Discourse Analysis)
14. கலவைமொழி, கலவைத் தாய்மொழியாக்கம் (Pidginization and Creolization)
15. மொழிநடை (Language Style)
16. குறியியல் (Semiotics)

என்னும் தலைப்புக்களில் நூலாக்க முற்பட்டு, முதலதாகிய பேச்சொலி பன்னிரண்டு தலைப்புடன் இந்நூலாக வருகின்றது.

மொழி குறித்த சில செய்திகளை முதல் தலைப்பாகக் கொண்டு, அதன் ஒலி, பதினொன்று ஒலிப்பியல் (Phonetics) கூறுகளாக ஆக்கப் பட்டுத் தொடர, அமைந்துள்ளது. நூலில், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிவழியும் ஒலிப்பியல் விளக்கப்பட்டுள்ளது. வேண்டிய இடங் களில் பிற மொழிக் கூறுகளும் சுட்டப்படும். இன்றியமையாத இடங் களில் வரைவுகள் தந்தும், பிறர் கூற்றுக்களைக் குறிப்பிட்டும், துணை விளக்கம் செய்யப்பட்டும், புலப்பாட்டு (கேட்பு) ஒலிப்பியல் (Auditory Phonetics) தவிர எஞ்சிய ஒலிப்பியற் கூறுகளை உள்ளடக்கியது இந்நூல்.

இவை

ஆசிரியர்

பொருள் வகை

1. மொழி (Language)

1. 0.	*மொழி* (Language)	1
1. 1.	*உலக மொழிகள்* (Languages of the world)	1
1. 2.	*மொழிக்கிளைகள்* (Formal varieties of a language)	3
1. 3.	*மொழி, அடித்தளம்* (Language, the base)	4
1. 4.	*மொழியும், செய்திப் பரிமாற்றமும்* (Language and communication)	5
1. 5.	*பேச்சு மொழியும், எழுத்து மொழியும்* (Spoken and written languages)	6
1. 6.	*மொழியும், பேசுவோரும்* (Language and speakers)	7
1. 7.	*மொழியியலும், அணுகுமுறைகளும்* (Linguistics and approaches)	8
1. 8.	*மொழியின் செயல்கள்* (Functions of a language)	10
1. 9.	*மொழியுறுப்புக்கள்* (Constituents of a language)	11
1. 10.	*ஒலியியல்புகள்* (Features of sound/phone)	12

2. ஒலிப்பியல் (ஒலிப் பிறப்பியல்) (Genetic or physiological or articulatory phonetics)

2. 0.	*ஒலி* (Phone)	13
2. 1.	*ஒலிக்கூறு* (Phonic element)	13
2. 2.	*ஒலிப்பியல் வகை* (Classification of phonetics)	17
2. 3.	*மூளையும், பேச்சு மொழியும்* (Brain and speech)	18
2. 4.	*பிறப்பொலி, ஒலிப்பலையியல்கள்* (Articulatory and acoustic phonetics)	18
2. 5.	*உறுப்பும், செயலும்* (Organs and articulations)	19
2. 6.	*ஒலி (ஒலிப்பு) மாற்றங்கள்* (Sound (articulatory) changes)	27
2. 6. 1.	*துணைமைச் சாயல் திரிபுகள்* (Secondary modifications)	27
2. 6. 2.	*சூழ்நிலைத் திரிபுகள்* (Environmental modifications)	27
2. 6. 3.	*ஒலித்தோற்றத் திரிபுகள்* (Articulatory changes)	29
2. 7.	*ஒலிவகை* (Sound classifications)	29
2. 7. 1.	*இருவேறு ஒலிகள்* (Binary sounds)	30
2. 7. 2.	*மூவேறு ஒலிப்பியல்* (Three types of articulations)	31
2. 7. 3.	*தடையில் வாய்நடுவொலி/ தடையுடை வாய், மூக்கொலி* (Vocoids/nonvocoids or contoids)	32
2. 7. 4.	*ஒலிப்பிட ஒலிகள்* (Sounds, related to the points of articulation)	34
2. 7. 5	*ஒலியனும், ஒலிப்புக்களும்* (Phonemes and articulations)	35

2.7.6 ஒலிகள் - தமிழ் (Sounds in Tamil) 40
2.7.7 ஒலிகள், ஆங்கிலம், பொது (Sounds - English general) 41
2.7.8. தடையுடை, வாய், மூக்குவழி ஒலிகள்-அசையழுத்தம் இல்லன (Contoids-nonsyllabic) 47
2.7.9. ஒலி வேறுபாடு (Phonic difference) 48
2.7.10. தமிழொலிகளின் வகை (Categories of phones in Tamil) 49
2.7.11. ஒலிகள் - பொது (Phones - general) 50
2.7.12. ஒலிகள் - அருவழக்கின (Phones of rare occurrence) .. 51
2.7.13. இருவேறு ஒலிக்கூறுகள் (Binary phonic features)....... 55
2.7.14. ஒலித்தொடர்புகள் (Phonic relations) 57
2.7.15. ஒலியியல்பு விளக்கம் (Feature description of sounds) 58
2.7.16. ஒலித்தெளிவு, செறிவியல்புகள் (Acute and compact feature of sounds). 59
2.7.17. வாய்த் தடையும், ஒலியும் (Obstruction in the mouth and sound). 60
2.7.18. ஒலிக்குறிப்பு (Sound symbolism) 60
2.7.19. தடையொலிகளும், பிறப்பியல்பும் (Contoids and articulatory feature) 61
2.8. வாய்த் தடையில் ஒலிகள் (Vocoids/ vowels) 63
2.8.1. தனியொலி, கூட்டொலி (Single and compound sounds) ... 63
2.8.2. தடையில் ஒலியியல்பு (Vocoidal feature) 64
2.8.3. தடையில் ஒலிவகை (Categories of vocoids) 64
2.8.4. உயிரொலிப்பில் நாநிலை (Tongue position in the articulation of vocoids) 70
2.8.5. உயிரொலிப்பில் இதழ்நிலை (Lip position in the articulation of vocoids) 70
2.8.6. ஒலியலைச் செறிவு (Formants) 71
2.8.7. இணையுயிர் (கூட்டுயிர்) (Diphthongal vowel) 73
2.8.8. முக்கூட்டுயிர் (Triphthongal vowel) 75
2.8.9. உயிரும், ஒலியழுத்தமும் (Vowel and stress).................... 75
2.8.10. உயிரளவுகள் (Vowel dimensions) 76
2.8.11. சொல்லில் உயிரொலி (Vocalic unit in word) 83
2.8.12. உயிரொலி விளக்கம் (Description of vowels) 83

3. ஒலிப்பியல் அமைவு முறை (Phonetic system)
3.0. ஒலிப்பு (Articulation) 87
3.1. பேச்சும், தெரிவும் (Speech and perception).................... 87
3.2. ஒலிப்பு அடிநிலைக் கூறு (Phonetic element) 88
3.2.1 ஒலிப்பும், காற்றின் போக்கும் (Articulation and air stream).................... 89

3.2.2. இரட்டை ஒலிப்புக்கள் (முயற்சிகள்) (Double articulations) 92
3.2.3. இடமும், முயற்சியும் (Place and articulations) 93
3.2.4. வெடிப்பொலிகள் (Stops) 95
3.2.4.1. இடப்பெயர்ச்சியில் வெடிப்பொலிகள் (Place neutral stops) 95
3.2.4.2. இடப்பெயர்ச்சி வெடிப்பொலிகள் (Displaced stops) 96
3.2.4.3. 'ரகர' வெடிப்பொலிகள் (Rhotic stops) - ஒற்றொலி (Tapped), வருடொலி (Flapped), உருட்டொலி (Trilled or rolled stops) 96
3.2.4.4. கூட்டு வெடிப்பொலிகள் (Complex stops) 97
3.2.4.5. மெல்லண்ணத்தின் கீழ் வெடிப்பொலிகள் (Sub-velaric stops) 98
3.2.5. உரசொலி (Fricatives) 99
3.2.5.1. இடப்பெயர்ச்சியில் உரசொலிகள் (Place-neutral fricatives) 99
3.2.5.2. இடப்பெயர்ச்சி உரசொலிகள் (Displaced fricatives) 100
3.2.5.3. மூக்குரசொலிகள் (Nasal fricatives) 101
3.2.5.4. கூட்டுரசொலிகள் (Complex fricatives) 101
3.2.5.5. நடு, பக்க உரசொலிகள் (Central and lateral fricatives) 101
3.2.5.6. குழல், தட்டை வடிவ உரசொலிகள் (Grooved and slit or flat fricatives) 101
3.2.5.7. 'ரகர' உரசொலிகள் (Rhotic fricatives) 101
3.2.5.8. அசையழுத்த உரசொலி (Syllabic fricative) 101
3.2.5.9. புறமுந்துரசொலிகள் (Ejective fricatives) 101
3.2.6. தடையில்லொலிகள் (Resonants) 102
3.2.6.1. வாய் நடுவழித் தடையில் ஒலிகள் (Vocoids) 103
3.2.6.2. நிலை மாற்ற அல்லது போக்கு மாற்ற உயிரொலிகள் (Transitional vocoids) 103
3.2.6.3. மூக்குயிர்கள் (Nasal vocoids) 104
3.2.6.4. அதிர்வில் உயிர்கள் (Voiceless vocoids) 104
3.2.6.5. 'ஹிஸ்' உயிரொலிகள் (Whispered vocoids) 104
3.2.6.6. உயிர்ப் போலிகள் அல்லது உயிர்ச்சாயலின (Approximants). 105
3.2.6.6.1. 'ஹிஸ்' அல்லது உயிர்ப்பு உயிர்ப் போலிகள் (Whispered or breathed approximants) - [h̤]) 105
3.2.6.6.2. மூக்குயிர்ப் போலி (Nasal approximant) [(J̃, W̃)] 105
3.2.6.7. பிரிவளித் தடையில்லொலி (Lateral resonants [ℓ]) ... 105
3.2.6.7.1. வருடு பிரிவளியொலிகள் (Flapped lateral resonants [ʎ])... 111
3.3. ஒலிகள் (Phones) 111

4. அலை ஒலிப்பியல் (ஒலிப்பு அலையியல்) (Acoustic phonetics)

4.0.	ஒலியலை (Phonetic wave)	115
4.1.	ஒலியலைச்செலவு (Transmission of sound waves)	115
4.2.	அலையியல்புகள் (Wave features)	116
4.2.1.	இசையியல்பு (Musical feature)	119
4.2.2.	கேட்பலை (Auditory (hearing) waves)	121
4.2.3.	தனியலையும், கூட்டலையும் (Simple and complex waves)	122
4.2.4.	அதிரொலி அல்லது மீட்டொலி (Resonance)	124
4.2.5.	அலையதிர்வும், உச்சமும் (Frequency and amplitude)	125
4.2.6.	அலை வரைபடிவம் (Spectrum)	126
4.2.7.	ஒலியலைச் செறிவும், உயிரொலியும் (Formants and vocoids)	127

5. ஒலியனியல் (Functional phonetics or phonemics)

5.0.	ஒலியன் (Phoneme)	133
5.1.	ஒலிப்பியல்புகளும், ஒலியனும் (Phonetic features and Phoneme)	134
5.2.	ஒலியன் பகுப்பு முறை (Phonemic analysis)	137
5.3.	ஒலியனும், குறியும் (சொல்) (Phoneme and sign)	144
5.4.	ஒலியனின் உருவும், செயலும் (Phonemic form and function)	148
5.5.	ஒலிப்பியல்பு வேற்றுமை (Feature phonetic difference)	151
5.6.	ஒலியன், முதன்மையும், துணைமையும் (Phoneme, primary and secondary)	152

6. இயல்பு (வேறுபாட்டியல்பு) ஒலிப்பியல் (Feature (distinctive) phonetics)

6.0.	ஒலிப்பியல்பு/வேறுபாட்டியல்பு (Phonetic feature/ Distinctive feature)	155
6.1.	வேறுபாட்டியல்புகளும், வேறுபாட்டுக் கூறுகளும் (உறுப்புக்கள்) - (Distinctive features and distinctive components).	156
6.2.	ஒலியும், ஒலியனும் (Phone and phoneme)	156
6.3.	இருவேறு முரண்பாடுகள் (Binary oppositions)	158
6.4.	வேறுபாட்டியல்புகள் (Distinctive features)	163
6.4.1.	வேறுபாட்டியல்புகளின் திரள்கள் அல்லது ஒலியன்கள் (Bundles of distinctive features or phonemes)	163
6.4.1.1.	ஒலிப்பு விளக்கம் (Articulatory definition)	165
6.4.2.	ஒலிப்பியல்புகளும், வேறுபாட்டியல்புகளும் (Articulatory/phonetic features and distinctive features)	167

6.4.3 வேறுபாட்டியல்பு வகை (Categories of distinctive features) 167
6.4.4. அடித்தள இயல்புகள் (Primes or primary features) ... 168
6.4.5. அடித்தள இயல்பு வகை (Categories of primes) 168
6.4.5.1. இயல்பு விளக்கம் (Feature definitions) 169

7. ஒலி, ஒலியன் (வேறுபாட்டியல்பு) அமைவுமுறை (Phonemic (distinctive feature) system)
7.0. ஒலி/ ஒலியன் தொடரியல்பு (Syntagmatic feature of phoneme) 173
7.1. சேர்க்கைத்தொடர் (Syntagmatic sequence) 173
7.2. இடைமுறிவுகள் (Pauses or junctures) 175
7.3. ஒலியன் அமைவு முறையும், வழங்கியலும் (Phonemic system and distribution) 175
7.4. ஒலியன் தொடர்க் கட்டுப்பாடு (Redundancy in phonemic sequence) 178
7.5. ஒலியன் சேர்க்கைக் கூறுகள் (Phonemic groups) 179
7.6. இன்னொலியன்கள் (Tonemes) 179
7.7. தமிழ் ஒலியன் வழங்கியற் கட்டுப்பாடு (Redundancy in phonemic distribution in Tamil) 180
7.8. அசை (Syllable) 182
7.8.1. சொல்லும், அசையும் (Word and syllable) 182
7.8.2. ஒலிப்பசை (Phonetic syllable) 182
7.8.3. ஒலியனசையும், அமைவும் (Phonemic syllable and structure) 184
7.8.4. அசையும், இன்னோசையியல்புகளும் (Syllable and prosodic features) 186
7.8.5. அசையும், ஒலியன்களும் (Syllable and phonemes) 188
7.8.6. அசை வகைகள் (Syllable-types) 188
7.8.7. அசை - திறப்பு - அடைப்பு (Syllable - open - closed) 189
7.8.8. தமிழில் அசை (Syllable in Tamil) 190
7.8.9. அசைகளிடை, அசையில் ஒப்பீடு (Intersyllabic and intrasyllabic comparison) 190
7.8.10. அசையுருவும், செயலும் (Syllable - form and function) 191
7.8.11. அசையில், முதன்மையும், துணைமையும் (Syllable, primary and secondary) 193
7.8.12. அசைப்புற மெய் (Extra syllabic consonant) 195

8. இன்னிசை ஒலிப்பியல் (Prosodial phonetics)
8.0. ஒலியிசை (Phonetic tone) 197
8.1. கால அளவு (Duration or quantity) 198
8.2. ஒலியழுத்தம் (Stress) 201
8.2.1. ஒலியழுத்த அமைவு (Stress feature or formation) 202

8.3. புணர்முறிவு (சந்தி) - (Juncture) 206
8.4. இன்னோசை (Intonation) 208
8.4.1. இன்னோசையமைவு (Intonational feature or formation) . 208
8.4.2. இன்னொலியதிர்வெல்லை (Pitch-range) 213
8.4.3. இன்னொலியமைவுகள் (Pitch patterns) 215
8.4.4. இன்னொலி, இன்னோசை முறைமைகள் (Tone and intonational systems) 217
8.4.5. தமிழில் ஒலியழுத்தம், இன்னோசை (Stress and intonation in Tamil) 221

9. புணரொலிப்பியல்(Combinatory phonetics or phonetics of juncture or transition)

9.0. ஒலிப்புணரியல்பு (Phonetic combinatory feature) 223
9.1. புணரியல்பும், மாற்றுருபும் (Combinatory feature and allomorphs) 223
9.2. புணரியல் மாற்றங்கள் (Combinatory changes) 225
9.2.1. ஒன்றாதல் (Assimilation) 227
9.2.1.1. இறுதி திரிபு (Anticipatory or regressive assimilation) 228
9.2.1.2. முதல் திரிபு (Preservative or progressive assimilation) 229
9.2.1.3. இறுதி முதல் திரிபு (Coalescent or reciprocal assimilation) 229
9.2.1.4.1. சேய்மை நிலை ஒலி மாற்றம் (Distant assimilation) உயிர் மாற்றம் (Vowel change) 230
9.2.1.4.2. மெய்ம் மாற்றம் (Consonantal change) 230
9.2.1.5. சிறப்பில் ஒலி மாற்றம் (Negligent assimilation) 231
9.2.2 வேறாதல் (Dissimilation/differentiation). 231
9.2.3. வேறாதல் - உயிர் (Differentiation - vowel) 232
9.2.4. மிகுதல் அல்லது தோன்றல் (Addition) 232
9.2.5. இரட்டித்தல் (Gemination) 233
9.2.6. குன்றல் அல்லது கெடுதல் (Elision or omission) 233
9.2.7. இடப்பெயர்ச்சி (Inversion or metathesis) 233
9.2.8. மரூஉ (Haplology or hapaxepy) 234
9.2.9. வழுக்கொலியாதல் (Gliding or linking) 234
9.2.10. கூட்டுயிராதல் (Crasis or synaeresis) 235
9.2.11-23. இரண்டு ஒன்றாதல் (Fusion) 235
9.2.24. இதழ்ச்சாயல் (Labialisation) 237
9.2.25. பற்சாயல் (Dentalisation) 238
9.2.26. பல்முகட்டுச்சாயல் (Alveolarisation) 238
9.2.27. அண்ணச்சாயல் (Palatalisation) 238
9.2.28. வளைநாச்சாயல் (Retroflexion) 238
9.2.29. மெல்லண்ணச்சாயல் (Velarisation) 239
9.2.30. மூக்குச்சாயல் (Nasalisation) 239

9. 2. 31 *தமிழொலி மாற்றம்* (Change of phones in Tamil) 240

10. **வரலாற்று முறை (காலநிலை) ஒலிப்பியல்** (Historical or diachronic (evolutionary) phonetics)

10. 0. *ஒலியும், காலமும்* (Phone and temporal factor) 243
10. 1. *கூட்டொலி ஓரொலியாதல்* (Fusion) 243
10. 2. *ஓரொலி கூட்டொலியாதல்* (Fission) 244
10. 3. *கலத்தல் அல்லது இணைதல்* (Merger) 244
10. 4. *பிளவுபடல் அல்லது இரண்டாதல்* (Split) 245
10. 5. *மாறுதல்* (Shift) 246

11. **ஒலியும், வரியும்** (Phone and graph)

11. 0. *பொருள் வரி அல்லது உருபனெழுத்து* (Ideograph or morphemic writing) 247
11. 1. *பொருளொலி அல்லது ஒலிக்குறிப்பு* (Ideophone or sound symbolism) .... ?48
11. 2. *ஒலியனெழுத்து* (Phonemic transcription) 250
11. 3. *மாற்றொலியெழுத்து* (Allophonic transcription). 251
11. 4. *ஒலிப்பெழுத்து* (Phonetic transcription) 252
11. 5. *சொல்லொலிப்பு முறை எழுத்து* (Canonical transcription) 252
11. 6. *எளிய வரியும், ஒப்பியல் வரியும்* (Simple and comparative transcriptions) 252
11. 7. *கால அளவு வரியும், தரங்குறிவரியும்.* (Quantitative and qualitative transcriptions) 253
11. 8. *உலக ஒலிப்பியல் வரி* (International Phonetic Alphabet) .. 253

12. **ஒலியியல் முடிவுகள்** (Phonic conclusions) 255

துணை நூற்கோவை 257

Index - Authors 259

கலைச்சொற்கோவை 261

சொற்பொருட்கோவை 281

வரைவுகள்

1.	செய்திப்பரிமாற்றம்	5
2.	அசைக் கூறாக்கும் காற்றறைகள்	20
3.	ஒலித்தசை இயக்கங்கள்	21
4.	வாயுறுப்புக்கள்	22
5.	மேல்வாய்ப்பகுதிகள்	22
6.	இதழமைவுகள்	23
7.	உயிர்ப்பு உறுப்புக்கள்	24
8.	காற்றொலி உறுப்புக்கள்	25
9.	ஒலிப்புறுப்புக்கள்	26
10.	ஒலிக்கூறு - ஒலிப்பு வேறுபாடு	28
11.	[ப்] / [P] - ஒலிப்பு	35
12.	[b]	35
13.	[ம்] / [m]	35
14.	[f]	36
15.	[வ்] / [v]	36
16.	தட்டைவடிவ உரசொலி	36
17.	[த்] / [t]	36
18.	[d]	36
19.	[ந்] / [n]	36
20.	[ற்]	37
21.	[ன்]	37
22.	[ல்] / [l]	37
23.	[ர்] / [r]	37
24.	உயிர் [ற்] உயிர்	37
25.	[ட்]	37
26.	[ண்]	37
27.	[ள்]	38
28.	[ழ்]	38
29.	குழல் வடிவ உரசொலி	38
30.	[ச்]	38
31.	[ஞ்]	38
32.	[s]	39
33.	[z],[ய்] / [y]	39
34.	[க்] / [k]	39
35.	[g]	39
36.	[ங்] / [ŋ]	39
37.	ஒலிகள் - தமிழ்	40
38.	ஒலிகள் - ஆங்கிலம்	41

39. ஒலிகள் - பொது 42,43
40. Non-vocoids - Pike 44
41. Consonants - I.P.A. 45
42. Contoids - Brakel 46
43. இணை, தனி ஒலிகள் - தமிழ் 50
44. பிரிவளியொலி - இருபக்கச்செலவு 50
45. பிரிவளியொலி - ஒருபக்கச்செலவு 50
46. தாழ்குரலொலி 54
47. ஒலித்தொடர்புகள் 58
48. ஒலித்தெளிவு, செறிவு (மெய்) 59
49. தடையொலிகளும், பிறப்பியல்பும் 61,62
50. மூவுயிர் வகை 65
51. தெளிவு, செறிவு - உயிர் 67
52. நாவின் எழுச்சியில் முன், பின் நான்கு நிலைகள் 68
53. அடிப்படையுயிர் (Cardinal vowels) 69
54. உயிரொலிப்பில் நாநிலை - Ladefoged 70
55. உயிரொலிப்பில் இதழமைவுகள் - Malmberg 70
56. ஒலியலைச் செறிவு நிலை (1 & 2) 72
57. ஒலியலைச் செறிவு - அ, இ, உ. 72
58. கூட்டுயிர் - ஒலிப்பிடப் பெயர்ச்சி - Jones 75
59. உயிரொலி இதழமைவு அளவுகள் 78
60. Vocoids / vowels - Gleason 80
61. " - Jakobson 80
62. " - Pike 81
63. " - Brakel 81
64. Vocoid chart - I.P.A. 82
65. Cardinal vowels - primary and secondary 82
66. Vocoid space - Catford and Laver 82
67. Vocoids - Laver 82
68. வரைவு விளக்கம் -உயிரொலி 85
69. Phases of segmental performance - Laver 89
70. Place of articulations - consonants - Laver 94
71. ஒலிப்பின் இடைநிலைத் தோற்றம் 98
72. உயிரொலிப்பிடம் - Abercrombie - cited by Laver and Heffner 102
73. போக்குமாற்ற உயிரொலிப்பு 103
74. வெடிப்பொலி, உரசொலி, உயிரொலி, உயிர்ப்போலிகள் - Laver 106 -108
75. Lip position 109
76. ஒலிப்புக்கள் 113
77. ஒலியலைச்செலவு 116
78. ஒலியலைவட்டம் 116
79. மடிவொழுங்குடை அலையோட்டம் 117

80.	இன்னொலியலைக்கவடு	118
81.	தேய்ந்துமாயும் ஒலியலை	119
82-85.	முதல், அதன் பகுதிகளின் அலையதிர்வு	120
86.	கேட்பலை - Malmberg and Ladefoged	121
87.	கலவையலை	122
88.	அலையுச்ச வேறுபாடு - Ladefoged	125
89.	Schematic spectrogram - Gleason	125
90.	Broad band spectrograms of the English vowels - Gleason	126
91.	மீட்டலை வளைவு	126
92.	மூன்று வேறு அலைகளின் கலவை ஒலியலைப் படிவம்-Ladefoged	127
93.	மூன்று ஒலியலைகள் - அலைவட்டம்	127
94.	மூவேறு மீட்டொலி செய்வன- Ladefoged	128
95.	உயிரொலிகளும், 1, 2 அலைச்செறிவுகளும் - Gleason	129
96.	ஒலிப்பியல்பும், ஒலியனும்	137
97.	அசை - திறப்பு / அடைப்பு	189
98/99.	இன்னொலி அதிர்வெல்லை	214
100.	இன்னொலித் தொடர்ச்செலவு	215
101/102.	இன்னொலியமைவுகள்	216
103.	தாழ்படி முறை - இன்னொலி	218
104.	உயர்படி முறை - இன்னொலி	218
105.	தாழ்சர்ப்புமுறை - இன்னொலி	218
106.	இன்னோசைத் தொடர் முடிவுகள்	219
107.	இன்னொலி வடிவங்கள் (இன்னோசையின்) Laver	220


The phonetic alphabet of the International Phonetic Association

CONSONANTS

	Bilabial	Labiodental	Dental	Alveolar	Postalveolar	Retroflex	Palatal	Velar	Uvular	Pharyngeal	Glottal
Plosive	p b			t d		ʈ ɖ	c ɟ	k g	q ɢ		ʔ
Nasal	m	ɱ		n		ɳ	ɲ	ŋ	ɴ		
Trill	ʙ			r					ʀ		
Tap or Flap				ɾ		ɽ					
Fricative	ɸ β	f v	θ ð	s z	ʃ ʒ	ʂ ʐ	ç ʝ	x ɣ	χ ʁ	ħ ʕ	h ɦ
Lateral fricative				ɬ ɮ							
Approximant		ʋ		ɹ		ɻ	j	ɰ			
Lateral approximant				l		ɭ	ʎ	ʟ			
Ejective stop	pʼ			tʼ		ʈʼ	cʼ	kʼ	qʼ		
Implosive	ɓ̥ ɓ			ɗ̥ ɗ			ʄ̊ ʄ	ɠ̊ ɠ	ʛ̥ ʛ		

Where symbols appear in pairs, the one to the right represents a voiced consonant. Shaded areas denote articulations judged impossible.

VOWELS



Where symbols appear in pairs, the one to the right represents a rounded vowel

OTHER SYMBOLS

ʍ	Voiceless labial-velar fricative	ʘ	Bilabial click
w	Voiced labial-velar approximant	ǀ	Dental click
ɥ	Voiced labial-palatal approximant	ǃ	(Post)alveolar click
ʜ	Voiceless epiglottal fricative	ǂ	Palatoalveolar click
ʢ	Voiced epiglottal fricative	ǁ	Alveolar lateral click
ʡ	Epiglottal plosive	ɺ	Alveolar lateral flap
ɕ ʑ	Alveolo-palatal fricatives	ɧ	Simultaneous ʃ and x
ɜ	Additional mid central vowel		

Affricates and double articulations can be represented by two symbols joined by a tie bar if necessary   k͡p t͡s

DIACRITICS

̥ Voiceless	n̥ d̥	̹ More rounded	ɔ̹	ʷ Labialized	tʷ dʷ	̃ Nasalized	ẽ
̬ Voiced	s̬ t̬	̜ Less rounded	ɔ̜	ʲ Palatalized	tʲ dʲ	ⁿ Nasal release	dⁿ
ʰ Aspirated	tʰ dʰ	̟ Advanced	u̟	ˠ Velarized	tˠ dˠ	ˡ Lateral release	dˡ
̤ Breathy voiced	b̤ a̤	̠ Retracted	i̠	ˤ Pharyngealized	tˤ dˤ	̚ No audible release	d̚
̰ Creaky voiced	b̰ a̰	̈ Centralized	ë	̴ Velarized or pharyngealized	ɫ		
̼ Linguolabial	t̼ d̼	̽ Mid-centralized	e̽	̝ Raised	e̝ (ɹ̝ = voiced alveolar fricative)		
̪ Dental	t̪ d̪	̩ Syllabic	n̩	̞ Lowered	e̞ (β̞ = voiced bilabial approximant)		
̺ Apical	t̺ d̺	̯ Non-syllabic	e̯	̘ Advanced Tongue Root	e̘		
̻ Laminal	t̻ d̻	˞ Rhoticity	ə˞	̙ Retracted Tongue Root	e̙		

SUPRASEGMENTALS

ˈ	Primary stress	ˌfoʊnəˈtɪʃən
ˌ	Secondary stress	
ː	Long	eː
ˑ	Half-long	eˑ
̆	Extra-short	ĕ
.	Syllable break	ɹi.ækt
|	Minor (foot) group	
‖	Major (intonation) group	
‿	Linking (absence of a break)	
↗	Global rise	
↘	Global fall	

TONES & WORD ACCENTS

LEVEL			CONTOUR		
e̋ or	˥	Extra high	ě or	˩˥	Rising
é	˦	High	ê	˥˩	Falling
ē	˧	Mid	e᷄	˦˥	High rising
è	˨	Low	e᷅	˩˨	Low rising
ȅ	˩	Extra low	e᷈	˧˦˧	Rising-falling etc
↓		Downstep			
↑		Upstep			

1 மொழி (Language)

1.0. மொழி (Language)

உலகின் ஏறத்தாழவுள்ள ஐந்நூற்று அறுபத்தேழு கோடி மக்கள், ஐயாயிரம் அளவிலான மொழிகளைப் பேசி வருகின்றனர். முன் பேசி மறைந்த மொழிகள் பல. மறைந்து கொண்டிருப்பன சில. பேசி வரும் மொழிகளிலிருந்து கிளை மொழிகளாக இடத்தால், இனத்தால், உரு மாறி வருவன எண்ணிறந்தன. பேசி வரும் ஒரு மொழியிடையே, காலத்தால், இடத்தால், மொழியின் ஒலியில், இலக்கணத்தில், சொல்லில், தொடரில், பொருளில் அமைந்து வரும் மாற்றங்கள் அளவிடற்கரியன. உலகியற்கையாகிய மாற்றம் மொழியிலும் காணப் படுவது இயல்பு. மொழிகளினிடையே கடன் பெறுதலும், கலப்படை தலும் அவற்றின் நடைமுறையாகும். எல்லாப் பேச்சு மொழியும் ஒலியால் அமைவன. ஒலி, மூச்சு அல்லது உயிர்ப்புக் காற்றால் உருவாகு வது. இத்தகைய ஒலி (Sound) உலகப் பொருளைக் (Meaning) குறிப்பது. ஒலி பொருளைக் குறிக்க மொழியாகின்றது. எனவே, மொழியில் ஒலிக்கும், பொருளுக்கும் உள்ள தொடர்பு, குறிப்பிடத்தக்கதொன்று. இது காலப்பழக்கத்தால் அமைவது. மொழி என்பது, குறிகளின் (Signs) கூட்டமைப்பு. இத்தகைய ஒவ்வொரு குறியும் (Sign or signum) ஒலி வடிவு (Sound form or signifier or signans), பொருள் (Meaning or signified or signatum) ஆகிய இரு கூறுகளுடன் அமைவது - (Jakobson, R., 1990:50).

1.1 உலக மொழிகள் (Languages of the world)

மொழியின் ஒலி, குரல்வளை (Larynx) தொடங்கி, வாய், மூக்களவில் உருவாகுவது. இது, உலக மொழிகள் அனைத்திற்கும் அமையும் பொதுவியல்பு. இருப்பினும், உலக மொழிகளிடையே, ஒப்புமைக் கூறுகளோடு (Similarities) வேற்றுமைக் கூறுகளும் (Dissimilarities) பலவாகும். உலக மொழிகள் அனைத்திலும், உயிர், மெய் ஒலிவகை களும், உயிரில் அகரமும், மெய்யில் ககரமும், சொல்லில் பெயர், வினைகளும், பிறபலவும் மொழி உலகத்துவமாகக் (Language universals) காணப்படுகின்றன. ஒரு சில நீங்க, உலக மொழி அனைத்திலும் அகர, இகர, உகர உயிர் மூன்றும் ககர, தகர, பகர மெய்ம் மூன்றும் காணப்படுகின்றன. இருப்பினும், இவை போன்றனவே தவிர, இவையே அல்ல. ஏனெனில், ஒரு மொழியின் ஓர் ஒலிக் கூறு, மற்றொரு மொழியில் அவ்வாறே இருக்கும் என்பதில்லை.

இத்தகைய உலக மொழிகள் பலவற்றிடையே, ஒலிக் கூறுகள், சொற்கள், இலக்கணம் முதலானவற்றால் காணும் ஒற்றுமைகள் பல.

இவ்வொப்பாய்வால் (Comparative study) இவை பல தம்முள் தொடர்புடையன எனக் கண்டு, வரலாற்றாய்வால் (Historical study) அவை ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகள் எனக் கருதப்படுகின்றன. இதன் மாறாக, வரையறைப்படுத்திக் கூற முடியாதவாறு, எவ்வகையிலும் சொல்லத்தக்க தொடர்பில்லாது, தனி மொழிகளாகக் காணப்படுவன பல. ஆக, உலக மொழிகளைக் குடும்ப மொழிகள், தனி மொழிகள் என இரு வகை செய்து காணலாகும்.

இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பமும் (Indo-European family of languages), சீன-திபெத்திய மொழிக் குடும்பமும் (Sino-Tibetan family of languages) பேரளவு மக்கள் தொகையுடையன. இவற்றுள், முன்னையதற்கு, நெடுங்கால வரலாறு, இடையீடின்றிக் காணக் கிடக்கின்றது. இது ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா, ஆத்திரேலியா முதலியவற்றில் பேசப்பட்டு வரும் குடும்ப மொழியாகும். இக்குடும்பத்தைச் சார்ந்த பழைமையான மொழிகளாகக் குறிப்பிடத்தகுந்தன கிரேக்கம், இலத்தீனம், அவத்சன், சமக்கிருதம் என்பன. இவை ஒருவாறு வழக்கிழந்தன. இன்று வழங்குவன செர்மானிக் (Germanic), உரொமான்சு (Romance), கெல்டிக் (Celtic), சிலேவிக் (Slavic), இரானியன் (Iranian), இந்திக் (Indic) எனும் சிறு குடும்பங்களாக வகை செய்யப்பட்ட மொழிகள். பிறவுமாம். அவை, செர்மன், ஆங்கிலம், பிரெஞ்சு, ஐரிசு, உருசியன், பாரசீகம், இந்தி முதலாயின. வட இந்திய மொழிகள் அனைத்தும் இக்குடும்பத்தைச் சார்ந்தனவே.

சீன-திபெத்தியக் குடும்ப மொழிகள் சீனம், திபெத்தன், பர்மன், தாய் முதலியன ஆசியாவின் தென் கீழ்ப்பகுதி நாடுகளில் பேசப்பட்டு வருகின்றன.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலாகிய தமிழ் அல்லது திராவிடக் குடும்ப மொழிகள் (Dravidian languages) பெரிதும் தென்னிந்தியாவில் பேசப்பட்டு வருகின்றன.

செமித்தோ-அ(ஹ)மித்திக் (Semito-Hamitic) அல்லது ஆப்பிரிக்க ஆசியக் (Afro-Asiatic) குடும்ப மொழிகள், பெரிதும், ஆப்பிரிக்காவின் வடபகுதிகளிலும், ஆசியாவின் தென் மேற்குப் பகுதிகளிலும் பேசப்பட்டு வருகின்றன. அகாடியன் (Akkadian or Assyrian or Babylonian), சுமேரியன் (Sumerian) மொழிகள் செமித்திக் குடும்பத்தைச் சார்ந்த பழைய மொழிகளாகக் கருதப்படுகின்றன. இவை இன்று வழக்கிழந்தன. எபிரேயம் (Hebrew), அராபியம் (Arabic) முதலியன செமித்தியக் குடும்பத்தைச் சார்ந்த இன்றைய மொழிகள். எகிப்தியன் (Egyptian), பெர்பர் (Berber), குசிட்டிக் (Cushitic), சாட் (Chad) முதலியன அ(ஹ)மித்திக் குடும்பத்தைச் சார்ந்தன. இவை நான்கும் பழம் பெருங்குடும்ப மொழிகள்.

யுரால்-ஆல்தாயிக் (Ural-Altaic) குடும்ப மொழிகளில் பின்னிசு (Finnish), எச்டோனியன் (Estonian), ஹங்கேரியன் (Hungarian), சமாய்டு

(Samoyed) முதலியன, யுராலிக் குடும்பத்தையும், டர்க்கி (Turkish), மங்கோல் (Mangol), துங்கூச் (Tungus), மஞ்சு (Manju) முதலியன, ஆல்தாயிக் குடும்பத்தையும் சார்ந்து, ஆசிய, ஐரோப்பியப் பகுதிகளில் பேசப்பட்டு வருகின்றன.

மலேயோ-பாலினேசியன் (Malayo-Polynesian) குடும்பத்தைச் சார்ந்தனவாக மலாய் (Malay), இந்தோனேசியன் (Indonesian), மலகசி (Malagasy), ஆ(ஹ)வாயன் (Hawaiian) முதலியன, ஆசியத் தென் கிழக்குக் கடற் பகுதிகளில் பேசப்படுகின்றன.

ஆச்திரோ-ஏசியாதிக் (Austro-Asiatic), காக்கேசியன் (Caucasian) முதலிய சிறு குடும்ப மொழிகள் சில. சாப்பனீசு (Japanese), கொரியன் (Korean) ஒருவாறு தம்மில் தொடர்புடையன.

இத்தகைய பெரிய, சிறிய குடும்ப மொழிகள் தவிர, ஆசியா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் ஆயிரக்கணக்கான மொழிகள், தனி மொழிகளாகக் காணப்படுகின்றன. தொடர்பும் பல மொழிகளில் உள்ளன.

1.2. மொழிக்கிளைகள் (Formal varieties of a language)

உலகக் குடும்ப மொழிகள் பல கால, இட அகற்சியால் வெவ்வேறு தனிமொழிகளாகப் பிரிந்துள்ளமை போன்று, இன்று காணப்படும் ஒவ்வொரு தனி மொழியும், வெவ்வேறு நிலைகளில், வெவ்வேறு கிளைகளாகப் பிரிந்து செயல்படும் இயல்பினது. சொல்லாலும், இலக்கணத்தாலும் கட்டுக் கோப்பு உடையதாகி, உயர்தர மொழி யாகப் (*Langue* or Language of competence), பொது மக்கள் பேச்சு மொழியாக (*Parole* or Language of performance) இருவகைப்பட்டுச் செயல்படும் மரபுடையன. இவ்வகைப்படினும், இரண்டும் இணைந்து ஒன்றையொன்று தழுவியே மேற்கொள்ளப்பெறும். எழுத்து மொழி, பேச்சு மொழி எனினும் ஒருவாறு அமையும். இலக்கிய மொழி, நடைமுறை மொழி அல்லது செய்யுள் வழக்கு, உலகவழக்கு (செய்யுள், வழக்கு) எனினுமாம்.

செந்தமிழ், கொடுந்தமிழ் என்பன போல, எழுத்தில் அல்லது பேச்சில் அல்லது அவ்விரு நிலையிலும், ஒலியால், சொல்லால், இலக்கணத்தால் ஒழுங்குபடச் செவ்விய வடிவுடன் (Formal) அமைவது ஒன்று. மாறாகக் குறிப்பிடப்பட்ட நிலையில் ஒழுங்கின்றி, வடிவின்றி (Informal) அமைவது மற்றையது. இவ்வகையில் ஒரு மொழியே, செம்மொழி, கொச்சை மொழி என இரு வடிவுடன் (Diglossia or diglossic variants) அமைவதும் மொழியியல்பாகும்.

ஒரு மொழி, இடம் (space) குறித்த நிலையில் அல்லது வெவ்வேறு வட்டார அளவில் ஒலி, சொல், இலக்கணம் முதலானவற்றில் ஒரு வகையில் திரிந்து, திசை மொழிகள் அல்லது வட்டாரக் கிளை மொழிகள் (Geographical dialects) எனும் நிலையில் வேறுபடுதலுமாம்.

மக்கள் இன அடிப்படையில், ஒவ்வொரு கூட்டத்தார் பேசும் வகை மொழியாகக் குறிப்பிடப்பட்டவற்றில் வேறுபட்டு, சமூகக் கிளை மொழிகள் (Social dialects or sociolects) என (வேறுபட்டு) வழங்கலு மாகும்.

இவையன்றி, நகர்ப்புற மக்கள் வழக்கு, நாட்டுப்புற மக்கள் வழக்கு, சமுதாய மேல்நிலையார், இடைநிலையார், தாழ்நிலையார் வழக்கு, கற்றோர், கல்லார் வழக்கு, அறிவுப் பணியார், உடற்பணியார் வழக்கு, ஒவ்வொரு வகைப் பணியாளர் வழக்கு, தொழிலாளர் வழக்கு, ஆடவர் வழக்கு, பெண்டிர் வழக்கு, முதியோர் வழக்கு, மழலையர் வழக்கு என, ஒரு மரம், அதன் கிளை, கொப்பு முதலியன போல, ஒன்று பலவாக ஒவ்வொரு நிலையில் வேறுபடக், கிளையாக அமைய வழங்குதல் ஒரு மொழி இயல்பு.

தனி மனிதன் பேசும் மொழியே (Idiolect) ஒரு தனிக் கூறுடையது. அவன் ஒவ்வொரு காலத்தில் (Time), ஒவ்வோரிடத்தில் (Space), ஒவ்வொரு பணியில் (Trade), ஒவ்வொரு மனநிலையில் (Mood) பயன்படுத்தும் மொழியில் வேறுபாடு பல. மொழி என்பது ஒருவன் அல்லது ஒருத்தி மட்டும் பயன்படுத்துவதன்று. பலர் பயன்படுத்துவது; பலருடையது; அவரவர் இயல்புக்குத்தக்கவாறு வேறுபடும். இவ்வா றிருப்பினும், இவையாவும் அமைய, அதுவொரு மொழி.

1.3. மொழி, அடித்தளம் (Language, the base)


இத்தகைய மொழியே மனிதனை விலங்கு முதலிய உயிரினங் களிலிருந்து வேறுபடுத்தியது. மக்கள் மன வளர்ச்சிக்கும், நாகரிகத் திற்கும், பண்பாட்டிற்கும் அடித்தளமாக இருந்து வருகின்றது. மக்கள் மேற்கொள்ளும் எல்லாக் கலைகளும் இதன் வழியே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. காலந்தோறும் வளர்ந்து வரும் கலைகள், அவற்றின் விளைவாகிய அறிவின் தோற்றங்கள் இதனால்தான் பதித்து வைக்கப்படுகின்றன. மக்களினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. வருங்கால மக்கள் வாழ்வு வளமாகச், சேர்த்து வைக்கப் பெற்ற கலைக் களஞ்சியமாகக் கருவியாகின்றது. மனிதன் ஆக்கி வளர்த்த கலைகளுள் மொழிக்கலையும் ஒன்று. எறும்பு, தேனீ, நாய், குரங்கு, யானை முதலிய பிற உயிரினங்களும் தம்மிடையே கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்கின்றனவாயினும் அதுவொரு சிறிய அளவிலேயேயாகும். மாறாக, மனிதன் கருத்துப் பரிமாற்றக் கலையில், அளவிட முடியாத அகற்சி, உயர்ச்சி அமைந்துள்ளன.

மனிதன் மண்ணில் மகவாகத் தோன்றியதும் கை, கால் அசைத்துச் செயல்பட்டுத், தொடர்ந்து அழுகைக்குரல் எழுப்புகின்றான். இத்தகைய குரலே, காலஞ் செல்லச்செல்ல, ஒலியியல் வேறுபடப், பழக்கத்தால் வேறுபட்ட பொருளோடு தொடர்புற்று, எண்ணிறந்த ஒலியியல் வேறு பாடும், அவை குறிக்கும் பொருள் வேறுபாடுமாக வளர்ந்து வந்துள்ளது. இது மொழியின் முதனிலை வளர்ச்சி. இன்று

ஒரு மகவு, மொழி வளர்ந்த சூழலில் பிறந்து வளர்கின்றது. எனவே, வளர்ந்த மொழியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதற்குக் கிடைக்கின்றது. ஆகவே, பல காலந்தொடர்ந்த மக்கள் வாழ்க்கையில் மெல்ல வளர்ந்து தவழும் மொழி வளர்ச்சி போலல்லாது, வளர்ந்து நிறைந்த மொழிச் சூழலில், தோன்றிய மகவு, பெற்றோர், மற்றோர் உதவியால், ஏறத்தாழ ஓராண்டில் பேசத் தொடங்கி ஒருவாறு ஐந்தாண்டிற்குள் மொழிக் கலையில் முழுமை பெற்றுவிடுகின்றது. இது தனி ஒருவரது *மொழி* (Idiolect) *வளர்ச்சி வரலாறு* (Linguistic ontogeny).

1.4. மொழியும், செய்திப் பரிமாற்றமும் (Language and communication)

மக்களிடையே செய்திகள் பல வகையில், பல வழியில் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. மக்கள் கூடி வாழ்வோராதலினால் எப்போதும் ஒருவர் ஒருவரோடு கருத்து அல்லது செய்திப் பரிமாற்றம் செய்து கொள்ளும் இயல்பினர். பேசுவதும், கேட்பதும், புரிந்துகொள்வதும், மீண்டும் கேட்போர் பேசுவதும், பேசியோர் கேட்பதும், புரிந்து கொள்வதும், நடைமுறை வாழ்வியல். இவற்றிடையே செல்லும் செய்தியைப் புரிந்து கொள்ளுதல் மட்டுமன்றிச், செய்திப் பரிமாற்றம் செய்வானையும் அல்லது அவன் உள்ளத்தை(உணர்வை)யும் புரிந்து கொள்கின்றனர். எனவே, மொழி, மக்களிடையே அறிவு, உணர்வுப்



செய்திப்பரிமாற்றம்

பரிமாற்றத்திற்கு வழியாகின்றது. இரு நிலையிலும், பின்புல அடித்தளமாக இருந்து பணியாற்றுவது, தலை அல்லது மூளை. பேச்சன்றிப், பிற பலவும் செய்தியைத் தெரிவிக்கின்றன. எழுத்து அல்லது வரி, ஓவியம், தீ அல்லது ஒளி, புகை, ஊதத்தொலி (Whistle language), சைகை, மணியொலி, கம்புகளில் வெட்டுக்கள், கயிறுகளில் முடிச்சுக்கள், தோற் கருவிகளில் ஒலி எழுப்புதல், முகபாவனைகள், வரைபடங்கள் அல்லது வரைகோடுகள் முதலியன செய்தியைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தலை வணங்குதல், கைகுவித்தல், கை கொடுத்தல், கை கொட்டுதல், விளையாட்டில்,

ஊர்திகளில் ஊதொலி, கண் காட்டுதல், கை காட்டுதல், தலையசைத்தல், பெருவழிக் குறிகள், கோயில் மணி, மிதிவண்டி மணி முதலிய பல நம் நடைமுறைச் செய்தித் தெரிவிப்புக்கள். மெக்சிகோ மெசடெக்கோ (Mazateco) இந்தியர், ஊதொலிப் பேச்சைப் (Whistle talk) பயன் படுத்துகின்றனர். கானரித் தீவுக்கூட்டங்களில் ஒன்றான கொமேராத் தீவில், ஊதொலியே (Whistle language) பேச்சு மொழிபோல் பயன் படுத்தப்படுகின்றது - (Hockett, Charles, F., 1970 : 545; Cowen George, M., 1964 : 305). இது போன்றே சைகை மொழி(Gesture language)யும் பல கூட்டத்தினரால் பயன்படுத்தப்படுகின்றது. ஆயிரக்கணக்கில் சைகைக் (செய்கை) குறிகளும், பொருட் குறிப்புக்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. நம்மிடையே பேச இயலாதோர், செய்கை அல்லது சைகையாலேயே கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்கின்றனர். இத்தகைய சைகை, நாம் பேசும் போது, பேச்சுக்குத் துணை நின்று பொருளைப் புலப்படுத்துவது, தவிர்க்க முடியாத துணைச் செயலாகும்.

1.5. பேச்சு மொழியும், எழுத்து மொழியும் (Spoken and written languages)

பேசல், கேட்டல், புரிதல் போல எழுதல், படித்தல், புரிதலும் ஒரு நிலை. இந்நிலை உலகின் பெரும் பகுதிகளுக்கு இன்றில்லை. உலகின் முன் பேசி மறைந்த பல மொழிகளின் எழுத்து வடிவங்கள் உள. ஆயின், மாறாக, இன்று பேசப்பட்டு வருவனவற்றில், ஆயிரக்கணக்கான மொழிகள் எழுத்துருவம் பெறாத நிலையில் உள்ளன. ஆகவே, எல்லா மொழிகளும் பேசப்பட்டு வருவன, எழுதப்பட்டு வருவன என்றில்லை. உலகில் பேச்சு மொழி முந்தியது. எழுத்து மொழி பிந்தியது. ஓவியத்தில் தொடங்கி வளர்ந்த எழுத்து மொழி வேறு, பேச்சு மொழி வேறு என்ற நிலை ஒரு காலத்தது. பேச்சை எழுத முடியாத நிலை மாறி, இன்று பேச்சை அவ்வாறே எழுதும் கலை வளர்ந்துள்ளது, குறிப்பிடத்தக்க ஓர் இணைவாகும்.

பொருளை ஓவியமாக வரைந்து காட்டினர். சீனாவில் எழுத்தின் தொடக்கம் இது. அமெரிக்கா முதலிய நாட்டுப் பழங்குடி மக்களிடமும் இம்முறை காணப்படுகின்றது. இதனை ஓவிய எழுத்து (Picture writing or Pictograph) என்றனர். பொருளை நேரே குறித்து வந்த ஓவியம், பின் பொருளைக் குறிக்கும் சொல்லுக்காகியது. தொடர்ந்து, இவ்வோவியம் சிறிது திரிந்து, உருபன் (Morpheme) அல்லது மிகக் குறைந்த அளவுள்ள பொருள் நிலையால், மேலும் பகுக்க முடியாத, ஒரு பொருள் ஒரு சொல்லுக்காகியது. இது உருபனெழுத்து (Morphemic writing or Ideograph) எனப்பட்டது. இதுவே ஒரு வகையில் அசையெழுத்து (Syllabic writing) என்றும் ஆகியது. இம் முறை மூன்றும் சீன மொழியில் உள்ளன.

பின், பொனீசியாவில் (Phoenicia) மெய்யொலிகளுக்கு மட்டும், ஓரொலியனுக்கு ஒரு வடிவம் (One phoneme-One grapheme) கொடுத்

தெழுதப் பெற்றது. இதனை அடியொற்றிக் கிரேக்க நாட்டில் உயிரொலியன், மெய்யொலியன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் எழுத்து வடிவம் கொடுக்கப் பெற்று ஒலியன் எழுத்து முறை (Phonemic writing or alphabetic writing) உருவாகியது. இதைத் தொடர்ந்து, ஒலிப்பது போல் எழுதும் முறை தொடங்கி மாற்றொலிகளுக்கும் (Allophones) எழுத்து வடிவங்கொடுத்து, ஒலிப்பு முறை எழுத்து (Phonetic writing) உருவாகியது. இது மிக நுண்ணிய எழுத்து முறை. மொழியியலார் மேற்கொள்வது. ஆயின், பொது மக்கள் எழுத்து முறை, ஒலியன் எழுத்து முறையே (Phonemic writing). இதனால், பேசும் பேச்சை அவ்வாறே தொடர்ந்து எழுதும் முறை வளர்ந்து, பேச்சும், எழுத்தும், காதுக்கும், கண்ணுக்கும் அமைந்த மொழியின் ஒலி, வரி ஆகிய இரு வடிவங்கள் என்றாகிவிட்டன. இரண்டன் வேறுபட்ட நிலை நீங்கி, இரண்டும் இணைந்து, ஒன்றன் இரு முகங்கள் அல்லது இரு வடிவங்கள் என்ற நிலைக்கு வந்துவிட்டது. இதனால், பேச்சொலியை வரி வடிவில் அல்லது எழுத்தில் பதித்து வைக்கும் கலை வளர்ந்து விட்டதனால், அகத்தில் உருவானதை, ஒலியால் வெளிப்படுத்தலாம் அல்லது வரியில் பதித்து வைக்கலாம். இரு வடிவங்களாயினும், பொது மக்களின் வாழ்க்கையின் அன்றாடப் பழக்கத்தில், பெரிதும் பங்கெடுப்பது, பேச்சு மொழியேயாதலால், மொழி என்பதன் முதலிடம், பேச்சு மொழிக்கேயாகும்.

ஒருவர் பேசியதை அவ்வாறே அம்மொழிக்கமைந்த எழுத்தில் எழுதுவதும், ஒரு மொழிப் பதிவை அவ்வாறே படியெடுத்தெழுதுதலும், எழுத்துப் பெயர்த்தல் (Transcription). ஒரு மொழி ஒலியை அல்லது வரியை வேறொரு மொழி ஒலி முறையில் எழுதல், ஒலி பெயர்த்தல் (Transliteration). ஒரு மொழியை வேறொரு மொழியில், பொருண் முறை ஒலியில் அல்லது எழுத்தில் வழங்கல், மொழிபெயர்த்தல் (Translation) என, வரியில், ஒலியில் பெயர்த்தல் மேற்கொள்ளப் பெறும்.

1.6. மொழியும், பேசுவோரும் (Language and speakers)

ஒரு சிலரே பேசும் மொழிகளும் உள. எண்ணிறந்தோர் அல்லது கோடிக்கணக்கான மக்கள் பேசும் மொழிகளும் உள. அமெரிக்க இந்திய மொழியாகிய, சிதிமசா(Chitimacha)வைப் பேசுவோர் இருவரே இருந்தனர். யுகோசுலேவியாவில், உரோமான்சு மொழிகளில் (Romance languages) ஒன்றாகிய டால்மாசியன் (Dalmacian) மொழியைப் பேசியவர்களில் இறுதியாக இருந்த ஒருவர் 1898-ஆம் ஆண்டு நடந்த சுரங்க வெடிப்பில் இறந்தார் - (Hockett, C.F., 1970 : 8, 9). அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆத்திரேலியாவில் வாழும், பல பழங்குடி மக்கள் தம் மொழியைப் பேசுவோர், ஊரளவில் அல்லது நூறளவிலேயே உள்ளனர். சீன மொழி ஒரு மொழி என்று கூறவொண்ணாதாயினும், நெருங்கிய தொடர்பால், ஒருவாறு ஒரு மொழி எனக் கூறுமளவில் அதனைப் பேசுவோர் நூறு கோடியளவுள்ளனர்.

ஒருவர் ஒரு மொழி பேசுவது இயல்பான பெரும்பான்மை நடைமுறை. ஒருவரே பல மொழி பேசுதலும் வாழ்வியல். பல நாடுகளில் ஒரு மொழி பேசுதலும், ஒரு நாட்டில் பல மொழி பேசுதலும் உலகியல். இரு மொழி இடை வரை ஓரங்களில் வாழ்வோர் இரு மொழியிலும் பயிற்சியுடையோர் ஆவர் (Bilinguals). இவ்வாறே, பன் மொழியிடைப் பட்டோரும் பன் மொழிப் பயிற்சியினர் (Multilinguals or polyglots) ஆவர். இந்நிலையன்றி, அரசியல், வாணிபம், தொழில், சமயம், படைச்செலவு, கல்வி முதலானவற்றால் பல மொழியினர் கலந்து வாழும் சூழ்நிலையும் ஏற்படும். இதனால், மொழிகள் பல நிலையில் கலப்படையும். கடன் பெறும். கலவைச்சாயல் பெறும்.

இந்தியாவில் திராவிட மொழிகள் (Dravidian languages), இந்தோ-ஐரோப்பிய மொழிகள் (Indo-European languages), ஆத்திரோ-ஆசியாதிக் (Austro-Asiatic languages) அல்லது அவற்றின் ஒரு கூறாகிய மூண்டா மொழிகள் (Munda languages), சினோ-திபெத்தன் மொழிகள் (Sino-Tibetan languages) என நான்கு குடும்ப மொழிகளும், பழங்குடி மக்கள் மொழிகளாகிய சிறு கூட்டத்தார் மொழிகளும், பெருந் தொகையினர் மொழிகளுமாக, ஏறத்தாழ ஆயிரத்திருநூறு மொழிகள் தொண்ணூற்றெட்டுக் கோடி மக்களால் பேசப்பட்டு வருகின்றன. இவற்றுள் மொழிகள் என்று குறிப்பிடத்தக்கன, ஏறத்தாழ இருநூற்றளவில், பதினெட்டு, நாட்டு மொழிகள் (National languages) எனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

1.7. மொழியியலும், அணுகுமுறைகளும் (Linguistics and approaches)

மொழிகள் குறித்த கலை, மொழியியல். அதனை, அதன் புற நிலையிலும் (External), அகநிலையிலும் (Internal) ஆக இரு நிலையிலுமாக அணுகிக் கற்கலாகும். இரு நிலைகளும், அதனதன் உள்வகை அணுகுமுறைகளைக் கொண்டன. மொழியியலைப் பிற கலைகளோடு இணைத்துக் காண்பது புறநிலை. அதனையே வேறுவேறு பார்வையில் காண்பது அகநிலை.

மொழியியலைப் பிற கலைகள் வழியாகப் பார்த்தலும், பிற கலைகளுக்கு மொழியியலின் பயன்பாடு தெரிதலும், பிற கலைகளோடுள்ள மொழியியலின் தொடர்பும், சாயலும் அறிதலும், மொழியியலில் பிற கலைகளின் பங்கினைக் காணலும், மக்கள் வாழ்வில் இக்கலைகளின் கூட்டு நடையைப் புரிதலும், பிறவும் மொழியியலைப் புறநிலைப் பார்வையில் காண உதவும்.

மனிதனைக் குறித்த மொழியியல் (Anthropological linguistics), மனிதவினம் குறித்த மொழியியல் (Ethnolinguistics or folk linguistics), மனித சமூகம் குறித்த மொழியியல் (Sociolinguistics) இவை மூன்றும், ஒரு வகையில் ஒரு பார்வையுடையனவாயினும் தனிமனிதன், பழங்குடிகள், வேறு வேறு மக்களினம் கூடிவாழும் சமூக அமைப்பு என்ற வகை நிலையில் வேறுபடக் காண, அவை மூன்று வேறு பார்வை

யினைப் பெறும். இம்மூன்று வேறு நிலையில், மொழியியற் கலையும் பாகு பெறும். குறி (Sign) குறித்த குறியியல் (Semiotics), செய்திப் பரிமாற்றம் (Communication) முதலிய மொழியியற் கூறுகள் அடிப் படையில் இவற்றை வேறுபடக் காணல் இயலும்.

இவ்வாறே பொருளாதாரம் (Economics) வழி வாணிபம், பண்ட மாற்று முதலானவற்றில், குறிகள் (Signs) முதலிய மொழியியற் கூறுகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்று காணும் கலையும் ஒன்று. தத்துவம் (Philosophy) அடிப்படையிலும் மொழியியல் தத்துவங்களை வகை செய்து கூறலாகும்.

உளவியல் (Psychology) பாங்கில், மொழியில் உணர்ச்சிக் கூறுகள் (Emotional aspects), பேசுதலில், புரிதலில் உள்ள கோளாறுகள் (Aphasia) முதலானவற்றை வரையறை செய்தல், உளவியல் சார் மொழியியற் கூறுகள் (Psycholinguistics) எனப்படும்.

மொழியைப் பேசுதல், கேட்டல்/எழுதல், படித்தல், இவ்விரு நிலை யிலும் புரிதல், மொழியல் குறிகளை (Non-linguistic signs) வெளிப் படுத்தல், அறிதல், புரிதல், செவியிலிருந்து மூளைக்குச் செல்லும் ஒலிப் பொருளியலை (Auditory Phonetics) ஏற்று விடை கொடுத்தல் முதலான மொழியியற் கூறுகளில், மூளை அல்லது நரம்பு மண்டலத்தின் பங்கினைப் புலப்படுத்துவது, நரம்பியல்சார் மொழியியற்பகுதி (Neuro linguistics).

கணிதம் வழி, மொழியியல் விதிகள், வரை படங்கள், ஒலியமுத்தம், ஒலி நீட்சி, இன்னோசை முதலியன வரையறை செய்தல், மொழியின் காலமறிதல் முதலியன, கணிதவியல் சார் மொழியியற்கூறு (Mathematical linguistics).

பேச்சின் ஒலியலைக் கூறுகள் (Acoustic or physical phonetics), ஒலியின் பிறப்புக் கூறுகள் (Articulatory or physiological phonetics) இவை முறையே இயற்பியல் (Physics), உடலியல் (Physiology) இவற்றின் இயைபினைத் தெரிவிக்கின்றன. இத்தகைய பார்வைகள் பிற கலை வழி மொழியியற் பார்வைகளாகும்.

பிற கலை நீங்க, மொழியியலை அதன் நிலையில் நின்று பார்க்கும் பார்வை, அகநிலை அணுகும் முறையாகும். அதனையும், வேறு வேறு நோக்கில் காண, வேறு வேறு கலைப்பகுதிகளாகும்.

மொழியை நெடுங்காலம் அல்லது வரலாற்றுப் பார்வையில் பார்ப்பது வரலாற்றுமுறை மொழியியல் (Historical or diachronic linguistics). மொழியின் மாற்றக் கூறுகள் இதன்கண் முதலிடம் பெறும். இம்மொழி வரலாறு (Linguistic phylogeny) அகம், புறம் என இருவகைப் பார்வையுடையது.

குறிப்பிட்ட ஒரே காலநிலையில், அதன் மொழியமைப்பைப் பார்ப்பது, விளக்கமுறை மொழியியல் (Descriptive or synchronic linguistics). மொழியின் கூறுகள் இதன் கண் முதலிடம் பெறும்.

ஒரு மொழியை அதன் இன மொழியோடு ஒப்புக் காண்பது, ஒப்பீட்டு முறை மொழியியல் (Comparative linguistics). இதன்கண் ஒற்றுமைக் கூறுகள் முதன்மை பெறும்.

ஒரு மொழியை வேற்று மொழியோடு ஒப்பிட்டு முரண்பாடுகளை அல்லது வேற்றுமைக் கூறுகளைக் காண்பது, முரண்பாட்டு மொழி யியல் (Contrastive linguistics). இதன்கண் வேற்றுமைக் கூறுகள் முதன்மை பெறும்.

1.8. மொழியின் செயல்கள் (Functions of a language)

பேச்சு மொழி அல்லது பேச்சு, ஆறு கூறுகளையும், ஆறு செயல் களையும் கொண்டது. பேசுவோர் (Addresser), கேட்போர் (Addressee), சூழ்நிலை (Context), செய்தி (Message), தொடர்பு (Contact), செய்திக் குறித்தொடர் (Code) என்பன ஆறு கூறுகள் (Factors). பொருளைக் குறித்தல் (Referential), பேசுவோர் உணர்ச்சியைக் குறித்தல் (Emotive), இன்னோசையைக் குறித்தல் (Poetic), கேட்போர் செயல் தூண்டல் குறித்தல் (Conative), பேச்சினால் உணர்வுத்தொடர்பு குறித்தல் (Phatic), பேச்சு (மொழி) தன்னைக் குறித்தல் (Metalingual) என்பன ஆறும் பேச்சின் செயல்கள் (Functions). இவற்றுள் செய்திக்குறித்தொடர் (Code) செய்தியைக் (Message) குறிக்கும் செயல் (Referential or ideational), பேச்சு மொழியில் முதன்மை பெறுகின்றது - (Jakobson, R., 1990: 73, 77). குறிமுறை, பேச்சு வழியன்றிப் பிற வகையிலுமாம்.

மொழியில் செய்திக்குறித்தொடர் (Code) ஒலி வடிவாயது. இத் தகைய ஒலி வடிவம் (Form or expression), செய்தி (Message) அல்லது பொருளைக் (Content or meaning or worldly object) குறிப்பதே அதன் முழு முதற் பணியாக, மொழியின் பணியும் அதுவேயாகின்றது. மொழியென்பது குறிகளின் கூட்டமைப்பு.

பொருள் குறிக்கும் குறி குறித்த கலை, குறியியல் (Semiotics) எனப்படும். இதனுள் சிறந்த பகுதி, மக்கள் மேற்கொள்ளும் இயற்கை, செயற்கை மொழிக் (Natural and non-natural or artificial languages) குறிகளாகும். இவை பேச்சு, எழுத்து மொழி (Linguistic), அவையல்லாத சைகை (செய்கை), கண்சாடை முதலியன (Non-linguistic) என இரு வகையின. இவ்விரண்டனுள் முன்னையன, சொல்லை (Verbal), சொல்லல்லாத (Non-verbal) இன்னோசை, ஒலியழுத்தம் (Intonation and stress) முதலியவற்றைக் குறிகளாகக் கொண்டு பொருள் குறிப்பன வாகும். இவ்விரண்டனவற்றுள் பேச்சுமொழி சிறப்பிடம் பெறுகின்றது.

இக்குறியியல் மூன்று வகையது.

1. ஒரு குறியின் (Sign) மற்றொன்றோடாகிய தொடர்பினைக் குறிப்பது, குறித்தொடரியல் (சொற்றொடரியல்) (Syntax/Syntactics).

2. இக்குறிக்கும், பொருளுக்கும் (உலகப் பொருள்) ஆகிய தொடர் பினைக் குறிப்பது, குறித்தொடர்ப்(மொழி)பொருளியல் (சொல்,

தொடர்ப் பொருளியல் (Semantics)). நேர்பொருள் (Direct meaning), தெரிநிலைப் பொருள், செம்மொழியின் (Langue) சொற்றொடர்ப் (Sentence) பொருள், பொதுநிலைப் பொருள் குறிப்பது என்பதுமாம். இது சூழ்நிலைக் கட்டற்றது (Context free).

3. இக்குறிக்கும், பேசுவோர், கேட்போர் (பரிமாற்றத்) தொடர்பினாலாகிய உய்த்துணர் பொருளுக்கும் உள்ள தொடர்பு குறிப்பது (பழக்க வழக்கம், பண்பாடு, குணவியல்பு முதலியன பின்புலமாக), பேச்சுக் குறித் தொடர்ப் பொருளியல் (Pragmatics). சூழ்நிலைப் பொருள், சூழ் பொருள், குறிப்புப் பொருள் (Indirect meaning), பேச்சின் (Parole) கிளவிப் (Utterance) பொருள், சிறப்பு நிலைப் பொருள் குறிப்பது என்பதுமாம். இது சூழ்நிலைக் கட்டுற்றது (Context bound).

ஆக, மொழி என்பது, ஒலி, பொருள் (Sound and meaning or form and content) ஆகிய இரண்டன் இணைவேயாகும். இத்தகைய மொழியின் இரு கூறுகளும், தம்மில் பல உட்கூறுகளை உடையன. அவை மொழியில் மீண்டும், மீண்டும் வருமியல்பின. பல கட்டுக் கோப்புக்களோடு, விதிகளுக்கு உட்பட்டு, ஒழுங்கும், சில ஒழிபும் கொண்டு வருவன. இவற்றின் பின்னலும், பிணைப்பும் ஒரு சொற் கலைக் கோவையாகத் தோன்றும். இத்தகைய கோவையே மொழி - (Gleason, Jr. H.A., 1970 : 3).

1.9. மொழியுறுப்புக்கள் (Constituents of a language)

மொழியின் ஒலி, பொருள் ஆகிய இரு கூறுகளுள், ஒலிக்கூறு, முழுமையும் (Whole), உறுப்பும் (Parts) ஆகத் தொடர்ந்து செயல் படுவன. பேச்சில் அல்லது மொழியில், கிளவி (Utterance) அல்லது சொற்றொடர் (Sentence) முதனிலை முழுமையுடையது. இதன் உறுப்பு, சொல் (Word). அதன் உறுப்பு, உருபன் (Morpheme). இவை மூன்றும் பொருட் குறிப்புடையன.

உருபனின் உள்ளுறுப்பு, ஒலியன் (Phoneme). இது, மேலன மூன்றையும் போன்ற பொருட் குறிப்பு இல்லது. ஆயின் மேலன மூன்றும் பொருள் குறித்தலுக்கு உயிர்நிலை உறுப்பாக அமைவது. இவற்றின் நிலையும், கூட்டமுமே, மேலன மூன்றன் பொருட் குறிப்பாற்றலாகும். பொருட் குறிப்பில்லாத ஒலித் துணுக்கின் அல்லது உறுப்பின் நிலையும், இணைவுமே மேல் மூன்று முழுமையின் ஒலி வடிவும் (Sound or form), பொருள் (Meaning or content) குறித்தலு மாகும். இதனால், அடிநிலை உறுப்பாகிய ஒலியனின் (Phoneme) இன்றியமையாமை தெரிய வரும். ஆகப் பொருட் குறிப்பில்லாத ஒலியனே (Phoneme), அதன் இணைவே மொழியாகும். ஒலியன், உருபன், சொல், தொடர், மொழியில், கீழ்நோக்கிய நிலையில் ஒன்றற்கு ஒன்று உறுப்(சினை)பாகும். மேல்நோக்கிய நிலையில், மொழி வரை, ஒன்றற்கு ஒன்று முழுமை(முதல்)யாகும் - (Jakobson, R., 1990 : 63). ஒலியனும், தன் உள்ளீடுகளையுடையது. அவை, ஒலியனியற் கூறுகள்

(Distinctive features) எனப்படும். அவை உயிரொலிக் கூறு (Vocalic), மெய்யொலிக் கூறு (Consonantal), வெடிப்பொலிக் கூறு (Plosive), உரசொலிக் கூறு (Continuant or fricative), மூக்கொலிக் கூறு (Nasal), வாயொலிக் கூறு (Oral), செறிவொலிக் கூறு (Compact), சிதர்வொலிக் கூறு (Diffuse), தெளிவொலிக் கூறு (Acute), தெளிவில்லொலிக் கூறு (Grave), இறுகொலிக் கூறு (Tense), நெகிழொலிக் கூறு (Lax), (நீளொலிக் கூறு-குறுகொலிக் கூறு), இதழ் விரிவொலிக் கூறு (Flat), இதழ் குவிவொலிக் கூறு (Non-flat or rounded) முதலியன, பிறவுமாம். இவற்றின் கூட்டாகிய ஒலியனும் (Phoneme), மொழியின் பிற ஒலிக் கூறுகளினின்றும் வேறுபட்ட ஒலியியற் கூறு (Distinctive feature) எனப்படும் - (Bloomfield, L., 1995: 79 & Jakobson, R., 1980: 14, 33, 40).

மொழியின் அடிக்கூறுகளாகிய ஒலியியற் கூறுகள் (Distinctive features) அல்லது, ஒலியன்கள் (Phonemes) இரண்டு வகைப்படும். (1) முதலுறுப்புக்கள் அல்லது அகநிலை உறுப்புக்கள் அல்லது பகுப் புடைக் கூறுகள் (Primary or inherent or internal or segmental phonemes or features) (2) துணையுறுப்புக்கள் அல்லது புறநிலை உறுப்புக்கள் அல்லது பகுப்பில் உறுப்புக்கள் (Secondary or superposed, external or suprasegmental phonemes or features). இது, ஒலியழுத்தம் (Stress), இன்னோசை (Pitch or intonation), கால அளவு (Duration), தொடரிடை யீடு (Juncture) முதலிய வகைகளைக் கொண்டு, இன்னோசைக் கூறுகளாக (Prosodic features) வரும்.

பகுப்புடை ஒலியன்கள், தனி நிலையில் நின்றும் (Isolation), தொடர் நிலையில் நின்றும் (Sequence) விளக்கம் பெறும். ஆயின், பகுப்பில் ஒலியன்கள், தொடர் நிலையில் நின்றே விளக்கம் பெறும்.

1.10. ஒலியியல்புகள் (Features of sound / phone)

மொழியொலிகள், பேசுவோரது உயிர்ப்பு அல்லது மூச்சுக் காற்றில் பிறப்பன. ஒலியலைகளாகச் செவியில் சென்று, மூளை செல்லப் பொருள் விளக்கம் பெறும். ஒலிக் கூறுகளின் தொடரில், ஒலிக் கூறுகள் வேறுபடப் பொருள் வேறுபடும். ஒலிக் கூறுகள், பெரிதும் உயிர், மெய் போன்று முரண்பட்ட இரு கூறுகளை உடையன. ஒலிக் கூறுகள் இணைவில் ஒலி மாற்றங்கள் ஏற்படுவதியல்பு. கால நிலையில் மாற்றங்கள் ஏற்படுவதுமாம். ஒவ்வொரு மொழிக்கும் ஒலிக்கூறுகள் வேறுபடும். மொழியில், முதல், இடை, கடையில் ஒலி நிலைகள் வேறுபடும். ஒலியை வரியில் பதித்தலும் ஆகும்.

ஒலியியற் கூறுகளின் (Distinctive Features) கூட்டு அல்லது கட்டே (bundle) ஒலியன். ஒலிப்பு வேறுபாடுகளின் (Phonetic variants) அல்லது இடத்தால் ஆகும் ஒலிப்பு வேறுபாடுகளின் (Positional or Allophonic variants) கூட்டு அல்லது கட்டுப் பொதுமையே ஒலியன் என்பாருமாம். ஒலித்தொடர் அல்லது கூட்டு அல்லது கட்டில் உறுப்பாகுவதே ஒலியன் என்பதுமாம். மொழி ஒலியியல் இவை.

2 ஒலிப்பியல் (ஒலிப் பிறப்பியல்) (Genetic or physiological or articulatory phonetics)

2.0. ஒலி (Phone)

சொல்லின் (Morphemic word or word) அல்லது மொழியின் (Language) முதல் நிலை அல்லது அடித்தளமாக அமைவது, ஒலிக்கூறு அல்லது ஒலியன். அது ஒலியணுக்களின் கூட்டு (Bundle) அல்லது அணுத்திரள் ஒலி எழுத்து (Phoneme) எனப்பட்டது. பொருட் குறிப்பில்லாத இத்தகைய மொழியொலிக் கூறு, தன்னுள், பல உறுப்புக்களை (Components or distinctive elements or features) உடையது எனக் குறிப்பிடினும், அவை ஒலியனது உறுப்புக்கள் அல்ல; அதன் இயல்புகள் அல்லது குணவியல்புகள் (Characteristic properties) என்பதே அமைவுடையது என்பர் சிலர் - (Sebastian, Shaumyan, 1987 : 65). ஆக, ஒலியன் ஒரு மொழியின் அடிக்கூறன்று. அதன் உறுப்பு களாகிய (Components) ஒலியியற் கூறுகளே (Distinctive features), மொழியின் அடிக்கூறு என்பதும், மொழியின் அடிக்கூறு ஒலியன் களே (Phonemes). ஒலியியற் கூறுகள் (Distinctive features) அவற்றின் குணவியல்புகளே (Characteristic properties or features) என்பதுமாகிய இரண்டு கொள்கைகள் உள. எவ்வாறாயினும், பொருட் குறிப்புடைய மொழியின் முதனிலை உறுப்புப் பொருட் குறிப்பில்லாத, வாய்ப் பிறப்புடைய ஒலியன் (Phoneme); இதன் தொடரே மொழி என்பதே மொழியியலின் முதன்மையான கொள்கை.

2.1. ஒலிக்கூறு (Phonic element)

இதன்மாறாக, மொழியில் ஒலியன் என்பது கற்பனைப் படைப்பே (Subjective)யன்றி, உண்மையான பொருட்படைப்பு (Objective) அன்று. ஒலித் தொடரில் இத்தகைய பாகுபாட்டிற்கு இடனில்லை. எனவே, மொழியில் ஒலியன்கள் என்ற உறுப்பில்லை என்பதும் ஒரு சிந்தனை. இவ்வாறிருப்பினும், இன்றைய உலக மொழிகளில், மரபு நிலையாக, இத்தகைய கூறுகள் கருதப்பட்டுக், கற்கப்பட்டு வருகின்றன. இன்றைக்கு, ஏறத்தாழ, மூவாயிரம் ஆண்டுகளின் முன்பிருந்தே, இத்தகைய ஒலிக்கூறுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடன்றி, அவை உயிர் (Vowels), மெய் (Consonants) என வேறுபட்ட இரு கூறுகளாகவும் வகை செய்யப்பட்டுள்ளது, வரலாற்று முறை மொழி யியல் பார்வையாகும்.

உலகில் எங்கும் நிறைந்துள்ள சத்து அல்லது சத்தி (Energy) தானே, உலகிலுள்ள எல்லாப் பொருளுமாக வெவ்வேறு உருக் கொண்டுள்ளது. ஓடும் மின்சாரம் தானே, ஒளிப் பொருளாக மாறும் கண்ணாடிக் கலன்களுக்குத் தக்கவாறு உருக்கொள்கின்றது. உயிர்ப்பு அல்லது மூச்சுக்காற்று, உட்கொள்ளும்போது, நுரையீரலில் (Lungs), அதன் அறைகளுக்குத் தக்கவாறு உருக் கொள்கின்றது. இவை போன்றே, நுரையீரலிலிருந்து வெளிவிடும் மூச்சுக் காற்றுக் குரல்வளையில் குரலாகிக் குரல்வளை (Larynx), தொண்டைக்குழி (Pharynx), வாய் (Mouth), மூக்கு (Nose) இன்னோரன்ன அறைகளின் அளவு, வடிவு, அவற்றில் ஏற்படும் தடை, விடைகளுக்கு ஏற்றவாறு உருக்கொள்கின்றது. ஆகக், காற்றே ஒலியாகி, உருக் கொள்கின்றது. மக்கள் பேச்சுக் காற்று, ஒலி, உரு எனும் மூன்று நிலைகளை உள்ளடக்கியது. இத்தகைய ஒலியுரு, தன்னிலையிலிருந்து அடுத்த நிலைக்குச் செல்லும் போது பொருளைக் குறிக்கின்றது; பொருளைக் குறிக்க உதவுகின்றது. அது தன்னிலையில் பொருட் குறிப்பில்லாதது. எனவே, தொடர்நிலையில் பொருளைக் குறிக்கின்றது; குறிக்க உதவுகின்றது. பொருளோடு தொடர்புற்ற நிலையாகிய பொருட்டொடர் நிலையிலும், பிற ஒலியோடு தொடர்புற்ற நிலையாகிய ஒலித் தொடர் நிலையிலும் பொருளைக் குறிக்கின்றது; குறிக்க உதவுகின்றது. இவ்விரு நிலையும், மொழியின் சில கட்டுக்குள்ளமைந்த மொழி முறையைப் பின்பற்றியமைவன. தன்னிலையாகிய தனிநிலையில் நிற்கப் பொருளைக் குறியாது, ஒலியளவாகவே நிற்பது. அடுத்த நிலையாகிய, சொல் நிலையடையப் பொருளைக் குறிக்கின்றது.

எ - டு :

1. ஆ- தன்னிலையில் உயிரொலி- சொல் நிலையாகிய அடுத்த நிலையில் 'ஆன்' என்னும் விலங்கின் பொருளைக் குறிக்கின்றது. இது பொருட்டொடர் நிலைப் பொருட்குறிப்பு. ஒலித் தொடர் நிலை இல்லது.

2. ஆல்- இரண்டொலிகள் தொடர்ந்து, ஒவ்வொன்றும் பொருளைக் குறிக்கத் தொடர் நிலையில் உதவியது. எனவே, இது ஒலித் தொடர் நிலைப் பொருட் குறிப்பு. ஆகப் பேச்சு மொழியில், ஒலிகளுக்கு இரு நிலைகள் உள. ஒன்று ஒலி நிலை. மற்றையது பொருள் நிலை அல்லது பொருட்குறிப்பு நிலை.

ஒலியின் தனி நிலைப் பொருட் குறிப்பு ஒருசிலவே. ஒலித் தொடர் நிலைப் பொருட் குறிப்பே மொழியில் பெரும் பகுதி. மொழி வழக்கில்லாத தனிநிலையும், ஒலித் தொடர் நிலையும் பொருட் குறிப்பில்லன.

எ - டு :

1. 'அ', தனிநிலை; அடுத்த நிலையும், பொருட்குறிப்பும் இல்லை.

2. 'அழ்', ஒலித் தொடர் நிலையில், பொருள் குறிக்க உதவும் நிலை இல்லை.

ஒலியன் மொழியாவது அதன் தொடர் நிலைப் பிணைப்பினால் (Syntagmatic relations) ஆகும். ஆகவே இத்தகைய தொடர் நிலை அவ்வாற்றால் சிறப்படைகின்றது. ஒலியன் (Phoneme) உருபனாய்ச் (Morpheme), சொல்லாய்ச் (Word), சொற்றொடர் நிலையாய்ச் (Sentence), செய்திப் பரிமாற்றக் கருவியாய் (Message carrier or communicational media) மொழியாவது, இத்தகைய தொடர் நிலைப் பிணைப்பாலாம் (Linear relation or flow). ஒலியன்களது தொடர் நிலையே (Linear sequence) மொழியாக, இத்தகைய தொடர்ச்சி இல்லையேல், மொழி என்பதில்லை. எனவே, ஒலியன்களின் தொடர்ச்சி, மொழியில் முதன்மை பெறுகின்றது.

ஒலிக்கூறுகள் தொடர்ந்து மொழிநிலை பெறுங்கால், அத்தொடர் நிலையில் இடையீடு அல்லது இடைவெளி அல்லது இடைமுறிவுகள் (Pause or break or stop) ஒலிக் கூறுகளிடையே ஏற்படுவதியல்பு. தொடர் நிலையில், எல்லா ஒலிக் கூறுகளுக்குமிடையே, இடையீடுகள், இயல்பாகச் செறிவுடை நிலையில் (Close transition) காணப்படினும், சிலவிடங்களில் அகல் நிலையில் (Spaced transition) காணப்படும். இத்தகைய அகல் நிலை இடையீடுகளின் இடைப்பட்ட ஒலிக் கூறுகளின் சேர்க்கை அல்லது கூட்டம் (Group) ஒரு சில வகைளுக்கு உட்பட்டன. மூச்சு உள் வாங்கும்/வெளிவிடும் நிலையது (Breath group), பொருள் நிலையது (Sense group), இன்னோசையது (Rhythmic group), எனப் பலவாறு வகைபெற வரும். ஓய்வுக்காக நிறுத்தும் தொடர், பொருள் தெளிவுக்காக நிறுத்தும் தொடர், இன்னோசைக்காக நிறுத்தும் தொடர் எனவாகும். ஓரிடையீட்டில் இரண்டோ, மூன்றோ ஒன்றுபட்ட செயற்பாடுடையனவுமாம். சொல், குறை, நிறை (குறு, நெடுஞ்) சொற்றொடர் (Phrase and sentence) முதலியன, பொருள் நிலைத் தொடர்களே. தொடர் முடிவு இன்னோசைக் கூறு (Terminal contour), தொடரோடு தொடரும் இன்னோசை நிலைகள் (Pitch levels) எனும் இவையாகிய இன்னோசை(Intonation)யுடன் முடியும் நெடுந்தொடர் (Macrosegment), இரண்டு உயர் ஒலியழுத்தத்தின் (High stress) இடையீடாகிய அகல் நிலை இடைவெளி(Open transition or juncture)யால் கூறுபடுத்தப்பட்ட குறுந்தொடர் (Micro segment) என்பன இன்னோசைத் தொடர்களாகும். இவ்வாறாகுவன பல.

ஒலிக்கூறுகளுக்குத் தொடர் நிலை உறவு (Syntagmatic relation) போன்று, மாற்று நிலை உறவு (Paradigmatic relation) என்பதும் உளது. அஃதாவது, ஒரு தொடர் நிலைச் சொல்லில், ஓர் ஒலியன் (Phoneme) நின்ற இடத்தில், அதன் மாற்றாக, மற்றோர் ஒலியன் நிற்க, மற்றொரு பொருள் தர உதவுவது.

எ - டு : ஆன் = ஆ + ன் → தொடர்நிலை

ஈன் - ஆன் என்ற சொல்லில், 'ஆ' என்பதன் மாற்றாக, 'ஈ' வந்து, வேறோர் பொருள் தர உதவியது, மாற்றுநிலை.

ஆன்
↓
ஈன் மாற்றுநிலை.

இவ்வாறே,

ஆன்	ஆய்வு	ஆன்	தொடர் நிலை →
↓	↓	↓	↓
ஈன்	ஆர்வு	ஆள்	
↓	↓	↓	
ஊன்	ஆழ்வு	ஆழ்	மாற்றுநிலை

மேலனவற்றில் முதனிலை, இடைநிலை, இறுதிநிலை மாற்றுக் களைக் காணலாகும். ஒலிக்கூறுகளுக்கு இடையே, மொழியில், இவ் விருவகையான உறவு அல்லது தொடர்புகள் உள்ளன. மொழியில் சொல்லாக்கங்கள் யாவும் இவ்விருவகையான தொடர்பால் அமைவன வாகும்.

பேச்சு என்பது ஒலியலைகளின் ஓட்டம் அல்லது ஒலியலைத் தொடர். இது ஒரு தொடராயினும், அலையில் காணும் உறுப்புக்களின் அல்லது பகுப்புக்களின் (Segments) தொடரை உள்ளடக்கியது. பருப் பொருட் பார்வையில் உறுப்புக்களைக் காண்பது அரிதாயினும், நுண் பொருட் பார்வையில் அல்லது ஒலிப்பியல், ஒலியலையியல் (Articulatory and Acoustic phonetics) பார்வையில் காண இயலும். இத்தகைய கூறுகள் அல்லது உறுப்புக்கள் அல்லது பகுப்புக்கள் ஒலிப்புப் பகுப்புக்கள் (Phonetic segments) எனப்படும் - (Shaumyan, Sebastian, 1987 : 32).

குறிப்பிடப்பட்ட பேச்சு ஒலிப்புப் பகுப்புக்கள் (Phonetic segments) மேலும் இரு கூறுகளை அல்லது இரு நிலைகளை உடையன. ஒன்று, பொருண்மைக் கூறு (Physical segmentation). மற்றையது, செயற்கூறு (Functional segmentation). உடலும், செயலும் ஒன்று, ஒன்றனோடு ஒன்றிய வேறுபாடு போல், ஒலியைப், பார்வை நிலையில், பொருட் கூறு, அதன் செயற்கூறு என்ற வகையில், ஒன்றன் கண் இருவேறு கூறுகளைக் காண்பது. முன்னையது, ஒலிப்பியற்பார்வை (Phonetic Concept). பின்னையது, ஒலியனியற் பார்வை (Phonemic concept). இரண்டும், ஒன்றன் இரு முகங்கள் எனினுமாம். முன்னையது, பேச்சு அல்லது மொழியின் ஒலியலைக் கூறு (Sound). பின்னையது, பேச்சு அல்லது மொழியின் ஒலியடிக்கூறு (Diacritic) எனப்படும். பேச்சின் ஒலியலைத் தொடரின் கூறுகள் ஒவ்வொன்றும் பொருள், செயல் நிலையில் (Physical and Functional) இருவேறு கூறுகள் ஆகின்றன. பின்னையது, பேச்சில் அல்லது மொழியில் பொருள் புலப்பாட்டுக்கு உதவுவது. ஒலியன் (Phoneme) எனப்படுவது அது. பேச்சொலியின் தொடக்கம், முன்னையது; முடிவு, பின்னையது எனினும் அமையும். இவ்வாறு பேச்சொலிக் கூறு, தோற்றம், முடிவாகிய இரு பகுப்புக்

களைக் கொண்டது. முன்னது, ஒலிப்பியலில் (Genetic or physiologial phonetics), ஒலியலையியலில் (Gennemic or acoustic or physical phonetics) விளக்கம் பெறும். பின்னையது, ஒலியனியலில் (Functional phonetics or phonemics) விளக்கம் பெறும் - (Shaumyan, Sebastian, 1987: 43).

மொழியின் ஒலியன்களைக் (Phonemes) குறிப்பிட்டு விளக்குவது, ஒலியனியல் (Phonemics). இதுவே ஒலியியல் (Phonology or practical phonetics) என்பதுமாம். ஒலியியல், ஒலி குறித்த எல்லாச் செய்திகளையும் விளக்குவது. மாற்றொலிக் கூறுகள், தனிப்பட்டோர் பேச்சொலிப் பிறப்புக் கூறுகள், கூறுபடுத்தல், உருபனொலிக் கூறுகள், பகுப்பில் கூறுகள், ஒலியியற் கூறுகள் முதலிய பேச்சொலி சார்ந்த பலவற்றையும் விளக்குவது அது - (Brakel, A., 1983: 1).

பேச்சின் ஒலிக்கூறுகளின் தொடரில், ஒலிக்கூறு ஒன்றன் செயற் பகுதி(Functional segment or diacritic)யாகிய ஒலியன் (Phoneme) குறித்து விளக்குவது, ஒலியனியலாக (Phonemics), அதன் பொருட் பகுதி (Physical segment or sound)யாகிய ஒலியலைப் பகுதியை விளக்குவது ஒலிப்பியல் (Phonetics) ஆகும். அஃதாவது, ஒலிப் பிறப்பியல் அல்லது வாயொலியியல் (Articulatory or physiological phonetics), ஒலியலையியல் அல்லது அலையொலியியல் (Acoustic or physical phonetics) ஆகிய இரண்டும் அதனை விளக்கிக் கூறும். இவ்விரு இயல் வழியமையும் இயல்புகளே ஒலியியற் கூறுகள் (Distinctive features). இவ்விரு இயல்களாலும் விளக்கம் பெறும் ஒலிக் கூறுபாட்டின் பொருட்பகுதி அல்லது பொருண்மைப்பகுதி(Physical segment or sound)யின் குணவியற் கூறுகளே ஒலியியற் கூறுகள்.

2.2. ஒலிப்பியல் வகை (Classification of phonetics)

பேச்சு அல்லது மொழியின் ஒலித் தொடர், பல ஒலிக் கூறுகளின் கோவை. இக்கோவையின் ஒலிக் கூறுகளின் இடை எல்லை வரையறைப்படத் தெரிவதில்லை. ஓர் ஒலிக் கூறு, மற்றொன்றைத் தழுவிக் கலந்தே, தொடர்ந்து சென்று கோவையாகும். இக் கோவையின் அடிக் கூறாகிய ஒலிக் கூறு, வாயிலிருந்து பிறப்பது, ஒலிப்பிறப்பியல் அல்லது பிறப்பொலியியல் (Articulatory phonetics or genetic phonetics). அவ்வாறு உருக் கொண்டு, ஒலியலை உருவாகிச் செவி சென்றடைவது, ஒலியலையியல் அல்லது அலையொலியியல் (Physical or acoustic phonetics). இத்தகைய கேட்பொலி, காந்த அலையாகி, மூளை சென்று, பொருளைப் புலப்படுத்துவது, புலப்பாட்டொலியியல் அல்லது கேட்பொலியியல் (Auditory phonetics). குறிப்பிடப்பட்ட ஒலிக்கூறு, செயல் நிலைக் கூறாகிப் (Functional segment) பேச்சு அல்லது மொழியின் பொருளைப் புலப்படுத்த உதவும், இயலதாகும், அடிக்கூறாகிய ஒலியியல்பு, ஒலியனியல் (Functional phonetics or phonemics). இத்தகைய ஒலியன்களோடு இணைந்து, இன்னோசைக் கூறுகளாய்ப் பொருள் புலப்பாட்டுக்குதவுவது, இன்னொலியனியல் (Prosodic phonetics). இவ்வொலியன்கள், ஒலியியற்

கூறுகளாக இரண்டுபட முரண்படச் செயல்படுவது, ஒலியியற் கூறுபாட்டியல் (Distinctive (feature) phonetics). ஒலியன்கள், உருபன் களாக இணைந்து செயல்பட, அடையும் ஒலிமாற்றங் குறிப்பது, புணர்வொலியியல் (Combinatory phoneties). காலம் அல்லது வரலாற்று நிலையில் மொழியில் ஒலியன்கள் அடையும் மாற்றங் குறிப்பது, வரலாற்றுமுறை ஒலியியல் (Historical or evolutionary phonetics). மொழியில், ஒலியன்கள் தொடருங்கால் மேற்கொள்ளும் அமைவு களைக் குறிப்பது, கட்டமைப்பொலிப்பியல் (Structural phonetics). மொழி ஒலிகளை வரிவடிவாக்குவது, வரியொலியியல் (Graphic phonetics). இவ்வாறு மொழியொலிக் கலை, பல வகையாகப் பாகுபடுத் தப்படும்.

2.3. மூளையும், பேச்சு மொழியும் (Brain and speech)

மனித வாழ்வில் கடவுட்பணியைச் செய்வது தலை அல்லது மூளை. மரத்தின் வேர், மண்ணில் புதைந்து, மறைந்திருந்து, மரத்தை மண்ணில் நிறுத்தி, அதனுக்கு வாழ்வளிக்கும் பணிபுரிதல்போல, மனிதன் மூளை, தலைக்குள் புதைந்து, மறைந்து, மனிதனை மண்ணில் நிறுத்தி, இயக்கி, மனித வாழ்வளிக்கின்றது. இவ்வாறான செயல்களுள் ஒன்றே, மூளை கொடுத்த, மனித வாழ்வை வளப்படுத்தும் மொழிச் செயல். எனவே, மொழிச் செயல், மூளையை அடித்தளமாகக் கொண்டது. மூளை கொடுத்த பொருள் புலப்பாட்டை உள்ளடக்கிய ஒலியைப் பேசுவோன் வாய் வழி வெளிப்படுத்தக், கேட்போன் ஒலி வழி வந்த பொருள் புலப்பாட்டை மூளைத் துணையால் அறிந்துகொள் கின்றான். பேசுவோனுக்கும், கேட்போனுக்கும் மொழிச் செயல், மூளையின் பின் புலச் செயல்.

இவ்வழியில், மனிதன் காற்று, நீர், உணவு மூன்றையும் உட்கொள்ள உயிர் வாழ்கின்றான். இவற்றுள், காற்று அல்லது உயிர்வளியால் உயிர்ப்புக் (மூச்சு) கொள்ள, உடலுள் உயிரோட்டம் நடக்கின்றது. இத்தகைய உயிர்க் காற்றை வெளிப்படுத்தும்போது, இம்முதற் செயலுக்கு ஒரு துணைச் செயலாகப் பேச்சு அல்லது மொழி உருவாகின்றது. ஆகவே, மூச்சின் துணை வீச்சே நம் பேச்சு. இவ்வாறு வெளிப்படும் காற்று அல்லது அதனாலாகிய ஒலி, பெரிதும் வாய் வழிச், சிறிது மூக்கு வழி வெளிப்படுகின்றது. இவ்வெளிப்பாட்டுக் காற்றாலேயே (Egressive air) உலகின் எல்லா மொழியொலிகளும் உருவாகின்றன. சில மொழிகளில், சிலவொலிகள் உள்வாங்கும் காற்றினாலும் (Ingressive air) உருவாவனவுமாம்.

2.4. பிறப்பொலி, ஒலிப்பலையியல்கள் (Articulatory and acoustic phonetics)

பேச்சொலி வாயளவு வரை ஒரு பகுதி. இது பிறப்பொலியியல் (Genetic or articulatory or physiological phonetics). செவியளவு வரை மறுபகுதி. இது ஒலிப்பலையியல் அல்லது அலையொலியியல் (Acous-


tic or physical phonetics). இவ்விரண்டோடு ஒலி நிலை முடிவுறு கின்றது. இவ்விருபகுதிகளும் பல கருவிகளின் துணை கொண்ட, ஆய்வு முறையை அடிக்கொண்டன. பல விதிகளுக்கு உட்பட்டன. பல வரைவுகளால் விளக்கம் பெறுவன. தெளிவுகள், தெரிவுகள் இவற்றால் பல. ஒலியியற் கூறுகள் (Distinctive features) இவற்றாலேயே விளக்கம் பெறுகின்றன. ஒலிக் கூறுகளின் ஒலியுருவங்கள், தொடர், இடைமுறிவு, கலப்பில் மாற்றம், முரண்பாடுகள், ஒப்புக் கூறுகள், வகை, வடிவம், உட்கூறுகள், புறக்கூறுகள், தோற்றம், இயக்கம், அளவு, அழுத்தம், இன்னியல், தரம், தன்மை, ஏற்றம், இறக்கம் இன்னோரன்ன பல இவற்றாலேயே புலப்படுத்தப்படுகின்றன. இவை இரண்டும் ஒலி யியலில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. இவற்றுள் பிறப்பொலியியல் இன்றேல் கேட்பொலியியல் இல்லையாதலினால் பேச்சு அல்லது மொழியின் முதலிடம் பிறப்பொலியியலுக்கு (Genetic phonetics) வருகின்றது.

2.5. உறுப்பும், செயலும் (Organs and articulations)

மனித உடலின் உயிர்ப்புறுப்பமைப்பு (Respiratory system), உணவுறுப்பமைப்பு (Alimentary system) ஆகிய இரண்டன் முதற் செயற்பாட்டின் துணைச் செயலாகப் பேச்சுச் செயல் நடை பெறுகின்றது. இவற்றுள், உயிர்ப்புறுப்பமைப்பு முழுமையும் முதலிடம் பெற்றுப் பேச்சு வினையை நிகழ்த்த, உணவுறுப்பமைப்பில் முற்பகுதி, வாய்முதல் தொண்டைக் குழிவரை மட்டும், துணையிடம் பெற்றுச் செயல்படுகின்றது. இவ்விரு பகுதியும் பேச்சில் முதல் நிலையாக நின்று செயலாற்ற, விலாவெலும்புகள் (Ribs), விலா வெலும்பிடைத் தசை (Intercostal muscles), நெஞ்சு, வயிற்றிடைத் தசைச்சுவர் (Diaphragm) முதலியன துணை நிலையாக நின்று செயல்படுகின்றன.

நுரையீரல் (Lungs), குரல்வளை (Larynx), தொண்டைக் குழி (Pharynx), வாய் (Mouth), மூக்கு (Nose) இவ்வைந்தும் அறைகளாகக், குரல்வளையைத் தலைப்பகுதியாகக் கொண்ட காற்றுக் குழாயும் (Wind Pipe or trachea), அதன் அடிக்கிளைகளும் (Bronchi) காற்றிடை வழியாகக் கருதத்தக்கன.

நுரையீரல் இரண்டனுள்ளும் அமைந்த காற்றறைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. இவற்றின் சுருக்க, அழுத்தங்களால் (விலாவெலும் பிடைத் தசை அழுத்தத்தால்) ஏற்படும் காற்றுத் துணுக்குக்களின் வெளிப்பாடே அசை (Syllable), ஒலிக்கூறு (Phonic segment) ஆக அளவு செய்யப்படுகின்றன. காற்று மண்டல அழுத்தத்தால் மூக்கு, வாய் வழியாக உள் வந்த காற்று (விலாவெலும்பு, எலும்பிடைத் தசை, நெஞ்சு வயிற்றிடைச் சுவர் அகன்று விரிய) நுரையீரல்கள் விரிவடைய, அவற்றுட் புகுந்து, பின் நுரையீரல்கள் சுருங்க, அழுத்தம் பெற்று, வந்த வழியே வெளிச்செல்கின்றது. இது அவற்றின் உயிர்ப்புப்பணி.




அசைக்கூறாக்கும் காற்றறைகள் (Air sacs in the lungs)


Diagram of a small portion of the lung, highly magnified, showing the air sacs at the end of the alveolar ducts, the alveoli in the walls of the air sacs, and the proximity of the alveoli and the pulmonary capillaries containing red blood cells.

இவ்வாறு வெளிப்படும் காற்றுக் குரல்வளை வரும்போது, உயிர்ப்பில் ஒலியாகாது. ஒலிப்பில், குரல்வளையுள் (Larynx) அமைந்த இருதசைக் கூறுகளால் (Vocal bands or lips or cords) குரலாகின்றது. இது, காற்று, குரல் அல்லது ஒலியாகும் முதல் உருமாற்றம். பேச்சில், காற்று ஒலியாவதால், பேச்சின் ஒலிப்பிறப்புத் தோற்றம் கொள்வதால், குரல் வளையும், அதன்கண் ஒலிப்பிறப்பும் அவ்வாற்றால் முதன்மை பெறுகின்றன.

குரல்வளை (Larynx), தொண்டைக் குழி (Pharynx), வாய் (Mouth), ஆகிய மூன்று அறைகளும் வெவ்வேறு ஒலிகளை உருப்படுத்துகின்றன. மட்டுமன்றி, அவை மூக்கோடு, ஒலிப்புக்களை எதிரொலி செய்யும் எதிரொலி அறைகளாகவும் (Resonance chambers) அமைகின்றன. நான்கு அறைகளில் குரல்வளை, தொண்டைக் குழி ஆகிய இரண்டனுள்ளும் தோன்றும் ஒலியுருக்கள், மிக அரியனவாகச், சில மொழிகளில், ஒரு சிலவே ஆக்கம்பெறும்.

மூக்குவழிச் செல்லும் வளிச் செலவால் தோன்றும் ஒலியுருக்கள் சிலவேயாகும். இவற்றை இருவகைப்படுத்தலாம். (1) வாய் வழி வளிச் செலவு முற்றிலும் தடுக்கப்பட்டு, மூக்கு வழி மட்டும் செல்வன மூக்கொலிகள் (Nasals). (2) வாய் வழியும், மூக்கு வழியுமாக இரு வழியிலும் செல்லும் வளிச் செலவால் ஆகுவன. மூக்குச் சாயல் அல்லது மூக்குச்சார் ஒலிகள் (Nasalised sounds). மூக்கு வளிச்செலவு தடுக்கப்படுவது ஒரேயொரு தடையாலாகும். அது, மேல் வாயின் பின்னுள்ள மெல்லண்ணத்தின் பின்புற மூக்குத் தடை (Velic closure) எனப்படும். இதுவன்றி வேறு வகைத் தடையோ, தடைவகையோ மூக்கில் இல்லை. இத்தடையால், வாய் வழி வளிச்செலவு மட்டும் நிகழும். இச்செலவில் தோன்றும் ஒலியுருக்கள் வாயொலிகள் (Orals) எனப்படும்.





1 - Thyroid cartilage 2 - Vocal band 3 - Arytenoid cartilage

ஒலித்தசைகளின் இயக்க நிலைகள்
(Positions of the vocal bands)


உலக மொழிகளின் பெரும்பான்மையான ஒலியுருக்கள் வாயின் கண் பிறப்பனவாகும். ஏறத்தாழ தொண்ணூறு விழுக்காடு ஒலியுருக் கள் இதன்கண் பிறக்கின்றன. வெவ்வேறான மொழிக்கு வேண்டிய வேறு வேறு வகைக் கூறான ஒலியுருக்களை வாயே ஆக்கிப் படைக்கின்றன. இந்நிலையால், ஒலியுருவாக்கத்தில் வாய் முதன்மை பெறுகின்றது. காற்று ஒலியாவது குரல்வளையிலென்றால், அவ் வொலியை உருக்களாக்குவது வாயென்க. காற்றை ஒலியாக்குவது குரல்வளை ஒலித்தசை(Vocal cords)யென்றால், அவ்வொலியை உரு வேறாக்குவது வாயின்கண்ணமைந்த நாக்கென்க. ஆகவே, ஒலித்தசை களின் இயக்கமும், நாக்கின் இயக்கமும் பிறப்பொலியின் பெரும் பாகங்கள். ஒலி செய் உறுப்பு (Articulator) என்பது நாவேயாகும். நாநலம் என்பது மொழி நலத்தை அல்லது பேச்சு வன்மையைப் புலப்படுத்துவதும் காணலாகும். எனவே, ஒலியாக்கமும், அதன் உருவாக்கமுமே மொழியாக்கம் என்க.

நாவின் வேர்ப் (Tongue-root) பகுதி தொண்டைக் குழியின் முன் சுவராக, அளவு வேறுபட அமைந்து, ஒலிப்பில் சொல்லத்தக்க பணியின்றியிருப்பது. நாவின் பிற்பகுதி (Tongue back or dorsum),


நாவின் இடை அல்லது நடுப்பகுதி (Tongue-mid), நாவின் முன்பகுதி (Tongue-blade or tongue-front), நாவின் நுனிப்பகுதி (Tongue-tip or apex) ஆகிய நான்கும் ஒலிப்பில் பெரும்பங்கு பெறுவன. இவற்றில், நா நுனிச் செயல் பெரிதாகும்.

வாயின் மேல், கீழ்ப்பகுதிகளும் குறிப்பிடத்தக்க ஒலிப்பு முயற்சி யுடையன. கீழ்ப்பகுதி அசையும் இயல்புடையதாக, மேற்பகுதி அசை வற்றது. கீழ்ப்பகுதியின் பல்லிற்கு ஒலிப்புப் பணியில் உரிய இடனில்லை யாயினும், சில மொழிகளில், ஒன்றிரண்டு செயலுள்ளன. நாவின் அடித்தளமாக அமைந்த கீழ்வாய், வாயின் அகற்சி, குறுக்க அள வமைப்புக்களுக்குப் பெரும் பணி செய்யும். கீழிதழ் ஒலிப்பில் பெரும் பங்கு பெறும். ஒலிப்பில், குரல்வளை மூடித் தசைக்குச் (Epiglottis) சொல்லத்தக்க செயலில்லை. மேல்வாயின் உள் தொங்கும் உள் நாக்குச் (Uvula) சில மொழிகளில் ஒரு சில ஒலிகளை உருவாக்கும். மேல் வாயின் பிற்பகுதியான மெல்லண்ணம் (Velum), முற்பகுதியான வல்லண்ணம் (Palate), பல்லுறை முகடு (Alveolar ridge or arch), மேற்பல் (Upper teeth), மேலிதழ் (Upper lip) இவை ஒலிப்பில் பெரும்பங்கு பெறும்.

கீழிதழோடு, நாக்கு (நான்கு பாகங்களோடு) ஒலியுறுப்பு அல்லது முயற்சியுறுப்பு (Articulator) என்றும், மேல் வாயில், மெல், வல்லண்ணம், பல்லுறை முகடு, பல், இதழ் என்பன முயற்சியிடங்கள் (Points of articulation) என்றும் பெயர் பெறும். கீழிதழோடு, நாவைக் கீழ்ப்பகுதி முயற்சியுறுப்பு (Lower articulator), மேல் வாய்ப் பகுதிகளை மேற்பகுதி முயற்சியுறுப்பு (Upper articulator) என்பதுமாம். ஆக, மேல், கீழ் வாய்ப் பகுதிகள் ஒலி செய்யுறுப்புக்களாம் (Articulators). மேற்பல் நுனி, மேற்பல் பின்பகுதி (Edges and back of the upper teeth) என



வாயுறுப்புக்கள்




மேல்வாய்ப்பகுதிகள்

The mouth seen from the front

AA - Pharyngeal Arch PP - Pharyngeal Cavity (Pharynx)

S - Soft Palate (Velum) T - Tongue U - Uvula

இருவகைப்படும். பல்லுறை முகடு (Alveolar arch), முன் முகடு (Pre-alveolar), பின்முகடு (Post-alveolar) என இருவகையாக ஒலிப்பில் இடம் பெறும். வல்லண்ணம் முன், இடை, பின் (Pre-palate, mid-palate, post-palate) என மூவகையில் இடம் பெறும். மெல்லண்ணம் முன், இடை,




இதழமைவுகள்
Types of lip-rounding
a - Close lip-spreading b - Neutral lip position
c - Open lip-rounding d - Close lip-rounding

பின் (Pre-velar, Mid-velar, Post-velar) என மூவகைப்படுதலுமாம். மொழி ஒலிப்பு, இவ்வாறு, இடப்பாகுபாட்டொலிப்பாகும். மேல் வாயுறுப்புக்கள் இரண்டிடைப்பட்டு, இரண்டன் கலப்பொலியுமாம்.

கடை நா, மெல்லண்ணத்தின் நேர்கீழ்க் கிடந்து, மெல்லண்ணம், அதன்முன், பின் ஆகிய மூவிடங்களிலும் சென்று, செயல்படுவது. நடு நா, வல்லண்ணத்தின் நேர் கீழ்க் கிடந்து, வல்லண்ணம், அதன்முன், பின் ஆகிய மூவிடங்களிலும் சென்று செயல்படுவது. முன் நா, பல்லுறை முகட்டின் நேர்கீழ்க் கிடந்து, பல்லுறை முகடு, அதன் முன், பின் ஆகிய மூவிடங்களிலும் சென்று செயல்படுவது. நுனிநா, வாயிதழ் முதல், மெல்லண்ணம் வரை நிமிர்ந்தும், வளைந்தும் செயல்படுவது. நாவோரங்களும் (Tongue-sides) செயல்படுவதுண்டு.


குரல்வளையுள் (Larynx) பின்புறத்தில் தசைபொதி குருத்தெலும்புகள் (Arytenoid cartilages) அசையும் இயல்புடையன இரண்டுள. குரல்வளையுள், முன்புறத்தில் வளைவுடைய மற்றொரு தசை பொதி குருத்தெலும்பு (Thyroid cartilage) உளது. முன், பின்னுள்ள இவ்விரு வகைக் குருத்தெலும்புகளும், அவற்றின் கீழ் அமைந்த மற்றோர் குருத்தெலும்பின் (Cricoid cartilage) மேல் இணைக்கப்பட்டுள்ளன. குரல்வளையுள், பின்புறக் குருத்தெலும்புகள் (Arytenoid cartilages)



உயிர்ப்பு உறுப்புக்கள்

இரண்டோடு இணைக்கப்பட்ட, மேல் கீழாக அகன்ற, மெல்லிய, நீண்ட இரு தசைப் பட்டைகள் அல்லது நார்கள் (Ribbon-like bands) முன்புறக் குருத்தெலும்போடு (Thyroid cartilage) பிணிக்கப்பட்டுள்ளன. இவை இரண்டும், நீளும், சுருங்கும். இடைவெளியின்றி இணையும். இடை வெளிப்படப் பிரிந்து அகலும். இத்தகைய தசைப் பட்டைகள், இருபுறமுள்ளனவும் மேல், கீழ்ப் பகுதிகளாக, இடைவெளிப்பட, இரு கூறுகளாகவுள்ளன. அஃதாவது, மேல் இணைத் தசைப் பட்டைகள், கீழ் இணைத் தசைப்பட்டைகள் என இரு வகைப்படும். மேலன (Ventricular folds) எவ்வகையிலும் ஒலிப்பினை ஆக்கும் இயல்பில்லன. ஆயின், எதிரொலியறையாகப் (Resonance Chamber) பணியாற்றும் தரமுடையன. கீழன (Vocal bands or lips or cords) காற்றை ஒலியாக்கும் இன்றியமையாத செயலுடையன. உயிர்ப்புச் (மூச்சு) செய்யும்போது, இவை இரண்டும் இடைவெளிப்பட விலகும். இறுகச் செறியும்போது காற்றுத் தடைப்படும். இரண்டும் செறியக், காற்று அழுத்தி இடைச் சிறுவெளி செய்து செல்ல, இவ்வாறு பலமுறை அடுத்தடுத்துக் காற்றுக்குத் தடை, விடை, தசைகளின் செறிவு, நெகிழ்வு ஏற்படத் தசைப் பட்டைகளில் அதிர்வு (Vibrations) ஏற்படும். இதனால் ஆகுவது


ஒலித்தசைகள் Vocal Cords



காற்றொலி உறுப்புக்கள்

அதிர்வொலி (Voiced sound) எனப்படும். அதிர்வில், தசைப்பட்டைகள் நீண்டு மெலியும். மாறாக, அவை குறுகி வலுவடையும் போது, தசைப் பட்டைகளில் அதிர்வொலி ஏற்படா. எனவே, அதிர்வில்லாது எழும் ஒலி, அதிர்வில் ஒலி (Voiceless or unvoiced sound) எனப்படும். இத்தகைய இருவேறு ஒலிகள் முரண்பட்ட இயல்பில் குரல்வளையுள் தோன்றும். காற்று ஒலியாகுங்கால் அதிர்வோடும், அதிர்வின்றியும் அமையும். ஒலித்தசையின் மேலிரண்டு தசையிதழ்களும் ஒலிவண்ணத்திற்கு (Resonance) உதவுவன போல், வாயிதழ் இரண்டும் (Lips) குவிய, விரிய, மூடத், திறக்க ஒலிவண்ணத்திற்கு உதவும்.

காற்றுக் குழாயும், உணவுக் குழாயும், வாய், மூக்கின் உள் திறப்பும் கூடும் இடம் தொண்டைக்குழி (Pharynx). ஒலித்தசை இரண்டன். இடை உள்வெளி வழிக் குரல்வளைக்குழி (Glottis). காற்று உள் வரப் (Ingressive air) பிறக்கும் ஒலிகள் இவ்விரண்டனுள் பிறக்கும் இயல்பின. ஒன்றிரண்டு வாயிலுமாம்.



1. ஒலித்தசையுடன் குரல் வளை (Larynx with Vocal Cords)
2. தொண்டைக்குழி (Pharynx)
3. மூக்குவழித் தடையுறுப்பு (Velic)
4. உள்நாக்கு (Uvula)
5. மெல்லண்ணம் (Velum)
6. வல்லண்ணம் (Palate)
7. பல்லுறை முகடு (Alveolar ridge)
8. மேற்பல் (Upper Teeth)
9. மேலிதழ் (Upper lip)
10. கீழிதழ் (Lower lip)
11. கீழ்ப்பல் (Lower teeth)
12. நுனிநா (Apex or tongue tip)
13. முன்நா (Tongue front)
14. நடுநா (Tongue mid)
15. கடைநா (Dorsum or Tongue Back)
16. வேர்நா (Tongue root)
17. குரல்வளை மூடுதசை (Epiglottis)
18. தாடை (Jaw)
19. உணவுக்குழாய் (Food pipe)
20. மூக்குவழி (Nasal passage)

ஒலிப்பு உறுப்புக்கள்

ஒலிப்பில் சிறப்பாகப் பார்வையிடத்தக்கன நான்கு :

1. ஒலித் தசையில் அதிர்வு (உளது/இலது)
2. மூக்குத் தடை (உளது/இலது)
3. இதழ்த் தடை (உளது/இலது) - உதட்டு அமைவுமாம்.
4. வாய்த் தடை (உளது/இலது) - வாய் அமைவுமாம்.

வாய்த் தடையாயின், எவ்விடத்தில், எவ்வாறுளது என்பது. 3,4 - ஆவது பார்வைகள் முதல் தர முயற்சிகள் (Primary articulations)

2-ஆவது பார்வை, இரண்டாந்தர முயற்சிகள் (Secondary articulations). *1-ஆவது பார்வை, மூன்றாந்தர முயற்சிகள்* (Tertiary articulations).

ஒலிப்பிறப்பிற்கு வாயின் கண் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் முதல் தரமுடையன (Primary articulations). *இம் முயற்சிகளுள், இன்றியமையாதனவல்ல என்று தோன்றுவன, துணை முதன்மை உடையன* (Sub primary articulations). *சில போது, இதழ் முயற்சிகள் சில இத்தரம் பெறும். மூக்கில் தோன்றும் அடைப்பு, திறப்புக்கள் இரண்டாந்தர முயற்சிகள்* (Secondary articulations). *ஒலித்தசை* (Vocal cords) *செய்யும் முயற்சியுட்படக் குரல் வளை, தொண்டைக் குழி முயற்சிகள், மூன்றாம் தரமுடையன* (Tertiary articulations) *என, ஒலிப்பு முயற்சிகள் மூவகை பெறும்.*

உலக மொழிகளில் குரல்வளை (Larynx), தொண்டைக்குழி (Pharynx), உள் நாக்கு (Uvula) இவற்றால் ஆக்கப்படும் ஒலியுருக்கள் சிலவாகப், பெரும்பான்மையாக, வாயின் மேற்பகுதி மெல்லண்ணம் (Velum), வல்லண்ணம் (Palate), பல்லுறை முகடு (Alveolar ridge), பல் (Teeth), இதழ் (Lip) ஆகியவற்றிலும், வாயின் கீழ்ப்பகுதியில், நாவின் பிற்பகுதி (Dorsum), நடுப்பகுதி (Tongue mid), முற்பகுதி (Tongue blade), நுனிப்பகுதி (Apex), கீழ்வாய்ப் பல்லோடு இதழ் ஆகியவற்றிலும் பிறக்கும் ஒலியுருக்களே இயல்பாவன.

2.6. ஒலி (ஒலிப்பு) மாற்றங்கள் (Sound (articulatory) changes)

குறிப்பிடப்பட்ட ஒலியுரு ஒவ்வொன்றும், பேச்சில் அல்லது மொழியில், குறிப்பிடப்படும் தன் தன் அமைப்பு அல்லது ஒலிப்பு இயல்பிலேயே எப்போதும் வரும் என்று கருதலாகாது. துணைமை (Secondary), சூழ்நிலைச் (Environment) சாயலோடு சிறிது மாற்றம் (Modification) பெற்றும் வரும். பெறினும் தன் தனித்த நிலை ஒலி அல்லது ஒலிப்பு உடையதாகவே கருதப் பெறும். அதன் முதன்மை நிலை ஒலிப்பில் ஊன்றி நின்றே, அகநிலையில் திரியாது, புறநிலையில் திரிபடையும்.

2.6.1 துணைமைச் சாயல் திரிபுகள் (Secondary modifications)

துணைமைச் சாயல் திரிபுகளாவன,

1. குரல்வளைச் சாயல் பெறுவன (Laryngealised or Glottalised)
2. தொண்டைக்குழிச் சாயல் பெறுவன (Pharyngealised)
3. மூக்குச் சாயல் பெறுவன (Nasalised)
4. மெல்லண்ணச் சாயல் பெறுவன (Velarised)
5. வல்லண்ணச் சாயல் பெறுவன (Palatalised)
6. உதட்டுச் சாயல் பெறுவன (Labialised)
7. உருட்டொலிச் சாயல் பெறுவன (Trillised)
8. வழுக்கொலிச் சாயல் பெறுவன (Diphthongised) எனப்பலவாம்.


2.6.2. சூழ்நிலைத் திரிபுகள் (Environmental modifications)

1. ஏறத்தாழ மூன்றங்குலம் (8 cm) நீளம், இரண்டங்குலம் (5 cm) அகலமுள்ள வாயின்கண் உலகின் எல்லா மொழிகளின் ஒலிகளும் பிறக்கின்றன. இவ்வொலிகளிடையே ஒற்றுமை பலவிருப்பினும், வேறு வேறான கூறுடைய ஒலிகளால், வேறு வேறு மொழியாவதும், புரிந்து கொள்வதும் ஒரு வியப்பான ஒழுங்கு முறையாகும். இத்தகைய பேச்சு ஒலிப்புக்கள் யாவும் ஒலிப்பியல் கூறுகள் (Phonetic features) உடையன.

அஃதாவது, பேச்சில் அல்லது மொழியில், ஒரே கூறுபாட்டு ஒலியுரு ஒன்றே, ஒரே சூழ் நிலையில், பலவாறு வேறுபட, உறழ்பொலியாக (Free variants) ஒலிக்கும். அதுவே, வெவ்வேறு சூழ்நிலையில், அண்மை

நிலைத் தாக்கத்தால், வேறு வேறுபட, மாற்றொலிகளாக (Allophones or etic (Phon-etic) variants) ஒலிக்கும். வேறுபட ஒலிப்பினும், அவ்வேறுபாடு குறிப்பிடத்தக்கன அல்ல (Insignificant). ஆதலினால், அவற்றைத் தொகுத்து, ஒன்றன் திரிபெனக் கொண்டு, தோற்றம் போல் ஓரொலியாகவே (Emic (Phon-emic) unit) கருதப்படும் இயல்பினது. ஒலியொன்று, அல்லது ஒலிப்பில் ஒன்று, பேச்சொலிப்பில், அல்லது ஒலித் தொடரில் இவ்வகையில் வேறுபடும்.

2. ஓரொலி, ஒலி அல்லது ஒலிப்பு ஒப்புக் (Phonetic symmetry) கருதி, முயற்சிச் சிக்கனத்தால், அடுத்தது போல் ஒலிக்கத், தன் ஒலிப்பு மாறுபடும்.



ஒலிக்கூறு - ஒலிப்பு வேறுபாடு

3. மொழியின் ஒலித்தொடர்க் கட்டமைப்புத் (Sequential structure) தாக்கத்தால் ஒலிக்கூறுகளின் ஒலிப்பு மாறுபடும்.

4. ஒலித் தொடர்களின் தொடக்கம், முடிவுகள் இடைவெளி(Pause or break or boundary or silence or juncture)யோடு தொடர்வதால், அம்முதல், இறுதி ஒலிக்கூறுகள் ஒலிப்பு மாறுபாடடையும்.

5. அசைகள் (Syllables), ஒலியழுத்தத் தொடர்கள் (Stress groups) அல்லது ஒலியழுத்தங்களால் வகை பெறும் ஒலித் தொடர்கள், இன்னோசைத் தொடர்கள் (Intonational groups) அல்லது இன்னோசைக் கூறுகளால் வகைபெறும் ஒலித் தொடர்கள் முதலிய ஒலியடித் தொடர்க் கூறுகள் (Phonological units), உருபன் (Morpheme), சொல் (Word), சொல்தொடர் (Phrase or sentence) முதலிய இலக்கண அடித் தொடர்க் கூறுகள் (Grammatical units) முதலானவற்றின் தாக்கத்தால் ஒலிக்கூறுகள் ஒலிப்பு வேறுபாடடையும்.

6. ஒலித் தொடர்களில் வரும் ஒலியழுத்தம் (Stress), இன்னோசைக் கூறு (Intonation), காலஅளவு (Duration) முதலிய மிகை அல்லது மிசைப்

பகுப்பில் ஒலியன்களால் (Prosodic features or supra segmental elements) ஒலிக் கூறுகள் ஒலிப்பு மாறுபாடடையும் - (Pike, Kenneth, L., 1968: 59).

2.6.3. ஒலித்தோற்றத் திரிபுகள் (Articulatory changes)

1. ஒலிகள் ஒலியலைகளால் ஆக்கப்படுவதால், அவை தம்மியல்பில் வேறுபாடு (Fluctuation) அடையும்.

2. ஒலிகள் தசையியக்கங்களால் ஆவதால், தசையியக்க வேறு பாட்டால் ஒலி வேறுபாடடையும்.

ஒலிக்கூறுகள், ஒலித்தொடர் ஆகுங்காலும், தம் அமைப் பியல்பாலும், ஒலியுறுப்புக்களின் இயக்க வேறுபாட்டாலும் குறிப் பிடப்பட்டவாறான பல ஒலிப்பு வேறுபாடடையும். இருப்பினும், தோற்றக் கூறுபாட்டை ஒன்றாகக் கருதுவதே ஒலியியல்பாகும்.

2.7. ஒலி வகை (Sound classifications)

ஒலியுருக்களை மூன்று வகையில் காணலுமாகும். அவை,

1 ஒலிப்பதிர்வு (Mode of articulations (voiced / voiceless))
2. ஒலிப்பிடம் (Points of articulations)
3. ஒலிப்பு முறை (Manner of articulations)

அதிர்வு, குரல்வளையில். இடம், வாயில். முறை, வாயில், மூக்கில். இடமும், முறையும் சிலபோது தொண்டைக் குழியிலும், குரல் வளையிலுமாம். இடம் மேல், கீழ் முயற்சியுறுப்பின் இயைபில். முறை, காற்றின் ஓட்டத்தில். இவ்வகையில், மூவேறாயினும், யாவும் முயற்சி யுறுப்புக்களின் இயக்கத்தால் ஆவன. உறுப்புக்கள் ஒலிப்பில் விரைவாகச் செயல்படும் இயல்பின.

1. ஒலிப்பதிர்வு, உடையது, இல்லது என இருவகைப்படும்.
2. ஒலிப்பிடம் பல
3. ஒலிப்பு முறை பல வகைப்படும்.

இவை மூன்றனவற்றாலும், பிறவற்றாலும், உருவாகும் ஒலி ஒவ்வொன்றன் இயல்பும், விளக்கமும் தெரிய வரும். அஃதாவது, இவற்றால் ஒலியுருவின் பெயர் சொல்ல, அதுவே, அதன் விளக்கமுந் தரும் என்னலாம்.

இடத்தால், பேச்சுறுப்புக்களில் ஓரிடத்தில் மட்டும் முயற்சி நிகழுமாயின் அது இயல்பு முயற்சி அல்லது ஒரு முயற்சி (Simple or single articulation) என்றும், ஒரே காலத்தில் ஈரிடத்தில் நிகழுமாயின், அது, அருமுயற்சி அல்லது இரு முயற்சி (Complex or double articulations) என்றுமாம். பின்னையன, மொழிகளில் ஒருசிலவேயாகும். ஒலிப்பு வகையே, ஒலி வகை.

முறையால், வாய்த் தடையில்லன, நிறை தடையுடையன, குறை தடையுடையன என மூவகையாம்.

2.7.1. இருவேறு ஒலிகள் (Binary sounds)

ஒலிகளை இருவேறாகப் (Binary) பல நிலையில் பார்த்தலுமாகும். உயிர் (Vowel), மெய் (Consonant) என்று காண்பது ஒலியனியல். ஒலிப்பியலில்,

1. வாயில், நடுவில், தடையின்றிப் பிறப்பன/பிறவாறும், தடையுடன் மாறுபடப் பிறப்பன (Vocoid/contoid or non-vocoid)
2. ஒலித்தசை அதிர்வில் பிறப்பன/அதிர்வின்றிப் பிறப்பன (Voiced/voiceless)
3. வாயொலி/மூக்கொலி (Orals/nasals)
4. இன்னொலி/இன்னாவொலி (Resonant/consonant or musical/noisy)
5. திறப்பொலி/அடைப்பொலி (Open/closed)
6. இறுகொலி/நெகிழொலி (Tense/lax)
7. தொடர் ஒலி/தடையொலி (Continuants/interrupted)
8. முன்னொலி/பின்னொலி (Front/back)
9. இதழ் குவிவுடையன/குவிவில்லன (Rounded/unrounded)
10. எடுப்பொலி/படுப்பொலி (Sonorous/non-sonorous or marked/unmarked)
11. உயரொலி/தாழொலி (High/low)
12. செறிவொலி/சிதறொலி (Compact/diffused)
13. தெளிவுடையன/தெளிவில்லன (Acute/grave or sharp / non-sharp)
14. வல்லொலி/மெல்லொலி (Fortis/lenis)
15. இயல்புடையன அல்லது தனியொலி/அரியன அல்லது கூட்டொலி (Simple/complex).
16. மிகு கடுப்பொலி/மிதக்கடுப்பொலி (Strident/non-strident)
17. தூயவொலி/கலப்பொலி (Pure sounds/impure sounds)
18. அகவொலி/புறவொலி (Internal sounds/external sounds)
19. வருவளியொலி/செல்வளியொலி (Ingressive air sounds/egressive air sounds)
20. குறுகொலி/நீளொலி (Short/long) எனப் பலவகை.

வாயின்கண் இருவகையாக ஒலிகள் தோன்றுவதியல்பு:

1. வாயுறுப்புக்களாகிய கீழ், மேல் ஒலியுறுப்புக்கள் எதுவும் தம்மில் தொடாதவாறே, வாயின் உட்பகுதி வடிவ வேறுபாட்டால், குரல்வளை ஒலி வெவ்வேறு உருக்கொள்ளுதல்.
2. மேல், கீழ் வாயுறுப்புக்கள், ஒன்றையொன்று, பலவேறு வகையில் தொடக் குரல்வளை ஒலி வெவ்வேறு உருக்கொள்ளுதல், முன்னவை, வாய்த்தடை இல்லன. பின்னவை, வாய்த்தடை உடையன.

வாயடைக்க, மூக்குத் திறப்போடு தோன்றும் ஒலிகளும், மூக்கடைக்க வாய் திறப்போடு தோன்றும் ஒலிகளும், வாயும், மூக்கும் திறக்கத் தோன்றும் ஒலிகளும் மேலனவற்றோடு சார்த்தியுணரத்தக்கன.

வாய்த் தடையில் ஒலிகளில்,

1. வாயின் நிறை திறப்பில் தோன்றுவன
2. வாயின் அரை குறை திறப்பில் தோன்றுவன
3. வாயின் குறை திறப்பில் தோன்றுவன
4. நாவின் முற்பகுதி எழுச்சியில் தோன்றுவன
5. நாவின் பிற்பகுதி எழுச்சியில் தோன்றுவன
6. இதழ் குவியத் தோன்றுவன
7. இதழ் விரியத் தோன்றுவன எனப் பலவகையாம்.

வாய்த் தடையொலிகளில்,

1. நிறை தடையுடையன
2. நிறை-குறை தடையுடையன
3. குறை தடையுடையன
4. நடுத்தடையுடையன
5. பக்கத் தடையுடையன
6. விட்டுவிட்ட தடையுடையன
7. தொடு தடையுடையன எனப்பலவகையாம். இவை ஒலிப்புமுறை குறித்தன.

வாய் அங்காத்தல், விரிதல், குவிதலில், உறுப்பு, ஒன்றை ஒன்று இயைய, ஒற்ற, வருடலில் பிறத்தலுமாம்.

இவ்வொலிகள், வரிவடிவிலன்றி, நிலைபெறக் காட்டலாகாதன வாதலினால், காட்டுக்கள் வரி வடிவில் தரப்படும். வரி, ஒலிக்கு நிலைத்த வடிவம் கொடுப்பதற்கேயாம்.

ஒரு மொழி ஒலியோடு, இன்னொரு மொழி ஒலி ஒப்புடையது என்பதன்றி, அதுவே இது என்பதன்று. அவற்றிடை வேற்றுமைக் கூறுகள் பல இருத்தலுமாம்.

2.7.2. மூவேறு ஒலிப்பியல் (Three types of articulations)

ஒலிப்பியல்பு மூவகை:

1. எல்லா ஒலிகளையும் ஏறத்தாழ அதிர்வுடையன (Voiced), அதிர்வில்லன (Voiceless) என இரு வகை செய்யலாகும். ஓரிடத்தில், ஒரு முறையில் பிறக்கும் ஒலியே அதிர்வு, அதிர்வின்மையால் இரு வேறுபட்ட ஒலியாகும். இந்நிலையில் அதிர்வு, அதிர்வில் ஒலியினும் சிறிது மென்மையும், இனிமையும் கொண்டு வேறுபடும். அதிர்வு, ஓரொலியின் அமைவியல்பைக் (Mode of articulation) காட்டும்.
2. ஒலிகள் தடையின்மை (Free air stream), தடையுண்மை (Obstructed air stream)யாகிய ஒலிப்பு முறையில் (Manner of articulation) வகை வேறாகும்.
3. தடையின்மை, தடையுண்மை வாயின் அளவில், வடிவில், உறுப்பு நிலையில், ஒலிப்பிடம் (Point of articulation) வழி, வகை வேறுபடும்.

தடையின்மையில் வாயின் அளவு, வடிவு வேறுபடும். தடையுண்மையில் உறுப்பியைபால் வேறுபடும். தடையின்மை, உண்மை வாயின் எந்நிலையில் என்று கூறுவதே ஒலிப்பிடப் பணியாகும். எனவே, ஒலிப்பு முறையும், ஒலிப்பிடமும் இணைந்து செயல்படும். தடையின்மை பெரிதும் உயிரளவில் (Vocoid) *செயல்படும். தடையுண்மை பெரிதும் மெய்யளவில்* (Contoid) *செயல்படும்.*

அதிர்வு, அதிர்வின்மை ஒலிப்பின் முதல் நிலை, அகநிலை அல்லது அடிநிலை. தடையின்மை, தடையுண்மை முறையும், உறுப்பியைபாகிய இடமும் இறுதிநிலை, புறநிலை அல்லது முடிநிலை. முறையும், இடமும் அரிதாக முதல் நிலையிலுமாம்.

ஒலிப்பதிர்வு, முறை, இடம் ஆகிய மூன்றனையும் உட்படுத்திக் காண உயிர் (Vocoid), மெய் (Contoid) விளக்கம் பெறும்.

உயிர் (Vocoid) / மெய் (Contoid) — அதிர்வு / முறை / இடம் } ஒலிப்பு

2.7.3. தடையில் வாய்நடுவொலி/தடையுடை வாய், மூக்கொலி (Vocoids/non-vocoids or contoids)

குறிப்பிடப்பட்ட இரண்டுபட்ட வகை யாவற்றையும் இவ்விரண்டன்கண்ணும் உள்ளடக்கிக் காணலாகும். இவையிரண்டு பெருவகையும் ஒலிப்பியல் அடிப்படையில் காணப்பட்டன. ஒலிப்பியல்பில், தடையில் வாய் நடுவொலி, (1) வாய் வழிப் பிறத்தல் வேண்டும். (2) நாநடு வழிப் பிறத்தல் வேண்டும். (3) வாயில் தடையின்றிப் பிறத்தல் வேண்டும். வாய்ப் பக்கவளிச் செலவாகாது. வாயிலன்றிப் பிறவகைத் தடை கருதப்படாது. மூக்குவழிச் செலவு இதன் கண் இல்லை (Central resonant orals or vocoids). *உயிரொலிகளும்* (Vowels), *அரை உயிர்களும்* (Semi vowels or glides) *அல்லது வாய் நடுவழி இன்னொலிகள்* (Median resonants) *இவ்வகையைச் சார்ந்தன.*

எ - டு :

அகர முதல் ஔகாரம் ஈறாகவுள்ள உயிர்களும், யகர மெய்யாகிய அரையுயிரும்.

1. a, i, u, e, o - Vowels
2. y, w, r, h, j - Semi vowels - English

1. உயிரொலிகள், அதிர்வுடை, அசையமுத்தமுடையன (Voiced, syllabic vocoids). *இவை அசைகளில் நடு, எடுப்பொலியாக வருவன. அசையின் உயிர்நிலை*

2. அரையுயிரொலிகள், அதிர்வுடையன. ஆயின் அசையமுத்தம்

இல்லன. அசையின் ஓர ஒலியாகப் (Marginals), படுப்பொலியாக (Voiced non-syllabic) வருவன.

3. குரல்வளைக் குழியில் தோன்றும் 'ஹ்' ஒலி [ɦ]-(Glottal 'h') யாகிய அதிர்வுடை அசையழுத்தமில் ஒலியும் (Voiced non-syllabic), அதிர்வில் அசையழுத்தமில் ஒலியும்[h], தொண்டைக் குழியில் தோன்றும் 'ஹ்' ஒலி [ḥ] (Pharyngeal 'h')யாகிய அதிர்வில், அசையழுத்தமில் ஒலியும் (Voiceless non-syllabic) இவ்வகையைச் (Vocoids) சார்ந்தனவே. குரல்வளையில், தொண்டைக் குழியில் உரசொலி. ஆயின் வாயில் தடையில்லன. இவ்வாறு மூவகையின அவை.

இவ்வகைக்கு மாறுபட்டன, (1) மூக்குவழிப் பிறப்பன (2) வாய் அல்லது நாப்பக்கம் வழிப் பிறப்பன (3) வாய்த் தடையுடன் பிறப்பன (Non-vocoids or contoids).

எ - டு : மெய்யொலிகள்

1. வெடிப்பொலி (Stops) - க், ச், ட், த், ப், ற்
2. உரசொலிகள் (Fricatives) - வ்
3. மூக்கொலிகள் (Nasals) - ங், ஞ், ண், ந், ம், ன்
4. பிரிவளியொலிகள் (Laterals) - ல், ழ், ள்
5. வருடொலி (Flap) - ர்

- வெடிப்பொலி, அதிர்வில் ஒலி. ஏனையன, அதிர்வொலிகள்.

1. **வெடிப்பொலி (Stops)** [K.T.P] - Voiceless. [G.D.B] - Voiced
- நிறை தடையுடையன

2. **வெடிப்புரசொலி (Affricate or affricated stops)**- [¢] - (ts)- Voiceless [ʒ] - (dz) - Voiced, [č] - (tš) - voiceless, [ǰ] - (dž) - voiced
[pf] - voiceless, [bv]- Voiced - ஓரிடப் பிறப்புடையன (Homorganic)
[ks], [px] - Voiceless - வேறிடப் பிறப்புடையன (Heterorganic).

நிறை-குறை தடை உடையன வெடிப்பொலியாகத் தொடங்கி, உரசொலியாக முடிவன. சில மொழிகளில் இவை ஓரொலிகளாகவும், சில மொழிகளில் ஈரொலிக் கூட்டுக்களாகவும் கருதப்படும்.

3. **உரசொலி (Fricatives or continuants or spirants)**

(1) வாய்/நா விரிவடிவுடையன (Flat or slit)
[f] - Voiceless, [v] - Voiced
[θ] - Voiceless, [ð] - Voiced

(2) வாய்/நாக் குழல் வடிவுடையன (Grooved)
[s] - voiceless , [z] - voiced - Sibilants
[š] - voiceless , [ž] - voiced - Shibilants

- குறை தடையுடையன. உரசி ஒழுகிச் செல்வன. தடை குறையத் தொடர்ந்தொலிப்பன.

4. **மூக்கொலி (Nasals)** மூக்குவழிச் செலவுடையன. வாய்த் தடையுடையன. [M,N]- Voiceless, [m,n] - Voiced

5. பிரிவளியொலி (Laterals) வாயில் காற்று அல்லது ஒலி, நாவால் ஒரு பக்கம் தடைபட மற்றோர் பக்கம் வழியோ, நடுவில் தடைபட இருபக்கமும் வழியோ செல்வன. [L] -voiceless. [l] - voiced. இது சிலபோது அசையழுத்தமும் (Syllabic) பெறும்.

6. வருடொலி (Flap) நாநுனி பல்லுறை முகட்டிடத்தில் ஒருமுறை தடவ ஏற்படும் தடையால் பிறப்பது. பல முறை தொடும் உருட்டொலியின் (Rolled) ஒரு முறை தொடும் ஒலியே இது. இரண்டும் இயைபுடையன. வருடொலியை மிகக் குறுகிய வெடிப்பொலி (Short stop) என்பதுமாம். [R]- Voiceless, [r] - Voiced.

7. உருட்டொலி (Rolled) நாநுனி பல்லுறை முகட்டிடத்தைப் பன்முறை விரைவில் தொட இவ்வொலியாம். சில மொழிகளில் உள் நாக்கும் இவ்வொலியை ஆக்கும். உதடுமாம். [R] - Voiceless, [r] - Voiced.

இவற்றோடு, உள்வாங்கும் ஒலிகள் (Implosives), வாயின் முன், பின் இருபுறமும் அடைத்து, நாவை உள்வாங்கும் 'க்ளிக்'- ஒலிகள் (Clicks) ஆகிய இரண்டனையும் சேர்த்து, ஒன்பது வகையான ஒலிகளையும் வாய்த்தடை, வாய்ப் பக்கம், மூக்குவழி மெய்கள் (Non-vocoids or contoids) என்பதியல்பு - (Brakel, Arthur, 1983: 120,121).

மாறாகப், பிரிவளியொலி, வருடொலி, உருட்டொலியாகிய மூன்றனவற்றையும் வாய்வழித் தடையில் ஒலி (Vocoids) என்பதும், மூக்கொலி இரு வண்ணமும் (Vocoids & contoids) உடையன என்பதுமாம் (Hockett, Charles, F., 1970: 73, 74).

தூய, தடையில், வாய்நடுவழி ஒலி (Vocoids) உயிரொலிகளே. தூய, வாய்வழி, மூக்குவழித் தடையுடையன (Contoids) வெடிப்பொலிகளும், வெடிப்புரசொலிகளும், உரசொலிகளுமேயாம். அரையுயிர்கள், மூக்கொலிகள், பிரிவளியொலிகள், வருடொலி, உருட்டொலி, 'ஹ்' (h) ஒலிகள், உள்வாங்கொலிகள். நா உள்வாங்கொலிகள் யாவும் இரு சாயலும் பெற்றனவே.

இவற்றுள், அரையுயிர்கள், 'ஹ்' (h) ஒலிகள் உயிரொலியைச் சார்ந்தன. ஏனைய, மெய்யொலியைச் சார்ந்தன. எனவே, உயிரும் (Vocoids), மெய்யும் (Contoids) தூய தன்மை, கலவைத் தன்மையால் முதலும், சார்பும் என இரு வகையின. இவை ஒலிப்பியல்பால் ஆவன. மேலன, ஒலிப்பு முறை (Manner of articulations) தழுவி வகை செய்யப்பட்டன.

அதிர்வு நிலையை அடக்கிய, ஒலிப்பு முறை தழுவிய வகையோடு, ஒலிப்பிடம் தழுவிய ஒலிப்பியலையும் இணைத்துக் காண்பதே இயைபுடையது.

2.7.4. ஒலிப்பிட ஒலிகள் (Sounds, related to the points of articulation)

தடையொலிகளின் ஒலிப்பிடங்களால், எவ்விடத் தடையால் எவ்வொலிப்பு முறை ஏற்படுகின்றது என்பது தெரியவரும்.

மேல் :

1. மேல் வாயிதழில் பிறப்பது - இதழொலி (Labial)
2. மேல் வாய்ப் பல்லில் - பல்லொலி (Dental)
3. மேற்பல்லுறை முகட்டில் - பல்முகட்டொலி (Alveolar)
4. வல்லண்ணத்தில் - அண்ணவொலி (வல்லண்ணவொலி) (Palatal)
5. மெல்லண்ணத்தில் - மெல்லண்ணவொலி (Velar)
6. உள் நாக்கில் - உள் நாக்கொலி (Uvular)
7. தொண்டைக் குழியில் - தொண்டையொலி (Pharyngeal)
8. குரல்வளையில் - குரல்வளையொலி (Laryngeal/glottal)

கீழ் :

1. கீழ் வாயிதழில் பிறப்பது - இதழொலி (Labial)
2. கீழ் வாய்ப் பல்லில் (அரிது) - பல்லொலி (Dental)
3. நுனி நாவில் - நுனி நாவொலி (Apical)
4. முன் நாவில் - முன் நாவொலி (Frontal)
5. நடு நாவில் - நடு நாவொலி (Central)
6. பின் நாவில் - பின் நாவொலி (Dorsal)
7. வளை நாவில் பிறப்பது - வளை நாவொலி (Retroflex)


மேல், கீழ் வாயுறுப்புக்கள் ஏதாவது ஓரிடத்தில், இயைய அல்லது இணையப் பிறப்பதே இடநிலை மெய்யொலிப்பாகும்.

2.7.5 ஒலியனும், ஒலிப்புக்களும் (Phonemes and articulations)


1. ஈரிதழும் இயையப் பிறப்பது, ஈரிதழொலி (Bilabial)

[ப்] *- அதிர்வில்லது - வாய்வழி - வெடிப்பொலி*
[ம்] *- அதிர்வுடையது - மூக்குவழி - மூக்கொலி (வாய்வழியாயின் மூக்கடைப்பும், மூக்குவழியாயின் வாயடைப்புமாம்)*


[p]	- Voiceless	- Oral	- Stop
[b]	- Voiced	- Oral	- Stop
[m]	- Voiced	- Nasal	- Nasal



[ப்] / [p]




[b]




[ம்] / [m]

2. கீழிதழும், மேற்பல்லும் இயையப்பிறப்பது, இதழ் - பல்லொலி (Labio - dental)


[வ்]	- அதிர்வுடையது	- வாய்வழி	- உரசொலி
[f]	- Voiceless	- Oral	- Fricative
[v]	- Voiced	- Oral	- Fricative



[f]




[வ்] [v]




தட்டை வடிவ உரசொலி

3. நுனிநா (முன்நாவும்) மேற்பல்லைப் பரந்தழுத்தப் பிறப்பது, நுனிநா/முன்நாப் பல்லொலி (Apico/Fronto Dental)


[த்]	- அதிர்வில்லது	- வாய்வழி	- வெடிப்பொலி
[ந்]	- அதிர்வுடையது	- மூக்குவழி	- மூக்கொலி
[t]	- Voiceless	- Oral	- Stop
[d]	- Voiced	- Oral	- Stop



[த்] / [t]



[d]




[ந்] / [n]


4. நுனிநாப் பல் முகட்டை ஒற்றப்பிறப்பது, நுனிநாப் பல்முகட்டொலி (Apico alveolar)

[ற்]	- அதிர்வில்லது	- வாய்வழி	- வெடிப்பொலி
[ன்]	- அதிர்வுடையது	- மூக்குவழி	- மூக்கொலி

[ல்]	- அதிர்வுடையது	- வாய்வழி	- பிரிவளியொலி
[ர்]	- அதிர்வுடையது	- வாய்வழி	- வருடொலி
[n]	- Voiced	- Nasal	- Nasal
[l]	- Voiced	- Oral	- Lateral
[r]	- Voiced	- Oral	- Flap



[ற்]



[ன்]



[ல்] / [l]

ஈருயிரிடை [ற்] - உருட்டொலி - [R], [r] - Rolled



[ர்]/[r]



உயிர் [ற்] உயிர்

5. நுனிநா வளைந்து வல்லண்ணத்தைத் தடவப் பிறப்பது, வளைநா அண்ணவொலி (Cacuminal/retroflex/apico domal




[ட்]




[ண்]

[ட்] - அதிர்வில்லது - வாய்வழி - வெடிப்பொலி
[ண்] - அதிர்வுடையது- மூக்குவழி - மூக்கொலி



[ள்]




[ழ்]


[ள்] - அதிர்வுடையது- வாய்வழி - பிரிவளியொலி
[ழ்] - நா வளைந்து மெல்லண்ணம் வருடப் பிறப்பது (Retroflex - apico velar). அதிர்வுடையது - வாய்வழி - பிரிவளியொலி

6. நடுநா, வல்லண்ணத்தை இயையப் பிறப்பது நடுநா வல்லண்ணவொலி (Centro-palatal)


[ச்] - அதிர்வில்லது - வாய்வழி - வெடிப்பொலி
[ஞ்] - அதிர்வுடையது - மூக்குவழி - மூக்கொலி
[S,Š] - Voiceless - Oral - Spirant
[Z,Ž] - Vocied - Oral - Spirant
[ய்]/[y] - அதிர்வுடையது (vd), வாய்வழி (Oral), அரையுயிர் (Semi vowel)




குழல் வடிவ உரசொலி



[ச்]



[ஞ்]




[S]




[Z] & [ய்] / [y]

7. அடிநாவும், மெல்லண்ணமும் இயையப்பிறப்பது, அடிநா மெல்லண்ணவொலி (Dorso - velar)


[க்] - அதிர்வில்லது - வாய்வழி - வெடிப்பொலி
[ங்] - அதிர்வுடையது - மூக்குவழி - மூக்கொலி
[k] - Voiceless - Oral - Stop
[g] - Voiced - Oral - Stop
[h] - Voiced/voiceless - pharyngeal/laryngeal - fricative



[க்]/[k]



[g]



[ங்]/[ŋ]

காண்பன -
1. ஒலித்தசை - அதிர்வு/அதிர்வின்மை
2. மூக்குவழி - திறப்பு/அடைப்பு
3. வாயிதழ் - திறப்பு/அடைப்பு
4. கீழ்-மேல் உறுப்புக்களின் இணைவு
5. வெடிப்பொலி, அதன் இன மூக்கொலிக்குப் பிறப்பிடம் ஒன்றே. முன்னையதற்கு வாய் வழியும், பின்னையதற்கு மூக்குவழியும் காற்றுச் செல்லும்.

2.7.6 ஒலிகள் – தமிழ் (Phones/sounds - in Tamil)

ஒலிப்பிடம் / ஒலிப்புமுறை	அதிர்வு	ஈரிதழ்	இதழ்-பல்	நுனி(முதல்) நா-பல்	நுனிநா-பல் முகடு	வளைநா-முன்னண்ணம்	நடுநா-வல்லண்ணம்(இடையண்ணம்)	கடைநா மெல்லண்ணம் (கடையண்ணம்)	வளை நா-கடையண்ணம்
வெடிப்பொலி	உண்மை								
	இன்மை	ப்		த்	ற்	ட்	ச்	க்	
உரசொலி	உண்மை		வ்						
	இன்மை								
மூக்கொலி	உண்மை	ம்		ந்	ன்	ண்	ஞ்	ங்	
	இன்மை								
பிரிவளியொலி	உண்மை				ல்	ள்			ழ்
	இன்மை								
வருடொலி	உண்மை				ர்				
	இன்மை								
உருட்டொலி	உண்மை				(ற்)				
	இன்மை								
அரையுயிர்	உண்மை						ய்		
	இன்மை								

2.7.7. Sounds - English

Points of articulations / Manner of articulations	vl/vd	Bilabial	Labio dental	Apico/ Fronto Dental	Apico/ Fronto Alveolar	Centro Palattal	Dorso velar	Uvular	Pharyn-geal	Laryn-geal /Glottal
Stops	vl	p			t		k			
	vd	b			d		g			
Affricates	vl					č				
	vd					ǰ				
Fricatives	vl		f	θ	s	š			ḥ	h
	vd		v	ð	z	ž				ɦ
Nasals	vl									
	vd	m			n		ŋ			
Laterals	vl									
	vd				l					
Flaps	vl									
	vd				ř					
Trills	vl									
	vd				r̃					
Semi vowels	vl									
	vd	w				y				

Sounds - General

Manner	Points	Bilabial	Labio Dental	Apico/ Fronto Dental	Apico/ Fronto Alveolar	Retro-flex	Alveo Palatal	Centro Palatal	Dorso - Velar	Labio Velar	Uvular	Pharyn-geal	Glottal/ Laryn-geal
Stop Simple	vl	p	p̣	t̪	t	ṭ	c	k̭	k	k͡p	q		?
	vd	b	ḅ	d̪	d	ḍ	j	g̭	g	g͡b			
Aspirated	vl	ph			th				kh				
	vd	bh			dh				gh				
Affricated	vl	pp	pf		ȼ(ts)		č(tš)		kx				
	vd	bb	bv		z̧(dz)		ǰ(dž)		gg				
Laterally affricated	vl			ƛ	(tł)								
	vd			ʎ	(dl)								
Prenasalised	vl	mp			nt								
	vd	mb			nd								
Glottalised	vl	p'			t'				k'				
	vd												
Implosive	vl												
	vd	ɓ			ɗ								

Manner	Points	Bilabial	Labio Dental	Apico/ Fronto Dental	Apico/ Fronto Alveolar	Retro flex	Alveo Palatal	Centro Palatal	Dorso - Velar	Labio Velar	Uvular	Pharyn-geal	Glottal/ Laryn-geal
Fricatives Slit	vl	ɸ	f	θ					x			ḥ	h
	vd	ƀ	v	ð					ɣ				ɦ
Groove	vl				S	Ṣ Ṣ̌	Š						
	vd				Z	Ẓ Ẓ̌	Ž						
Lateral	vl				ɫ								
	vd												
Resonants Nasal	vl												
	vd	m	ṃ	n̂	n	ṇ	ñ		ŋ		ŋ̣		
Lateral	vl												
	vd				l	ḷ	ʎ						
Median	vl	ẉ					ỵ						
	vd	w			r		y						
Flap	vl				ṛ̌								
	vd				ř								
Trill	vl	p̃			ṛ̃								
	vd	b̃			r̃						R		

Symbols for Nonsyllabic Nonvocoids with Egressive Lung Air

General Type of Nonvocoid		Bilabial	Labio-Dental	Inter-Dental	Alveolar	Retroflex	Alveo-palatal	Retroflex	Palatal	Velar	Back velar	Uvular	Pharyn-geal	Glottal
		Point of Articulation												
Stops														
One-segment	vl	p		t̯	t	ṭ			k̭	k	ḳ (q)		k̤	?
Unaspirated	vd	b		d̯	d	ḍ			g̭	g	g̣ (G)			
Two segment	vl	ph (p')			th (t')					kh (k')				
Aspirated	vd	bɦ (b')			dɦ (d')					gɦ (g')				
Affricated	vl	pɸ		t̯θ	ts (¢)		tš (č)			kx				
	vd	bβ		d̯ð	dz (ʒ)		dž (ǰ)			gg				
Laterally	vl				tɬ (ƛ)									
released	vd				dl (λ)									
Fricatives Central														
Flat	vl	ɸ	f	θ	θ̣				x̭	x	x̣		ḥ	h
	vd	β	v	ð	ð̣				g̭	g	g̣			ɦ
Grooved	vl	w̥ +			s	ṣ	š	ṣ̌						
	vd	w +			z	ẓ	z̃	ẓ̌						
Lateral	vl				l̥ +									
	vd				l +									
Frictionless														
Nasal	vl	m̥ (M)			n̥ (N)		ñ̥ (Ñ)			ŋ̥ (Ŋ)				
	vd	m			n	ṇ	ñ			ŋ				
Lateral	vl				ɬ (L)		+ʎ̥							
	vd				l	ḷ	ʎ							
Vibrants														
Flapped	vl				ř̥									
	vd				ř ɾ	ṛ								
Trilled	vl	p̥̃			r̥̃							R̃		
	vd	b̃			r̃									

- (Pike, Kenneth, L., 1968: 7)

The International Phonetic Alphabet (Revised to 1951)

CONSONANTS

	Bi-labial	Labio-Dental	Dental and Alveolar	Retroflex	Palato alveolar	Alveolo palatal	Palatal	Velar	Uvular	Pharyn-geal	Glottal
Plosive	p b		t d	ʈ ɖ			c ɟ	k g	q c		?
Nasal	m	ɱ	n	ɳ			ɲ	ŋ	N		
Lateral Fricative			ɬ ɮ								
Lateral Non-fricative			l	ɭ			ʎ				
Rolled			r						ʀ		
Flapped			ɾ	ɽ					ʀ		
Fricative	ɸ β	f v	θ ð s z ɹ	ʂ ʐ	ʃ ʒ	ɕ ʑ	ç ʝ	x ɣ	χ ʁ	ħ ʕ	h ɦ
Functionless Continuants and Semi- vowels	w ɥ	ʋ	ɹ				j (ɥ)	(w)	ʁ		

Contoids - Basic Chart								
	Lab	L-D	Dent	Alve	Cacu	Pal	Vel	Uv
Stop								
vl	p		t̲	t	ṭ	c	k	K
vd	b		d̲	d	ḍ	j	g	G
Fricative								
Slit								
vl		f	θ			ç	x	
vd		v	đ			ǰ	g	
-Slit								
vl	p		s̲	s	ṣ	š		x
vd	ƀ		z̲	z	ẓ	ž		C
Affricate								
vl	p ṗ	pf		ts		č	kx	
vd	b ƀ	bv		dz		ǰ	gg	
Nasal								
Occl	b̃		d̲̃	d̃	ḍ̃	c̃	g̃	
-Occl	m	ṃ	n̲	n	ṇ	ñ	ŋ	
Lateral								
vd			l̲	l	ḷ	l̃	ʎ	
vl				ɬ				
Occ			t̲l̲	tl	ṭḷ	cl		
Click				ɧ				
Vibrant								
Flap				r				
Tap				ɾ				
Trill				r̃				
Implosives	ɓ			ɗ	j	ʃ	ɠ	
Clicks	qy			ǃ	ʇ			

- (Brakel, Arthur, 1983 : 120,121)

2.7.8. தடையுடை, வாய், மூக்குவழி ஒலிகள்—அசையழுத்தம் இல்லன (Contoids-non-syllabic)

1. வெடிப்பொலிகள் (Stops)
    அதிர்வில்லன (vl) - [p,t,k]
    அதிர்வுள்ளன (vd) - [b,d,g]

2. உரசொலிகள் (Fricatives)
    (vl) - [f,θ,s,š]
    (vd) - [v,ð,z,ž]

3. மூக்கொலிகள் (Nasals)
    (vd) - [m,n,ŋ]

4. பிரிவளியொலிகள் (Laterals)
    (vd) - [l]

5. வருடொலி (Flap)
    (vl) - [ř̥]
    (vd) - [ř]

6. உருட்டொலி (Rolled)
    (vl) - [r̥̃]
    (vd) - [r̃]

இவற்றுள் [ŋ] ஒழிந்த எஞ்சிய மூக்கொலிகளும், பிரிவளியொலியும், வருடொலிகளும் சிலபோது அசையழுத்தம் (Syllabic stress) பெறுதலுமாம்.

தமிழிலும்,	கண், ண்	- அசையழுத்தம் பெற்றது [ண்]
	பொன்,ன்	- அசையழுத்தம் பெற்றது [ன்]
	கல்,ல்	- அசையழுத்தம் பெற்றது [ல்]

இவ்வாறு, ஒற்றுக்கு அழுத்தங் கொடுப்பது, வழக்கிலும், செய்யுளிலும் காணலாகும். அசையழுத்தங் கொடுக்கத் தனியசையாகும், ஈண்டு.

உயிர் நீங்கலாகவுள்ள தடையில் வாய் வழி ஒலிகள் (Vocoids) ஆகிய அரையுயிர்களும் (Semi vowels), தொண்டைக்குழி, குரல்வளைக் குழி உரசொலிகளும் (Fricatives) அசையழுத்தம் பெறாதன (Non-syllabic).

1. அரையுயிர்கள் (Semi vowels)
    அதிர்வில்லன (vl) - [w̥,y̥]
    அதிர்வுள்ளன (vd) - [w,y,r]

2. உரசொலிகள் (Fricatives)
    (vl) - [ḥ] (Pharyngeal)
    (vl) - [h] (Glottal)
    (vd) - [ɦ] (Glottal)

எனவே, தனியுயிரும் (Simple, monophthongal), கூட்டுயிரும் (Com-

plex, diphthongal) எப்போதும் அசையழுத்தம் (Syllabic stress) பெறும் இயல்புடையன.

இதனால், அசையழுத்தம் பெறாத அரையுயிர்களையும், உரசொலிகளையும் (தொண்டை, குரல்வளை), சிலபோது அசையழுத்தம் பெறும் மூக்கொலி, பிரிவளியொலி, வருடொலிகளையும், எப்போதும் அசையழுத்தம் பெறாத வெடிப்பொலி, உரசொலி, உருட்டொலிகளோடு இணைத்து இவையாவற்றையும் மெய்யெனும் ஒரு வகையாக்குவது மரபு.

இவ்வாறு இவை மூவகையின.

2.7.9. ஒலி வேறுபாடு (Phonic difference)

ஒலிப்பதிர்வு, ஒலிப்பு முறை, ஒலிப்பிடம் இவற்றின் இணைவு நிலையில் பல வகையில் ஒலி வேறுபடும்.

1. மேல் வாயுறுப்பு ஒன்றேயாகக் கீழதாகிய இயங்கும் உறுப்பு வேறுபட, ஒலி வேறாகும்.

எ - டு : வல்லண்ணத்தில் நடுநாச் சேர [ச்] பிறக்கும். அதே இடத்தில் நுனி நாச் (பின் புறம்) சேர [ட்] - பிறக்கும்.

2. கீழதாகிய இயங்கும் உறுப்பு ஒன்றேயாக, மேல் வாயுறுப்பு வேறுபட, ஒலி வேறுபடும்.

எ - டு : கீழதாகிய நுனிநாப் பல்லைச் சேர [த்] பிறக்கும். அதே நுனிநாப் பல் முகட்டைச் சேர [ற்] பிறக்கும். பிறவுமாம்.

3. மேல், கீழ் உறுப்பு இரண்டன் இணைவு ஒரு நிலையதாக, நிறைதடை, குறை தடை, நடுத்தடை, பக்கத் தடை, தொடுதடை, விட்டு விட்ட தடை, வாய்த் தடை (மூக்குவழித் திறப்பு) முதலிய ஒலிப்பு முயற்சி வேறுபட, ஒலி வேறுபடும்.

எ - டு : அடியண்ணமும், அடிநாவும் சேரப் பிறப்பனவாயினும் மூக்கடைக்க, வாய் நிறை தடை விடையில் [க்] ஒலியும், வாய் நிறை தடையில் மூக்குத் திறக்க [ங்] ஒலியும் பிறக்கும். பிறவுமாம்.

4) ஒலிப்பு முறை ஒன்றேயாக, இடம் வேறுபட, ஒலி வேறுபடும்.

எ - டு : வெடிப்பொலிகள் ஒலிப்பு முறை ஒன்றேயாகப் பிறப்பிட வேற்றுமையால் ஒலி வேறுபடும். - [க், ச், ட், த், ப், ற்]- ஒலிப்பு முறை வெடிப்பொலி, இடத்தால் வேறுபட்டன.

5) ஒலிப்பு முறையும், இடமும் ஒன்றேயாக, அதிர்வு உண்மை, இன்மையால் வேறுபட, ஒலி வேறுபடும்.

எ - டு : ஆங்கிலம். [pb], [td], [kg] ஆகிய மூன்று இணைகளுள், ஒன்றில், இரண்டும் ஒலிப்பு முறையால், இடத்தால் ஒன்றுபடினும், அதிர்வின்மை, உண்மையால் ஒலிவேறுபடும். பிறவுமாம்.

2.7.10. தமிழொலிகளின் வகை (Categories of phones in Tamil)

தமிழ் ஒலிகளுள்,
கீழ் :
1. அடி நாவில் பிறப்பன - [க், ங்]
2. நடு நாவில் பிறப்பன - [ச், ஞ், ய்]
3. வளை நாவில் பிறப்பன - [ட், ண், ழ், ள்]
4. முதல் நா/நுனி நாவில் பிறப்பன - [த், ந்]
5. நுனி நாவில் பிறப்பன - [ற், ன், ல், ர்]
6. கீழிதழில் பிறப்பன - [ப், ம், வ்]

மேல் :
1. மெல்லண்ணத்தில் பிறப்பன - [க், ங், ழ்]
2. வல்லண்ணத்தில் பிறப்பன - [ச், ஞ், ய்] - [ட், ண், ள்]
3. பல் முகட்டில் பிறப்பன - [ற், ன், ல், ர்]
4. பல்லில் பிறப்பன - [த், ந், வ்]
5. இதழில் பிறப்பன - [ப், ம்]

1. இவற்றுள் வாயின் இரண்டு ஓரப் பிறப்பின (முன், பின்)
(அ) [க், ங், ழ்] (ஆ) [ப், ம், வ்]
2. இடைப்பிறப்பன - எஞ்சியன. இவற்றுள்,

1. வாயின் பின் பிறப்பன [க், ங், ழ், ச், ஞ், ய்]
2. வாயின் முன் பிறப்பன - எஞ்சியன
[ச், ஞ், ய்]- இடைப்பிறப்பின எனினுமாம்

1. மூக்குவழியன - [ங், ஞ், ண், ந், ம், ன்]
2. வாய் வழியன - எஞ்சியன

1. இன்னாவொலி - [க், ச், ட், த், ப், ற்]
2. இன்னொலி - எஞ்சியன

1. வல்லொலி - [க், ச், ட், த், ப், ற்]
2. மெல்லொலி - எஞ்சியன

1. மூடொலி - [ப், ம், வ்]
2. திறப்பொலி - எஞ்சியன

1. அதிர்வில்லன - [க், ச், ட், த், ப், ற்]
2. அதிர்வுடையன - எஞ்சியன

1. தடையொலி - [க், ச், ட், த், ப், ற்]
2. தொடரொலி - எஞ்சியன

1. இணையொலிகள் - [க்ங், ச்ஞ், ட்ண, த்ந், ப்ம், ற்ன்]
2. தனியொலிகள் - [ய், ர், ல், வ், ழ், ள்]

இணையொலிகள், ஒலிப்பிடத்தால் ஒன்றுபட்டன. ஒலிப் பதிர்வால், ஒலிப்பு முறையால் வேறுபட்டன. தனியொலிகள் அதிர்வால் ஒன்றுபட்டன. ஒலிப்பிடத்தால், ஒலிப்பு முறையால்


இதழ்	பல்	பல்முகடு	வல்லண்ணம் முன்	வல்லண்ணம் பின்	மெல்லண்ணம்
ப் ம்	த் ந்	ற் ன்	ட் ண்	ச் ஞ்	க் ங்
	வ்	ர்	ள்		ழ்
		ல்			
				ய்	

இணை, தனி ஒலிகள்

வேறுபட்டன. [ர்], [ல்], (ஓரொலிப்பிடம்) ஒலிப்பு முறையாலும், [ல்], [ள்], [ழ்] (ஓரொலிப்பு முறை) ஒலிப்பிடத்தாலும் தம்மில் வேறு பட்டன. இணையொலிகளும், தனியொலிகளும் இடத்தால் ஒன்று பட்டனவாயினும் அதிர்வாலும், முறையாலும் வேறுபட்டன. உருட்டொலி (Rolled) தனிநிலையில் இல்லை. சூழ்நிலையில், ஈருயிரிடை வரும்போது அவ்வொலி பெறுகின்றது.

எ - டு : அறம் - அ + ற் + அ + ம் (உருட்டொலி)

வெடிப்பொலி - 6. இணை மூக்கொலி - 6. பிரிவளியொலி - 3. உரசொலி - 1, வருடொலி- 1, அரையுயிரொலி- 1, ஆகப் பதினெட்டாகத் தொகை, வகை, விரிபெறுகின்றன.



2.7.11. ஒலிகள்–பொது (Phones - general)

உலக மொழிகளின் ஒலிகளையும் ஏறத்தாழ இடம், இயைபு, சாயல் குறித்து ஒருவாறு ஆறு வகையுள்படுத்திக் கூறலாகும்.

1. இதழோடு தொடர்புடையன - [p, b, m, f, v, w] என்பனவும், இச்சாயலின பிறவும்.

2. பல்லோடு தொடர்புடையன [t̪,d̪,n̪,θ,ð] என்பனவும், இச்சாயலின பிறவும்.
3. பல்முகட்டோடு தொடர்புடையன [t,d,n,l,r,s,z] என்பனவும், இச் சாயலின பிறவும்
4. வல்லண்ண முற்பகுதியோடு தொடர்புடையன. [ṭ,ḍ,ṇ,ḷ,ṣ,ẓ] என்பனவும், இச்சாயலின பிறவும்.
5. வல்லண்ணப் பிற்பகுதியோடு தொடர்புடையன. [c,j,ñ,y,š,ž] என்பனவும், இச்சாயலின பிறவும்.
6. மெல்லண்ணத்தோடு தொடர்புடையன. (உள் நாக்கு, தொண்டை, குரல்வளையோடுமாம்) [k,g,ŋ,h] என்பனவும், இச்சாயலின பிறவுமாம்.

இவை முறையே [ப், ம், p,m] , [த், ந், t̪,n̪], [ற், ன், t,n], [ட், ண், ṭ,ṇ], [ச், ஞ், c,ñ], [க், ங், k,ŋ] தொடர்புடையன, அல்லது சாயலுடையனவாகக் காணப்படுகின்றன. (இடைப்பட்ட வேற்றுமைகள் சில).

2.7.12. ஒலிகள் – அருவழக்கின (Phones of rare occurrence)

இவை தவிர, உலக மொழிகளில், இவற்றுள் சாராத, ஆயின், இவ்விடங்களில் வேறு வகையில் பிறக்கும் ஒலிகளும் சிலவுள. சில மொழிகளில் அவை மொழியொலிகளாகவும் பயன்படுத்தப் படுகின்றன.

1. 'ஹ்ற' - இணைவொலிகள் (Aspirated sounds)

ஆங்கிலத்தில் [Pin-spin, Tink-stink, Kin-skin] முதலிய இணை சொற்களுள் [p,t,k] தொடக்கச் சொற்களை ஒலிக்கும் போது, அவற்றைத் தொடர்ந்து, இணைந்து, உயிர்ப்பு (மூச்சு) விடும் ஒலி போன்ற ('ஹ்ற' - h) ஒலி, ஒலிப்பதையும், அவற்றின் முன் [s] ஒலி இணைந்தொலிக்கும் போது, அத்தகைய [h - aspirated sound] ஒலியாததையும் உணரமுடியும். இத்தகைய அதிர்வில்லாத ஆங்கில வெடிப்பொலிகள், இவ்வாறான சூழ்நிலையில், [h] ஒலி பின் தொடர்ந்து, இணைந்தொலிக்குமாயின், அவற்றை 'ஹ்ற' இணை வொலிகள் (Aspirated sounds) என்பது மரபு. இவ்வாறில்லாத அத்தகைய ஒலிகள், 'ஹ்ற' (ஒலி) கலவாத ஒலிகள் (Unaspirated sounds) எனப்படும்.

எ - டு : [p^h, t^h, k^h] - Aspirated
[p, t, k] - Unaspirated

இவை ஆங்கிலத்தில் தனியொலிகளாக இல்லை. சூழ்நிலைத் திரிபுகளே (Phon-etic or allphonic variants). இத்தகைய ஒலித்திரிபுகள் ஆங்கிலத்தில் அதிர்வில்லாத வெடிப்பொலிகளிலன்றி அதிர்வுடைய வெடிப்பொலிகளில் [b,d,g] இல்லை.

சில மொழிகளில், அதிர்வில்லாத, அதிர்வுடைய இருவகை வெடிப்பொலிகளிலும் [h] கலந்த (Aspirated), கலவாத (Unaspirated)

ஆகிய இரண்டு வகையும், தனித்தனி ஒலிகளாகவுள்ளன.

எ - டு : வடமொழி (Sanskrit)

[க், ச், ட், த், ப்] - வெடிப்பொலிகள். இவற்றுள் ஒவ்வொன்றும் நான்கு வகைப்படும்.

[k,k^h,g,g^h] - [k] Voiceless simple stop or unaspirated stop
- [k^h] Voiceless aspirated stop
- [g] Voiced simple or unaspirated stop
- [g^h] Voiced aspirated stop

ஏனையவற்றிலும் இவ்வாறே, ஒவ்வொன்றில் நான்கும், நான்கு வேறுபட்ட தனியொலிகள் - இவைகளில் [h] ஒலி பின்னையது. சில மொழிகளில் [h] ஒலி முன் வந்து இணைந்தொலிக்கும் ஒலிகளும் (Preaspirated sounds) அருவழக்காகவுள்ளன (Pre and post aspirated sounds).

2. மூக்கொலி இணைவொலிகள் (Nasalised sounds)

சில மொழிகளில் மூக்கொலி முன்னிணைந்த வெடிப்பொலிகளும் (Prenasalised stops) உள. அவை அருவழக்கு.

எ - டு : [mp,mb,nt,nd]

மூக்கொலி, பின்னிணைந்தனவும் (Post nasalised sounds) ஆம். அவை [tn, dn] மிக அரியன. (Pre and post nasalised sounds).

3. பல்லிடையொலிகள் (Interdental sounds)

சில மொழிகளில் மேல், கீழ்ப் பற்களுக்கிடையே நுனிநா அமைய ஆகும் பல்லிடையொலிகளும் (Apico-interdental sounds) உள.

எ - டு : [t,d] என்பனவே இவ்வகையில் ஒலிக்கப்பெறும்.

4. கூட்டு முயற்சி அல்லது இணை முயற்சி வெடிப்பொலிகள் (Co-ordinated stops)

பெரிதும் மெல்லண்ணத் தடையும் (Dorso velar closure), முன் வாய்த் தடையும் ஆக இரு தடையும் ஒரு சேரச் செயல்பட்டு, இடைப்பட்ட காற்று, அழுத்தமோ, நெகிழ்வோ இல்லாதவாறு, இரு தடையும் ஒரு சேரத் திறக்கத் தோன்றும் ஒலி அது. மேற்கு ஆப்பிரிக்க, நியூ கினியா மொழிகளில் இத்தகைய ஒலிகள் உள.

உருசிய மொழியில், மெல்லண்ணத் தடையோடு, இதழ் இணையக், குவிய, விரியத் தோன்றும் ஒலிகள் உள.

5. உள்வாங்கு வெடிப்பொலிகள் (Implosive stops)

(அ) குரல்வளை (Larynx) மூடப்பட்டுக் கீழ் ஈர்க்கப்படத், தொண்டைக்குழியிலிருந்து காற்றுக் கீழ் அழுத்திக் குரல் வளையுள் புகத் தோன்றும் ஒலிகள், அதிர்வில்லாத உள்வாங்கு

வெடிப்பொலிகளாகும் (Voiceless implosive stops). குறிப்பிடப்பட்ட முயற்சியின்போது, ஒலித் தசைகளுக் கிடையே சிறு வெளி ஏற்படின், அதனால், ஒலித்தசை அதிர்வு ஏற்பட்டு அதிர்வுடை உள்வாங்கு வெடிப்பொலி (Voiced implosive/ingressive stops) ஆகும்.

(ஆ) இது போன்றே மற்றோர் வகை வெடிப்பொலியும் தோன்றும். குரல்வளைக்குழியும், வாயில் ஒரு பகுதியும் அடைத்திருக்கக், குரல்வளை கீழ் நோக்கி ஈர்ப்படைய, இரண்டிடைப்பட்ட காற்றில் நெகிழ்வு ஏற்பட, இந்நிலையில் வாயடைப்புத் திறக்க, வாய்வழியே காற்று உள் புக, ஒரு வகை உள்ளீர்ப்பு வெடிப் பொலியாக (Injective stops), ஒலித்தசை அதிர்வுக்குத் தக்கவாறு அதிர்வுடைய அல்லது அதிர்வில்லாததாகத் தோன்றும். இத்தகைய ஒலிகள் தென்மேற்கு ஆப்பிரிக்க நாட்டு மொழிகளில் காணப்படுகின்றன.

(இ) இதுபோன்ற ஈரடைப்பு முயற்சியில், குரல்வளை கீழ் நோக்கி ஈர்ப்படைய, வாய் திறப்பில் காற்று உள்புகக், குரல்வளைக் 'கிளிக்' (Implosive or glottalic click) ஒலி தோன்றும்.

(ஈ) இது போன்ற அடைப்பு, முயற்சியில், உள்வாங்கு அல்லது குரல்வளை உரசொலி (Implosive or glottalised fricatives) அரிதாக அதிர்வு உடையதும், இல்லதுமாகத் தோன்றும். இத்தகைய உரசொலி தோன்றும் போது, வாய்திறப்பு அரை, குறை அளவில், உரசல் தெளிவில்லாதவாறிருக்கும்.

6. வெளிப்படு வெடிப்பொலி அல்லது குரல்வளை வெளிப்படு வெடிப்பொலி (Ejectives or ejective glottalised stops)

குரல்வளையும், வாய்ப் பகுதியும் அடைத்திருக்கத், தொண்டையும், வாயுட் பகுதியும் அழுத்தக், காற்று, வாயடைப்பைத் திறந்து வெளிப்படத் தோன்றும் வெடிப்பொலி (Ejectives)யும் சில மொழிகளிலாம்.

7. கரையும் உரப்பொலி (Falsetto)

ஒலித் தசையின் குறைந்த கால இணைவில், மெல்லிய அசைவில் தோன்றும், அதிர்வோடு வெளிப்படும், அழுகைக் குரல் போன்ற கரையும் உரப்பொலியும் (Falsetto) சில மொழிகளில் உள. இதன்கண், மூக்கொலிச் சாயலுடையதும் (Nasalised), இல்லதும் (Non-nasalised) ஆகிய வகையொலிகளும் உள.

8. 'கிளிக்' ஒலிகள் (Clicks)


வாயின் அடிநா, மெல்லண்ணத் தடையோடு (Dorso velar closure) முன் பகுதியில், பெரிதும் இதழில் (Bilabial) மற்றொரு தடையும் இருக்க, வாய்க் காற்று அழுத்தம் பெற, அல்லது நெகிழ்வடைய, நாவைக் கீழும், பின்னுமாக அல்லது மேலும், முன்னுமாக அசைக்கக் காற்று வெளிச்செல்ல அல்லது உள்வர, இவ்வொலி தோன்றும்.

இது வெடிப்பொலியாவதைவிட உரசொலியாகத் தோன்றுவ தியல்பு. வெடிப்புரசொலியாகவும் தோன்றும். அதிர்வில் அல்லது அதிர்வுடை ஒலியாகவும், மூக்கொலிச்சாயல் பெற்றும், பெறாதும், இதழ், பல், பல் முகடுகளில் பிரிவளியொலியாகவும் தோன்றும். சூலுமொழியிலும், தென்கிழக்கு ஆப்பிரிக்க மொழிகளிலும் இவ்வொலிகளைக் காணலாகும். இத்தகைய ஒலிகள் குரல்வளையிலும், வாயிலும் அடைப்பிருக்கப் பிறத்தலுமாம். இவை மொழியொலி யன்றி, விலங்கினங்களை ஓட்டும் ஒலியாகவும் உருவாக்கப்படும்.


9. தாழ் குரலொலி (Whisper)

ஒலித் தசைகள் செறிந்திருக்க, ஒலித் தசையின் பின்புறமுள்ள இரு இணைப்புத் தசைகளின் (Arytenoids) நீக்கம் அல்லது பிரிவால், இடைவெளி அவற்றிடை ஏற்பட, அதன் வழிச் செல்லும் காற்றால் இத்தாழ் குரலொலி (Whisper) பிறக்கும். இதன்கண் ஒலித்தசை அதிர்விராது. சிலபோது, அதிர்வு இருந்தும், இல்லாமலுமாக (Devoiced) இவ்வொலி, கலப்பு நிலையில் தோன்றலுமாம். பெரிதும் அதிர்வு நீக்கத்தில்தான் இவ்வொலியாகும். ஆகவே, அவ்விடத்தில் சிறிது உரசொலிக் கூறும் கலந்திருக்கும்.

தாழ்குரலொலி



Whisper



Whispering

10.முனகொலி (Murmur)

குரல்வளையுள் ஒலித் தசை அதிர, உரசொலிக் கூறோடு, நீரொழுக்குப் போல் தோன்றும் தாழ் நிலை ஒலி இது. அருவழக்கினது. தாழ்குரல் மூக்கொலி (Whispered nasal [mh]), குரல்வளை உருட்டொலி (Glottal trill), குரல்வளை, உள் வாங்கு உரசொலிகள் (Glottal and implosive fricatives), தொண்டை உரசொலி, வெடிப்பொலி (Pharyngeal fricative and stop or catch), ஈரிதழ், உள்நாக்கு உருட்டொலிகள் (Bilabial and uvular trills), பிரிவளி உரசொலி (Lateral spirant), ஈரிதழ் பிரிவளியொலி (Bilabial lateral), குரல்வளைச் சாயல் மூக்கொலி (Glottalised nasals), மெல்லண்ணப் பிரிவளியொலி (Velar lateral), மூக்கினச் சாயல் பிரிவளியொலி, (Nasalised laterals), மெல்லண்ண அரையுயிர் (Velar semi vowel), அதிர்வில் பிரிவளியொலி (Voiceless lateral), மூக்கு, இதழ், அண்ணம், மெல்லண்ணம், தொண்டை இவற்றின் சாயல் பெற்ற

உரசொலிகள் (Nasalised, labialised, palatalised, velarised and pharyngealised fricatives), இணை அல்லது கூட்டு வெடிப்பொலிகள் (Compound stops) முதலிய பலப்பல, உலகின் ஒரு சில மொழியில் அருவழக்கினவாம். பரிவளி உரசொலி, அமெரிக்க இந்திய மொழி களிலும், காக்கேசியன் மொழிகளிலும், அதிர்வுடை, அதிர்வில் மூக்கொலிகள், குரல்வளைச் சாயல் மூக்கொலிகள் நூட்கா, குவா குட்டில் மொழிகளிலும், தொண்டை வெடிப்பொலி, அராபிக் மொழியிலும், குரல்வளைச் சாயல் வெடிப்பொலி, அமெரிக்க இந்திய மொழிகளிலும், காக்கேசிய மொழிகளிலும் காணப்படுகின்றன.

2.7.13. இருவேறு ஒலிக்கூறுகள் (Binary phonic features)

1. ஏறத்தாழ உலக மொழிகள் அனைத்திலும் அதிர்வுடையன, இல்லன என இருவகையுள்ளன. அதுவும், பெரிதும் ஒலிப்பிடம், ஒலிப்புமுறை வகை யாவற்றுள்ளும் இவ்விருவகை காணப்படுகின்றன (Voiced vs voiceless or breathed)

2. பொதுவாக, மொழிகளில், மூக்கொலிகள், பிரிவளியொலிகள், வருடொலிகள், அரையுயிர்கள் இன்னொலிகளாக (Musicals) இருக்கும். வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி, உருட்டொலிகள் இன்னாவொலிகள் (Noises) ஆகும்.

3. எல்லா ஒலிகளுள்ளும், உயிர்கள் எடுப்புடையன. அவற்றுள், திறப்புயிர்கள், மூடிய உயிரொலிகளினும் எடுப்பு மிகவுடையன. மூக்கொலிகள், பிரிவளியொலிகள், வருடொலிகள் எஞ்சிய தடை யொலிகளினும் எடுப்புடையன. அதிர்வுடையன, அதிர்வில்லன வற்றினும் எடுப்புடையன. இத்தகைய எடுப்பமைவு, அசையின்கண் பிறவற்றோடு ஒப்பிட்டுக் காண்பது. ஒலி நிலையில் எடுப்பு, படுப்புக் கூறுகள் ஒருவகை.

4. தடையுடை வாய், மூக்கொலிகளுள் (Non-vocoids) வெடிப் பொலிகள், தடையொலிகள் (Stops). எஞ்சிய அனைத்தும் தொடரொலிகள் (Continuants).

5. ஓரிடவொலி, ஒரு முயற்சியொலி, ஓரொலிப்பு முறையொலிகள் யாவும் தனியொலி அல்லது இயல்பொலிகள் (Single and simple). ஈரிடவொலி, இரு முயற்சியொலி, ஈரொலிப்பு முறையொலி, மற்றொன்றன் சாயல் பெற்ற ஒலிகள் யாவும் கூட்டொலிகள் அல்லது இணையொலிகள் அல்லது அருவழக்கொலிகள் (Double or compound or complex sounds) ஆகும்.

6. குரல்வளை முதல் உள் நாக்கு உட்படும் இடங்களில் பிறக்கும் ஒலிகளை, அகவொலிகள் (Internal sounds) என்றும், மெல்லண்ணம் முதல் இதழ் வரையுள்ள இடங்களில் பிறக்கும் ஒலிகளைப் புறவொலிகள் (External sounds) என்றும் வகை செய்யலாம்.

7. மூக்கு வழிப் பிறப்பன மூக்கொலிகள் (Nasals). எஞ்சியன வாய் வழியன (Orals). இரு வழியும் பிறப்பன மூக்குச் சாயலின (Nasalised sounds).

8. ஓரிடம், ஒரு முயற்சி, ஒரு முறையில் பிறப்பனவாகிய வெடிப்பொலி, உரசொலி, மூக்கொலி, பிரிவளியொலி, வருடொலி, உருட்டொலி, என்பன, தூய ஒலிகள் (Pure sounds). *இவை தவிர, இவற்றோடு பிறிதொன்றோ, பிறிதொன்றன் சாயலோ கலந்து வருவனவாகிய வெடிப்புரசொலி, மூக்கு, இதழ், பல்முகடு, அண்ணம், மெல்லண்ணம், தொண்டை,குரல்வளை இவற்றின் சாயல் கலந்தன முதலியன கலப்பொலிகள்* (Impure sounds) *எனலாகும்.*

9. அண்ணத்தின் முற்பகுதியிலிருந்து இதழ்வரையுள்ள இடங்களில் பிறப்பன, முன்னொலிகள் (Front sounds) *என்றும், பிற்பகுதியிலிருந்து குரல்வளைவரைப் பிறப்பன பின்னொலிகள்* (Back sounds) *என்றுமாம். பல்முகடு முதல் இதழ்வரையிலான இடங்களில் பிறப்பன முன்னொலிகள், அண்ணத்தில் பிறப்பன நடுவொலிகள். மெல்லண்ண முதல் குரல்வளை வரையிலான இடத்தில் பிறப்பன பின்னொலிகள் என்றுமாம். முதல் நா, நடு நா, கடை நாவில் பிறப்பன முறையே முன், இடை, கடை ஒலிகள் எனினுமாம்.*

10. இதழ், பல்லில் பிறப்பனவும், உள் நாக்கு முதல் குரல்வளை வரைப் பிறப்பனவும் ஓரப்பிறப்பின (Marginals) *என்றும், இவற்றிடைப் பிறப்பன நடுவண* (Central) *என்றுமாம்.*

11. இதழ் மூடப்பிறப்பன மூடொலிகள், அவை திறக்கப் பிறப்பன திறப்பொலிகள் எனினுமாம். (Closed and open sounds).

12. [k,g] *என்பன செறிவொலிகள்* (compact) *என்றும்* [T,D,P,B] *என்பன சிதர்வொலிகள்* (Diffused) *என்றும், எஞ்சியன இடை நிகரன என்றுமாம்.*

13. வெடிப்பொலிகளில் அதிர்வில்லன [P,T,K] *வல்வொலிகள்* (Fortes). *அதிர்வுடையன* [b,d,g] *மெல்லொலிகள்* (Lenes). *வெடிப்பொலிகளினும், வெடிப்புரசொலி, வெடிப்புரசொலியினும், உருட்டொலி, உருட்டொலியினும், உரசொலி, உரசொலியினும், மூக்கொலி, மூக்கொலியினும், பிரிவளி ஒலி, பிரிவளியொலியினும், வருடொலி மெல்லொலிகளாம்.*

14. வெடிப்புரசொலிகளும் (Affricates), *உரசொலிகளும், உருட்டொலிகளும் பொதுவாகக் கடுப்பொலிகள்* (Stridents). *ஏனைய கடுப்பல்லாவொலிகள்* (Non-stridents). *வெடிப்புரசொலியுள், உரசொலியுள், அதிர்வின்மையும், வன்மையும் உடையன, அதிர்வுண்மையும், மென்மையும் உடையனவற்றைவிடக் கடுப்பொலி களாகும்.*

15. வெடிப்பொலிகள், உள்வாங்கு வெடிப்பொலிகள் அனைத்தும் நிறை தடையுடையன (Checked). *எஞ்சியன குறை தடையுடையன* (Un-checked).

16. உரசொலிகளுள், (அ) பல்லொடு நாச்செறிவன (Lisping sounds) (θ,ð). *(ஆ) பல்லொடு இதழ்செறிவன* (Labials) [f,v]. *இவை இரண்டும்*

விரிவடிவுரசொலிகள் (Slit fricatives). (இ) "ஸ்" - ஒலிகள் (rills or sibilants or hissing sounds) - [S,Z] (ஈ)"ஷ்" ஒலிகள் (Shibilants, hushing sounds)- [Š,Ž]. இவையிரண்டும் குழல்வடிவொலிகள் (Grooved fricatives). இவ்வகை வெடிப்புரசொலிக்குமாம்.

17. நிறைநிலைத் தடையொலிகள் (Mutes)- வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலிகள். குறைநிலைத் தடையின்கண், தடைச்சாயலுடையன (Consonantoids) - மூக்கொலி, பிரிவளியொலிகள் [m,n,ŋ,l]. குறைநிலைத் தடையின்கண், தடையின்மைச் சாயலுடையன (Vocaloids), இரண்டு. (அ) அரைமெய் (Semi consonant)- வருடொலி [r]. (ஆ) அரையுயிர் (Semi vowel)-[Y,W]. அடைப்பொலிகள் (Closed consonants or stops) எனவும், திறப்பொலிகள் (Open consonants) எனவும் இருவகையன :

18. அடைப்பொலிகள்:

(அ) தனியடைப்பொலிகள் (Simple stops) - வெடிப்பொலிகள்.

(ஆ) அடைப்பு - உரசொலிகள் - வெடிப்புரசொலிகள் (Affricated stops)

(இ) தொடர் இடைப்படு தடையொலிகள் (Intermittant stops)- உருட்டொலிகள்.

(ஈ) கூட்டொலிகள் (Compound stops) - பிற கலந்த வெடிப்பொலிகள், சாயல், பிறிதொன்று பெற்றன என்பன.

19. திறப்பொலிகள்:

(அ) உரசொலிகள் (Fricatives)

(ஆ) மூக்கொலிகள் (Nasals)

(இ) பிரிவளியொலிகள் (Laterals)

(ஈ) வருடொலிகள் (Flaps)

(உ) அரையுயிரொலிகள் (Semi vowels) என்பன.

20. வெடிப்பொலிகள் ஏனைய ஒலிகளினும் குறுகிய ஒலிப்புடையன (Short). இவற்றோடு ஒப்பிடும்போது, ஏனையன தொடரொலிகளாதலின் நீளொலிப்புடையன (Long).

21. வாயின் இரண்டு ஓர ஒலிகளாகிய மெல்லண்ண ஒலிகளும் (Velars), இதழொலிகளும் (Labials) தெளிவில்லன (Grave). இடைப்பட்ட பல்லொலியும் (Dentals), அண்ணவொலியும் (Palatals) தெளிவுடையன (Acute).

வாய், மூக்கு வழித் தடையொலிகள் (Contoids), இவ்வகையின, பிறவுமாம்.


2.7.14. ஒலித்தொடர்புகள் (Phonic relations)


வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி ஆகிய மூன்றும் தம்மில் தொடர்புடையவற்றைக் கீழ்வருமாறு காணலாகும்:

		Labial	Labio Dental	Dental	Alveo-lar	Cacum inal	Palatal	Velar
Stops	vl	p		t	t̲	ṭ	c	k
	vd	b		d	d̲	ḍ	j	g
Affricate	vl	pᵽ(pɸ)	pf	tθ	t̲s(¢)		tš(č)	KX
	vd	bƀ(bβ)	bv	dð	d̲z(ƶ)		dž(ǰ)	g
Fricative	Slit vl		f	θ				x
	Groove vl	ᵽ(ɸ)			s		š(Ç)	
	Slit vd		v	ð				ɣ
	Groove vd	ƀ(B)			z		ž(J)	

2.7.15. ஒலியியல்பு விளக்கம் (Feature description of sounds)

ஒவ்வோர் ஒலிக்கும் இவ்வாறு வகை செய்து, வரையறுக்கப்பட்ட பெயர்களைக் கொடுக்க அவையே அவ்வொலியின் விளக்கமாகும்.





3. [l] - sound → Lateral – [ℓ] l
→ Fricative < vl [ɬ] ; vd [ɮ] " "

4. [i] ———— [y] ———— [j] " "


5. [u] ———— [w] ———— " "

எ - டு : [ப்] - அதிர்வில், ஈரிதழ், வெடிப்பொலி
- நிறைதடையது, வாய்வழியது, மூடொலி
- முன்னொலி, இன்னாவொலி, வல்லொலி
- தெளிவில்லது, சிதர்வுடையது, எடுப்பில்லது
- தனியொலி, ஓரவொலி, கடுப்பில்லது

(m) - Voiced, Bilabial, Nasal
- Mouth closed, Nose-opened, Front
- Resonant, Lenis, Simple, Marginal
- Nonstrident, Nonsonorous, Continuant, Diffused,Grave

இவ்வாறும், பிறவாறும் ஒவ்வோர் ஒலியின் இயல்பைத் தெரிந்து கொள்ள இயலும்.

2.7.16. ஒலித்தெளிவு, செறிவியல்புகள் (Acute and compact feature of sounds)



ஒலித்தெளிவு, செறிவு (மெய்)
- (Jakobson, R., 1990: 11, 259, 260; Malmberg, Bertil, 1963: 16)

வாய், பின் செறிய, முன் அகலத் திறப்புடைய அடியண்ண, இடையண்ணத் தடையொலிகள் (Velars and palatals) செறிவுடையன (Compact). வாய் முன்செறியப், பின் அகலத் திறப்புடைய இதழ், பல் தடையொலிகள் (Labials and dentals) சிதர்வொலிகள் (Diffused).

வாய் நடுத்தடையொலிகளாகிய பல், நடுவண்ணத் தடையொலிகள் (Dentals and palatals) தெளிவுடையன (Acute). வாயின் ஈரெல்லைத் தடையொலிகளாகிய அடியண்ண,இதழ்த் தடையொலிகள் (Velars and Labials) தெளிவில்லன (Grave).

2.7.17. வாய்த் தடையும், ஒலியும் (Obstruction in the mouth and sound)

(1) உயிர் ஒலிகள் மூக்குவழித் தடையோடு, வாய்வழிச் செலவுடையன (Orals). வாய்த் தடை எதுவுமில்லை. வாயின் அளவும், வடிவும் வேறுபடும். (2) அரையுயிர், 'ஹ்', ஒலிகள்,உயிர் போன்ற ஒலிப்பியல்புடையன. ஆயின் வாயளவு குறையும்.

(1)மெய்யொலிகளுள், மூக்கொலிகள் வாய்வழித் தடையோடு, மூக்குவழிச் செலவுடையன (Nasals). (2) வெடிப்பொலிகள், வெடிப் புரசொலிகள், உரசொலிகள், பிரிவளியொலிகள், வருடொலிகள், உருட்டொலிகள் யாவும் மூக்குவழித் தடையோடு, வாய்வழித் தடையும் பெற்று, வாய் வழிச் செலவுடையன.

எனவே,

(1) உயிர், அரையுயிர், 'ஹ்' ஒலி எனும் மூவகையும் வாய்வழித் தடையின்றிச் செல்வன.

(2) மூக்கொலிக்கு, மூக்குவழியெனினும், அவை, வாய்த்தடையுடன் செல்வன.

(3) எஞ்சிய மெய் ஆறு வகையும், உயிரொலிக்குப் போல, மூக்கு வழித் தடையாயினும், உயிரொலிக்கில்லாத வாய்த் தடையுடன், உயிரொலி போல வாய்வழிச் செல்வன.

(4) எனவே, குறிப்பிட்ட மெய் ஏழுவகையும், வாய்த்தடையுடையன.

(5) உயிரொலிகள் அவ்வாறான வாய்த் தடை இல்லன. அரையுயிரும், 'ஹ்' ஒலியும் அவ்வாறே.

(6) இவ்வியல்பால் (மூக்குவழி நீங்க), வாய்த் தடையில்லன (Vocoids). வாய்த் தடையுடையன (Non-vocoids or contoids) என வாய்த் தடையை அடியாகக் கொண்டு வகை செய்தல் சாலும்.

2.7.18. ஒலிக்குறிப்பு (Sound symbolism)

1. வெடிப்பொலிகள் (Plosives)

[P] - Pen	[t] - ten
[k] - Kin	[b] - bin
[d] - den	[g] - get

2.7.19 தடையொலிகளும், பிறப்பியல்பும் (Contoids and articulatory feature)

		க்	ச்	ட்	ற்	த்	ப்	ங்	ஞ்	ண்	ன்	ந்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்															
		k		ṭ	ṯ	t	p	ŋ				n	m	y	ř	l	v			g	d	b	ʃ	s	z	š	ž	θ	ð	r̃	h	w	č	ǰ
அதிர்வொலி	(Voiced)							+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+			+		+		+	+	+	+		+
வெடிப்பொலி	(Stop)	+	+	+	+	+	+													+	+	+												
வெடிப்புரசொலி	(Affricate)																																+	+
உரசொலி	(Fricative)																+						+	+	+	+	+	+	+					
மூக்கொலி	(Nasal)							+	+	+	+	+	+																					
பிளவளியொலி	(Lateral)															+		+	+															
வருடொலி	(Flap)														+																			
உருட்டொலி	(Rolled)																													+				
அரையுயிர்	(Semi vowel)													+																	+	+		
தெளிவொலி	(Acute)		+	+	+	+			+	+	+	+		+	+	+			+		+			+	+	+	+	+	+	+			+	+
செறிவொலி	(Compact)	+	+					+	+									+		+											+		+	+
வாயொலி	(Oral)	+	+	+	+	+	+							+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+
திறப்பொலி	(Open)	+	+	+	+	+		+	+	+	+	+		+	+	+	+	+	+	+	+		+	+	+	+	+	+	+	+	+	+	+	+
முன்னொலி	(Front)			+	+	+	+			+	+	+	+		+	+	+		+		+	+	+	+	+	+	+	+	+	+		+		
வல்லொலி	(Fortis)	+	+	+	+	+	+																										+	
இன்னொலி	(Resonant)							+	+	+	+	+	+	+	+	+	+	+	+												+	+		

		க்	ச்	ட்	ற்	த்	ப்	ங்	ஞ்	ண்	ன்	ந்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்															
		k		ṭ	ṯ	t	p	ŋ				n	m	y	r̄	l	v			g	d	b	f	s	z	š	ž	θ	ð	r	h	w	č	j
விரிவடிவொலி	(Flat)																+						+					+	+					
கடுப்பொலி	(Strident)																+						+	+	+	+	+	+	+	+			+	+
தடைப்பொலி	(Obstruent)	+	+	+	+	+	+													+	+	+												
இயல்பொலி	(Simple)	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+		+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+		
ஓரஒலி	(Marginal)	+					+	+					+				+	+		+		+	+								+	+		
நடுவணொலி	(Central)		+	+	+	+			+	+	+	+		+	+	+			+		+			+	+	+	+	+	+	+			+	+
அதிர்வில்லொலி	(Voiceless)	+	+	+	+	+	+																+	+		+		+					+	
தொடரொலி	(Continuant)							+	+	+	+	+	+	+	+	+	+	+	+				+	+	+	+	+	+	+	+	+	+	+	+
சிதர்வொலி	(Diffuse)					+	+					+	+				+				+	+	+					+	+			+		
தெளிவில்லொலி	(Grave)	+					+	+					+				+	+		+		+	+											
மூடொலி	(Closed)						+						+									+												
பின்னொலி	(Back)	+	+					+	+									+		+											+		+	+
மெல்லொலி	(Lenis)							+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+			+		+		+		+	+		+
இன்னாவொலி	(Noise)	+	+	+	+	+	+													+	+	+	+	+	+	+	+	+	+	+			+	+
குழல்வடிவொலி	(Groove)																							+	+	+	+							
கடுப்பில்லொலி	(Mellow)	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+									+	+		
கூட்டொலி	(Complex)																																+	+
இறுகொலி	(Tense)	+	+	+	+	+	+																+	+		+		+					+	
நெகிழொலி	(Lax)							+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+	+			+		+		+	+	+	+		+

2. உரசொலிகள் (Fricatives)

[f] - fan [v] - Van
[θ] - thin [ð] - then
[s] - Set [z] - Zoo
[š] - shop [ž] - rouge (ruwz)

3. வெடிப்புரசொலிகள் (Affricates)

[č] - chew [ǰ] - Jew

4. மூக்கொலிகள் (Nasals)

[m] - man [n] - name
[ŋ] - song

5. பிரிவளியொலிகள் (Laterals)

[l] - lip, lateral

6. வருடொலிகள் (Flaps)

[ř] - red

7. உருட்டொலிகள் (Rolled)

[r̃] - trill, right

8. அரையுயிரொலிகள் (Semi vowels)

[w] - will [y] - yellow
[r] - bird [j] - you
(h) - height

9. 'கிளிக்' ஒலிகள் (Clicks) [pk, tk, tk, ck, tlk, tlk, clk, tsk.]

10. [*ங், க்*]	- *தங்கம்*	[*ஞ், ச்*]	- *தஞ்சம்*
[*ண், ட்*]	- *தண்டம்*	[*ந், த்*]	- *தந்தை*
[*ம், ப்*]	- *தம்பி*	[*ன், ற்*]	- *தென்றல்*
[*ய், வ், ர்*]	- *யாவர்*	[*ல்*]	- *ஆல்*
[*ழ்*]	- *ஆழ்*	[*ள்*]	- *ஆள்*

2.8. வாய்த் தடையில் ஒலிகள் (Vocoids/vowels)

வாய்த் தடையில் ஒலிகள் மூவகையினவற்றுள் (1) முதல் நிலையின (Primary) *உயிரொலிகள் (2) இரண்டாவது நிலையின* (Secondary) *அரையுயிர்கள் (3) மூன்றாவது நிலையின* (tertiary), '*ஹ்*' (h) *ஒலிகள்.*

2.8.1. தனியொலி, கூட்டொலி (Single and compound sounds)

முதல் நிலையின, (1) தனியொலிகள் அல்லது இயல்பொலிகள் (Single or simple vowels) *(2) கூட்டொலிகள் (இணையொலிகள்) அல்லது அருவழக்கின* (Compound or complex vowels) *என இருவகையின. முன்னையன ஓரிடம், ஒரு முயற்சி குறிப்பன. பின்னையன, ஈரிடம், இரு முயற்சி குறிப்பன. அவை முறையே, ஓரொலியும், ஈரொலி இணைவுமாக அமைவன. பின்னையன, முன்னய ஒலிகள் இரண்டனவற்றின் அல்லது முன்னையனவற்றுள் ஒன்றும்*

அரையுயிர் ஒன்றும் ஆகிய இரண்டனவற்றின் கூட்டாக அமைவன. ஆகவே, அவை ஓரொலியுயிர் (Monophthongal vowels), ஈரொலியுயிர் (Diphthongal vowels) எனப் பெயர் பெறுவன. பல மொழிகளில் இத்தகைய இரு வகையும் காணப் பெறும்.

2.8.2. தடையில் ஒலியியல்பு (Vocoidal feature)

இவ்விரு வகையும் மூக்குவழித் தடையோடு, வாய்வழியே, தடையின்றிப் பிறப்பன. ஆயின் வாயின் அளவு, வடிவு ஒவ்வொன் றற்கும் வேறுபடும். குரல்வளையிலிருந்து வரும் ஒலி, வாயிலிருந்து வெளிப்படுவது வரை, எவ்வகைத் தடையும், மெய்யொலிக்குப் போல் இல்லாது, உருவாகும் உயிர் அல்லது உயிர்ப்பு (காற்று) மெய்த் தடை (வாய்த் தடை, வழித் தடை) எதுவுமின்றி உயிர்ப்புக் காற்றளவிலேயே உருவாவதால் உயிர் எனப்பட்டது போலும். இத்தகைய ஒலிகள் யாவும் அசைக்கு ஒன்றாக எடுப்பொலியாகும் அசையழுத்தம் (Syllabic stress) பெறும். தடையுடையொலிகளுக்கு இவ்வசையழுத்தம் இயல்பாக இல்லை தடையில் ஒலிகளாகிய இவ்வுயிர் யாவும் அதிர்வுடை ஒலிகளே (Voiced). ஒரு சில மொழிகளில் அதிர்வில்லன (Voiceless)வுமாம். ஒரு சில மொழிகளில் மூக்கு வழி உயிர்களுமாம் (Nasal or nasalised vowels). தடையில் ஒலிகளாகிய உயிரொலி களுக்குத் தடையொலிகளுக்கில்லாத ஒலியலைச் செறிவொழுங்குகள் (Formants) இரண்டோ, மூன்றோ, அரிதாக நான்கோ காணப்பெறும்.


தடையுடையொலிகளினும், இத்தடையில்லொலிகள் இயல்பாக மொழிகளில் எண்ணத்தில் குறைவாகவே காணப்படும். தடையொலி களுக்கிடையே இவை வந்து தொடர ஒலிப்பு எளிமையாகும். மொழியில் இவை மிகச் சிலவாயின் ஒலிப்பு அரிதாகும். எனவே, மொழியின் ஒலிப்பெளிமைக்கு உதவுவன, இத்தடையில் ஒலிகளே. தடை, தடையில் ஒலிகளின் கலப்புத் தொடரே மொழி. ஒன்று, இரண்டு, மூன்று உயிரொலியுடைய மொழிகளும் உள.

2.8.3. தடையில் ஒலி வகை (Categories of vocoids)

(1) நாவின் தாழ்ச்சி, உயர்ச்சி (2) நாவின் முன் அல்லது பின்பகுதி உயர்ச்சி (3) முன் அல்லது பின்பகுதி உயர்ச்சியின் அளவு (4) இதழின் குவிதல், விரிதல் (5) நாவின் இறுக்கம், நெகிழ்ச்சி (6) வாயின் முன் நோக்கிய அகற்சி, பின் நோக்கிய அகற்சி (7) வாயின் எல்லைப் பகுதி, இடைப் பகுதியொலி (8) ஒலிப்பின் கால அளவு முதலானவற்றால் வாய்த் தடையில் ஒலி வகை பெறும்.

எடுப்பும், ஒலியலை ஒழுங்கால் இனிமையும், ஒலித்தசை அதிர்வும், வாய்த் தடை இன்மையும், ஒலியலைச் செறிவும், ஒலிப்பெளிமையும் இயல்பாகவுடைய இவ்வொலிகளில் வாய், அகல் அல்லது நிறை திறப்புயிரொலிகள் (Open vowels), வாயின் அளவு குறைந்த, குறை திறப்பு அல்லது மூடுயிரொலிகளினும் (Closed vowels) மிகு எடுப்பொலித் தன்மை (Sonority) உடையன. இவ்வாறான வாயளவு

பெருக்கம், சுருக்கத்திற்கு நாவின் எடுப்புப் படுப்பே காரணம். அகரம் திறப்புயிர். இகர, உகரம் மூடுயிர்களாம். இவற்றில் [இ, உ], முறையே, நாவின் முன் பகுதியும், பின் பகுதியும் எடுப்பாகக் காணப்படும். நாவின் முன் பகுதி உயர்ந்திருக்கப் பிறக்கும் இகரம் முன்னுயிர் (Front vowel). பின்பகுதி உயர்ந்திருக்கப் பிறக்கும் உகரம் பின்னுயிர் (Back vowel) எனப்படும். எனவே, இவ்விருவகை உயர்ச்சியும் இல்லாது நாத், தன்னிலையில் படுப்பாக, அகரவொலி தோன்றும். இகர, உகரமாகிய முன், பின் (நாவின் முன், பின் பகுதி உயர்ச்சியால்) ஒலிகளின் இடையே அல்லது நடுப்பகுதி நிலையில் (படுப்பாகப்) பிறப்பதால், அகரம் நடுவணுயிர் (Central vowel). இகர, உகரம் நாவின் உயர் நிலையில் பிறப்பதால், அவை உயருயிர் (High vowels). அகரம், நாவின் தாழ் நிலையில் பிறப்பதால், அது தாழுயிர் (Low vowel) எனப்படும். எனவே, தாழுயிர், திறப்புயிர் எனும் இரு நிலையும் ஒன்றே. உயருயிர், மூடுயிர் எனும் இரு நிலையும் ஒன்றே. இத்தகைய மூன்றுயிர்களும் உலக மொழிகளில், ஏறத்தாழ, ஒரு சில நீங்க, அனைத்திலும் காணப்படும். உயிரொலிகளுக்கு அடிப்படை இம்மூன்றுமே. ஏனையன இவற்றிடை, இவை சார்ந்து பிறப்பனவே. இம்மூன்றனையும் அளவாகக் கொண்டே ஏனையன கணிக்கப்பெறும். ஏனையன, இவற்றின் சாயல்களே, சார்புகளே. இவை மூன்றும் உயிரொலிகளின் உயிர். உயிரொலிகளின் முக்கண் அல்லது முக்கணுக்கள் இவை.



மூவுயிர் வகை

இவற்றுள், வாய் முன்னோக்கி அகலத் திறப்புடைமையால், ஒலியலைச் செறிவுடைமையால் 'அகரம்' செறிவொலி (Compact). ஏனைய 'இகர, உகரம்' வாய், பின் நோக்கி அகலத் திறப்புடைமையால், ஒலியலைச் சிதர்வுடைமையால், சிதர்வொலிகள் (Diffused) எனப்படும்.

இவற்றுள், 'இகரம்', வாய் நடுப் பகுதிப் பிறப்புடைமையால், ஒலித் தெளிவுடைமையால், தெளிவொலி (Acute). உகரம்,வாயின் ஓரப் பகுதிப் பிறப்புடைமையால், ஒலித் தெளிவின்மையால் தெளிவில் ஒலி (Grave) எனப்படும்.

இகரச் சாயலுடைமையால், 'எகரமும்', 'இகரம்' போல் தெளிவொலி. 'உகரச்' சாயலுடைமையால், 'ஒகரமும்', 'உகரம்' போல் தெளிவில் ஒலியாகும்.

குறில் போன்ற பிறப்பே அதன் நெடிலுக்கும். ஒலிப்புக்கால அளவு வேற்றுமையே இரண்டிற்கும். குறிலை ஒலிக்க நா நெகிழ்வாகும் (Lax). நெடிலை ஒலிக்க நா இறுக்கம் (Tense) அடையும். இவ்வாறு, குறில், நெடில் ஒன்றன் இரு கூறாகும். 'ஐகாரம்', 'இகரச்' சாயலும், 'ஔகாரம்', 'உகரச்' சாயலுமுடையனவாதலால், முறையே, அவ்விரண்டனையும் இகர, உகரங்களோடு சார்த்திக் கொள்க.

'உகரம்', 'ஒகரம்' ஆகிய இரண்டும் இதழ் குவியப் (Rounded) பிறப்பன. ஔகாரமுமாம். எஞ்சியன, அதற்கு மறுதலைய (Unrounded) எனப்படும்.


'ஐகாரம்' [அ+இ, அ+ய்] எனவும், 'ஔகாரம்', [அ+உ, அ+வ்] எனவும் இரண்டு ஒலிக்கூறுகளோடு ஒலிப்பதால், அகர ஒலிப்பிடத்தில் தொடங்கி, ஒலிப்பு, முறையே, 'இகரம்', 'உகரம்', முதலிய ஒலிப்பிடங்களுக்குச் சென்று முடிவதால், இவ்விரண்டும் தனியொலிகள் அல்லது இயல்பொலிகள் (Single/simple/monoph thongal) அல்ல. மாறாக, இணையொலிகள் அல்லது அருநிலையன (Compound/complex/diphthongal sounds).

இவ்வொலிகள் ஒலியழுத்தத்தாலும் (Stress), இன்னோசையாலும் (Intonation) சிறிது ஒலிப்பு வேறுபடும். சூழ்நிலையாலும் சிறிது வேறுபடும். தனிப்பட்டோர் ஒலிப்பு முறையாலும் வேறுபடும். இதனால் ஒலியலைச் செறிவும் (Formant) வேறுபடலாகும். தடையில் ஒலிகளாகிய உயிரொலிகளுள் எடுப்பொலியியல்பு (Sonority) மிகக் குறைந்தன [u,i]. சிறிது கூடுதலுள்ளன [o,e]. அவற்றினும் மிகுதி [ɔ,æ,ɑ]. மிகக் கூடுதல் [a]. உயிரொலிகள் முனகல் ஒலியோடு (murmured), "ஹ" ஒலியோடு (whispered or hissing sound) அதிர்வில்லாதும் காணப்படும். முனகல் உயிர் (Murmured vowel) அரையதிர்வோடு (Half voiced, breathy voice, or sotto voce), அதிர்வொலிக்கும், அதிர்வில் 'ஹ' ஒலிக்கும் (Whisper) இடைப்பட்டிருக்கும். விரைவு குறைந்த அதிர்வோடு கூடிய உயிரும் (Muffled vowel) ஆம். பிரெஞ்சு மொழியில் மூக்கின உயிர் அல்லது மூக்குச் சாயலுயிர் (Nasal or nasalised vowels) நான்குள. இவற்றிற்கெனத் தனி ஒலியலைச் செறிவும் (Formant) உளது. (French - ɛ̃, ɑ̃, ɔ̃, œ̃). போர்த்துக்கீசு, போலிஷ் முதலிய மொழிகளிலும் மூக்கின உயிர்கள் உள்ளன. [இ, உ] ஆகிய இரண்டனவற்றையும் ஒலிக்கும் போதுள்ள நாக்கின் உயர்ச்சியின் அளவின் மேற்பட்டுச்

செல்லுமாயின், உரசொலியியல்பு ஏற்பட்டுத், தடையொலியாக மாறிவிடும். எனவே, மேல்வாயின் அண்மையில், நா ஓரளவு எல்லையின் மேல் செல்லலாகாது.

தூய உயிர், தூய மெய் அல்லது தெளிவாகத் தடையில்லன, தடையுள்ளன சிலச்சில. அவையிரண்டும் இரண்டு ஓரங்களாகும். இடைப்பட்டன கலப்பு நிலையிலிருப்பனவுமாம். எனவே, அரையுயிர், அரைமெய் என்பனவாகின்றன. சில மொழிகளின் சில உயிர், வேறு சில மொழிகளில் மெய்யியல்படையும். சில மொழி மெய், வேறு சில மொழிகளில் உயிர்த் தன்மை பெறும். இவ்வாறாதல், குறிப்பிடப்பட்ட கலப்பு நிலையுடையனவற்றில் நிகழும். அகரவுயிர், தூய தன்மையுடையது (தடையின்மையில்). வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி, தூய தன்மையுடையன (தடையுடைமையில்). இவையிரண்டும், இரண்டு எல்லைகள். பிற, இவற்றிடைப்பட்டன. மூக்கொலியினும், பிரிவளியொலி, அதனினும், 'ரகர'வொலி, அதனினும், 'யகரம்' போன்ற அரையுயிர்கள், தடையில் உயிரொலியின் அண்மையில் வருகின்றன. [h], சிறிது தடையாக, உரசொலியாகும். அத்தடை நீங்க உயிரொலியாகும். உயிர்க்கும் (தடையில் ஒலிக்கும்), மெய்க்கும் (தடையொலிக்கும்) உள்ள வேற்றுமை இவ்வளவே. [இ, உ] ஆகிய ஒலிகள் தடையொலிகளின் (மெய்) அண்மையிலுள்ளன. [ய்] ஒலி, தடையில் ஒலியின் (உயிர்) அண்மையிலுள்ளது. [இ] ஒலியில் நாச் சிறிது மேலெழ [ய்] எனும் மெய்யாகும். [ய்] ஒலியில், நாச் சிறிது தாழ்நிலையடைய [இ] எனும் உயிராகும்.

வட காகேசியன் மொழிகளாகிய கபார்டியன் (Kabardian), அபசா (Abaza) மொழிகளில் ஒருயிரொலியே [a] உள்ளது. அக் காகேசியன் மொழிகளில் இரண்டு [a,ə] உயிரொலிகள் உள என்பதுமாம். இவை, ஒரு சில நீங்க உலக மொழிகள் அனைத்திலும் [அ,இ,உ/a,i,u] ஆகிய மூன்று உயிரொலிகளும் உள்ளன. இவற்றை அடிக்கொண்டு, 4,5




தெளிவு – செறிவு – உயிர்
(Based on, Jakobson, R., 1990 : 284, 285)

முதலானவையாகப் பல தடையில் ஒலிகளாகிய உயிரொலிகளை யுடையன உலக மொழிகள்.


உலக மொழிகளின் தடையில் உயிரொலிகள் (Vowels) செறிவு/சிதர்வு (Compact/diffuse), தெளிவுடைமை/தெளிவின்மை (Acute/grave) எனும் இருவகைக்கு உட்பட்டன. இவற்றுள், செறிவு/சிதர்வு அடிப்படையான பகுப்பு. இவ்விருவகையோடு, இதழ் குவிதல்/விரிதல் (Rounded/unrounded) எனும் மூன்றாவதனையும் இணைத்துப் பார்க்க, எல்லா உயிரொலிகளையும் வகை செய்து காணலாகும்.

உயிர்களில் அகரம், ஒரு வகை. இகரமும், எகரம் முதலிய இகரச் சாயலுடையனவும் மற்றோர் வகை. உகரமும், ஒகரம் முதலிய உகரச் சாயலுடையனவும், மற்றோர் வகை. ஆக, அகர வரிசையின, இகர





Approximate tongue positions of the front cardinal vowels - i, e, ε, a




Approximate tongue positions of the back cardinal vowels - ɑ, ɔ, o, u

Jones,Daniel,1966 : 13

நாவின் எழுச்சியில் முன், பின் நான்கு நிலைகள்

வரிசையின, உகர வரிசையின என யாவற்றையும் இம் மூன்ற னுட்படுத்தலாகும்.

அகரம் [a] வாய் அங்காக்க, நாப்படுப்பு நிலையில் தோன்றுவது. இகர [i], உகர [u] ஒலிகள், நா, மேல்வாயை அணுகப் பிறப்பன. எனவே, அகரமாகிய திறப்புயிர்க்கும், (Open), இகரமாகிய மூடுயிர்க்கும் (Close) இடையே, இரண்டு நிலையில், இரண்டுயிர்கள் தோன்றுகின்றன. அகரத்திலிருந்து மூன்றில் ஒரு பகுதி மேலே நாவெழப் பிறப்பது, அரைத் திறப்புயிர் (Half opened). இகரத்திலிருந்து மூன்றில் ஒரு பகுதி கீழே நாவிருக்கப் பிறப்பது, அரை மூடுயிர் (Half closed). இவை போல், இரண்டுயிர் அகர, உகரங்களிடை, அதே அளவில் நாவிருக்க, அவ்வாறே அரைத் திறப்பு, அரை மூடுயிர்கள் பிறப்பன உள. அகரமும் ஒலிப்பியல் வேறு பாட்டால், இரண்டாதலுமாம். ஆக, இவ்வகையாக, உயிரொலி,பொது நிலையில் எல்லா மொழி உயிரொலிகளையும் அளவிடற்கு அடியாக, எட்டாகக் காணப்படும். இவை, அடிப்படை யுயிர் (Cardinal vowels) எனப்படும் - (Jones, Daniel, 1966 : 23). இவை முதல் நிலையாக (Primary), இவற்றோடு துணை நிலையாகப் (Secondary) பத்து உயிரொலிகளும் குறிக்கப்படும். பின்னைய துணை நிலையான பத்தனவற்றுள், 9-16 வரை முன் எட்டனவற்றின் நா நிலையே. ஆயின், இதழ்நிலை வேறுபடும். 17,18 -ஆவது உயிரொலிகள், ஒன்று, எட்டு உயிரொலிகளின், நா நிலைகளின், இடைப்பட்டன. 1-5 வரையுள்ள உயிரொலிகள் விரிந்த அல்லது இயல்பு நிலை இதழமைவுடையன. 6- திறந்த குவியிதழ். 8- மூடிய குவியிதழ். 7- இரண்டன் இடைப்பட்ட குவியிதழ் அமைவுடையது. எனவே, 1-5, விரிந்த அல்லது இயல்பான இதழமைவுடையன (Unrounded). 6-8, குவியிதழமைவுடையன (Rounded).




அடிப்படையுயிர் (Cardinal vowels)
(Jones, Daniel, 1966 : 23)

நாவின் முன்பகுதி (Tongue front) நான்கு நிலைகளில் உயர்ந்திருக்க, மேலிருந்து (வல்லண்ணத்திலிருந்து) கீழாக, முறையே [i,e,ε,a] நான்கும்


பிறக்கும். நாவின் பின்பகுதி (Tongue back or Dorsum) மேலிருந்து (மெல்லண்ணத்திலிருந்து) கீழாக நான்கு நிலைகளில் உயர்ந்திருக்க முறையே [u,o,ɔ,ɑ] நான்கும் பிறக்கும்.

2.8.4. உயிரொலிப்பில் நாநிலை (Tongue position in the articulation of vocoids)



- (Ladefoged, Peter, 1971 : 104)

2.8.5. உயிரொலிப்பில் இதழ்நிலை (Lip position in the articulation of vocoids)



உயிரொலிப்பில் இதழமைவுகள்
- (Malmberg, Bertil, 1963 : 32)

உயிரொலிப்பில் இதழ் அமைப்பு வடித்து எதிரொலி செய்யும் அறையாகும். (Filter and resonator). இதழ், தம் நிலையில், விரிவில்,

குவிவில் குறிப்பிடப்பட்ட செயலைச் செய்யும். விரிவும், குவிவும் பலவகைப்படும்.


2.8.6. ஒலியலைச் செறிவு (Formants)

ஒலியலைச் செறிவு அல்லது அவற்றின் கூட்டம் (Formants) ஓரொலியின் குணம் அல்லது தரத்தை வரையறுக்கும். அதனோடு, ஓரொலியை மற்றோர் ஒலிநிலையிலிருந்து வேறுபடுத்திக் காட்டும். உயிரொலிகளுக்குக் குறைந்தது இரண்டு ஒலியலைச் செறிவுகள் அல்லது ஒலியலைச் செறிவொழுங்குகள் (ஒலியலைச் செறிவுக் கோடுகள்) ஒவ்வொன்றற்கும் உள்ளீடாகக் காணப்படும். மீண்டும் ஊக்கங் கொடுக்கப்பட்டு, வலுப்படுத்திப் பெருக்கப்பட்ட, ஒலியலைச் செறிவின் ஓட்டமே, ஒலியலைச் செறிவுக் கோடுகள் அல்லது ஒழுங்குகள் (Formants). உயிரொலியுள் மேல், கீழாகக் காணப்படும் இரண்டு அலைச் செறிவு வரிசையுள் மேலது (High formant) வாயால் ஏற்படுவது. கீழது (Low formant), தொண்டையால் பெறப்படுவது குரல்வளை ஒலி, இவ்விரு அறைகளாலும்,வடி செய்யப்பெற்று, எதிரொலி செய்து பெருக்கப்படும். இவ்வாறு பெருக்கப்பட்ட அலைச் செறிவு வரிசைகளே, உயிரொலி ஒவ்வொன்றிலும் காணப்படும், மேல்,கீழ் அலைச் செறிவு வரிசைகள் (Formants) ஆகும்

மூக்குயிர்களில் (Nasal or nasalised vowels), மூக்கால் வடித்துப் பெருக்கப்படும் (Filtered and resonated or reinforced) அலைச் செறிவு வரிசை, மூன்றாவதாகக் காணப்படும். வாயிதழுறையும் அலைச் செறிவு வரிசையை ஆக்கும். தனிப்பட்ட ஆண், பெண் குரலொலிப்பால் அலைச் செறிவு வரிசை ஆக்கப் பெறலாம். ஒலியலைச் செறிவு, ஓர் அகல்பாதைபோல் காணப்படும்.

கீழ், மேல் அலைச் செறிவு வரிசையுள், கீழது (Formant 1) தொண்டையோடு தொடர்புடையது, மேலதாகிய (Formant 2) வாயோடு தொடர்புடையதைவிட, ஒலியலையதிர்வு குறைவாகக் காணப்படும். இவ்விரண்டும் ஒலியலை ஓட்டத்தின் நடுவில் காணப்பெறும். இவை, இணைந்தும், அகன்றும் செல்லும் செலவால், உயிரொலி ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடும். இணையச் செறிவொலியும் (Compact) [a], அகலச் சிதர்வொலியும் (Diffuse) [i] தோன்றும். இணைவு (செறிவு), அகல்வு (சிதர்வு) இவற்றிடை வேறுபாடே எல்லா உயிர்களுமாம்.

[i,e,ε,a / இ,எ,அ] ஆகிய உயிரொலிப்பில், குறிப்பிடப்பட்ட இரு அலைச் செறிவு வரிசைகளும், முறையே, ஒன்றையொன்று, வரவரக் கூடுதலாக அணுகிச் செல்லும். மேலது, சிறிது சிறிதாகக் கீழிறங்கும். கீழது, அவ்வாறே சிறிது சிறிதாக மேற்சென்று அல்லது உயர்ந்து அணுகிச் செல்லும். இவற்றுள் [i/இ] ஒலி நிலையிலிருந்து, கீழதும், (Formant 1), மேலதும் (Formant 2) ஆகிய இரண்டும், முறையே, மேலும்,




ஒலியலைச் செறிவு நிலை (1 & 2)
(Position of formants (1 & 2))

(Ladefoged, Peter, 1971 101)

கீழுமாகச் சிறிது நகர்ந்து இயங்கி, அணுகிச் செல்லும். அஃதாவது, இவ்வியக்கம் இடை மூன்றனுக்கும் [e,ɛ,a/எ,அ] ஆம்.

எனவே, எஞ்சியவற்றிற்கு, [i/இ] ஒலிக்கு இரண்டும் அதனதன் நிலையிருக்க, [ɑ,ɔ,o,u/ஒ,உ] என்பனவற்றிற்குக், கீழது (Formant 1) தன்னிலையிலேயே இருக்க (மேலெழாது), மேலது (Formant 2) கீழிறங்கிக் கீழதை அணுகிச் செல்லும், இவ்வியக்க முறையினை உடையன, அலைச் செறிவரிசைகள் இரண்டும்.



ஒலியலைச்செறிவு - அ. இ. உ

மூன்றாவது ஒலியலைச் செறிவு இருப்பின், அது, தெளிவான ஒலித்தரத்தை ஆக்குவதும் உண்டு. ஒலியலைச் செறிவுகள் மொழிக்கு மொழி, சிறிது வேறுபடும்.

ஒலியலைச் செறிவு (Formant), மூன்றனவற்றை அடிக் கொண்டது. (1) நாவின் முன், பின் நோக்கிய இயக்கத்தால் ஏற்படும், வாயின் அளவு, வடிவு (2) நாவின் வேர்ப்பகுதி, தொண்டையின் பிற்பகுதியை (நா) அணுகுவதால், விலகுவதால் ஏற்படும், அப்பகுதியின் அளவு, வடிவு. (3) இதழ் அமைவால் ஏற்படும் அப்பகுதி அளவு, வடிவு. மூக்கின உயிர்க்கு மட்டும் மூக்குப்பகுதியின் அளவு, வடிவு உதவும்.

மூக்கின உயிருக்கல்லாத மூன்றாவது, நான்காவது ஒலியலைச் செறிவுகள் (Formants 3, 4) தனியவர் ஒலிப்பிலாகுமாயின் அவற்றிற்கு மொழியியல் தரம் இல்லை. மூன்றாவது ஒலியலைச் செறிவு, சில மொழிகளில் இகரத்திற்கும் [i] (Vowel), யகரத்திற்கும் ([Y] Semi vowel) இருப்பதியல்பு. அமெரிக்க இந்திய மொழி சிலவற்றில் தூய மூக்குயிர் (Pure nasal vowels) காணப்படுகின்றன. இவற்றிற்கு மூக்கால் ஏற்படும் மூன்றாவது ஒலியலைச் செறிவு உண்டு.

மூக்கின உயிரின் ஒலிச்செறிவு (Formant) நீங்க, ஏனைய உயிர்க்கும், மெய்க்கும், தனித்தனியே இரண்டு ஒலிச் செறிவொழுங்குகளே. அவற்றின் இணைவே இரண்டனவற்றையும் வரையறை செய்கின்றன. உயிராயின், கீழிருந்து இரண்டாவது ஒலிச்செறிவு வரிசை சிறப்புடையது. முதலது, முன்னையதனை நோக்கச் சிறப்பில்லது (Formants 2 and 1). இரண்டன் இணை போக்கே உயிரொலியை வரையறை செய்யும். மெய்யாயின், கீழிருந்து மூன்றாவது ஒலிச்செறிவு வரிசை சிறப்புடையதாகின்றது (F 3). இரண்டாவது, இந்நிலையில் சிறப்பில்லதாகும். இவ்விரண்டன் இணை போக்கே மெய்யை வரையறை செய்யும். ஆக, உயிர்க்கு, மெய்க்கு முறையே இரண்டு, மூன்றாவது ஒலிச் செறிவு வரிசையே சிறப்புடையதாகி அடுத்த கீழுள்ள ஒன்றனோடு இணைந்து செயல்படுகின்றது - (Jakobson, R., 1990 : 268).

2.8.7. இணையுயிர் (கூட்டுயிர்) (Diphthongal vowel)

இயல்பாக அல்லது தனிநிலையாகத் தோன்றும் உயிர்களுக்கு (Simple/single/monophthongal vowel) மாறுபட்டுச் சில மொழிகளில், அவற்றோடு, இணை அல்லது கூட்டுயிர்களும் (Compound/complex or diphthongal vowel) காணப்படும். அசையில் அழுத்தம் கொள்ளும் தனியுயிர் போலக், கூட்டுயிரும் ஒன்றாக இணைந்து நின்று ஓரழுத்தம் பெறும். இரண்டும் இணைந்து நிற்பினும், தனியுயிர் போல, ஓரொலியாகவே கருதப்படும். செயல்பெறும். தமிழ் மொழியில் [ஐ, ஔ] - [ஐ<அ+இ,அ+ய்], [ஔ <அ+உ, அ+வ்] ஆகிய ஈருயிர்களும், தனித்தனியாக ஒவ்வோர் உயிராகவே கருதப்படுகின்றன. செயல் பெறுகின்றன. ஆயின், அவ்விரண்டுயிர்களும், ஓருயிர் நிலையில் கருதப்பெறினும், ஏனைய உயிர்களைப் போலன்றி, ஈரொலிகளின் இணை உள்ளீட்டை அவற்றின் ஒலிப்பு முறையால் உணர்ந்து கொள்ள இயலும். [அ,இ,உ,ஆ,ஈ,ஊ] முதலியனவற்றின் ஒலிப்பு ஓரிடத்திலேயே தொடங்கி, அவ்விடத்திலேயே முடிய, மாறாக ஐ,

ஔகாரங்களின் ஒலிப்பு, அகர ஒலிப்பில் தொடங்கி, முறையே இகர அல்லது யகரத்தில், உகர அல்லது வகரத்தில் முடிவதை உணர்ந்து கொள்ளலாம். இவற்றின் ஒலிப்பு ஒன்றில், ஓரிடத்தில் தொடங்கி மற்றொன்றில், மற்றோரிடத்தில் முடிவதால், ஒலிப்பு ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு வழுகிச் செல்கின்றது - (Heffner, R.M.S., 1960 : 112). அஃதாவது, ஈரொலிகளின் ஒலிப்பிடமும், அவற்றின் ஒலிப்பும் ஓரொலியில், ஒருயிரில் தெரிவதால், இவற்றை, ஓரிடத்தில், ஓரொலியாகவே ஒலிக்கும் ஏனையவற்றிலிருந்து வேறுபடுத்தி, ஈரொலி அல்லது ஈரொலிப்பு இணைவாலாகிய ஒரு கூறுடையன என்பது மரபு.

"அகர இகரம் ஐகாரமாகும். அகர உரகம் ஔகாரமாகும். அகரத்திம்பர் யகரப் புள்ளி ஐ யென்னெடுஞ்சினை (அகரத்திம்பர் வகரப் புள்ளியும் ஔவென்னெடுஞ்சினை)" எனத் தொல்காப்பியம் (54, 55, 56) கூறியது. இவற்றால், ஈரொலி இணைவு [ஐ,ஔ] ஒலிகளில் குறிப்பிடப்படுகின்றது. இதன் பின் தோன்றிய எல்லா நூலும், உரையும் (ஒன்றிரண்டு நீங்க) இவ்வாறே குறிப்பிடுகின்றன தென் திராவிட மொழி மரபிலக்கணங்கள் பலவும் இத்தகைய கூட்டமைவைக் குறிப்பிடுகின்றன மொழியியற் பார்வையும் இதனையே கூறுகின்றது. வடமொழியிலும் [ஐ, ஔ, ஏ, ஓ] நான்கும் கூட்டொலி (சந்தியட்சரம்) யாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.


ஆங்கிலத்தில் பல கூட்டுயிர்கள் காணப்படுகின்றன. அவை, ஒலிப்பில், தொடக்கத்தில் ஓர் ஒலித் தரமும், முடிவில் மற்றோர் ஒலித்தரமுமாகவுள்ளன. பிரெஞ்சு முதலான சில மொழிகளில் கூட்டுயிர்கள் இன்று தனியுயிர்களாக மாறியுள்ளன. தமிழில் (திராவிட மொழியில்), ஒரு காலத்தில் [அய், அவ்] என்பனவாக, இரண்டு ஒலிகளின் தொடர்ச்சியாக (Sequence of two separate sounds or syntagmatic) இருந்தன. பிற்காலத்தில், தனியாக [ஐ, ஔ] என, இரு தனியொலிகளாக உருவாகியிருத்தல் வேண்டும். பழந்திராவிட மொழியில் இவ்விரண்டும் நீங்கலாகப் பத்து உயிரொலிகளே இருந்தன.

கூட்டுயிரொலிப்பில் ஒலித் தரமாற்றம் காணப்படுவதால், ஒலிப்படிப்படையில் கூட்டுயிர் (Phonetic diphthong). ஒலியன் அடிப்படையில், இரண்டு உயிர்கள் அல்லது ஒருயிரும், ஓர் அரையுயிரும் இயையும் இணைவு (Phonemic diphthong), பிறிதோர் நிலையில், ஓரொலி. இத்தகைய கூட்டுயிர், எழு (எடுப்புடைக்) கூட்டுயிர் (Rising diphthong - phonetic - [yu]) (பிற்பகுதி எடுப்பாகத் தோன்றுவது), வீழ் (படுப்புடைக்) கூட்டுயிர் (Falling diphthong - [ay]) (பிற்பகுதிபடுப்பாகத் தோன்றுவது), சமனிலைக் கூட்டுயிர் (Level diphthong [ui]) (இருபகுதியும் சம ஒலிப்புடையன) என மூவகைப்படும். எடுப்புப், படுப்பு என்பன ஒலியழுத்தம் (Stress) குறிப்பன - (Gleason Jr. H.A., 1970: 254).

கூட்டுயிர்களை, மூடொலியன (Closing diphthongs), நடுவணொ

லியன (Centring diphthongs) என இரு வகை செய்தும் கூறலாகும். முன்னையன மூடுயிர்களாகிய (Close vowels) [i,u] என்பனவற்றில் முடிவன. எ - டு : [ei,ou,ai,au,ɔi]. பின்னையன, நடுவணுயிராகிய (Half-opened/closed) [ə,ɛ,e] என்பனவற்றில் முடிவன. எ - டு : [ɛə,ɔə]. இருவகையும் வீழ் (படுப்பு) முடிபின (Falling diphthongs).

மாறாக [iə,uə] ஆகிய நடுவணுயிர் முடிபின இரண்டனவற்றிலும், பின்னையது [ə] முன்னைய ஒலியை விட எடுப்புடையதாகத் தோன்றுவதால், இவை இரண்டும், எழு (எடுப்பு) முடிபின (Rising diphthongs). (ij,uw,ej,ow,aj,oj,aw,ɔj,oh) முதலியனவும் கூட்டுயிர்களே.



Closing diphthongs
[i,u] - முடிபின

Centring diphthongs
[ə] - முடிபின

(Jones, Daniel, 1966 : 23)
கூட்டுயிர் ஒலிப்பிடப் பெயர்ச்சி

2.8.8. முக்கூட்டுயிர் (Triphthongal vowel)

அரிதாகச் சிலபோது உயிர், அரையுயிர் அல்லது வழுக்கொலி கலந்து, மூன்று ஒலிப்புக்கள் இணைந்து, ஓர் ஒலியழுத்தம் பெறுமாயின் அது முக்கூட்டுயிர் (Triphthong) எனப்படும். இதன்கண், நடுவணது முன், பின் இரண்டினும் எடுப்புடன் காணப்படும். ஓரொலியில் தொடங்கி, இரண்டாவது வழியாக, மூன்றாவதில் சென்று முடிவது எ - டு : Jew [JUW] - (Jones, Daniel, 1966 : 59 (F.N)).

2.8.9. உயிரும், ஒலியழுத்தமும் (Vowel and stress)

மொழியசைகளில் தனியுயிரும், கூட்டுயிரும் அசையுச்ச ஒலியாக (Simple and complex peaks) வரும். தனியுயிர்களாக [i,e,æ,a,u,ɔ,o,ə] முதலியனவும், கூட்டுயிராக [ij,ej,aj,oj,ɔj,uw,ow,aw,ei,ɔi,ai,ou,au, ɛə,ɔə,iə,uə,ay,yu,oh] முதலியனவும் அசையுச்ச ஒலி(Sonority)யாகும். கூட்டொலியுள், முதல் உறுப்பு, முதல் நிலை உச்ச ஒலியாகவும் (Peak nuclei), இரண்டாவது உறுப்பு, துணைநிலை உச்ச ஒலியாகவும் (Peak satellite) வரும். இத்தகைய இரண்டாவதுறுப்புப் பெரிதும் [i,u,ə] முதலிய உயிர்களாகவோ, [j,y,w,h] முதலிய அரையுயிர் அல்லது வழுக்கொலிகளாகவோ (Glides) இருக்கும். இத்தகைய இரண்டாவதுறுப்பு, இணை அல்லது துணை உயிராகும் (Cövowel).

[a,e,o] மூன்றும் எப்போதும் அசையுச்ச நிலையாகவே வரும். கூட்டுயிரில் துணையுறுப்பாக வாரா,முதலுறுப்பாகவே வரும். எனவே,

இவை நிறையுயிர்கள் (Full vowels). [i.u] இரண்டும் அசையுச்ச நிலையாகவும், கூட்டுயிரின் முதலுறுப்பாகவும், துணையுறுப்பாகவும் (அசையுச்ச நிலையடையாமலும்) வரும். எனவே, இவை, இவ்வாற்றால் அரையுயிர்களாம் (Semi vowels). ஆனால், அசையின் ஓர உறுப்புக் களாக (Marginals) வாரா.

[p,t,č,k] முதலிய மெய்கள் (Consonants) அசையுச்ச நிலையும் அடையா. கூட்டொலியில் துணையுறுப்பாகவும் வாரா. அசையின் தொடக்கம், முடிவுகளாகிய ஓரங்களாக (Marginals) வரும்.

[i,u] என்பன, ஒலிப்படையும் போது, சிறிது நா மேலெழுந்து அண்ணத்தைத் தொடும் நிலைவருமாயின், உரசல் தன்மை ஏற்பட்டு மெய்யொலியாகும். எனவே, மெய்யொலிப்பின் மிக அண்மை யிலிருப்பதால், மெய்ச் சாயல் பெற்று, அரையுயிராம் தன்மையடைதல் வேறு. அசையில் உச்ச நிலையடைதலும், அடையாமலிருத்தலும், கூட்டுயிரில் துணையுறுப்பாக அமைதலும் ஆகிய காரணங்களால் அரையுயிர் என ஆதல் வேறு. முதலது, ஒலிப்படிப்படை . ஏனையது, அசையழுத்த அடிப்படை. இருப்பினும் இரண்டிற்கும் ஒரு வகையில் தொடர்புண்டு.

பொதுவாக, இவை போல் ஒலிக்கும் [i>y/j] [u>w] [y/j,w] இவற்றையும், [r,h] இவற்றையும், ஒலிப்பில் உயிரியல்பு மிகவிருப்பதால், மெய்யாயினும் அரையுயிர் என்பர். [w,j] இவ்விரண்டும் ஒலிப் பியல்பால் மெய்த்தன்மை மிகுந்திருக்குமாயின், அரைமெய்கள் (Semi consonants) என்பதுமாம்.

சில மொழிகளில் [y] மட்டும் அரையுயிர் (Demi vowel) என்பதுமாம். தமிழில் 'யகர' ஒலிப்பு இவ்வாறாகவே இகரத்தின் மிக அண்மையில் உள்ளதாக விளக்கப்படுகின்றது. [இ:ய்] தொல்காப்பியத்தில் *(58,99)*.

சில மொழிகளில், அகரந் தவிர, எஞ்சிய உயிர் போன்றன அனைத்தும் அரையுயிர்கள். சிலவற்றில் [m,n,ŋ,r,l] ஆகிய மூக்கொலிகளும், பிரிவளியொலியும், வருடொலியும் அரையுயிர்கள். சிலவற்றில் [m,n,ŋ] ஆகிய மூக்கொலிகள், அரைமெய்கள் (Semi consonants). இவ்வாறான நிறை உயிர்க்கும் (Full or pure vowels), நிறை மெய்க்கும் (Full or pure consonants) இடைப்பட்ட உயிரொலிகளும், மெய்யொலிகளும் ஒலிப்பில் பலமொழிகளில் சிறிது வேறுபடுகின்றன. சில மொழிகளில், சில ஒலிகள் அசையுச்சமாக உயிராயும், கூட்டு யிரில் துணையுறுப்பாயும், அசையோரமாக மெய்யாயும் வருவன [i,u,r] உள.

2.8.10. உயிரளவுகள் (Vowel dimensions)

தாகலாக் (Tagalog), பெல்ல கூலா (Bella coola), அடிகே (Adyge), கிரீ (Cree), ஒஜீப்வா (Ojibwa) முதலான மொழிகளில் மூன்றுயிர்கள்

உள. பாக்ஸ் (Fox), ஷானீ (Shawnee), அபாச்சியன் (Apachean) முதலான மொழிகளில் நான்குயிர்கள் உள. உலக மொழிகளுள் மிகக் குறைந்த பதின்மூன்று ஒலிகளையே உடைய ஹவாய் (Hawaii) மொழியில் [i,e,a,o,u] எனும் ஐந்து உயிரொலிகளுள எஞ்சியன, மெய்யொலிகள் [p,k,m,n,w,j,h,?]. ஐந்து உயிரொலிகளுடைய மொழிகளும், இவற்றின் மிகுந்தனவற்றைக் கொண்டனவுமே ஆயிரக்கணக்கின. தமிழில் [அ, இ,உ,எ,ஒ] ஆகிய ஐந்துயிர்களே. இவற்றின் நீட்சியே [ஆ,ஈ,ஊ,ஏ,ஓ] என்பன இவ்வைந்தன், குறில், நெடில் வகையே பழந்திராவிட மொழி உயிர். [ஐ,ஔ], இவற்றை (மெய்யுடனும்) அடிக்கொண்ட இணைவே. ஆக, முப்பது ஒலிகள். பத்து உயிரொலிகள், இன்றைய நிலையில் பன்னிரண்டு உயிரொலிகளாயின. ஆகவுள்ள ஒலிகளில், ஏறத்தாழ, நாற்பது விழுக்காடு உயிரொலியாகின்றது. பின்னிஷ் (Finnish) மொழியின் இருபத்தொரு ஒலிகளுள், உயிரொலிகள் எட்டு. அஃதாவது, உயிரொலிகள் முப்பத்தெட்டு விழுக்காடாகின்றது. ஹவாய் மொழியிலும், இவ்வாறே, உயிர் ஆகவுள்ள ஒலிகளுள் முப்பத்தெட்டு விழுக்காடாகின்றது. தமிழிலும் ஆய்தத்தைக் கணக்கிலாக்கின், உயிர்த் தொகை முப்பத்தெட்டு விழுக்காடாகின்றது. இவையே, உலக மொழிகளுள், உயிர்த் தொகை விழுக்காடு, மிகக் கூடியன. பெல்ல கூலாவில், ஆகவுள்ள முப்பத்தியாறு ஒலிகளுள், உயிரொலிகள் மூன்றே. எனவே, உயிர்த்தொகை எட்டு விழுக்காடா கின்றது. உலக மொழிகளுள், மிகக் குறைந்த உயிர்த் தொகை விழுக்காடுடையது இதுவே. ஒலிகளின் தொகை கூட, உயிரொலி விழுக்காடு குறையும்.

உயிரொலிகளின் தொகை, ஒலிப்பிடம், ஒலிப்பு முறை முதலான வற்றை அடிக்கொண்டு முக்கோணம், நீண்டசதுரம் முதலான அமைப்புக்களுக்கு உட்படுத்தியும், ஒன்று முதலாகப் பல அளவுகளுக்கு உட்படுத்தியும் கூறலாம். மேல்,கீழ் (High/low), முன்,பின் (Front/back) இதழ் குவிவு,குவிவின்மை (Rounded/unrounded) முதலானவற்றை அடிக்கொண்டு, மேலனவற்றுள், ஒரு வகையே உள்ளது. (One dimensional), இரு வகைப் பிணைப்புமுடையது (Two dimensional), மூவகைப் பிணைப்புமுடையது (Three dimensional) என்றிவ்வாறே, அளவு முறையில் வகை செய்து காணலாகும். இவ்வகை, மொழியின் உயிரமைவைப் பொறுத்தது. அளவு முறைகளால்,தனித் தனியாகப் பார்த்து, வகை செய்து காண்பதற்குரிய வகையும், வழியும் இருத்தல் வேண்டும்.

மேல், கீழமைவு முதன்மையாக எல்லா மொழிகளிலும் காணப்படுவது. முன், பின் அமைவும் பிணைந்து காணப்படுவதே உலக மொழிகளின் இயல்பான வகை. சில மொழிகளில் மேல், கீழ் வகையோடு, இதழ் குவிவு, விரிவு இரண்டாவது வகை முறையாகப் பிணைந்தும் காணப்படும். இவ்வகை, முன்னைய இரண்டனோடும் பிணைந்து மூன்றாவது அளவு வகை முறையாக வருதலுமாம்.



உயிரொலி இதழமைவு அளவுகள்

மேற்கோள் (citations) : *சில மொழிகளில் உயிரொலி அளவுகள்*
தாகலாக் (Tagalog) & *கிரீ* (Cree)

	முன்	இடைநிலை	பின்
	Front	Indifferent	Back
உயர்நிலை (High)	i		u
தாழ்நிலை (Low)		a	

Italian & Central Western American English			
High	i		u
Higher mid	e		o
Lower mid	ɛ		ɔ
Low		a	

German & Dutch				
	Front		Indifferent	Back (Rounded)
	Unrounded	Rounded		
High	i : i	Y : Y		u : u
Mid	e : e	ø : ø		o : o
Low			a : a	

French				
	Front		Nasalised	Back (Rounded)
	Unrounded	Rounded		
High	i	y		u
Higher mid	e	ø		o
Lower mid	ɛ	œ		ɔ
Low	a		ɛ̃, œ̃ ɔ̃ ɑ̃	ɑ

Turkish				
	Front		Back	
	Unrounded	Rounded	Unrounded	Rounded
High	i	y	ï	u
Low	e	ø	a	o

Latin, Spanish, Russian		
i		u
e		o
	a	

அடிகே	(Adyge)
உயர்வு	i
இடை	e
தாழ்வு	a

பாக்ஸ்	(Fox)
i	u
a	ɑ

இம்மூன்று வகை முறையிலும், தனித்தனியாக, இரண்டு எல்லைகளின், இடைநிலை வகை சிலவாக, அவ்வத் தனிவகையோடு இயைந்து செயல்படுதலுமாம். ஒரு வகையாக, உயர்நிலை, தாழ்நிலை (இடைநிலையுமாம்). இரு வகையாக, உயர்நிலை முன், உயர்நிலை பின்,

System used in America						
	Front		Central		Back	
	unr	R	unr	R	unr	R
High	i	ü	ɨ̇	ʉ	ω	u
Lower high	I		ɨ			U
Higher mid	e	Ö				o
Mean mid	E		ə			⋂
Lower mid	ɛ	ɔ̈	ɜ		^	ɔ
Higher low	æ					
Low			a		ɑ	ɒ

- (Gleason, Jr., H.A., 1970: 255)

Vowels					
Vowel Height	Front		Nonfront		
			Central	Back	
	Unrounded	Rounded	Unrounded	Unrounded	Rounded
High	i	ü		ω	u
	I				U
Mid	e	ö	^		o
	ɛ	œ			ɔ
Low	æ			ɑ	ɒ
			a		
Semi vowels					
High	J (y)	ɥ			w

- (Jackobson. R., 1990 : XVII)


		Front		Central		Back	
		Unrounded	Rounded	Unrounded	Rounded	Unrounded	Rounded
High	close	i	ü	ɨ	ʉ	ï	u
	open	ɩ	Ü			ɩ̈	U
Mid	close	e	ö	əɽ		ë	o
	open	ɛ		^			
Low	close	æ	ɔ̈				ɒ
	open	a		ɑ			ɒ

- (Pike, Kenneth. L., 1968 : 5)


Vocoids - Basic Chart												
		Font (Palatal)				Central			Back (Dorsal)			
		Rd.			-Rd.	-Rd.	Retro	Rd.	Rd.			-Rd.
High		ü		i		ɨ		ʉ	u		ï	
	Lax		Ü		ɪ					U		Ï
Mid		ö		e		ɵ	ɹ	ɵ	o		ë	
	Lax		ọ̈		ẹ	â				ọ		ẹ̈
Low				ä		a					A	

- (Brakel, Arthur, 1983)


English			
	Front	Central	Back
High	i	ɨ	u
Mid	e	ɵ	o
Low	æ	a	ɔ



I. P. A. 1989



Cardinal vowels - Primary & Secondary - Jones Danial



Voceid space - Catford & Laver, John

	Unrounded			Rounded		
	Front	Central	Back	Front	Central	Back
Close	i	ɨ	ω	y Y	ʉ U	u
Close-mid	e	∂ 3	ɣ	∅	θ	O
Open-mid	ɛ æ	ɐ	^	œ		ɔ
Open	a		ɑ	Œ		ɒ

- (Laver, John, 1994 : 312)

தாழ்நிலை முன், தாழ்நிலை பின் (இடைநிலையுமாம்). மூவகையாக, உயர் நிலை முன் இதழ் விரிவு, உயர்நிலை பின் இதழ் குவிவு, தாழ்நிலை முன் இதழ் விரிவு, தாழ் நிலை பின் இதழ் விரிவு (இடைநிலையுமாம்) என்றிவ்வாறே பிணைந்து செயல்படும் வகைபாடுடையன, உயிர்.

இவையன்றிச் செறிவுடையன, சிதர்வுடையன (Compact/Diffused), தெளிவுடையன, தெளிவில்லன (Acute/Grave) என்றின்னோ ரன்னவாறு வகை செய்தலுமாம். இவ்வாறு, ஒன்றையே பல பார்வையில் காண, அதன் இயல்பு விளக்கம் பெறும்.

2.8.11. சொல்லில் உயிரொலி (Vocalic unit in word)

[அ] - அறு, [ஆ] - ஆறு, [இ] - இடு, [ஈ] - ஈடு, [உ] - உறு, [ஊ] - ஊறு, [எ] - எழு, [ஏ] - ஏழு, [ஒ] - ஒடு, [ஓ] - ஓடு, [ஐ] - ஐயை, [ஔ] - ஔவை.
[i] - fit, bit, bid, [e] - bet, met, bay, [ε] - bed, said (sεd), [a] - psalm, bot, colony, [*a*] - cot, [o] - boat, roat, go, [ɔ] - caught, [u] - boot, pool, [æ] - cat,bat, [ə] - cup,but, [^] - mud, [3] - heard.

2.8.12. உயிரொலி விளக்கம் (Description of vowels)

Tense vs lax vowels & High vs Low- [i,u] vs [a] & [e,ε,o,ɔ], [e] vs [ε], [o] vs [ɔ]

[அ/a] - *தாழ்நிலை* (Low), *நடுநிலை/முன்* (Central/front), *இதழ் குவிவின்மை* (Unrounded), *திறப்பு* (Open), *செறிவு* (Compact), *நெகிழ்வு* (Lax), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

[இ/i] - *உயர்நிலை* (High), *மூடியல்* (Close), *இதழ் குவிவின்மை* (unrounded), *முன்* (Front), *சிதர்வு* (Diffuse), *தெளிவு* (Acute), *இறுகு* (Tense)-*(உயிர்களிடை)*, *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (vowel).

[உ/u] - *உயர்* (High), *மூடியல்* (Close), *இதழ்குவிவு* (Rounded), *பின்* (Back), *சிதர்வு* (Diffuse), *தெளிவின்மை* (Grave), *இறுகு* (Tense) *(உயிர்களிடை)* *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

[எ/e] - *உயர்நடு* (Higher mid), *அரை மூடியல்* (Half-closed), *இதழ் குவிவின்மை* (Unrounded), *முன்* (Front), *செறிவு- சிதர்வு இடைத்தரம்* (Non-compact, non-diffuse), *தெளிவு* (Acute), *உயர்நிலையோடு ஒப்பிட நெகிழ்வு, தாழ்நிலையோடு ஒப்பிட இறுகல்* (Lax & tense), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

[ஒ/o] - *உயர் நடு* (Higher-mid), *அரை மூடியல்* (Half-closed), *இதழ் குவிவு* (Rounded), *பின்* (Back), *செறிவு-சிதர்வு-இடைத்தரம்* (Non-compact, non-diffuse), *தெளிவின்மை* (Grave). *மேல் நிலையோடு ஒப்பிட நெகிழ்வு, தாழ்நிலையோடு ஒப்பிட இறுகல்* (Lax & tense), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (vowel).

[ε] - *தாழ்நடு* (Lower mid), *அரைத் திறப்பியல்* (Half-opened), *இதழ்குவிவின்மை* (Unrounded), *முன்* (Front), *செறிவு-சிதர்வு இடைத்தரம்* (Non-compact, non diffuse), *தெளிவு* (Acute), *உயர் நிலையோடு ஒப்பிட நெகிழ்வு, தாழ்நிலையோடு ஒப்பிட இறுகல்* (Lax & tense), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

[ɔ] - *தாழ்நடு* (Lower mid), *அரைத் திறப்பியல்* (Half-opened), *இதழ் குவிவு* (Rounded), *பின்* (Back), *செறிவு- சிதர்வு இடைத்தரம்* (Non-compact, non-diffuse), *தெளிவின்மை* (Grave), *மேல்நிலையோடு ஒப்பிட நெகிழ்வு, தாழ்நிலையோடு ஒப்பிட இறுகல்* (Lax & tense), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

[ɑ] - *தாழ்நிலை* (low), *நடுநிலை, பின்* (Central/back), *இதழ் குவிவின்மை* (Unrounded), *திறப்பு* (Open), *செறிவு* (Compact), *நெகிழ்வு* (Lax), *அதிர்வு* (Voiced), *தனி* (Single), *வாய்வழி* (Oral), *உயிர்* (Vowel).

கூட்டுயிர்கள் (Compound/complex), *அதிர்வு* (Voiced), *வாய்வழி* (Oral), *உயிர்கள்* (Vowels).

வடமொழியில் (Sanskrit) *உயிர் பதினாறனவற்றுள், ஆறு, இயல்பாகக் காணும் உயிரொலிகளுக்கு மாறுபட்டுக் காணப் படுகின்றன. அவை [ரு, ரூ, லு, லூ, அம், அஃ] என்பன. [ர, ல / r, l] [அம், அஃ]* / [m], [h] *சில மொழிகளில் உயிரொலிகளாகக் கருதப்படுகின்றன.*

[i,e,a,o,u]- *முதலியன, தூய உயிரொலிகள். மெய்ச்சாயலில்லன.*

வெடிப்பொலிகள், உரசொலிகள், மூக்கொலிகள் மெய்யொலிகள். உயிர்ச்சாயலில்லன.

பிரிவளியொலி, வருடொலிகள் மெய்யொலிகள். உயிர்ச் சாயலுடையன.

வழுக்கொலிகள் [h ?] *முதலியன உயிர்ச்சாயல், மெய்ச்சாயல் இல்லன* - (Jakobson, R., 1990 : 259).

வரைவு விளக்கம் - உயிரொலி								
	இ	எ		அ			ஒ	உ
	i	e	ɛ	a	ɑ	ɔ	o	u
உயர்நிலை மூடல்	+							+
தாழ்நிலை திறப்பு				+	+			
உயர்நடு அரைமூடல்		+					+	
தாழ்நடு அரைத்திறப்பு			+			+		
முன்	+	+	+	+				
பின்					+	+	+	+
நடுநிலை				+	+			
இதழ்குவிவு						+	+	+
இதழ்குவிவின்மை	+	+	+	+	+			
செறிவு		(+	+)	+	+	(+	+)	
சிதர்வு	+							+
தெளிவு	+	+	+					
தெளிவின்மை						+	+	+
அதிர்வு	+	+	+	+	+	+	+	+
அதிர்வின்மை								
தனி	+	+	+	+	+	+	+	+
கூட்டு								
வாய்வழி	+	+	+	+	+	+	+	+
இறுக்கம்	+	(+	+)			(+	+)	+
நெகிழ்வு				+	+			

3 ஒலிப்பியல் அமைவு முறை (Phonetic system)

3.0. ஒலிப்பு (Articulation)

பேச்சில் அல்லது மொழிப் பயன்பாட்டில் ஒலிப்பியல் அல்லது ஒலிப் பிறப்பியல் நிலை (Phonetic or organic level), ஒலியதிர்வியல் அல்லது ஒலியலையியல் அல்லது ஒலிப்பலையியல் நிலை (Acoustic level), கேட்பியல் அல்லது கேட்பொலிப்பியல் நிலை (Auditory or perceptual level) ஆகிய மூன்று நிலைகளும் பேசுவோர், கேட்போரிடையே சமுதாய நிலையில் நாள்தோறும் நிகழும் நிகழ்ச்சியாகும். இத்தகைய பேச்சுச் செயலால் மக்கள் அகத்திலும், புறத்திலும் செயல் பல நிகழ்கின்றன. இவையே, மக்கள் வாழ்வியல்.

3.1. பேச்சும், தெரிவும் (Speech and perception)

இவ்வாறு பேசும்போது, பேசுவோர், சமுதாயப் பழக்கத்திற்கு உட்பட்ட சிலபல செய்திக்குறித் தொடர்களால் (Code) செய்தியைத் தெரிவிக்க (Encoding), அதே சமுதாயப் பழக்கத்திற்குட்பட்ட கேட்போர் அதைத் தெரிந்து கொள்வது (Decoding) பேச்சு மரபு. ஒலிப்பு, அலையாக வரக், கேட்பில், முதல் நிலையாகச் செய்தி தெரிவதோடன்றிக் கேட்பில், காண்பில், பேசுவோரைக் குறித்த பால், பருவம் முதலிய உடற்கூறுகளையும் (Physical markers), சினம், சிந்தை முதலிய உளக்கூறுகளையும் (Psychological markers). கல்வி, செல்வம், பதவி, பணி முதலிய சமூகக் கூறுகளையும் (Social markers), தெரிவது, துணை நிலையான பேச்சு மரபு.


கேட்போர் பேசுவோரிடமிருந்து தெரிந்து அல்லது புரிந்து கொள்வன, வாய்வழியும் (Vocal), வாய் அல்வழியும் (Non-vocal) ஆகும். முகபாவனை, நிலை, தலையசைவு, உடலசைவு, சைகை, கண்ணசைவு முதலியன, வாயல் வழியைச் சார்ந்தன. வாய்வழியன, சொல் நிலையால் (Verbal), சொல்லல் நிலையால் (Non-verbal) என இருவகையன. ஒலியழுத்தம் (Word stress), இன்னோசை (Intonation), இன்னிசை (Pitch-melody) முதலியன பின்னையதைச் சார்ந்தன. பேச்சு, மொழியியல் (Linguistics) சார்ந்தது. வாயல்வழியனவாகிய முகபாவனை, உடல், தலை, கை, கண் அசைவுகள், நிலை முதலியனவும், உள்ள நிலைத் தெரிவுகளாகிய சினம், கவலை, அதிர்ச்சி, உவகை, அன்பு, உணர்ச்சி, தளர்ச்சி முதலியனவும் மொழிச் சாயலின (Paralinguistic). பேசுவோரது இயல்பு குறிக்கும் ஒலிப்புத் தரம், (Voice quality), ஒலியழுத்த, இன்னோசையளவுகள் (Range of loudness and pitch) முதலியன

மொழியியல் புறத்தன, அல்லது மிகை மொழியியல்பின (Extra linguistic) - (Laver, John, 1994: 22). இவையனைத்தும், பேசும் செய்தியையும், பேச்சினையும், பேசுவோனையும் பல வகையில், பல நிலையில் தெரிவிப்பனவாகும். பேசும் செய்திப் பொருள் நேர் பொருள் (Semantics), சூழ்பொருள் (Pragmatics) என இருவகை. பேச்சு, சொல், சொற்றொடராகிய, தொடர்நிலையில் (Serial or linear or syntagmatic or horizontal axis or level) அமைந்த இலக்கண நிலை (Grammatical level), குறிப்பிடப்பட்ட இரு பொருளையும், சொற்பொருளோடு (Lexical meaning), இலக்கணப் பொருளோடு (Grammatical meaning) உணர்த்தும். பொருளையுணர்த்தும் சொல் அல்லது இலக்கணக் கூறுகள் (Lexical or grammatical units) உயிர், மெய், மிகைப்பகுப்புக் கூறுகள் (Prosodic units) முதலிய ஒலியுருக்களால் (Phonological units) ஆகியன. இத்தகைய ஒலியுருக்கள், ஒலிப்புப் பொருள் (Phonetic substance) ஆகிய ஒலி அல்லது ஒலியலைகளால் ஆக்கப்பட்டன. ஒலி அல்லது ஒலியலைகள், வேறுபட்ட ஒலியியல்பு அல்லது ஒலிப்பியல் புகளால் (Distinctive features or phonetic features) ஆக்கப்பட்டன. இவ்வியல்புகள், உடல் ஒலிப்புறுப்புக்களின் (Phonetic organs) அசைவு அல்லது இயக்கங்களால் ஆகும் காற்றசைவுகளை அடிக் கொண்டன.

3.2. ஒலிப்பு அடிநிலைக் கூறு (Phonetic element)

குறிப்பிடப்பட்ட ஒலி, அல்லது, ஒலிப்பு இயல்புகளால் ஆக்கப்பட்ட, ஒலியன் நிலை உறுப்புக்கு (Phonological or phonemic segment) ஒப்பாகிய, ஒலிப்பு அடி நிலைக் கூறு அல்லது உறுப்புக் (Phonetic segment)களின் தொடரே, பேச்சு அல்லது மொழியாதலினால், இத்தகைய ஒவ்வொரு கூறும் அல்லது உறுப்பும் ஒன்றையொன்று அடுத்து இணைந்து வர, ஒலிப்பில் ஒன்றன் தாக்கம் ஒன்றில் ஏற்படுவது ஒலிப்பு மரபு. ஒன்றைத் தனித்துத் தெரிந்து வேறிசைக்க, அதன் ஒலிப்பில் தூய நிலை காணும். அதனை இணைத்து, மொழிப் படுத்திசைக்க ஒன்றில், மற்றொன்று கலந்த கலவை நிலையையே ஒன்றன் ஒலிப்பில் காண முடியும். எனவே, ஒலிப்புறுப்பு அல்லது கூறு ஒவ்வொன்றிற்கும், ஒலிப்பில் தனிநிலை, கலவை நிலை என இரு நிலைகள் உள.

ஒவ்வோர் ஒலிப்புக் கூறு அல்லது உறுப்பிற்கும் (Phonetic segment) மூன்று ஒலிப்புத் தோற்றங்கள் (Phonetic phases) உள்ளன. முதல் அல்லது தொடக்க நிலைத் தோற்றம் (Onset phase), இடை அல்லது தொடர்நிலைத் தோற்றம் (Medial phase), இறுதி அல்லது தொய்வு நிலைத் தோற்றம் (Offset phase) என்பன அவை. இவற்றுள், இடை அல்லது தொடர் நிலைத் தோற்றமே ஒலிப்புறுப்பின் இன்றியமையாத, ஒலிப்பியல்பு தெரிவிக்கும் கூறாகும். இதனை மொழிப்படுத்த, இணை நிலையில், தொடர் நிலையில், கலவை நிலையாக நின்ற கூறு அல்லது உறுப்பின் இறுதிநிலையாகிய தொய்வு நிலையும், தொடர்ந்து வரும் உறுப்பின், முதல் நிலையாகிய தொடக்க நிலையும், ஒலிப்பில்



Articulatory sequence of two-segment
Single word utterance 'saw' [S ɔ]
Phases of segmental performance
(Laver, John, 1994 : 133)

இணைந்து, ஒன்றாகி, ஒன்றன் இறுதி, மற்றதன் தொடக்கமாகும். இக்கலவை நிலை, ஒலிப்பு மரபாகும்.

3.2.1 ஒலிப்பும், காற்றின் போக்கும் (Articulation and air stream)

பேச்சுக் கூறுகளுக்கு, நுரையீரல் காற்றின் இயக்கமும், போக்குமாகிய தொடக்கமும் (Initiation), குரல்வளைச் செயலும் (Phonation), வாயின்கண் ஒலிப்பிடம், தடையளவு, ஒலிப்புத் தோற்றம் ஆகிய ஒலிப்பும் (Articulation), காலஅளவும் (Temporal), ஒலியழுத்தம், இன்னோசை முதலிய மிகைப் பகுப்புக் கூறும் (Prosodic), இன்னிசைக் கூறும் (Metrical) ஆகிய ஆறும் கவனிக்கத்தக்கன.

முதல் மூன்றன் அடிப்படையில், முறையே, ஒலிப்புக் காற்று, நுரையீரல் முயற்சியால் தோன்றுவது (Pulmonic air stream), குரல் வளைத் தசை முயற்சியால் தோன்றுவது (Glottalic air stream), நா முயற்சியால் தோன்றுவது (Lingual, or oral or velaric air stream) என, மூவகைச் சிறப்பு முயற்சிகளால் தோன்றுவனவாக, ஒலி அல்லது ஒலிப்புக் கூறுகளை மூவகை செய்யலாம். இவை ஒவ்வொன்றும், தனித் தனியாக, வெளிச் செல்வளியன (Egressive), உள் செல்வளியன (Ingressive) என இருவகையான ஒலிப்புக் கூறுகளை உடையன. இவ்வகை, ஒலிப்புக் காற்றின் போக்கினைக் குறிப்பன. உள் செல்வளியனவாகிய ஒலிப்புக் கூறுகள் ஒரு சில. பெரும்பான்மையன வெளிச் செல்வளியன.

நார்வே மொழியில் (Norwegian) Ja [j,a:,]-(yes), Nei [n,æ,]- (No) என்பன, அசையளவில், நுரையீரல் சாரும் உள்ளீர்ப்பு ஒலியாகும். (Pulmonic ingressive sound). புங்கூசோ (Punguutsou) மொழியில் [f,] (Labiodental fricative), [h']- (Approximant) ஆகிய இரண்டு ஒலிகளும் அத்தகையனவே (Fuller, 1990: 10-11, cited by Laver, John, 1994: 168).

குரல்வளை ஒலிகள் (Glottalic or phonation types of sounds) அதிர்வில்லன (Voiceless types), அதிர்வுள்ளன (Voiced types), 'ஹிஸ்'- ஒலி (Whisper or hissing type) என மூவகையின. அதிர்வின்மை, குரல்தசை (Vocal folds) செறிவாக மூடியிருக்க, அவை உயிர்ப்புக்கு அகலத் திறந்திருக்க (Nil phonation and breath phonation) என, இரு வகையாகத் தோன்றும். அதிர்வு, இயல்பான அதிர்வு (Normal or modal voicing), 'கிரீக்' ஒலி (Creak), உரப்பொலி (Falsetto) ஆகிய மூவகையாகத் தோன்றும்.

'ஹிஸ்'- ஒலி (Whisper) குரல்வளையுள், ஒலித்தசைகள் (Vocal folds) மூடிச் செறிந்திருக்க, அவற்றின் பின்புறமுள்ள இணைப்புத் தசை (Arytenoid cartilages) திறந்திருக்க, உரசொலியாகக், குரல் வளையுள் பின்புறம் வழியாக, மூச்சுக் காற்றொலியினும் சிறிது உரத்த ஒலியாகப் பிறப்பது.

'கிரீக்' ஒலி (Creak), குரல்வளையுள், ஒலித்தசை அதிர்வு ஒழுங்கின்றிக், கால இடைவெளி கூடியும், குறைந்துமாகத் தாழ்ந்த ஒலியோடு தோன்றுவது.

உரப்பொலி (Falsetto), குரல்வளையுள், ஒலித்தசையதிர்வு, இயல்பான ஒலித் தசையதிர்வின் மிகுந்து, உச்ச நிலையுடையதாகச், சிறிது உரசொலிச் சாயலும் பெற்றுத் தோன்றுவது.

குறிப்பிடப்பட்டன, தனியொலியாகவன்றி, இணைந்தும் (Compound phonation types) காணப்படும். அதிர்வொலியோடு, 'ஹிஸ்' ஒலி இணைந்து 'ஹிஸ்'- அதிர்வொலியாக (Whispery voice), அதிர்வொலியோடு, 'கிரீக்' ஒலி இணைந்து 'கிரீக்' அதிர்வொலியாக (Creaky voice), அதிர்வொலியோடு, 'ஹிஸ்' ஒலியும், 'கிரீக்' ஒலியும் இணைந்து, 'ஹிஸ் - கிரீக்'- அதிர்வொலியாகத் (Whispery creaky voice) தோன்றும்.

அன்றி, 'ஹிஸ்'- ஒலியோடு, 'கிரீக்' ஒலி இணைந்து, 'ஹிஸ்- கிரீக்' ஒலியாக (Whispery creak), 'ஹிஸ்'- ஒலியோடு உரப்பொலி இணைந்து, 'ஹிஸ்'- உரப்பொலியாக (Whispery falsetto), இவை மூன்றும் இணைந்து, 'ஹிஸ்-கிரீக்' -உரப்பொலியாகத் (Whispery creaky falsetto) தோன்றலுமாம். கிரீக்-ஒலி, உரப்பொலி இணைந்து, கிரீக் உரப்பொலியாகும் (Creaky falsetto). பிற, இயல்பான அதிர்வொலி (Normal or modal voicing).

மூக்குவழி அடைத்திருக்க, வாயில் ஓரிடத்தில் தடையிருக்கக், குரல்வளை, அடைப்போடு விரைவாக மேலெழ, இதனால்

வாயடைப்புத் திறந்து காற்று வெளிப்படத் தோன்றுவது, புறம் உந்தொலி (Ejectives). வாய்த் தடை நிறை தடையாகவிருந்து, வெடிப் பொலியாகத் திறப்பத் தோன்றுவது, புறம் உந்து வெடிப்பொலி (Ejective stop). குறை தடையாகவிருந்து வெளிப்படுவது, புறம் உந்து உரசொலி (Ejective fricative). நிறை தடையாகவிருந்து, வெடிப் பொலியாகத் தொடங்கி, உரசொலியாக முடிவது, புறம் உந்து வெடிப்புரசொலி (Ejective affricate).

மூக்குவழி அடைப்போடு, வாயில் ஒரு தடையிருக்கக், குரல்வளை (Larynx) அடைப்போடு கீழ், ஈர்ப்படையக், குரல்வளைக்கும், வாயடைப்பிற்கும் இடைப்பட்ட காற்று, அழுத்தம் குறைந்து நெகிழ்வடைய, இப்போது வாய்த் தடை நீங்க, வெளிக் காற்று, குரல்வளையை நோக்கி உட்புகுவது, உள்வாங்கொலி அல்லது உள்ளீர்ப்பொலி (Implosives). இவை, அதிர்வில் உள்ளீர்ப்பொலி (Voiceless implosives). மெக்சிகோவிலுள்ள டோஜோலாபால் மொழியில் (Tojolabal, in Mexico), நடு அமெரிக்காவின் குச்சியன் மொழியில் (Quichean, in central America) இவை பயன்படுத்தப் படுகின்றன - (Pike, E., 1963: 104,107, cited by Laver, John, 1994: 173).

இத்தகைய ஒலியாகிய குரல்வளை உள்ளீர்ப்போடு அல்லது அகஞ்செல்வளியோடு (Ingressive air), நுரையீரலிலிருந்து வெளிப் படும் புறஞ்செல்வளியால் (Pulmonic egressive air) குரல்வளையில் அதிர்வு ஏற்படத் தோன்றுவது, அதிர்வுடை உள்ளீர்ப்பொலி (Voiced implosive).

நா அல்லது வாய் அல்லது மெல்லண்ணம் தொடங்கிய முற்பகுதி களின் முயற்சிக் காற்றின் போக்கால் (Lingual or oral or velaric air stream mechanism) தோன்றும் ஒலிகளுள், ஒரு வகையாகிய அகஞ்செல் வளியால் (Ingressive air) தோன்றுவது, 'கிளிக்'- ஒலி (Clicks). இவ்வொலி இரட்டை முயற்சி (Double articulations) உடையது. இரண்டனவற்றுள் ஒன்று, எப்போதும் பின் நா மெல்லண்ணத்தில் செறிய, நிறை தடை செய்வது. மற்றையது, அதன் முன் பகுதியில், வாயில், முன், விளிம்பு அல்லது நுனி நாவால், இதழால் நிறை தடையாவது. இந்நிகழ்வில், பின் நா, வாயின் பின் முகட்டைத் தடவிக் கொண்டே பின் புறமாகவும், கீழ் நோக்கியும் உள் வாங்கத், தொடர்ந்து, முன்நாவும் கீழ்ப்படிய, இந்நிலையில் இரண்டு தடையின் இடைப்பட்ட காற்று நெகிழ்வடைய, இப்போது முன்தடை திறப்படைய, வெளிக் காற்று உட்புகத் (Ingressive) தோன்றுவது 'கிளிக் ஒலி' (Clicks). இது அதிர்வில்லது (Voiceless click).

இத்தகைய முயற்சியோடு நுரையீரல் காற்று (Pulmonic air stream) புறஞ்செல் போக்கில் (Egressive direction) மேலெழுந்து, குரல்வளை ஒலித்தசையில் அதிர்வை ஆக்கின், இவ்வாறான கூட்டு முயற்சியில் தோன்றும் ஒலி, அதிர்வுடைக் 'கிளிக்' ஒலியாகும் (Voiced click).

குறிப்பிடப்பட்ட இருவகையான அதிர்வில், அதிர்வுடை முயற்சியிடையே மூக்கு வழியைத் திறப்படைய வைப்பின், முறையே, அதிர்வில் மூக்கினக் 'கிளிக்' (Voiceless nasal click), அதிர்வுடை மூக்கினக் 'கிளிக்' (Voiced nasal click) ஒலிகளாகும்.

இவை அதிர்வில், அதிர்வுடை என வகைபெற்று, வாய்வழி, மூக்குவழி எனவாகி, இதழினம், பல்லினம், பல்முகட்டினம் (முன், பின்) வளை நாவினம், பல் முகடு-அண்ணவினம், அண்ணவினம் முதலியனவாகத் துணை வகை பெற்று வரும் (Voiceless/voiced, oral/nasal-labial, dental, alveolar, (pre & post), retroflex, alveo-palatal, palatal etc).

குறிப்பிடப்பட்ட ஒலி அல்லது ஒலியுறுப்புக் கூறுகள், எல்லா மொழிகளிலும் காண்பனவல்ல. ஒருசில, ஒருசில மொழி வழக்கின. இவற்றுள் ஒருசில, ஓரொலி அல்லது ஓரொலிப்புக் கூறளவிலும், ஒரு சில, ஒலி அல்லது ஒலிப்புக் கூறு பல இணைந்த சொல் அல்லது கிளவி முழுமையிலும் காண்பனவாகும். சில, மொழியியற் கூறாகும் (Linguistic). சில மொழியியற்சாயல் கூறாகும் (Paralinguistic). சில நடைமுறையில் மொழி வழக்கின. சில, உடற் கூறளவில் ஒலிக்க இயல்வன அல்லது விதியளவில் குறிப்பிடப்படுவன.

3.2.2. இரட்டை ஒலிப்புக்கள் (முயற்சிகள்) (Double articulations)

ஓர் ஒலி அல்லது ஒலிப்புக் கூறு (Phonetic segment) ஓரிட, ஒரு முயற்சியுடையதாகவிருப்பதே ஒலிப்பியல்பு. சில மொழிகளில், சில ஒலிக்கூறுகள், பல இடம், பல முயற்சி இணைந்து உருவாவதுமாம். இவை, பெரிதும் ஈரிடம், இரு முயற்சியுடையதாகவிருப்பதியல்பு. இத்தகைய இணை ஒலிப்பு முயற்சி இரு வகைப்படும். (1) இணை முயற்சி இரண்டும் சம முயற்சியுடையன (Even articulation). (2) இரண்டில் ஒன்று முதன்மையும் (Primary), மற்றையது துணைமையும் (Secondary) ஆகிய முயற்சிகளையுடையன. இத்தகையன, நிறை தடையொலிகளாக (Stops), குறைதடையொலிகளாக (Fricatives), தடையில்லொலிகளாகச் (Vocoids), சில மொழிகளில் காணப் படுகின்றன.

இரட்டை நிறை தடையொலிகளை (Double stops) மேற்காப்பிரிக்க மொழிகளிலும், காக்கேசிய மொழிகளிலும், இரட்டைக் குறை தடையொலிகளை (Double fricatives) சுவீடிஷ் மொழியிலும், தென் கிழக்கு நைஜீரிய மொழியிலும், இரட்டைத் தடையில் ஒலிகளைச் (Double vocoids) சீன மொழியிலும், சுவீடிஷ் மொழியிலும் காணலாகும்.

துணைமைச் சாயல் (Secondary articulations) பெறும் ஒலிகளுள், இதழ்ச் சாயல் (இதழ் குவிவு) (Labialisation) பெறுவனவற்றை உலக மொழிகள் பலவற்றிலும், வடமேற்குக் காக்கேசிய மொழி, லுகாண்டா முதலிய மொழிகளிலும், இதழ் பல் சாயல் (கீழிதழ், மேற்பல்லை அணுகுதல்) பெறுவனவற்றை (Labio dentalisation) வடமேற்குக்

காக்கேசிய மொழிகளிலும், அண்ணச்சாயல் (Palatalisation) (நடுநா, அண்ணத்தை அணுகுதல்) பெறுவனவற்றை ருசியா முதலிய சிலேவிக் மொழிகளிலும், வடமேற்குக் காக்கேசிய மொழிகளிலும், மெல் லண்ணச்சாயல் (கடை நா, மெல்லண்ணத்தை அணுகுதல்) பெறுவன வற்றை (Velarisation) ருசிய மொழியிலும், ஆஸ்திரோனேஷியன் மொழிகளிலும், தொண்டை அல்லது மிடற்றுச் சாயல்(வேர் நா மிடற்றுள் பின்புறத்தை அணுகுதல்) பெறுவனவற்றை (Pharyngealisation) அரபு மொழிகளிலும், வட ஆப்பிரிக்கப் பெர்பர் மொழிகளிலும், குரல்வளைச் சாயல் (மேல் குரல்வளையொலியாகிய முதன்மை ஒலியோடு, குரல்வளைக் குழியின் தடையால் தோன்றும் துணைமை ஒலியும் சேர்ந்து, 'கிரீக்' ஒலியோடு தோன்றுதல்) பெறுவனவற்றை (Laryngealisation) டேனிஷ் மொழியிலும், பர்மாவிலுள்ள 'ப்வேகரென்' மொழியிலும் காணலாகும். இவை துணையொலியாக, முதல் ஒலி மற்றொன்றோடு இணைந்து செயல்படும்.

3.2.3. இடமும், முயற்சியும் (Place and articulations)

நுரையீரல், குரல்வளை, மெல்லண்ணச் சிறப்பு முயற்சி ஒலிகள் தவிர, இயல்பாக, நுரையீரலிலிருந்து புறஞ்செல்வளி (Pulmonic egressive air), குரல்வளை வழியாக ஒலிபெற்று (Phonation) மேற் சென்று, வாயிடத்திலிருந்து புறஞ்செல்வளியாகப் (Oral or velaric egressive air), பெரிதும் நாவாகிய இயங்கும் ஒலிப்புறுப்பு (Active articulator), மேல் வாயாகிய இயங்கா ஒலிப்புறுப்போடு (Passive articulator) இணைந்து செயல்பட, உருவாகும் ஒலிப்புக் கூறுகளே (Phonetic segments) உலக மொழிகளின் இயல்பான, பெரும்பான்மை ஒலிகளாகும்.

தொடக்கம் (Initiation) புறஞ்செல்வளியாகக், குரல்வளையில் (Phonation) அதிர்வில்/அதிர்வுடைய ஒலியாக (Voiceless/voiced - normal or modal voicing), வாயிடத்தின் முயற்சியாக (Velaric articulation), முயற்சியிடம் (Place of articulation), தடையளவு (Degree of stricture), முயற்சித் தோற்றம் (Aspect of articulation) எனும் மூவகை அடிப்படையில், குறிப்பிடப்பட்ட ஒலிகள் தோன்றும்.

இதழ் (Lips), பல் (Teeth), பல்முகடு (Alveolar ridge), அண்ணம் (Palate), மெல்லண்ணம் (Velum), உள் நாக்கு (Uvula), மிடறு (Pharynx), குரல்வளை மூடி (Epiglottis), குரல்வளை (Glottis/larynx) என்பன முயற்சியிடம். இவ்விடவகையில் ஒலிப்புக்கள் பெயர் பெறும்.

ஒலியின் இடைநிலை அல்லது தொடர்நிலை ஒலிப்புத் தோற்றத்தில் (Medial Phase) நிறை தடை (Stop), உரசொலியோடு கூடிய குறைதடை (Fricative), நிறையொலியோடு கூடிய, எவ்வகைத் தடையுமில்லாத நிறை திறப்பு (Resonant) ஆகிய மூவகைத் தடையளவு அடிப்படையில் ஒலிப்புக்கள் பெயர் பெறும்.


முயற்சித் தோற்றம் (Aspects of articulation) மூவகைப்படும்:

(1) காற்றின் வடிவம் (Conformational)
இது வாய்வழி/மூக்குவழி, (Oral/nasal), நடுவழி/பக்கவழி (Central/lateral) எனும் வகை பெறும்.

(2) இடவிளக்கம் (Topographical)
இது (நாக்கின்) குவிவு/குழிவு (Convex/concave) எனும் நிலையில் குழல்வடிவு (Grooved), (மேல்) வளைவு (Retroflex), ஆழ்குழிவு (Cupped), நுனிநா நீட்சி, (Extended tongue-tip), வேர்நாப் பின்னீர்ப்பு (Withdrawn tongue-root), வேர்நா முன்னீட்சி (Advanced tongue-root) எனும் வகை பெறும்.

3. இடப் பெயர்ச்சி (Transitional)
இது, (ஒலியின்) நிலை (Steady), மாற்றம் (Dynamic) எனும் நிலையில்- வருடல் (Flapped), ஒற்றல் (Tapped), உருட்டல் (Trilled), இரு

Place of articulations
(for segments representing consonants)



Modifiers - pre - post
-(Laver, John, 1994 : 139)

கூட்டுயிர் (Diphthongal), முக்கூட்டுயிர் (Triphthongal) எனும் வகை பெறும். இன்னோரன்ன வகையில் பெயர் பெறும்.

ஒலிகளை, இடப் பெயர்ச்சியில் முயற்சியுடையன (Place - neutral articulations), இடப் பெயர்ச்சி முயற்சியுடையன (Displaced articulations) என இருவகை செய்யலாகும். இயங்கும் ஒலிப்புறுப்பாகிய நாவின் நுனி, இயங்கா ஒலிப்புறுப்பாகிய மேல் வாயில், பல்லின் நேர் கீழ், நாவிளிம்பு அல்லது முன் நா, பல் முகட்டின் கீழ், இடை நா, அண்ணத்தின் கீழ்க், கடை நா, மெல்லண்ணத்தின் கீழ்க் கிடக்கின்றன. இவை போன்று, கீழிதழ், மேலிதழின் நேர் கீழ்க் கிடக்கின்றது. இந்நிலையில், நேர் மேல், கீழ் இயைபில் பிறப்பன, இடப்பெயர்ச்சி இல்லன. நாவின் பகுதிகள், இதழ் முதலியன தம் நேர் மேலிடத்திலிருந்து, பெயர்ந்த நிலையில், வேறிடத்து இயையப் பிறப்பன, இடப் பெயர்ச்சியுடையன. இவ்வாற்றால், நுனி நாப் பல்லொலி (Apico dental), நா விளிம்பு அல்லது முன் நாப் பல் முகட்டொலி (Lamino-alveolar), இடை நா அண்ணவொலி (Centro-palatal), கடை நா மெல் லண்ணவொலி (Dorso-velar), ஈரிதழொலி (Bilabial) முதலியன இடப் பெயர்ச்சியில்லொலிகள் (Place-neutral sounds). மாறாக, இதழ்-பல்லொலி (Labiodental), நுனி நாப் பல்லிடையொலி (Apico-inter-dental), நுனி நாப் பல் முகட்டொலி (Apico-alveolar), வளை நாவொலி (Retroflex) முதலியன கீழிதழும், நுனி நாவும், முறையே வளைந்து மேற்பல்லுக்கும், நீண்டு பல்லிடைக்கும், பின்னெழுந்து பல் முகட்டிற்கும், வளைந்து அண்ணத்திற்கும் செல்லுதலால் இடப் பெயர்ச்சியொலிகள் (Displaced sounds) எனப்படும்.

3.2.4. வெடிப்பொலிகள் (Stops)

ஒலிப்பின் இடை அல்லது தொடர் நிலைத் தோற்றம் (Medial phase), வாய்நிறை தடையுடையன. இவை தனியொலிகள் (Simple).

3.2.4.1. இடப்பெயர்ச்சியில் வெடிப்பொலிகள் (Place neutral stops)

1. வாயொலி (வாய்வழிவளியன) (Oral)

		அதிர்வில்லன- (Voiceless)		அதிர்வுள்ளன. (Voiced)
இதழொலி (Labial)	-	[ப்/p]	-	[b]
பல்லொலி (Dental)	-	[த்/t̪]	-	[d̪]
பல்முகட்டொலி (Alveolar)	-	[ற்/t]	-	[d]
அண்ணவொலி (Palatal)	-	[ச்/c]	-	[j]
மெல்லண்ணவொலி (Velar)	-	[க்/k]	-	[g]
உள்நாக்கொலி (Uvular)	-	[q]	-	[G]
குரல்வளை மூடியொலி (Epiglottal)	-	-	-	[ʡ]
குரல்வளையொலி (Glottal)	-	[?]	-	-

(2) மூக்கொலி (மூக்கு வழிவளியன) (Nasal) - ஒலிப்பின் இடை அல்லது

தொடர் நிலைத் தோற்றம் (Medial phase) மூக்கொலி (மூக்குவளி) யுடையன.

		அதிர்வுடையன (Voiced)
இதழொலி (Labial)	-	[ம்/m]
பல்லொலி (Dental)	-	[ந்/n̪]
பல்முகட்டொலி (Aleveolar)	-	[ன்/n] - நாவிளிம்பு
அண்ணவொலி (Palatal)	-	[ஞ்/ɲ]
மெல்லண்ணவொலி (Velar)	-	[ங்/ŋ]
உள்நாக்கொலி (Uvular)	-	[N]

இவை மூக்குவெடிப்பொலிகள்

பெரிதும் உலக மொழிகளுள் மூக்கொலிகள் அதிர்வுடையனவே. ரோடொகாஸ் (Rotokas-Indo-Pacific language), குயிலூட் (Quileute), புகெத் சவுண்ட் (Puget sound) (Pacific NW. Amerindian languages), மூரா (Mura, S.Amerindian language) முதலிய ஒரு சில மூக்கொலியில்லன (Maddieson,1984: 61 - cited by Laver, John, 1994: 211). ஆத்திரேலியன் மொழியாகிய யனியுவா (Yanyuwa) ஏழு மூக்கொலிகளையுடையது.

3.2.4.2. இடப்பெயர்ச்சி வெடிப்பொலிகள் (Displaced stops)

1. நுனிநா-இதழொலி (Linguo-labial) - [t̲] - vl. oral
[m̲] - vd- nasal.
- (in V'enen Taut, Chaga, Pisaha languages).

2. இதழ்-பல்லொலி (Labio-dental) - (ɱ) -vd. nasal (in Teke)

3. நுனிநாப்பல் முகட்டொலி [ற்] - அதிர்வில் வாயொலி (Apico-alveolar). [ன்] - அதிர்வுடை மூக்கொலி.

4. வளைநாவொலி (Retroflex Palato-alveolar) -
[ட்/ʈ] அதிர்வில் வாயொலி (vl. oral). [ɖ] - vd oral.
(ண்/ɳ) அதிர்வுடை மூக்கொலி - (vd.nasal)

இதனைத் திராவிட, மூண்டா, திபெத்தோ-பர்மன், இரேனியன், இந்தோ-ஆரியன், வீயட்நாம், ஜாவா, ஆத்திரேலிய மொழிகளில் காணலாகும்.

3.2.4.3. 'ரகர' வெடிப்பொலிகள் (Rhotic stops):ஒற்றொலி (Tapped), வருடொலி (Flapped), உருட்டொலி (Trilled or rolled stops)

1. உயிரிடை 'ற்' ஒலி- உருட்டொலி (Trilled stop) - விரைந்து மாறி மாறித் தொடுவதால் தோன்றுவது. பல் முகட்டில், உள் நாக்கில், இதழில் தோன்றுவது மரபு. பல் முகட்டில் நாவிளிம்பு/நா நுனி விரைய மாறி மாறித் தொடுவது. நா நுனி தொடுவதே பெரும்பான்மை. இது, இடப்பெயர்ச்சி ஒலி. அதிர்வுடையது. தமிழ், மலையாளம் முதலிய மொழிகளில் காணலாகும்.

([r] - vd. alveolar trill (In Spanish, Italian, Sudanese).

உள்நாக்கு உருட்டொலி (Uvular trill [R] - vd. in Italian,Swedish).

இதழ் உருட்டொலியை (Labial trill [B]) மெசோ அமெரிக்கன் அமெரிந்திய மொழிகளில், பாப்புவா, நியூகினி மொழிகளில் காணலாகும்.

மூக்குவளி உருட்டொலி (Nasal trill) நைஜீரியாவிலுள்ள இக்போ (Igbo), சண்டே (Zande of Zaire and central Africa) மொழிகளில் காணப்படுகின்றது.

2. வருடொலி (Flapped stop) [ṙ/r] - அதிர்வுடையது. நுனிநாப் பல்முகட்டின் பின்புறம் விரைந்து ஒரு முறை தடவப்பிறப்பது, இடப் பெயர்ச்சி ஒலி (Voiced retroflex alveolar flapped stop). திராவிட, இந்தோ ஆரிய மொழிகளில், ஆத்திரேலிய மொழிகளில், அமெரிந்திய, ஆப்பிரிக்க மொழிகளில் இதனைக் காணலாகும்.

இதழ்வருடொலியாகிய (Flapped labial stop)- கீழிதழ்- மேற்பல் இயைபில் பிறப்பதனை க்பையா (Gbaya), ஷோனா (Shona), மார்கி (Margi) ஆகிய ஆப்பிரிக்க மொழிகளில் காணலாகும்.

3. ஒற்றொலி (Tapped stop) - [ற்ற] - ஒலி ([ɾ] - vd. alveolar tapped stop) - அதிர்வுடையது. நாநுனி பல் முகட்டில் விரைந்து ஒற்றி மாறப் பிறப்பது. இடப்பெயர்ச்சியுடையது.

யொரூபா (Yoruba), பெனின் (Benin), குர்டிஷ் (Kurdish). ஸ்பானிஷ் (Spanish), போர்ச்சுக்கீஸ் (Portuguese) முதலிய மொழிகளில் இதனைக் காணலாகும்.

3.2.4.4. கூட்டு வெடிப்பொலிகள் (Complex stops)

ஒலிப்பின், இடை அல்லது தொடர்நிலைத் தோற்றத்தில் (Medial phase) ஓரொலிப்பே இருக்க அது தனிநிலை அல்லது ஒரு நிலை (Simple) ஒலிப்பு. மாறாக, இடைநிலைத் தோற்றத்தில், இரண்டு ஒலிப்புக் கூறுகள் இணைந்து ஒலிக்குமாயின், அது, கூட்டு நிலை (Complex) ஒலிப்பாகும்.


[^{m}b] - pre-nasal oral stop - முன் மூக்கொலியினும், வாய் (பின்) வெடிப்பொலி மிகுதி.

[b^{m}] - post - nasal oral stop - பின் மூக்கொலியினும், வாய் (முன்) வெடிப் பொலி மிகுதி.

[^{b}m] - pre - occluded nasal stop - முன் தடையினும் பின் மூக்கொலி மிகுதி.

(m^{b}) - Post -occluded nasal stop - பின் தடையினும் முன் மூக்கொலி மிகுதி.

முன் மூக்கொலி வெடிப்பொலிகள் (Pre-nasal stops) 'கிகுயு' (Kikuyu, E.Africa), சிங்களம் (Sinhalese- Sri Lanka) மொழிகளில்



ஒலிப்பின் இடைநிலைத் தோற்றம் (Medial phase)
Based on citation - Laver, John, 1994: 228

காணப்படுகின்றன இதனோடு, முன் மூக்கொலி வெடிப்புரசொலிகள் (Pre-nasal affricates) *'திவ்'* (Tiv-N.Nigeria), *'பூலா'* (Fula-W.Africa) *மொழிகளில் காணப்படுகின்றன. பின் மூக்கொலி வெடிப்பொலிகள்* (Post nasal stops $(b^m, d^n, g^ŋ)$ *கேங்காங், 'இகூஅ துபி'* (Kaingang, icu-a Tupi- S.American languages) *மொழிகளில் காணப்படுகின்றன.*

முன் அடைப்பு (தடை) மூக்கொலிகள் (Pre-occluded nasal stops), *பின்னடைப்பு (தடை) மூக்கொலிகள்* (Post-occluded nasal stops) *தென்னமெரிக்க மொழிகளில், ஆத்திரேலிய மொழிகளில், அமெரிந்திய மொழிகளில் காணப்படுகின்றன*

'கேங்காங்' மொழியில் முக்கூட்டொலி (Triple complexity)*யாகிய நடு முக்கொலிச்சாயல் வெடிப்பொலிகள்* (Medio-nasalised stops - [bmb, dnd, etc]) *காணப்படுகின்றன.*

'பிஜியன்' மொழியில் (Fijian) *முன் மூக்கொலி பின் உருட்டு வெடிப்பொலி* (Pre-nasal Post-trilled stop - [n̲ d̲ r] *காணப்படுகின்றது பாப்புவா நியூகினியாவிலுள்ள 'கெலே'* (Kele), *'தித்தன்'* (Titan) *மொழிகளில் முன் மூக்கொலி பல் முகட்டு உருட்டொலி* (^{n}r) Pre-nasal alveolar trill), *முன் மூக்கொலி இதழ் உருட்டொலி* ([^{m}B] Pre-nasal labial trill) *உள்ளன.*

3.2.4.5. மெல்லண்ணத்தின் கீழ் வெடிப்பொலிகள் (Sub-velaric stops)

'கிரீக்' ஒலியோடு, வெடிப்பொலி (Stops with creaky voice), *'மார்க்கி'* (Margi -N.Nigeria) *மொழியில், 'ஹிஸ்' ஒலியோடு கூடிய மூக்கொலி* (Whispery nasal stop), *'ண்டெபெலெ' மொழியில்* (Ndebele - Benue

Congo), 'ட்சொங்கா' (Tsonga - S.Africa) மொழியில், காணப் படுகின்றன.

புறமுந்தொலி (Ejective stops), 'ஸ்காகிட்' மொழியில் (Skagit-W.Washington), 'காலிஸ்பெல்' (Kalispel - N.W.Washington) மொழியில், அதிர்வுடை உள்ளீர்ப்பு வெடிப்பொலி (Voiced implossive stops), 'பூலா' (Fula), 'கலபாரி' (Kalabari) மொழிகளில், 'கிளிக்' (Click) ஒலி, 'சோசா' மொழியில் (Xhosa, a Bantu language) காணப் படுகின்றன.

இவை அசையோரங்களில் (Syllable margines) காணப்படுவன. ஆயின், 'பெல்ல கூலா' மொழியில் (Bella Coola, Pacific N.W. Indian language) சில அசைகள், ஒரு மெய்யுடையனவாக, அசையழுத்தம் (Syllabic stress) பெற்று வருகின்றன -(Hoard, 1978: 67- cited by Laver, John, 1994: 239). மூக்கொலிகள் அசையழுத்தம் பெறுவதை, ஆங்கிலத்தில், 'குயோதெபெக் சினந்தெக்' (Quiotepec Chinantec-Mexico) மொழியில் காணலாகும். உருட்டொலியும் (Trilled stop) 'வெனாட் சீ கொலம்பியா' (Wenatchee Columbia - Washington) மொழியில், சில போது அசையழுத்தம் பெறுகின்றது.

3.2.5. உரசொலி (Fricatives)

இயங்கும் உறுப்பாகிய நா (Active articulator) இயங்கா உறுப்பாகிய (Passive articulator) மேல் வாயைச் சிறிது இடைவெளி தோன்ற அணுகுவது. குறைதடையது. உரசொலியோடு காற்று வெளிச்செல்வது. இடைத்தோற்றம் (Medial phase) தொடர் ஒலியது (Continuant). அதிர்வுடையதும், இல்லதுமாகும். குழல்வடிவ (Grooved - hissing/hushing) ஸ்/ஷ் ஒலி (Sibilant/Shibilant) அல்லது, சிறிது குறுக்கிடை வெளியுடைய (Flat/slit), 'ஸ' ஒலியல்லது (Non-sibilant) எனும் வகையுடையது. ஒழுங்கற்ற கொந்தளிப்பொலியது (Strident or turbulent). இன்னா ஒலியது (Noisy). நடுவழியதும் (Central), பக்கவழி யுடையதுமாம் (Lateral).

3.2.5.1 இடப்பெயர்ச்சியில் உரசொலிகள் (Place-neutral fricatives)

		அதிர்வில்லது	அதிர்வுடையது
இதழொலி (Labial)	-	[ɸ]	[β]
பல்லொலி (Dental)	-	[θ]	[ð]
பல்முகட்டொலி (Aleveolar)	-	[s]	[z]
அண்ண-பல்முகட்டொலி (Palato-alveolar)	-	[ʃ]	[ʒ]
பல்முகடு-அண்ணவொலி (Alveo-palatal)	-	[ɕ]	[ʑ]
அண்ணவொலி (Palatal)	-	[ç]	[j]
மெல்லண்ணவொலி (Velar)	-	[x]	[ɣ]
உள்நாக்கொலி (Uvular)	-	[X]	[ʁ]
மிடற்றொலி (Pharyngeal)	-	[ħ]	[ʕ]
குரல்வளை மூடியொலி (Epiglottal)	-	[H]	[ʢ]

[h], [ɦ]- குரல்வளை உரசொலியுமாம் (Glottal fricatives).

உலக மொழிகள் பெரும்பான்மையும் உரசொலியுடையன 'ஹவாய்' மொழி (Hawaiian), ஆத்திரேலியாவில் சில மொழிகள் உரசொலியில்லன.

இதழ்கள் திறந்திருக்க, நா தன்னிலையில் கிடக்க, மேல், கீழ்ப் பற்கள் இயையத் தோன்றும் இருபல் உரசொலியை (Bidental fricative) 'அடிகே' (Adyghe - N.W.Caucasian) மொழியில் காணலாகும்.

3.2.5.2. இடப்பெயர்ச்சி உரசொலிகள் (Displaced fricatives)

1. அதிர்வுடை, வாய்வழி, நாவிதழ் உரசொலி, (vd. Oral linguo- labial frictive [Z̼]), நா நுனி/விளிம்பு நீண்டு, மேலிதழை அணுகத் தோன்றுவது. இவ்வொலியை, வீனென் தாத் (Vienen Taut-Austronesian language) மொழியில் காணலாகும்.
2. இதழ் பல் உரசொலி (Labio dental fricative [f,v]), கீழிதழ், மேற்பல்லை அணுகத் தோன்றுவது. இதனை, ஆங்கிலம், போர்ச்சுச்கீசு மொழிகளில் காணலாகும்.
3. பல்லிடை உரசொலி (Interdental fricative [θ,ð]), இருபல் வரிசை யிடை, நா நுனி நீண்டு இடைவெளி தோன்ற அணுகுவது. கலிபோர்னியா ஆங்கில ஒலிப்பில் காண்பது.
4. பல், பல்-பல்முகடு உரசொலி (Dental fricative/denti alveolar fricative [s̪, z̪ / s̪, z̪]), முறையே பல், பல் - பல்முகட்டிடை, நா குழல் வடிவாகி அணுகப் பிறப்பன. இவற்றை, முறையே அமெரிந்திய மொழி களிலும், போர்ச்சுகீசு மொழியிலும் காணலாகும்.
5. பின் பல்முகட்டு உரசொலி (Post alveolar fricative-vl. [ɹ̝̊], vd. [ɹ̝]) நா நுனி சிறிது பின் வாங்கிப் பின் பல்முகட்டை உட்குழிந்து அணுகப் பிறப்பது. இதனை ஆங்கில மொழி ஒலிப்பில் காணலாகும்.
6. தட்டைப், பின் பல்முகட்டு உரசொலி (Flat Post-alveolar fricative-(ʃ+,ʒ+). நா விளிம்பு, தட்டை வடிவில், பின் வாங்கிப் பல் முகட்டின் பின் அணுகப் பிறப்பது. அதிர்வில்லதும், அதிர்வுள்ளதும் ஆகிய இதனைச் சீன மொழியில் காணலாகும்.
7. வளை நா உரசொலி (Retroflex fricative [ʂ, ʐ]), நா நுனி வளைந்து, பின்னெழுந்து அண்ண முகட்டை அணுகப் பிறப்பது. இதன் கண் ஓர் ஊதத்தொலியும் காணும். அதிர்வுடையதும், அதிர்வில்லதும் என இருவகையுண்டு.

ஊத்துரசொலி (Whistled fricative) முன்னையதிலிருந்து சிறிது வேறுபட்டது. இரட்டையொலி (Double labial alveolar fricative), நா விளிம்பு, பல் முகட்டை அணுகுதலோடு, ஈரிழிதழும் குவிய, ஊத்தொலியோடு பிறப்பது. 'ஷோனா' (Shona, the zimbabwean language) மொழியில் இதனைக் காணலாகும்.

3.2.5.3. மூக்குரசொலிகள் (Nasal fricatives)

'இக்போ' மொழியில் (Igbo-E.Nigeria) அசை முழுமையும் மூக்கொலி காணலாகும். இச்சூழலில் [f,v,s,z,ʃ,ʒ] எனும் இன்னோரன்ன ஒலிகள் அசையில் வரும்போது மூக்குரசொலி யாகும். 'வாபா' (Waffa - E.New Guinea) மொழியிலும் இதனைக் காணலாகும்.

3.2.5.4. கூட்டுரசொலிகள் (Complex fricatives)

முன்மூக்கொலி உரசொலி (Pre-nasal fricative- [n_z,n_3,n_v]) 'டெரீனா' (Terena-Brazil) மொழியிலும், 'சண்டே' (Zande-C.Africa) மொழியிலும் காணப்படுகின்றது.

3.2.5.5. நடு, பக்க உரசொலிகள் (Central and lateral fricatives)

நடு உரசொலி (Central fricative) பெரும்பான்மை. பக்க உரசொலி (Lateral fricative [ɬ]- vl, [1_3] - vd.) 'சூலு' மொழியிலும் (Zulu-S.Africa), மேற்காப்பிரிக்க மொழிகளிலும் காணப்படுகின்றது. சிறுபான்மை வழக்குடையது.

3.2.5.6. குழல், தட்டை வடிவ உரசொலிகள் (Grooved and slit or flat fricatives)

- [s,z,ʃ,ʒ] - குழல் வடிவ உரசொலிகள்.
- [f,v,θ,ð] - தட்டை வடிவ உரசொலிகள்.

ஆங்கிலம் முதலாகிய பல மொழிகளில் காணப்படுகின்றன. தமிழில் [வ்] - தட்டை உரசொலியுள்ளது.

3.2.5.7. 'ரகர' உரசொலிகள் (Rhotic fricatives)

வருடுரசொலி (Flapped fricative), ஒற்றுரசொலி (Tapped fricative), உருட்டுரசொலி (Rolled fricative) மூன்றிலும், இம்மூவகை வெடிப்பொலிகளிற் போல் இயங்கும், இயங்கா உறுப்புக்கள் இடைவெளியில்லாது செறியாது, சிறிது இடைவெளி தோன்ற அணுகித் தம் முயற்சி முறையில் ஒலிக்கும். இவற்றை 'எட்சாகோ' (Etsako-Nigeria), 'செக்', 'பிரெஞ்சு' மொழிகளில் காணலாகும்.

3.2.5.8. அசையழுத்த உரசொலி (Syllabic fricative)


'பெல்லகூலா' (Bella Coola), 'வெனாட்சீ கொலம்பியா' (Wenatchee-Columbia), 'குயிலுாட்' (Guileute), 'புகெத் சாலிஷ்' (Puget Salish) மொழிகளில், உரசொலி அசையழுத்தம் (Syllabic stress) பெறுவதுமாம். இயல்பாக அவை அசையோர ஒலிகளே (Syllable marginals).

3.2.5.9. புறமுந்துரசொலிகள் (Ejective fricatives)


'அம்ஹாரிக்' (Amharic-Ethiopia) மொழியில் புறமுந்துரசொலி (Ejective fricative) உளது.

3.2.6. தடையில்லொலிகள் (Resonants)

உலக மொழிகளில், நிறை தடை, குறை தடை ஒலிகள் தவிரத், தடையில் ஒலிகள் ஒரு பகுதியன. தடையில் ஒலிகள் எனப்படினும் குறிப்பிடத்தக்க தடையில் ஒலிகள் என்பதே அதன் பொருள். ஒலிப்பு வழியில், வேர் நா முதல், நுனி நா வரை, இயல்பாகக் கிடப்பு நிலை உடையதாக, நா மேல் வளைந்து அதன் இயல்பில் காணப்படினும், அங்கங்கே சிறிது வளைவு, நெளிவுகள் காணப்படும். உயர்வு, தாழ்வுகள், இயக்கங்கள் காணப்படும். இத்தகைய ஒலிப்பில் நா, இதழ் ஆகிய இரண்டன் பங்கு எடுப்புடையனவாகும். ஆகவே, இவற்றால் இரட்டை முயற்சி (Double articulations) உடையன எனினுமாம். இவை வாய் திறப்புடை ஒலிகள் எனப்படும். பெரிதும் இவை வாய் நடுவழியுடையன (Central resonants), பக்கவழியுடையன (Lateral resonants) எனும் வகை பெறும்.



Aber crombie 1967 : 157,
cited by Laver, John 1994 : 272



Heffiner, R.M.S. - Madison, 1960 : 76

Vocoid space
உயிர் ஒலிப்பிடம்

இவற்றுள், திறப்புடைத், தடையில், வாய் நடுவழியனவாகிய (Central resonants), ஒலிகள் தடையில் (நிறை,குறை) ஒலிகள் (Non-contoids) எனப்படும். இவை, அசையழுத்தமுடைய, வாய் நடுவழித்தடையில் ஒலிகள் (Syllabic vocoids or vocoids or vowels (phonological)), அசையழுத்தமில், வாய்வழித் தடையில் போலிகள் அல்லது உயிர்ச் சாயலின அல்லது உயிர்ப் போலிகள் (Non-syllabic approximants or approximants) என இரு வகைப்படும். இவை, மூக்கொலியனவுமாம். அதிர்வுடையன பெரும்பான்மை. அதிர்வில்லனவுமாய், 'ஹிஸ்' - ஒலி (Whisper sound) பெறுவனவுமாம். அசையழுத்தமுடைய, திறப்புடைத், தடையில், வாய்நடுவழி ஒலிகள் (Vocoids or vowels) யாவும் வாயின் இடை, கடை அண்ணத்தின் இடைப் பகுதியில், அவ்விட நாப் பகுதியிடை ஒரு குறிப்பிட்ட, முட்டை வடிவுடைய நீள் வளைவுக்குள் (Vocoid space) பிறப்பனவேயாம்.

இத்தகைய ஒலிப்பிடம், மொழிக்கும், ஒலிக்கூறு வசதிக்கும் தக்கவாறு, நீள் நாற்கோணம், முக்கோணமாக ஆக்கிக்கொள்ளப்


படுகின்றது. (நீள் நாற்கோணம் (Trapezoid base; right;left; top; 2:3:4:4 measurement).

3.2.6.1. வாய் நடுவழித் தடையில் ஒலிகள் (Vocoids)

அடிப்படை உயிரொலிகள் இருவகையின. அவை, முதன்மை, துணைமையுடையன (Primary and secondary cardinal vowels). இவை, இடம் வலமாக, முன் (Front), இடை (Central), பின் (Back) எனவும், மேல்கீழாக, மூடியல்பு (Close), நடுமூடியல்பு (Close-mid or half-close), நடுத்திறப்பியல்பு (Open-mid or half open), திறப்பியல்பு (Open) எனவும் வகை பெறும். இவை நாவின் முயற்சிகள். வேர்நாவின் முன்னீட்சியும், பின்னீர்ப்பும் உதவும்.

இவற்றோடு இதழ் முயற்சியும் குறிப்பிடத்தக்கது. இதழ் திறப்பின் பக்க, மேல், கீழ் அளவுகளும் துணை நிற்பனவாகும். இதழின் இயல்பு நிலை (Neutral), விரிவு நிலை (Spread), குவிவுநிலை (Rounded) என மூன்று நிலைகள். குவிவில், திறந்த, மூடிய (Open and close) என இரு நிலைகள். மேல்-கீழ், இருபக்கம் ஆகிய இரண்டும் அகற்சி, குறுக்கம் ஆகிய நிலைகளில் இணைந்து, ஆக எட்டு வகையில் செயல்படும். குறிப்பிடப்பட்ட நா, இதழ் முயற்சியின் இடைப்பட்ட நிலைகளிலும் உயிரொலிகள் தோன்றும்.

3.2.6.2. நிலை மாற்ற அல்லது போக்கு மாற்ற உயிரொலிகள் (Transitional Vocoids)



போக்குமாற்ற உயிரொலிப்பு

உயிரொலிப்புக்களில் இடை நிலைத் தோற்றத்தில் (Medial phase) குறிப்பிடத்தக்க மாற்றமில்லாத,ஏறத்தாழ ஒரு நிலையான நா, இதழ் அமைவுகளைக் (Settings) காணின், அத்தகைய ஒலிக்கூறுகள், ஒரு நிலை அல்லது, ஓரொலி உயிர்கள் (Monophthongal vowels) எனப்படும்.

மாறாக, ஒலிப்பின் இடைநிலைத் தோற்றத்தில் (Medial phase) ஒலிப்பு நிலை மாற்றம் அல்லது பெயர்ச்சியைக் காணின் அத்தகைய ஒலிக்கூறுகள் இருநிலை அல்லது ஈரொலி உயிர்கள் (கூட்டுயிர்) (Diphthongal vowels) எனப்படும். இத்தகைய பெயர்ச்சி, மேல் நோக்கிய தாயின் அல்லது மூடுயிர் (Close vowel-relative) இடம் நோக்கியதாயின், அவை, மூடு ஈரொலிகள் (Closing diphthongs) எனப்படும். அன்றிப், பக்கங்களிலிருந்து, நடுவிடம் அல்லது நடுவுயிரிடம் (Centring vowel) நோக்கியதாயின், நடு ஈரொலி உயிர் (Centring diphthongs) எனப்படும். உலக மொழிகளில் [ஐ[ai], ஔ [au]] ஈரொலியுயிர்கள் பெரிதும் காணப்படுகின்றன. அவற்றுள் [ஐ/ai] ஒலி மிகுதி. ஈரொலியுயிர்கள் எளிய நிலைப், பெயர்ச்சியுடையன.

மாறாக, அரியவாகிய, தொடக்கம், இடைநிலை, முடிவு ஆகிய மூன்று நிலைகளையுடைய, இரு நிலைப் பெயர்ச்சி, மூவொலிக் கூறுகளையுடைய, முக்கூட்டுயிர் (Triphthongal vowels)களும் சிலவுள, சில மொழிகளில் (Eng. Flour [flauə], fire [faiə]). பிரசீலியன், போர்ச்சுக்கீசு மொழியில் இம்மூவகை ஒலிகளும் உள.

3.2.6.3. மூக்குயிர்கள் (Nasal vocoids)

ஒலித் தொடரில், உயிரின் முன், பின் மூக்கொலிகளின் சாயலை உயிர் பெறுவது இயல்பு. அன்றித், தனிநிலையில் மூக்குயிர்கள் (Nasal vocoids) ஒரு சில மொழிகளில் உள. இவை, இந்தி, போலிஷ், பிரெஞ்சு, சூச் (Sioux), யுச்சி (Yuchi)-(Both Amerindian languages), யொருபா (Yoruba-W.Africa) மொழிகளிலும், ஓரொலி, ஈரொலி, மூவொலி மூக்குயிர்கள் (Monoph-diph-Triph-thongal nasal vowels) பிரசீலியன் போர்ச்சுக்கீசு மொழியிலும் காணப்படுகின்றன.

3.2.6.4. அதிர்வில் உயிர்கள் (Voiceless vocoids)

உலக மொழிகளில் ஒரு சிலவற்றில் அதிர்வில் உயிர்கள் (Voiceless vocoids) காணப்படுகின்றன. அமெரிந்தியன் மொழியாகிய 'கொமஞ்சே' (Comanche), 'லக்' (Lk-E.Sudanic) , 'டாப்ளா' (Dafla-Sino-Tibetan), 'நியங்குமார்தா' (Nyangumarda-Australian), 'திலிங்கித்' (Tlingit-Alaska), 'எங்கா' (Enga-New Guinea), 'மச்சிகுயெங்கா' (Machiguenga-Peru), 'டோடோனக்' (Totonac-Mexico) மொழிகளில் காணப்படுகின்றன, அவை.

3.2.6.5. 'ஹிஸ்' – உயிரொலிகள் (Whispered vocoids)

'ஹிஸ்'- உயிரொலிகள் (Whispered vocoids) உலகின் ஒரு சில மொழிகளில் அருவழக்காகக் காணப்படுகின்றன. இவற்றை

அமெரிந்திய மொழிகளில் (Amerindian languages), 'சேயென்னே' (Cheyenne-an Algonguian language), ' மலகசி' (Malagasy-an Austronesian language-Madagascar) என்பனவற்றில் காணலாகும். சில சூழ்நிலையில், மாற்றொலியாக, (Allophonic) அதிர்வில், 'ஹிஸ்' - உயிரொலிகளை ஆங்கிலம், பிரெஞ்சு, அராபிக், கிரீக், போர்ச்சுக்கீசு, ரஷியன் மொழிகளில் காணலாகும்.

3.2.6.6. உயிர்ப் போலிகள் அல்லது உயிர்ச்சாயலின (Approximants)

உயிர்ப் போலிகள் (Approximants) உயிரொலிகள் போல், உயிரொலி வளைவுக்குள், நா, இதழ் அமைவில் (Setting), ஒலிப்பில், பிறப்பனவாயினும், உயிரொலி போல் அசையழுத்தம் (Syllabic stress) பெறா. இவை அதிர்வில்லனவும், அதிர்வுள்ளனவுமாம். உயிரொலி போல் ஒலிப்புடையனவாதலினால், தடையொலி அல்லன (Non-contoid) எனப்பட்டன.

[j] - என்பது [i] - உயிர்ப் போலி
[w] - என்பது [u] - உயிர்ப் போலி
[ɰ] - என்பது [ɯ] - உயிர்ப் போலி
[ɥ] - என்பது [y] - உயிர்ப் போலி

[ɹ], [ʋ] என்பனவும் அவையே. தமிழில் (ய்,வ்) சில ஒலிப்பு முறையில் உயிர்ப் போலிகளே. உயிர்ப் போலிகள் யாவும், மெய்யொலிகள் (வெடிப்பொலி, உரசொலி) போல் அசையோரங்களாக (Syllable marginals) வருமேயன்றி, அசையழுத்தங்களாக (Syllabic stress) வாரா. இவற்றை, ஆங்கிலம், பிரெஞ்சு, திகார் (Tikar-Camaroon) சீனம், ஸ்பானிஷ், டேனிஷ், அடிகே (Adyghe - N.W. Caucasus), மார்கி (Margi-W.Africa), இசாகோ (Isoko-Nigeria), ஸ்காட்டிஷ் கேலிக் (Scottish Gaelic) மொழிகளில் காணலாகும்.

3.2.6.6.1 'ஹிஸ்' அல்லது உயிர்ப்பு உயிர்ப் போலிகள் (Whispered or breathed approximants) - [h])

இதனை அதிர்வில்லது என்னலாம். மற்றொன்று 'ஹிஸ்' அதிர்வுடை அல்லது உயிர்ப்பு அதிர்வுடை உயிர்ப்போலி (Whispery voiced or breathy voiced approximant [ɦ]). இவ்விரண்டினையும், ஆங்கில மொழியில், 'இக்போ' (Igbo-Congo) மொழியில் காணலாகும்.

3.2.6.6.2. மூக்குயிர்ப் போலி (Nasal approximant) [(J̃, W̃)]

இவற்றை 'டெரீனா' (Terena-Brazil), 'இக்போ', ஆங்கில மொழிகளில் காணலாகும்.

3:2.6.7. பிரிவளித் தடையில்லொலி (Lateral resonants [ℓ])

பிரிவளியொலிகள் (Laterals) நாவின் ஒரு பக்கம் அல்லது இரு பக்கங்கள் வழியாக வளிச் செலவுடையன. இவை அதிர்வில்லனவும்,

	Place-neutral articulations						Displaced articuations				
	oral stop	nasal stop	oral tap	nasal tap	oral trill	nasal trill	oral stop	nasal stop	oral flap	nasal flap	
labial	p	m̥			ʙ̥	ʙ̥̃					vl
	b	m			ʙ	ʙ̃					vd
linguo-labial							p̼	m̼̊			vl
							b̼	m̼			vd
labio-dental							π̥	ɱ̊			vl
							π	ɱ	v^{b}		vd
dental	t̪	n̪̊									vl
	d̪	n̪									vd
alveolar	t	n̥	ɾ̥	ɾ̥̃	r̥	r̥̃			ɽ̊	ɽ̊̃	vl
	d	n	ɾ	ɾ̃	r	r̃			ɽ	ɽ̃	vd
palato alveolar							ʈ	ɳ̊			vl
							ɖ	ɳ			vd
palatal	c	ɲ̊									vl
	ɟ	ɲ									vd
velar	k	ŋ̊									vl
	g	ŋ									vd
uvular	q	ɴ̥	ʀ̥	ʀ̥̃	ʀ̥	ʀ̥̃					vl
	ɢ	ɴ	ʀ	ʀ̃	ʀ	ʀ̃					vd
epiglottal	ʡ̥										vl
	ʡ										vd
glottal	ʔ										

Single stop segments	**diacritics:** voiceless, m̥, ɾ̥, ɱ̊ nasal, r̃	dental, t̪, n̪ linguolabial, p̼	retroflex ʈ, ɳ, ɽ

Summary of the phonetic symbols for place-neutral and displaced pulmonic egressive simple stop segments.

- (Laver, John, 1994: 242)

	Place-neutral articulations						Displaced articuations				
	oral fric.	nasal fric.	oral fric. tap	nasal fric. tap	oral fric. trill	nasal fric. trill	oral fric.	nasal fric.	oral fric. flap	nasal fric. flap	
labial	ɸ	ɸ̃			ʙ̝̊	ʙ̝̊̃					vl
	β	β̃			ʙ̝	ʙ̝̃					vd
linguo-labial							ɸ̼	ɸ̼̃			vl
							β̼	β̼̃			vd
labio-dental							f	f̃			vl
							v	ṽ			vd
dental	θ	θ̃					s̪	s̪̃			vl
	ð	ð̃					z̪	z̪̃			vd
alveolar	s	s̃	ɾ̝̊	ɾ̝̊̃	r̝̊	r̝̊̃	θ̠ ɹ̝̊	θ̠̃ ɹ̝̊̃	ɽ̝̊	ɽ̝̊̃	vl
	z	z̃	ɾ̝	ɾ̝̃	r̝	r̝̃	ð̠ ɹ̝	ð̠̃ ɹ̝̃	ɽ̝	ɽ̝̃	vd
palato-alveolar	ʃ	ʃ̃					ʂ	ʂ̃			vl
	ʒ	ʒ̃					ʐ	ʐ̃			vd
alveolo-palatal	ɕ	ɕ̃									vl
	ʑ	ʑ̃									vd
palatal	ç	ç̃									vl
	ʝ	ʝ̃									vd
velar	x	x̃									vl
	ɣ	ɣ̃									vd
uvular	χ	χ̃									vl
	ʁ	ʁ̃			ʁ	ʁ̃					vd
pharyn-geal	ħ	ħ̃									vl
	ʕ	ʕ̃									vd
epiglottal	ʜ	ʜ̃									vl
	ʢ	ʢ̃									vd

Single fricative segments	**diacritics:**	voiceless, ɾ̥ nasal, ɾ̃	fricative, ɾ̝, ɹ̝ retroflex, ʂ, ʐ	flat, θ̠ dental, s̪

Summary of the phonetic symbols for place-neutral and displaced pulmonic egressive fricative segments.

- (Laver, John, 1994: 267)

Vocoid symbols

	unrounded			rounded		
	front	central	back	front	central	back
close	i	ɨ	ɯ	y	ʉ	u
	ɪ			ʏ	ʊ	
close-mid	e		ɤ	ø		o
		ə, ɜ			ɵ	
open-mid	ɛ		ʌ	œ		ɔ
	æ	ɐ				
open	a		ɑ	ɶ		ɒ


Approximant symbols

	unrounded				rounded	
	central		lateral		central	
	convex	retroflex	convex	retroflex	convex	
labio-dental	ʋ					
alveolar			l, ꞁ			
post-aveolar		ɹ				
palato-aveolar		ɻ		ɭ		
palatal	j		ʎ		ɥ	labial-palatal
velar	ɰ		ʟ		ʍ w	labial-velar
					vl vd	

whispered/breathed approximant [h]
whispery voiced/breathy voiced approximant [ɦ]
('bunched'/'molar' 'r') voiced labial pre-velar approximant with tongue-tip retraction [ɰ]

Summary of the phonetic symbols for vocoid and approximant segments of all types.

- (Laver, John, 1994: 312)



Frontal view of the lip position associated with the neutral configuration of the vocal organs (dashed outline). Eight deviations from the neutral configuration arise from expansion or contraction of either or both the horizontal and vertical dimensions of the neutral outline e.g. 'HE' indicates horizontal expansion (after Laver, 1980 : 37)

- (Laver, John, 1994: 279)


The phonetic alphabet of the International Phonetic Association

CONSONANTS

	Bilabial	Labiodental	Dental	Alveolar	Postalveolar	Retroflex	Palatal	Velar	Uvular	Pharyngeal	Glottal
Plosive	p b			t d		ʈ ɖ	c ɟ	k g	q ɢ		ʔ
Nasal	m	ɱ		n		ɳ	ɲ	ŋ	ɴ		
Trill	ʙ			r					ʀ		
Tap or Flap				ɾ		ɽ					
Fricative	ɸ β	f v	θ ð	s z	ʃ ʒ	ʂ ʐ	ç ʝ	x ɣ	χ ʁ	ħ ʕ	h ɦ
Lateral fricative				ɬ ɮ							
Approximant		ʋ		ɹ		ɻ	j	ɰ			
Lateral approximant				l		ɭ	ʎ	ʟ			
Ejective stop	pʼ			tʼ		ʈʼ	cʼ	kʼ	qʼ		
Implosive	ƥ ɓ			ƭ ɗ			ƈ ʄ	ƙ ɠ	ʠ ʛ		

Where symbols appear in pairs, the one to the right represents a voiced consonant. Shaded areas denote articulations judged impossible.

VOWELS



Where symbols appear in pairs, the one to the right represents a rounded vowel

OTHER SYMBOLS

ʍ Voiceless labial-velar fricative
w Voiced labial-velar approximant
ɥ Voiced labial-palatal approximant
ʜ Voiceless epiglottal fricative
ʢ Voiced epiglottal fricative
ʡ Epiglottal plosive
ɕ ʑ Alveolo-palatal fricatives
ɜ Additional mid central vowel

ʘ Bilabial click
ǀ Dental click
ǃ (Post)alveolar click
ǂ Palatoalveolar click
ǁ Alveolar lateral click
ɺ Alveolar lateral flap
ɧ Simultaneous ʃ and x

Affricates and double articulations can be represented by two symbols joined by a tie bar if necessary k͡p t͡s

DIACRITICS

̥ Voiceless	n̥ d̥	̹ More rounded	ɔ̹	ʷ Labialized	tʷ dʷ	̃ Nasalized	ẽ
̬ Voiced	s̬ t̬	̜ Less rounded	ɔ̜	ʲ Palatalized	tʲ dʲ	ⁿ Nasal release	dⁿ
ʰ Aspirated	tʰ dʰ	̟ Advanced	u̟	ˠ Velarized	tˠ dˠ	ˡ Lateral release	dˡ
̤ Breathy voiced	b̤ a̤	̠ Retracted	i̠	ˤ Pharyngealized	tˤ dˤ	̚ No audible release	d̚
̰ Creaky voiced	b̰ a̰	̈ Centralized	ë	̴ Velarized or pharyngealized	ɫ		
̼ Linguolabial	t̼ d̼	̽ Mid-centralized	e̽	̝ Raised	e̝ (ɹ̝ = voiced alveolar fricative)		
̪ Dental	t̪ d̪	̩ Syllabic	ɹ̩	̞ Lowered	e̞ (β̞ = voiced bilabial approximant)		
̺ Apical	t̺ d̺	̯ Non-syllabic	e̯	̘ Advanced Tongue Root	e̘		
̻ Laminal	t̻ d̻	˞ Rhoticity	ə˞	̙ Retracted Tongue Root	e̙		

SUPRASEGMENTALS

ˈ Primary stress
ˌ Secondary stress ˌfoʊnəˈtɪʃən
ː Long eː
ˑ Half-long eˑ
̆ Extra short ĕ
. Syllable break ɹi.ækt
| Minor (foot) group
‖ Major (intonation) group
‿ Linking (absence of a break)
↗ Global rise
↘ Global fall

TONES & WORD ACCENTS

LEVEL		CONTOUR	
e̋ or ˥	Extra high	ě or ˩˥	Rising
é ˦	High	ê ˥˩	Falling
ē ˧	Mid	e᷄ ˧˥	High rising
è ˨	Low	e᷅ ˩˨	Low rising
ȅ ˩	Extra low	e᷈ ˧˦˧	Rising-falling etc

ꜜ Downstep
ꜛ Upstep

அதிர்வுள்ளனவுமாம். உயிர் அல்லது உயிர்ப் போலிகள் போன்று வாய் நடுவழிச் செல்லும் ஒலிப்பினவல்ல. நா நுனி அல்லது விளிம்பு அல்லது ஓரத்தடையுடைமையால் இவை மிகுதியும் மெய்யொலி சார்ந்தனவே. ஆயின் வெடிப்பொலி, உரசொலி போன்ற தடையில்லன. ஆகவே, உயிரொலிப்பிற்கும், மெய்யொலிப்பிற்கும் இடைத்தரத்தன எனினுமாம். இவை இயல்பாக, அசையழுத்தம் (Syllabic stress) பெறாத, அசையோரத்தன (Syllable marginals). ஆயின், சில போது, அரிதாக அசையழுத்தம் பெறுவனவுமாம். இதனால் இவை, தடையில் லொலிகள் (Resonants) வரிசையில் சேர்க்கப்பட்டும், தடையொலி களின் (Contoids) வரிசையில் சேர்க்கப்பட்டும் காணப்படுகின்றன. இவை உரசொலிபோல் ஒழுங்கற்ற கொந்தளிப்புடைய ஒலிகள் அல்ல உலகின் பல மொழிகளில் அதிர்வுடைய பிரிவளியொலி (Voiced lateral) காணப்படுகின்றது. அதிர்வில்லது, அருவழக்கினது. இதனைப், பர்மீசு (Burmese) மொழியில் காணலாகும் பிரெஞ்சு மொழியில், மாற்றொலியாக (Allophonic variant) இது வரும். சில மொழிகளில் ஒன்றேயுளது. பிரிவளியொலி இல்லாதனவும் ஒருசில உள தமிழ் மொழியில் [ல்,ழ்,ள்] என மூன்றுள. 'கைட்டிட்ஜ்' (Kaititj - C. Australia) மொழியில் நான்குள. இயல்பாக உலக வழக்கில் உள்ள பிரிவளியொலிகள்:

பல்லொலி (Dental - [l̪])
பல்முகட்டொலி (Alveolar - [ℓ])
பின் பல் முகட்டொலி (Post-alveolar - [ℓ̠])
வளை நா அண்ண பல் முகட்டொலி (Retroflex palato - alveolar-[ɭ / *L*])
அண்ணவொலி (Palatal - [ʎ])
மெல்லண்ணவொலி (Velar - [*L*])

3.2.6.7.1 வருடு பிரிவளியொலிகள் (Flapped lateral resonants (ɺ))

வருடலோடு கூடிய இத்தகைய பிரிவளியொலியைச், 'சாகா' (Chaga-Niger- Congo), ஒரியா, கொங்கணி, குஜராத்தி, இராசத்தானி, பஞ்சாபி முதலிய மொழிகளில் காணலாகும்.

3.3. ஒலிகள் (Phones)


1. இதழொலி (Labial)
2. இதழ் பல்லொலி (Labio-dental)
3. பல்லொலி (Dental)
4. பல்லிடையொலி (Interdental)
5. நாவிதழொலி (Linguolabial)
6. பல்-பல்முகட்டொலி (Dento-alveolar)
7. பல் முகட்டொலி (Alveolar)
8. பின்பல் முகட்டொலி (Post-alveolar)
9. அண்ண-பல்முகட்டொலி (Palato-alveolar)

10. வளை நாவொலி (Retroflex)
11. பல்முகட்டு-அண்ணவொலி (Alveo-palatal)
12. அண்ணவொலி (Palatal)
13. மெல்லண்ணவொலி (Velar)
14. உள்நாக்கொலி (Uvular)
15. மிடற்றொலி (Pharyngeal)
16. குரல்வள மூடியொலி (Epiglottal)
17. குரல்வளையொலி (Glottal or laryngeal)

1. அதிர்வில்/அதிர்வுடை (Voiceless/voiced)
2. வாய்வழி/மூக்குவழி (Oral/nasal)
3. 'ஹ்' / 'ஹ்' -அல் (Aspirated/ unaspirated or simple) முன்,பின் (Pre/post)
4. வெடிப்புரசு/வெடிப்புரசல் - (Affricated/simple)
5. மூக்கொலி- முன், பின் (Pre-/post-nasal)
6. புறமுந்து/உள்ளீர்ப்பு (Ejective/implosive) புறஞ்செல், அகஞ்செல் (Egressive/ingressive)
7. ர்,ற்- ஒலி (Rhotic)/அஃதல் வழி (Simple)
8. நடு/பக்க வழி (Central/lateral)

என்றிவ்வாறு பல.

ஒலிப்புக்கள் (Articulations)



பிறவொலிகள் : புறமுந்தொலி (Ejectives) உள்ளீர்ப்பொலி (Implosives)
ஹிஸ் ஒலி (Whisper) கிரீக் ஒலி (Creak) உரப்பொலி (Falsetto)

4 அலை ஒலிப்பியல் (ஒலிப்பு அலையியல்) (Acoustic phonetics)

4.0. ஒலியலை (Phonetic wave)


பேச்சு, ஒலிப்பில், நுரையீரலிலிருந்து காற்று மேல் நோக்கி இயக்கம் பெறுகின்றது, குரல் வளை வந்ததும், ஒலித் தசைகளின் (Vocal bands) இயக்கத்தால் காற்றொலியில் அதிர்வுகள் (Vibrations or pulses) தோன்றுகின்றன. இதனால் காற்றொலியலைகள் (Wave forms) கல்லெறியப்பட்ட நீரலைகள் போல் உருவாகின்றன. ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருக்கும் ஒலியலைகள் அல்லது அதிர் வலைகள் (Frequencies) ஒலிப்புக்குத் தக்கவாறு, ஒரு நொடிப் பொழுதுக்கு (Second) ஓரளவாகக் கணக்கிடப்படும். எவ்வளவுக்கு ஒலித் தசையில் அழுத்தம் (Pressure or energy) செலுத்தப்படுமோ அவ்வளவுக்கு, ஒலியலையின் மேல், கீழ் எல்லை (Amplitude) அல்லது அலையளவின் உச்ச வரம்பு அல்லது அலையின் எழுச்சி அல்லது வீழ்ச்சியின் உச்சநிலை காணப்படும். இவ்வாறு ஒரு நொடிப் பொழுதில் (Time), ஓரளவு எண்ணம் கொண்டு உருவாகும். ஒரு குறிப்பிட்ட அலை வளைவு உயர் அளவு (Amplitude) கொண்ட அடுக்கி வரும் ஒலியலைகள் ஒலிப்புறுப்பு (Speech tract) அறைகளால் வடிகட்டப் பெற்று (Filter), அவற்றால் எதிரொலி (Resonance) செய்யப் பெறுகின்றன. ஒலிப்புறுப்புக்களின் வடிவு, அளவு, அலை செல்லும் வழியளவு, தசை நார்களின் கட்டமைப்பு முதலானவற்றைப் பொறுத்து ஒலி பெருக்கப்படுவது மட்டுமன்றி, ஒலித்தரமும் (Quality) காணப்படும். ஒலிப்புறுப்பு, குரல்வளையிலிருந்து வாயிதழ் வரை, ஒலி பெருக்கி போல், வரவர அளவு பெரிதாகி அமைந்திருப்பதையும் கருதிக் கொள்ளல் வேண்டும்.

இவற்றுள், காலஅளவை (Duration) அடிக்கொண்ட ஒலியலை களின் எண்ணம் (Frequency rate or range) ஒலியினிமை (Pitch) தருவது. ஒலியலை வளைவின் உச்சவரம்பு (Amplitude) ஒலியின் அழுத்தம் (Stress or intensity) குறிப்பது. ஒலிப்புறுப்பின் அளவமைப்பு, ஒலித்தரம் (Quality) ஆக்குவது. ஒலிப்பில் அல்லது ஒலியலையில் அல்லது ஒலியில் குறிப்பிடப்பட்ட மூன்றும், கருதத்தக்க அடிப்படைகளாகும்.

4.1. ஒலியலைச்செலவு (Transmission of sound waves)

நுரையீரல் காற்றியக்கம், குரல்வளையுள் ஒலியலையாக்கப் பெற்றுப், பேச்சுறுப்புக்களால் உருக்கொடுக்கப் பெற்று, வாயிலிருந்து (மூக்கிலிருந்தும்) (உருக்கொடுக்கப் பெற்ற) ஒலியலைகள், வெளிக்

காற்று மண்டிலத்து வழியே, பல தடையிருந்தும், அலைகளாகவே சென்று செவிக்குள் நுழைந்து, செவியொலித் தோலைத் (Ear drum) தாக்கி அதிரச் செய்கின்றன. செவியொலித் தோல், ஏற்ற அதிர்வலை களை, அவ்வாறே, எலும்புத் தொடர் (Bone chain) வழியாக, நீரைத் தன்னகங்கொண்ட உட்செவிக்கு (Inner ear) அனுப்ப, அதனால் உட்செவியின் நீர்ப்பகுதியில் அலைகள் அவ்வகையே தோன்ற, அவற்றை நரம்புகள் மூளைக்கு எடுத்துச் செல்ல, மின் வேதிப் பொருள் வடிவ ஆற்றலாகிப் (Electro chemical form of energy) புலப்பாடாகும்.




ஒலியலைச்செலவு

4.2. அலையியல்புகள் (Wave features)

காலங்காட்டும் சுவர் மணியில் ஆடு தொங்கல் வட்டு (Pendulum) அங்குமிங்கும் ஒரேயளவில் ஆடிக் கொண்டேயிருக்கின்றது. தொடங்கிய இடத்திலிருந்து (நடுப்பகுதி) இருதிசை ஓரங்களுக்கும் சென்று, மீண்டும் தொடங்கிய இடத்திற்கு வருதல் அல்லது ஒரு ஓரத்திலிருந்து எதிர் ஓரஞ் சென்று மீண்டும் தொடங்கிய இடம் வருதல் ஒரு வட்டம் (Cycle) அல்லது அதன் ஆட்டத்தின் ஒரு காலக் கூறு (Period) அல்லது இரட்டை அசைவு (Double vibration) எனப்படும். இத்தகைய இயக்கத்தைக் காற்று, நீர் அலைகளிலும் காணலாகும்.

அ-இ, ஓரதிர்வு. இ-உ, ஓரதிர்வு. இரண்டும் சேர்ந்து அ-உ, இரட்டை அதிர்வு (Double vibration) (அசைவு) அல்லது அதன் ஓட்டத்தின் ஒரு காலக் கூறு (Period) அல்லது ஒரு வட்டம் (Cycle). இவ்வாறு ஒரு

ஒலியலை வட்டம்




நொடிப் பொழுதில் எத்தனை வட்டங்கள் அவ்வலையோட்டத்தில் காணப்படுகின்றன (Cycles per second (cps) என்று பார்ப்பது, அவ்வலையின் அடுக்குத் தொடர் வட்டங்கள் (Frequencies) என்னப்படும். இதனைப் பொறுத்தே அவ்வொலியலையின் இன்னியல்பு (Pitch) காணப்படும்.

அலையின் எ-ஒ அல்லது ஐ-ஔ, அலையின் உச்ச வரம்பைக் (Amplitude) காட்டுகின்றன. இவ்வுச்சவரம்பு, கொடுக்கப்படும் ஆற்றல் அல்லது அழுத்தத்தை அடிக்கொண்டது.

இவ்விரண்டும், சிறப்பாக அலை வட்டங்கள், காலத்தை (Time or duration) அடிக்கொண்டன. அலையுயர் நிலை (உச்ச வரம்பு) பத்து அளவு முறையுடைய 'பெல்' (Decibel - db) அளவால் கணக்கிடப்படும்.

தாக்குதல் அல்லது அழுத்தம் பெறும் ஒலிஅலைகள்,நொடிப் பொழுதுக்கு (Second) 1100 அடி விரைவில் செல்லும் இயல்பின. காற்றில், நீரில், கட்டிப் பொருளில் அலையாகச் செல்லும். இவ்வலைகள் மீண்டும், மீண்டும் ஓரளவாக (Periodic) அல்லது தனியலையாக (Simple) வருவது, வேறளவாக (Non-periodic) அல்லது கலவை அல்லது கூட்டலையாக (Complex) வருவது என இரு வகைப்படும். ஈருள் (Heart) துடிப்புப் போன்றது ஒலியலை. இரு துடிப்பின் இடைப்பட்ட இடைவெளியாகிய ஓய்வு போல, ஒலியலை, நிலையிலிருந்து, மேலேழுந்து வீழ்ந்து, நிலைக்கு மீண்டும் வருவதும், பின், கீழ் வீழ்ந்து, எழுந்து, நிலைக்கு வருவதும் ஓரலையசைவு முடிவு அல்லது அதிர்வின் ஓய்வு ஆகும். அலையதிர்வோட்டங்கள் அனைத்தும், அல்லது அலை வட்டங்கள் அனைத்தும் கால அச்சில் (Axis of time) நின்று சுழன்று தொடர்வனவேயாம்.

ஓரளவுடைய, தனியலையதிர்வு (Periodic simple vibration) மடிவொழுங்கு அல்லது வளைவொழுங்குடை அலையோட்டம் (Sinusoidal Wave) ஆகும்.



மடிவொழுங்குடை அலையோட்டம் (Sinusoidal curve)

சுவர்க் கடிகாரத்தின் ஆடுதொங்கல் வட்டு குறிப்பிடப்பட்ட ஒழுங்குடனேயே ஆடுகின்றது. ஓட்ட வேற்றுமை தொங்கலின் நீட்சி, குறுக்கம் குறித்தது. வேறுபட்ட நிலையுடைய ஒன்றன் ஓட்டமும், எப்போதும், ஒன்றுபட்ட பக்க இயக்கத்தை அல்லது ஓரளவாகிய வட்டங்களைக் (Cycles) கொண்டதேயாகும். அதிர்வளவும் (Frequency rate) ஒன்றேயாகும்.

இத்தகைய ஒழுங்குபட்ட, பெரிதும் நிலைத்த அளவுடைய, தனியலைகளை உருவாக்குவது, இன்னொலியலைக் கவடு (Tuning fork). இக்கருவியைத் தாக்கும்போது, வெளிப்பட்டியங்கும் ஒலியலை அதிர்வுகள் அல்லது வட்டங்கள், ஓரளவினவாகும். கலப்பற்ற ஒலியியல்புடையது (Pure tone). நெடும்பொழுது நிலை பெறும் ஓரளவு அலை வட்டங்களை நுனித்த கணிப்பில் ஆக்கும் அமைப்புடையது. இவ்வாறே சில கண்ணாடிக் கலன்களும், இழுத்துக் கட்டப்பெற்ற சில நரம்புகளுமாம்.



இன்னொலியலைக்கவடு (Tuning fork)

அதிர்வுடைய ஒவ்வோர் பொருளுக்கும், ஒவ்வோர் குறிப்பிட்ட அதிர்வும், அளவும், எண்ணமும் (நொடிப் பொழுதில்) தனித்தனியாக வுள்ளன. இவை அவ்வப்பொருளின் தரத்தை அல்லது பாரம், இறுக்கம், உள்தொளை, அளவு, வடிவம், பருமன், கலனாயின், உள்ளளவோடு, வாய் வடிவளவு, செயப்படு பொருள் முதலியவற்றை அடிக் கொண்டன. இவற்றால், ஒலித் தரமும் (Quality of the sound) வேறுபடும்.

இயல்பாக, ஒழுங்கற்ற, கலவை நிலை (Non-periodic/complex) ஒலியலைகளே பெரும்பான்மையன. இவ்வலைகள் இன்னாவோசை (Noise) உடையன. ஒரு பொருள் மேலிருந்து கீழ்விழும் போதோ, கண்ணாடி உடையும் போதோ, கல்லை ஒன்றன்மீது எறியும் போதோ இத்தகைய ஒலிகளையே கேட்கின்றோம். ஊர்திகள் ஓடும்போது, எந்திரங்கள் இயங்கும்போது, மக்கள் பேசும்போது கலவை ஒலியலை களே காதில் விழுகின்றன. கலவை ஒலி காதில் விழினும், அதனைக் கூறு செய்து, கலந்த தனியொலி அலைகளைத் (Sinusoidal waves) தனித்தனியாக்கி, வேறு வேறாகக் காணக் காதுக்கும், கருவிக்கும் இயலும்.

பாரமான பொருள், பாரம் குறைந்த பொருளினும் அலையதிர்வு விரைவு குறைந்தது. பெரிய, உருண்ட பொருள், சிறிது, குறுகிய பொருளினும் அதிர்வு விரைவு குறைவுடையது. உள் பொள்ளல் பொருளின் வாயளவு குறைய அதிர்வு குறையும். உள்ளளவு குறைய, வாயளவு பெருக அதிர்வளவு பெருகும். நரம்பின் நீட்சி கூட, இறுக்கம் குறைய அதிர்வு குறையும். ஒரே அதிர்வளவாயின், ஒரே ஒலி நிலையாகும். அதிர்வளவு கூட, ஒலி நிலை உயரும். ஒலியுச்ச நிலையும் (Amplitude) கூடும். அதிர்வளவு வேறுபட, ஒலி நிலையும் வேறுபடும். பொருள் தரம் வேறுபட, அதிர்வளவு வேறுபட ஒலி நிலையும் (Tone) வேறுபடும். ஒலித்தரமும் (Quality) வேறுபடும். அதிர்வு நிற்க, அலையும்

இல்லையாகும். ஒலியும் இல்லையாகும். ஒலியுச்ச நிலை (Amplitude) கூடக், குறைய, ஒலியழுத்தம் (Loudness) முறையே கூடும், குறையும். அதிர்வலை (Frequency), அலையுச்சம் (Amplitude), ஒலித்தரம் (Quality of the sound) இவை மூன்றும் பேச்சில், அடிக்கடி, விரைவாக மாறும். கலப்பொலியலையாகவே வாயில் தோன்றிக், காற்றில் சென்று, காதில் விழும். குரல்வளையில் ஒலித்தசைகள் விரைவாக மூடித் திறப்பதால் காற்றில் அதிர்வலைகள் தோன்றி, மிடற்றில், வாயில், மூக்கில் வடித்து, எதிரொலி செய்ய, ஒலி பெருக்கப்பட்டு, அலை வடிவாகவே வெளி வருகின்றன. காற்று மண்டிலத்தில், காற்றணுக்கள், அழுத்தம் பெற்றும், நெகிழப் பெற்றும் அங்குமிங்குமாகச் செல்வன, வாயிலிருந்து வெளி வரும் ஒலியலையழுத்தத்தால் தாக்கப் பெற்று, அவ்வலை வடிவமாகி, மிதந்து சென்று காதில் விழுகின்றன.

அலையின் கூடுதல் உச்ச நிலை, அதே உச்ச நிலை எவ்வளவு, அவ்வுச்ச நிலையின் ஏற்ற, இறக்க முறைகள், இவை கருதத்தக்கன. காற்றழுத்த வேறுபாட்டால் தோன்றும் ஒலியலைகள், ஒரு காலத்தில், காற்றழுத்தம் குறையக் குறைய, அலையுச்ச நிலையின் அளவும், வரவரக் குறைந்து மாயும்.



தேய்ந்து மாயும் ஒலியலை

உச்சநிலை வேறுபடினும், நொடிப் பொழுதுக்கு அலையளவு, ஓரளவாகவே இருக்கும். சில அதிர்வலைகள், விரைவில் தோன்றி விரைவில் மாயுமாயின் அவற்றிற்கு மாய்வலைகள் (Damped waves) என்று பெயர். சில பொருட்கள், இடைத்தடைகள், அலைப் பெருக்கிகள் முதலியன, இவ்வியல்பினை ஆக்குவன. இவை விரைவில் ஆகும். விரைவில் அழியும். மாறாக, இன்னொலியலைக் கவடு (Tuning fork) முதலானவற்றிலிருந்து எழும் விரைவில் அழியாத, தொடரலை களின் ஆவதும், அழிவதும் விரைவு பெறா. எவ்வலையை உடையன வாயினும், அதிர்வலை அளவு (Frequency), அலையுச்சம் (Amplitude), அலைத் தரம் (Quality) இம்மூன்றன் அடிப்படையில் ஒலிகள் வேறுபடும்.

4.2.1 இசையியல்பு (Musical feature)

இசையில், அடிப்படையதிர்வு (Fundamental), இசையியை பெருக்கம் (Harmonic), நேர் மடங்குகள் (Octaves) என்பன அதிர்வலை களை அடிக் கொண்டன.

நேர்மடங்கு		110 cps	*அடிப்படையதிர்வாயின்* (Fundamental)	
(Octave or	(1)	220 cps	*இசையியை பெருக்கம்* (Harmonic)	*- 2*
13 semitones)		330 cps	*இசையியை பெருக்கம்*	*- 3*
”	(2)	440 cps	*இசையியை பெருக்கம்*	*- 4*
		550 cps	*இசையியை பெருக்கம்*	*- 5*
		660 cps	*இசையியை பெருக்கம்*	*- 6*
		770 cps	*இசையியை பெருக்கம்*	*- 7*
”	(3)	880 cps	*இசையியை பெருக்கம்*	*- 8*

என்றிவ்வாறு, அதிர்வலைகள் அமைவு பெறும். மாறாக, 110 அடிப்படையதிர்வுக்கு, 215 அடுத்த ஏற்ற நிலையாயின், இசைமுறிவு (Unharmonious) *ஆகும். 219 ஏற்ற நிலையாயின், இசை முறிவு ஏற்படாது. இதனால், இசைக் கருவி இயக்கத்தில் அதிர்வலைகளின் நுண்ணிய கணிப்புக் கருதத்தக்கது. எப்போதும் நேர் ஒப்பு, பெருக்கம், மடங்குகள் இன்னிசையாயும், ஒலி பெருக்கமாயும் அமையும்.*


ஒரு பொருள் முழுமையும் அதிர்வடையும்போது, அதன் பகுதிகளும் அதிர்வடையும். இவ்விருவகையதிர்வுகளிடை ஓரியையும் காணும். அதன் பகுதி, முழுப் பொருளினும் இரு மடங்கும், மூன்றில் ஒரு பகுதி, மும் மடங்கும், நான்கில் ஒரு பகுதி, நான்கு மடங்கும் விரைவாக அதிர்வு செய்யும். இசை நரம்புகளின் இயக்கத்தில் இதனைக்




முழு நரம்பதிர்வு (அடிப்படையதிர்வு - Fundamental)



அரைப்பகுதியதிர்வு (இரண்டாவது இசையியை பெருக்கம் - நேர் மடங்கு-1, 2nd Harmonic - octave-1)



மூன்றில் ஒரு பகுதியதிர்வு (மூன்றாவது இசையியை பெருக்கம் - 3rd Harmonic)



நான்கில் ஒரு பகுதியதிர்வு (நான்காவது இசையியை பெருக்கம் - 4th Harmonic - *நேர்மடங்கு-2* - Octave -2)


முதல், அதன் பகுதிகளின் அலையதிர்வுகள்

காணலாகும். முழு நரம்பின் அதிர்வு, அடிப்படையதிர்வாகும் (Fundamental). அதன் பகுதி அல்லது கூறுகளின் அதிர்வு, இசையியை பெருக்கங்களும் (Harmonics), நேர் மடங்குகளும் (Octaves) ஆகும். அடிப்படையதிர்வு தான் இன்னிசையை வரையறை செய்யும்.

இவ்வாறு தொடர்ந்து முதலும், பகுதிகளும் அலையதிர்வால் இயைந்து, இன்னிசை தரும்.

4.2.2. கேட்பலை (Auditory (Hearing) waves)

காதுக்கு ஒலியலையின் கேட்புணர்வு, 16-20 நொடிவட்டம் (Cycles per second-cps) முதல் 20,000-25,000 வரையாகும். பேரெல்லை இயல்பாக 16,000 என்னலாம். மனித வேற்றுமையால் சிறிது கூடுதல், குறைதல் காணும். இவ்வரையறையின் கீழும், மேலும் மனிதக் காதுக்கு உணர்வாற்றல் இல்லையாகும். பெரும்பான்மைப் பேச்சுக்கள், ஏறத்தாழ, 8000 ஒலியலை வட்டங்களுக்கு (cps) உட்பட்டே அமையும். இதுபோல், ஒலியழுத்தம் (Amplitude) 20 முதல் 60 (Decibels-db) அளவுக்குட்பட்டதே, கேட்பாற்றல். கீழ் வரையறையின் கீழ்க் கேட்காது. மேல் வரையறையின் மேல், காதுக்கு நோவாகும். மிகச் சிறந்த கேட்புப் பகுதி, 600-4200 அலை வட்டங்களுக்கு (cps) உட்பட்டதாகும்.




கேட்பலை

Based on Malmberg, Bertil, 1963 : 7 and Ladefoged, Peter, 1971 : 80

4.2.3. தனியலையும், கூட்டலையும் (Simple and complex waves)

ஒலியலைகளுள் பெரும்பகுதி கூட்டலைகள் (Complex waves) ஆதலினால், அவை ஒழுங்கற்ற (Non-periodic) அலைகளாகும். மிகக் கூடிய கலவையலையாயின், அதற்கு, வெள்ளை அல்லது இன்னா வொலி (White noise) என்று பெயர். கலவையின் உறுப்பலைகள் (Components) ஆகிய தனியலைகள் ஒப்பான அலைவட்டம் (Same frequency) உடையனவாயின் அவற்றின் விளைவலையின் அழுத்தம் அல்லது அலையுச்சம் (Amplitude) கூடும்(பிறமாற்றமில்லாத நிலையில்).

அ,இ - அலையிரண்டும் ஒப்பான அலை வட்டங்களையுடையன. அவற்றின் கலவையின் விளைவாக உ- அலை அவற்றினும் மிக்க அலையுச்சமுடைய அதிர்வு வட்டம் கொண்டு செல்கின்றது.



கலவையலை (Complex wave)

அலையுச்சங்கள் வேறுபடினும், அலை வட்டங்களின் எண்ணம் நொடிப் பொழுதிற்கு ஓரளவாகவே இருக்கும். எத்தகைய கூட்டலை யாயினும்,அதன் உறுப்புக்களாகிய தனியொழுங்குடைய அலைகளைக் (Sinusoidal/simple/periodic waves or puretones) கண்டு, அவற்றின் அலை வட்ட எண்ணம் (Frequency), அழுத்தம் (Amplitude) முதலானவற்றைத் தனித் தனியே பகுத்துக் காணவியலும். இதற்குக், கலப்பொலிப் பகுப்பு முறை (Sound - (complex)- analysis) என்று பெயர்.

வேறுபட்ட இரு இசையொலிக் கவடுகள், வேறுபட்ட அளவுடைய (Size) அலைகளை எழுப்பினும், அலை வட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஓரளவாகவே இருக்கும். கடிகாரத்தின் இரண்டு ஆடு தொங்கல் வட்டுக்கள் வேறுபட்ட அழுத்தங்களோடு (Amplitude) ஆடினும், ஆட்ட வட்டங்கள் குறிப்பிட்ட காலத்திற்கு ஒன்றாகவே இருக்கும். அஃதாவது, ஒரு வட்டத்தின் காலம் இரண்டிற்கும் ஒன்றே. அதிர்வலை வேறுபாடு, இன்னொலி (Pitch) வேறுபாட்டை விளைவிக்கும். அதனோடு அழுத்த வேறுபாட்டையும் புலப்படுத்தும் ஆயின் ஒலியழுத்த (Amplitude) வேறுபாடு அதிர்வலை வேறுபாட்டை விளைவிக்கும் என்பதில்லை.

இரண்டு ஒலியலைகள், வேறுபட்ட உச்ச நிலைகளை (Amplitudes) உடையன, இணைந்து கலவையலையாகும் போது, கலப்பின்

விளைவலை, உறுப்பலைகளின் உச்சநிலைக்கு இடைப்பட்டிருக்கும். விளைவலை, ஒரு போதும் எவ்வுறுப்பலையின் உச்ச நிலையையும் கொண்டிருக்காது. அவற்றின் வேறுபடும். சில ஒலியலையை, அதனோடு கலக்கும் வேறோர் ஒலியலையின் உச்ச நிலையால் மறைத்துக் கேட்காதவாறு ஆக்கி விடுவதும் உண்டு. இதற்கு மறைப்பு (Masking) என்று பெயர்.

இன்னிசை அலைக் கவட்டின் (Tuning fork) ஒலிக்கும், ஒரு நரம்பிசைக் கருவியின் ஒலிக்கும் வேறுபாட்டை எளிதில் உணர முடியும். இது போன்றே, ஒரு மணியொலிக்கும், கட்டையொலிக்கும், குழலொலிக்கும், யாழொலிக்கும் உள்ள வேறுபாடு எளிதில் புலப்படும். இவை போன்றே, எல்லாப் பொருளொலிக்கும் வேறுபாடு உண்டு. இதற்குக் காரணம் பொருள்தரம். ஒவ்வொரு பொருளிலிருந்தும் வெளிப்படும் அலை வடிவம் (Wave shape or wave form or quality) வேறுபாடுடையதாதலினால், அவற்றின் ஒலி வேற்றுமைப்படுகின்றது. ஆக, ஒலியதிர்வு, இனிமைக்குதவ (Pitch), ஒலியுச்சம், அழுத்தத்திற்குதவ (Loudness), ஒலியலை வடிவம், ஒலித்தர வேற்றுமைக்கு (Quality) உதவுகின்றது. ஒவ்வொரு பொருளுக்கும் அலை வடிவம் வேறு. நொடிப் பொழுதுக்கு அலை வட்ட எண் வேறு.

எல்லா ஒலிகளுக்கும் அலை உண்டு. அழுத்தம், வடிவு, அதிர்வுண்டு. இன்னொலியலைக் கவடாயினும் (Tuning fork) எழுப்பும் அலை ஒழுங்குடையன (Repetitive) எனப்படினும், ஒவ்வோர் அலையெழுச்சியிலும், வீழ்ச்சியிலும் அழுத்தம் சிறிது வேறுபடும். ஒன்றைப் போன்று ஒன்று, நுண்ணிலையில், ஓரளவாக, ஒருச்சமாக இராது. ஒன்று, முன், பின் அலைகளோடு பேரளவு ஒப்புடையது என்பதல்லது, தொடர்ந்து ஒருச்சவளவாகவே செல்லாது. அலைகள் வரவரத் தேய்ந்து, மாய்ந்து விடுதல் அதனைத் தெரிவிக்கும். அலைக்கு அலை அழுத்தம் சிறிது குறையும். சில ஒலி, அலையாக எழுவதும், விழுவதும், முடிவதும் உடனேயே நிகழும். இந்நிலை பொருளையும் அழுத்தத்தையும் பொறுத்தது. கல்லில், சில கட்டிமரத்தில், ஒரு கொட்டில், இவ்வாறாகவே ஒலியலை எழுந்து முடியும்.

இத்தகைய அலை பிறந்ததும், இறக்கின்றது. ஆயின், இன்னொலியலைக் கவடு முதலிய சில பொருட்களின் அலை, பிறந்து, நெடும் பொழுது வாழ்ந்து, பின் இறக்கின்றது. இது, ஆயிரக்கணக்கில் அலைகளாகிப் (ஓரழுத்தத்தில்) பின் தேய்ந்து மடிகின்றது. ஆயின் பல பேச்சொலிகள் நொடிப் பொழுதின், ஆயிரத்தின் ஒன்றிரண்டு கூறுகளில், தோன்றி மறைகின்றன. இவ்வாறான அலைகள் பகுப்புடையலைகளாக, அழுத்தம் குறைந்து, பரந்து செல்லுவன. ஆக, ஒலியலைகள் யாவும், இனியனவும், இன்னாதனவும், இரண்டும் கலந்தனவுமாம். இத்தகைய ஒலியலைச் சூழலில் வாழும் மக்கள் காதிரண்டும் இவற்றை வேறுபடுத்தி உணர்கின்றன.


4.2.4. அதிரொலி அல்லது மீட்டொலி (Resonance)

இன்னொலியலைக் கவடு (Tuning fork) ஒன்றிலிருந்து எழும் ஒலியலைகள், மற்றோர் இன்னொலிக் கவட்டைத் தாக்கும்போது, தாக்கப்பட்டது,தன்னொலியலைகளை வெளிப்படுத்துகின்றது அல்லது அதிரொலி செய்கின்றது. இவ்வாறு ஒரு பொருளின் ஒலி யலையால் தாக்கப் பெற்று மற்றொரு பொருள் தன்னிடமிருந்து வெளிப்படுத்து கின்ற ஒலியலைக்கு, அதிரொலி (மீட்டொலி - Resonance) என்று பெயர். இவ்வாறு, அதிரொலி செய்வது (Resonator) ஒலி பெருக்கி யாகவும் (Amplifier), ஒலிவடிப்பாகவும் (Filter) இருப்பதியல்பு. அஃதாவது, வேண்டாத ஒலியலைகளை நீக்கித், தெரிந்து, அவற்றைப் பெருக்கி அனுப்புவது. ஒன்றிலிருந்து அதிர்வலையாக வந்து மற் றொன்றைத் தாக்குவது, அகத்தீடு (Input). அதனை ஏற்று, வடித்துத், தெரிந்து, பெருக்கி மற்றொன்றால் புறப்டுத்தப்படும் அலை புறத்தீடு (Output).

ஒன்றன் ஒலியலையை ஏற்றுப் புறப்படுத்தும் மற்றொன்று, சிறியவளவு காற்றழுத்த வேறுபாட்டினை ஆக்குவதும், பேரளவு காற்றழுத்த வேறுபாட்டினை ஆக்குவதும் என இருவகையின. ஓர் இன்னொலியலைக் கவட்டினின்றெழும் ஒலியலையை ஏற்றுப் புறப்படுத்துவது, மற்றோர் இன்னொலியலைக் கவடாயின், சிறியவளவு காற்றழுத்த வேறுபாட்டினை விளைவிக்கும். ஏற்றுப்புறப்படுத்துவது, ஒரு பரந்த மரப்பணியாயின், பேரளவு காற்றழுத்த வேறுபாட்டினை விளைவிக்கும். சிறிய கண்ணாடிக்கலன், நரம்புக் கருவியின் பரந்த பலகை,முறையே, சிறிய, பெரிய காற்றழுத்த வேறுபாட்டினை விளைவிப்பன. பிற அதிர்வலையை ஏற்றுப் புறப்படுத்தும் இன்னொலி யலைக் கவடு, சிறிய கண்ணாடிக் கலன் போன்ற பொருட்கள், அதிரலை அல்லது மீட்டலையை ஆக்குவதும், ஆக்கிய அவ்வலைகள் அழிவதும் காலந்தாழ்க்கும். இத்தகைய புறத்திடும் பொருட்கள் விரைவில் அழியா அலைகளை ஆக்குவதால் அப்பொருட்களுக்கு விரைவில் மாயா மீட்டலையையாக்குவன (Undamped resonators) என்று பெயர். ஏனைய பரந்த மரப்பணிகள், நரம்பிசைக் கருவியின் பலகைத்தளம்போன்றனவற்றின், ஏற்றுப் புறப்படுத்தப்படும் அலைகள், விரைவில் ஆகி, விரைவில் அழிவன ஆதலால், இத்தகைய அலைகளை ஆக்கும், போக்கும் பொருட்கள் விரைவில் அழியும் அலைகளை ஆக்குவதால் அவற்றிற்கு விரைவில் மாயும் அலைகளை ஆக்குவன (Damped resonators) என்று பெயர். முன்னையன சுருங்கிய அதிர்வலை அகற்சியுடையன (Narrow range of frequencies). மாறாகப் பின்னையன அகன்ற அதிர்வலை அகற்சியுடையன (Wide range of frequencies). அனுப்பும் பொருளின் அதிர்வலை எண்ணத்திற்கும் (Frequency rate), அதனை ஏற்று அதிரலை அல்லது மீட்டலையைப் புறப்படுத்தும் பொருளின் அதிர்வலை எண்ணத்திற்கும் (Frequency rate) வேற்றுமை பெரிதாயின், அதிரொலி அல்லது மீட்டொலி செய்யும் ஆற்றல் குறையும். மீட்டொலி விளைவு பெரிதுபடாது.

4.2.5. அலையதிர்வும், உச்சமும் (Frequency and amplitude)


ஓரலை ஓட்டத்தில் அலை வட்டங்களின், உச்சம் வரவரக் குறைந்து வரினும், ஏறத்தாழ ஓரளவாகத் தொடரினும் அலை வட்ட எண்ணம் ஓரளவாகும். அதிர்வு கூட, இன்னோசை கூடும். அது குறைய, இன்னோசை குறையும்.




அலையுச்ச வேறுபாடு – ஆயின், கால அளவு ஒன்றே
- (Ladefoged, Peter, 1971 : 30)

இத்தகைய அலையுச்ச வேறுபாடு இன்னோசை அமைவைப் பெரிதும் பாதிக்காது. ஒழுங்கற்ற ஒலியலைப் போக்குடைய கலவை ஒலியின் உணர் இன்னோசை (Perceived pitch), உறுப்பொலிகளின் அலை வட்ட எண்ணின் (Frequencies) வகுவீதத்தைப் பொறுத்தது.

Schematic Spectrogram



Gleason, 1970, 362




Broad Band Spectrograms of the English Vowels Cut Out of the Context / d-d/

- (Gleason, 1970: 366)


ஆயின், விரைவில் மாயும் கூட்டொலியின் இன்னோசை, உறுப்புக் களின், மிகக் கூடிய அலையுச்சமுடைய, அடிப்படை அலை வட்டமுடைய ஒலியை அடிக் கொண்டது. பல ஒலிகளின் இன்னோசை வேற்றுமையைத் தெரிந்து கொள்வதற்கு, அடிப்படை ஒலியலைவட்டங்களே (Fundamental frequencies) அமைவுடையன. இன்னோசையை மாற்ற, அதிர்வலை வட்ட எண்ணிக்கையை மாற்ற வேண்டும்.

4.2.6. அலை வரைபடிவம் (Spectrum)

ஒலியலைகளைக், காலம், அலை எண், அலையுச்சம் உள்ளீடாக வரைபடம் வழி விளக்கலாகும். இத்தகைய வரைபடங்களுக்கு, ஒலியலைப் படிவம் அல்லது ஒலியலை வரை படிவம் (Spectrum) என்று பெயர். இதனைக் கோடுகளாலும் (Linear representation), அழுத்த வண்ணத்தாலும் (Intensity representation) விளக்கலாகும். வல்லொலி யலைப் பெருக்கங்கள் (Strong harmonics) கருவண்ணத்தாலும், மெல்லொலியலைப் பெருக்கங்கள் (Weak harmonics) விளர் வண்ணத் தாலும் விளக்கப்படும். இவற்றை, அகல் ஒலியலைச் சேர்க்கை (Broad band), குறுகு ஒலியலைச் சேர்க்கை (Narrow band) என இருவகை யாகவும் வகுத்துக் காணலாகும். முன்னையது, நுண்கணிப்புக்கு உகந்ததன்று. ஆயின், எளிதில் தெளிவிப்பது.




அகத்தீடு (Input) -
ஓர் உச்சமுடையன




மீட்டலை வளைவு (Resonance curve)
புறத்தீடு (Output) - ஒலியலைப்படிவம்


ஏழு வேறு ஒலியலைகளின் கலவையால் தோன்றிய ஒலியின் ஓரலையின் அளவு. இவ்வலை தொடர்ந்து சென்று, முடிவது, ஏழன் கலப்பு விளைவால் தோன்றிய ஒரு கலப்பொலி.




கலப்பொலி (Complex Wave) (100+200+300 cps (Hz)




மூன்று வேறு அலைகளின் கலவை-பொலியலைப் படிவம் (Spectrum)
100 - அடிப்படை, 200,300 - பெருக்கங்கள்
Ladefoged Peter 1971 35,36



அகஞ்செல் அலைகள்
(Input)



அதிரொலி (மீட்டொலி) வளைவு
(Resonance curve)



புறஞ்செல் அலைகளின் (output)
அலைப்படிவம் (Spectrum)

மூன்று ஒலியலைகள் – அலை வட்டம், அலையுச்சத்துடன்


ஓரொலியின் ஓரலை, அதன் ஏனைய தொடர் அலையளவுடையதாயின், அவ்வொலியலை, ஒரு வரை படிவமுடையது (Line spectrum). ஓரொலியின் ஓரலை, பக்கங்களில் தொடரும் அலைகளின் வேறுபட்ட அளவினதாயின், அவ்வொலி, தொடர் வரை படிவ முடையது (Continuous spectrum) - (Ladefoged, Peter, 1971: 48).

மீட்டொலி செய்வன, தம் அலைச் சேர்க்கை அகலம் அல்லது அதிர்வு எல்லை அளவுக்குட்பட்டு, அதிர்வலை வரும்போதே ஆற்றலோடு செயல்படும். இல்லையேல், செயல்படாது அல்லது குறையும்.

4.2.7. ஒலியலைச் செறிவும், உயிரொலியும் (Formants and vocoids)

ஒலியலையதிர்வின் எண்ணம், உச்சம், வடிவம் இவை பேச்சில் அடிக்கடி வேறுபடும். ஆகவே, ஒலி வேறுபடும். அதனால், பொருள் வேறுபடும். கலப்பலையால் ஆகியவையே பேச்சொலிகள். சில ஒலிகள் பெருங் கலவையுடைய வெள்ளையொலிகளாகவே (White noise) இருக்கும் (உரசொலி). சில ஒலியலைகளில் ஒலியலைச் செறிவுகள் (Formants) காணப்படும். இவை, சிலர் பேச்சுறுப்பமைவுகளால் வேறுபடலுமாகும். இவை பெரிதும் உயிரொலியமைவுக் குரியன. இவற்றுள் முதலிரு அலைச் செறிவுகள், எல்லா உயிரொலி

களையும் ஆக்கும். இவற்றின் இயைபு வேறுபாடு, அல்லது இட வேறுபாடு. உயிரொலியிடை வேறுபாட்டைப் புலப்படுத்தும். மூன்றாவது, மூக்குயிரொலியமைவுக்காவது. நான்காமது, தனிப் பட்டோர் ஒலிப்பில் சிலபோது காணும். பின்னிரண்டும், எல்லோர் பேச்சிலும், எல்லா மொழியிலும் இருப்பனவல்ல. முதலிரண்டும், எல்லா மொழி உயிரொலியமைப்பையுமாக்கும். ஆகவே, ஒலியலையில் இத்தகைய செறிவு சிறப்பிடம் பெறும். ஓர் ஒலியலைச் செறிவுள், ஒன்றோ அதன் மிகையோ அடிப்படையொலியின் பெருக்கங்கள் (Harmonics) காணப்படும் இன்னோசை (Pitch) மாற்றம், அல்லது அலைச் செறிவு (Formant) மாற்றம் அடிக்கொண்டு, ஒலியலைப் பெருக்கம், அலைச் செறிவுள் புகும் அல்லது உள்ளிருந்து புறப்படும்.




மூவேறு மீட்டொலி செய்வன (Resonators)
அலைவட்ட எண், அலைச்சேர்க்கை அகலம், நடுப்பகுதியுடன்
(Frequency, bandwidth with centre)
Ladefoged Peter 1971 : 61,65)

1. அலைவட்ட எண் (Frequency)	95-105	175-225	350	-	550
2. அலைச்சேர்க்கை அகலம் (Bandwidth or Frequency range)	10 cps	50 cps	-	200 cps	
3. நடுப்பகுதியுடன் மீட்டலை வளைவு (Resonance curve with centre)	100 cps	200 cps	-	450 cps	

இத்தகைய அலைச் செறிவுகள் பேச்சுறுப்பு அமைவைப் பொறுத் தனவே. பேச்சுறுப்புத், தோன்றிய ஒலியை மீட்டுருவாக்கி, வடிகட்டிப் பெருக்குகின்றது (Harmonics). அஃதாவது, சில அலையை நீக்கிச், சிலவற்றை வன்மைப்படுத்துகின்றது (நடுப்பகுதியில்). வன்மைப் பகுதியின் பெருக்கம், அதன் இருபுறச் சுருக்கத்தை அமைக்க, பெருக்கப்பட்ட நடுப்பகுதி செறிந்து, அலைச் செறிவாகின்றது

(Formant). இதற்குக் காரணம், நாக்கு. ஒலிப்புப் பகுதியில், காற்றறையை அமைக்கும் அமைப்பால் ஏற்படுவதே ஒலிச்செறிவு. நாவின், மேல் கீழ், முன் பின் இயக்கம் குறிப்பிடப்பட்ட அறையமைவை ஆக்கும்.

அதிர்வலைகள் அல்லது அதிர்வலைச் சேர்க்கைகள், ஒலிச் செறிவின் தரத்தை அல்லது வண்ணத்தை வேறுபடுத்திக் காட்டும். ஒவ்வோர் உயிர்க்கும் இதனால் ஒலித் தரம் அல்லது ஒலிவண்ணம் (Timbre) வேறுபடும். இதற்கு, மிடறு, வாய் ஆகிய இரு அறைகளும் ஒலி பெருக்கிகளாக, உள் குறுகி, வாய் விரிந்து, இதழ் துணை செய்ய உதவுகின்றன. அலைச் செறிவு, தனியொலியன்றி, ஒலிச் செறிவா தலினால் ஒரு குறிப்பிட்ட இடப்பரப்பைக் குறிக் கொள்ளும் இயல்பினது. சில உயிரொலிகளுக்கு, அலைச் செறிவொழுங்கு ஒன்றும் (F.1), இரண்டும் (F.2) தம் நிலையிலிருந்து ஒன்று உயர, ஒன்று தாழ, அணுகி, இடைவெளி தோன்ற, நேர் கோடுகளாக இணைந்து செல்லும். சில உயிரொலிகளுக்கு, அலைச்செறிவொழுங்கு ஒன்று, தன்னிடத்தில் மேலெழாது அமைய, இரண்டாமது, தாழ்ந்து அணுகிச்செல்லும். இவ்வாறமையும் எவ்வொலிக்கும் அலை வரைபடிவம் அமைத்து விளக்கவியலும்.



		F.1	F.2
[i]	-	400	2100
[ɨ]	-	300	1500
[u]	-	450	1000
[e]	-	500	1800
[ə]	-	600	1300
[o]	-	550	900
[æ]	-	650	1700
[a]	-	700	1100
[ɔ]	-	650	800

உயிரொலிகளும் 1, 2 அலைச்செறிவுகளும்
- (Gleason, H.A., 1970 : 367, 369)

உயிரொலியின் அலை வடிவ வேறுபாட்டினால், உயிரொலி, ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடும். இத்தகைய அலை வடிவம் மிக்க கலவை நிலையில், அமையும். ஏனெனில், பேச்சொலி, விரைவில், தரத்தால் (Quality) மாறிக் கொண்டிருப்பதே அதன் காரணம். உயிரொலியலைகள், ஒன்றைப் போன்று ஒன்றாகப், பல தொடரும் இயல்பின.

உயிரொலியின் உயர்ச்சி முதல் அலைச் செறிவோடும், அதன் முன்னோக்கிய பெயர்ச்சி இரண்டாவது அலைச்செறிவோடும்

அல்லது நாவின் உயர்ச்சி, முன் பின் பெயர்ச்சி முறையே ஒன்று, இரண்டனோடு இயைபுடையனவென்பதுமாம்.

இதனால் ஒவ்வோர் உயிரொலியின், ஒன்று, இரண்டு அலைச் செறிவின், அலைவட்டத் தொகையினை அறியலாகும்.

இவ்வாறாமையும் உயிரொலிகளிலும், ஒரு சில, ஒழுங்கில் அலைகள், இன்னாவோசை (Noise) கொடுப்பனவுமுள. அவை மொழியியலில் கருதத்தக்கனவல்ல. சில அரையுயிர்கள், மூக்கொலி, பிரிவளியொலிகள் உயிரொலி போன்று தடைக் கூறில்லனவாம். அஃதாவது, வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி போன்ற இன்னாவொலியன அல்ல. உரசொலி போன்றன மிகுகலப்பொலியன (White noise). ஆங்கில [S] ஒலி, 8000 முதல் 9000 வரை, மிகக் கூடிய அலை வட்டம் (cps) உடையது. வாய்க்கும், செவிக்கும் இடைப்பட்ட பேச்சொலியலை அல்லது காற்றழுத்த அலை, இவ்வாறு, பல்வேறு இயல்புகளைக் கொண்டு செல்வனவாம்.

ஒலியலைச் செறிவுகள், உயிரொலிகளையும், மெய்யொலிகளையும் வேறுபடுத்திக் காட்டுகின்றன. உயிரொலியில் இச்செறிவுகளுள், கீழுள்ளது அல்லது முதலது, இரண்டாவததனினும் அழுத்தம் மிகவுடையது. உயிரொலி அலைகளினும் மெய்யொலியலைகள், அலைப்படிவத்தில், ஒழுங்கு குறைய அமைந்து காணப்படும். மெய்யொலிகளுள், அரையுயிர், 'ர' கரவொலி, பிரிவளியொலி, மூக்கொலியலைகள், அலைப் படிவத்தில் (அலைவரைபடம்) உயிரொலி யலையின், வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலியலையின் இடைத்தரமான ஒழுங்குடையனவாகக் காணும். அஃதாவது, இவை உயிரொலியலை போன்று அடிப்படையலைப் பெருக்கங்களை (harmonics)யும் கொள்ளா. வெடிப்பொலி, உரசொலிபோல் அவை இன்மையையும் (Zero) கொள்ளா. இரண்டிடைப்பட்ட நிலையில் காணும் (இடையினம்). ஆகவே, [y], [w], [ய்,வ்] போன்றன, வழுக்கொலி என்பதனினும், அசையழுத்தம் பெறா உயிர் (Non-syllabic vowels) என்பது ஏற்புடையது.

வெடிப்பொலியலைகள், உரசொலியலைகளிலிருந்து வேறுபட்டு அலை வரைபடத்தில் விரைந்த முடிவுடையனவாகக் காணப்படும். பொதுவாக வெடிப்பொலியலைகள், உரசொலியலைகள், உயிரொலி யலைகளினும் ஒழுங்கற்றன. இத்தகைய ஒழுங்கில் அலைகளையுடைய உரசொலிகளுள், (θ) (Lisping sound), [S] ஒலியினும் (Rill sound) மிக்க ஒலியலை ஒட்டங்களையும் (Periodicity or frequency), சிறிது ஒழுங்குடைமையையும் உடையது. குரல்வளையின் ஒலித் தசையதிர்வு (Voicing), வன்மையான உறுப்பாக, அலைப் படிவத்தின் அடித் தளத்தில், கட்டிக் கோடாகக் காணப்படும். செறிவுடை (Compact) ஒலிகள் சிறப்புடையனவாக, அலைப்படிவ நடுவில், ஒலிச்செறிவு (Formant) கொண்டும், சிதர்வொலிகள் (Diffused) சிறப்பில்லனவாக, அலைப்படிவ ஓரத்தில் கொண்டும் காணப்படும். அலைப்படிவத்தின்

அடிப்பகுதி எடுப்புடையதாகத் தென்படின், அது தெளிவில் ஒலி (Grave). மேற்பகுதி எடுப்புடையதாகத் தென்படின், தெளிவுடையொலி (Acute). அலைப்படிவத்தில், கீழ் நோக்கிய சாய்வுடைய அலைச் செறிவாயின், அது இதழ் குவிவொலி (Lip rounded) என்பதனைக் குறிக்கும். மேல் நோக்கியதாயின் இதன் மறுதலை குறிப்பது. உச்ச ஒலியாயின் (With high pitch) மேல் அல்லது, இரண்டாவது அலைச் செறிவு, அலைப்படிவத்தில், மேல் நோக்கிச் செல்வதாகக் காணும். வல்லொலியாயின் (Tense), வன்மை குறிக்கும் வகையில், கட்டிக் கோடும் (Thick), நெகிழ்வொலியாயின் (Lax), மென்கோடும் (Thin) காணப்படும். மூக்குயிராயின் (Nasal / nasalised vowels) மூன்றாவது ஒலிச் செறிவு வரிசை ஒன்று தோன்ற, ஒன்று, இரண்டு அலைச் செறிவுகள் மெலிவுடையனவாகக் காணப்படும். ஒலியலைகளுள், தெளிவுடைய இயல்புகள். (Distinctive features) கருதப்படும். ஏனைய (Non-distinctive features) கடியப்படும். ஒரு மொழியில் தெளிவுடையன, மற்றொன்றில் தெளிவில்லனவுமாம். பொதுவாக உயிரொலி, மூக்கொலி, பிரிவளியொலி, அரையுயிரொலி முதலியன, ஒழுங்கான அலையோட்டத்தால், இன்னோசையுடையன. வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி, உருட்டொலி முதலியன, ஒழுங்கில் அலையோட்டத்தால், இன்னாவொலியனவாகும்.

5 ஒலியனியல் (Functional phonetics or phonemics)

5.0. ஒலியன் (Phoneme)

வாயுறுப்புக்களின் அமைப்பும் (settings), அவற்றின் முயற்சியும் அல்லது செயலும் அடித்தளமாக, எழும் காற்றலைகள், பல, அதிர்வியல், அழுத்தம், வடிவு, காலம் பெற்று, அவ்வுறுப்புக்களால் வடித்துப் பெருக்கப்பெற்று, ஒலியலையாக, அவ்வுறுப்புக்களிலிருந்து வெளிக் காற்று மண்டலத்திற்கு வருகின்றன (Articulatory phoneties). இவை, அகச்சிந்தனை அல்லது எண்ணத்தால் (Concept) ஆவன. பயிற்சி, பழக்கத்தால் அவ்வெண்ணத்தையும் சுமந்து வருகின்றன. ஆகச், சிந்தனை ஒலியாகின்றது. இத்தகைய காற்றொலியலைகள், காற்று மண்டலம் வழியாக, அவ்வகை பெற்ற அலைகளாகவே பரந்து செல்கின்றன (Acoustic Phonetics). அவற்றைச் செவிவழி ஏற்போன், அவற்றைப் பிறப்பித்துச் செல்லவிடுத்தோன் பயிற்சி, பழக்கத்திற்கு உட்பட்ட நிலையில், அக்காற்றொலியலைகளை ஏற்று, அவை சுமந்து வந்த எண்ணத்தைத் தன் அகச் சிந்தனை அல்லது எண்ணத்தால் புரிந்து, பொருள் தெரிந்துகொள்கின்றான். மீண்டும், குறிப்பிடப்பட்ட இருபுறத்திலுமாக, வாய், செவிக்கு, ஒலி, சிந்தனை (எண்ணம்) அல்லது ஒலி, பொருள், வரவு, செலவு, நொடிக்குப் பலவாக நிகழ்வதே, மக்கள் வாழ்வியல்.

உலகின் எப்பொருட்கும், செயற்கும் அவ்வவற்றின் இயல்பில் ஓர் ஒழுங்கிருக்கும். அவ்வொழுங்கு, இத்தகைய ஒலியலைகளுக்கும் உண்டு. இதன் மேலாக, இத்தகைய ஒலியலைகள், சில பல வடிவங்கொண்டு, கூறுகள் (Segments) உடையனவாகின்றன. இவையும், பயிற்சி பழக்கத்தால் அறியவருவனவே. இவ்வாறாகும் கூறுகளையே, சிந்தனை, உறுப்புவழி வெளிப்படுத்த, அவை காற்றொலியலைகளாக, மற்றொரு சிந்தனைக்குச் செல்கின்றன. ஒரு சிந்தனை, ஒலி வழி, மற்றொரு சிந்தனைக்குச் சென்று சேர, ஒலி வழி வந்த சிந்தனை, சிந்தித்த அதே சிந்தனையை, அதே ஒலி வழியில், யார் யார் எப்போது ஏற்றுக் கொள்ளினும், அவ்வாறே புலங்கொள்ள வேண்டின், இரு சிந்தனையிலும், அச்சிந்தனை வழியமையும் ஒலியிலும், இருபுறப் பயிற்சி, பழக்கத்திற்குட்பட்ட ஓர் ஒழுங்கு வேண்டும். இதுவே இலக்கணம் (Grammar) எனப்படும். இத்தகைய ஒழுங்கு, ஒலியோடு சிந்தனையில் தோன்றி ஒலியோடு பிணைந்து, ஒலி புலப்படுத்தும் சிந்தனை அல்லது பொருளிலும் பொருந்திக் காணும். ஆக, வந்த சிந்தனையை, ஒலி, அவ்வாறே புலப்படுத்த அல்லது பொருட்படுத்த வேண்டின், அவ்வொலியின்கண் ஒழுங்கு அல்லது இலக்கணம் இன்றியமையாதது.

புலம் →	பொறி →	செயல் →	விளைவு →	புலம்
சிந்தனை (பொருள்) (Thought)	பேச்சுறுப்பமைப்பு (Organic setting)	கிளவி (Utterance)	1) காற்றொலி (Phone)+ 2) ஒலிக்கூறு(ஒலியன்) (Phoneme)+ 3) இலக்கணம்(ஒழுங்கு) (Grammar) + 4) சிந்தனை(பொருள்) (Thought)	கேள்வி (Audition)

ஒழுங்கோடாகிய ஒலிக்கூறு, அதன் அகத்திட்ட (Input) பொருளைப் புறத்திடும் (Output) போது, அப்பொருளைப் புலப்படுத்த உதவும், சில பல கட்டுக்குள்ளமைந்த, ஒலியலையாலமைந்து உருக் கொண்ட, அவ்வொலிக்கூறே (Segment or unit) ஒலியன் (Phoneme) ஆகும்.

5.1. ஒலிப்பியல்புகளும், ஒலியனும் (Phonetic features and Phoneme)

இவ்வொலியன் ஒவ்வொன்றும், சில ஒலியியல்புகள் அல்லது ஒலிப்பியல்புகளைக் (Distinctive features) கொண்டமைவது. இவற்றை, ஒலியன் ஆக்க உறுப்புக்கள் (Components) என்பதனினும், அதன் இயல்புகள் (Features) என்பது அமைவுடையதாகும். இத்தகைய இயல்புகள், அவ்வொலியனின் விளக்கங்களாகி, அதனைத் தெளிவு படுத்த உதவுகின்றன. உலகின் ஒவ்வொரு பொருளையும் பல நிலையில் பார்க்க அதன் வேறு, வேறியல்புகள் புலப்படுவது போன்று, ஒலியனையும், பல நிலைப் பார்வையில் பார்க்கத் தெரியவரும், அதன் ஒலிப்பியல்புகள். இவ்வியல்பனைத்தும், ஒலியலையில்புகளும், அவற்றிற்கு அடிப்படையான ஒலிப்பியல்களுமாம். இவ்வியல்புகள் யாவும், ஒலிப்புறுப்பமைவுகளைச் சார்ந்தன. அவற்றின் முயற்சி அல்லது செயல்களைச் சார்ந்தன. இவ்வுறுப்பு, செயலால் அமைந்த வேறு வேறு காற்றலையியல்புகளே, ஓரொலியனைத் தெளிவுபடுத்தும், அதனைப் பிறவொலியனிலிருந்து வேறுபடுத்திக் காட்டும், அதன் இயல்புகள் (Distinctive features) ஆகும். ஒலிப்பியல்புகள், ஒலியியல்பு களாகச் சேர்ந்த சேர்க்கையமைப்புடையதே, ஒலியனாகிய உருவுடைய கூறாகும். ஒவ்வோர் ஒலியனுக்கும், இவ்வாறு பிறவற்றிற்கும் பொதுவான ஒலிப்பியல்புகள், தனக்கு மட்டும் சிறப்பாகப், பிறவற்றி லிருந்து வேறுபடும் வகையிலான, ஒலிப்பியல்புகள், ஆக இருவகை இயல்புகளும் காணப்படும். இத்தகைய அமைவே, ஓரொலியனி லிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காண உதவுகின்றது. இவ்வாறு ஓரொலியனிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காண வகை செய்யும் இவ்வியல்புகளாதலினால், இவற்றிற்கு வேறுபாட்டொலிப் பியல்புகள் அல்லது ஒன்றன் விளக்க இயல்புகள் அல்லது ஒன்றனைக்

குறித்துக் காட்டும் குணவியல்புகள் (Distinctive features) என்று பெயர். இவ்வியல்புகள், செறிவு (Compact), சிதர்வு (Diffused), தெளிவு (Acute), தெளிவின்மை (Grave), அதிர்வு (Voice), அதிர்வின்மை (Voicelessness) என்றிவ்வாறு பல.

இவ்வாறான இயல்புகளைக் கொண்ட ஒலியன் ஒவ்வொன்றும் பிற ஒலியன்களிலிருந்து வேறுபாடுடைமையால், சொல் தரும் பொருள் வேறுபாட்டிற்கு இவையே வேறுபாட்டுக் கருவியாக இருப்பதால், இவை வேறுபாட்டை விளக்கும் இயல்பின (Distinctive features) எனினுமாம். இதனால், விளக்கவியல்பு அல்லது வேறுபாட்டியல்பு களும், அவற்றால் ஆகிய ஒலியன்களும் வேறுபாட்டியல்புகள் எனும் ஒரே பெயரினைப் பெறுகின்றன.

ஓரொலியன், ஒரே சூழ்நிலையில், ஒருவரால் அல்லது பலரால் வெவ்வேறு ஒலிப்புக்களாக ஒலிப்பது ஒரு வகை ஒலிப்பியல்பு. இத்தகைய ஓரொலி, ஒரு சூழ்நிலை, ஒலிப்பு வேறுபாட்டிற்கு உறழ்ச்சி (Free variation) என்று பெயர். இவ்வாறு ஒலிப்பு வே்றுபடினும், ஓரொலியன் நிலையிலிருந்து வேறுபடாது. இது, ஒலியனின் ஒரு வகை ஒலிப்பியல்பு.

ஓரொலியன், சூழ்நிலை வேறுபட, வெவ்வேறு ஒலிப்பாக, ஒலிப்பு நிலை வேறுபடினும், ஓரொலியன் நிலையிலிருந்து திரிந்து வேறு படாது. அஃதாவது, ஒலிக்கூறு ஒன்று (Phonemic or emic unit) சூழ்நிலை வேறுபாட்டால், ஒலிப்பு வேறுபாடு (Phonetic or etic variants or contextual or positional variants or allophones) ஆகும். மொழிகளில் ஒலிக்கூறு ஒவ்வொன்றிற்கும் இவ்வாறான ஒலிப்பு வேறுபாடுள. இது, ஒலிப்பியல் மரபு. ஒலிப்பு வேறுபாட்டுள் இரண்டு ஒரே சூழ்நிலையில் வந்து பொருள் வேற்றுமை (Contrast) செய்யா.

எ - டு :


க்	-	கல் (K)	ஏகல் (H)	ஏங்கல் (G)
ச்	-	உச்சி (C)	ஊசல் (S/z)	ஊஞ்சல் (J)
த்	-	ஏத்தல் (T)	ஏந்தல் (D)	
ப்	-	கூப்பல் (P)	கூம்பல் (B)	

இவ்வாறு ஒலியன் ஒவ்வொன்றும், வேற்றொலியனோடு வேற்றுமையும், தன் ஒலிப்பு வேறுபாட்டோடு ஒற்றுமையும் உடையதாக வரும். ஒலியன், தன் விளக்கவியல்புகளின் கட்டாகவும் (Bundle or class), தன் ஒலிப்பு வேறுபாடுகளின் (Allophones) கட்டாகவும் அல்லது அவ்விரு வேறு ஒலிப்பியல்புகளையும் (Distinctive or Phonetic features) கொண்டு வரும். முன்னையன அமைப்பு நிலை இயல்பு (Formal features). பின்னையன, செயல் நிலை இயல்பு (Functional features). இவ்வாறு ஆக்க நிலை இயல்பும், சூழ்நிலையால் அணுகு நிலை அல்லது சேர்க்கை நிலை இயல்பும் கொண்டு வருவதே ஒலியன். ஓரிடத்தில் ஒன்று ஒலிப்பு வேறுபடின் அது உறழொலி.

வேறுபட்ட சூழ்நிலையால் ஒன்று ஒலிப்பு வேறுபடின் அது மாற்றொலி. இவ்வாறு ஒலித் தொடர்புடைய மாற்றொலிக் குடும்ப முடையதே ஒலியன். ஓரொலியனே, முதல், இடை, கடையென்ற சூழ்நிலையால், இருபுறமுஞ்சூழ்ந்த ஒலியன் சார்பால் மாற்றொலிப்புக் களைப் பெறுகின்றது. நுண்பொருட்டாகிய சிந்தனையைச் சுமந்து செல்லும், செவிக்குப் புலப்படும் அளவிலுள்ள, பருப்பொருட்டாகிய ஒலியோட்டத்தின், பொருள் புலப்பாட்டிற்குதவும். ஒழுங்கு முறைக்கு உட்படும், பொருளற்ற, ஒலியலை அளவாகிய, மிகக் குறைந்த மொழியின் அடித்தளமாகிய, பகுப்பு அல்லது ஒலிக் கூறே (Segment) ஒலியன் (Phoneme). இவ்வாறான தெளிவான வேறுபாடுடைய ஒலியன்கள், மொழியில், பழக்கத்தால் குறிப்பிடப்பட்ட பிணைப்பில் மாறி மாறி வருவன. எப்போதும், ஒலிப்பு மாற்ற மொழிய, நிலை பேறுடைய கூறுகளாக ஒரு மொழியில் அமைவன. ஒவ்வொரு மொழியிலும், மொழிக்குத் தக்கவாறு வேறுபட்ட ஒலியன்களாயினும், ஒப்புடைய, ஆயின் வேறுபட்ட கூறுகளாயினும், உலக அளவில், எல்லா மொழிகளுக்குமாகிய பொதுக் கூறுகளையும் (Phonemic universals) உடையன. இவ்வொலியன் (Phoneme) வரியிலாகும் போது, ஒலி வடிவாக இருந்தது, வரிவடிவு (Grapheme) ஆகின்றது. ஒலியே, இவ்வாறு வரியாயினும், ஒலி வேறு, வரி வேறாகக் கருதல் வேண்டும். ஒலியைப் பதிவு செய்வது வரி. காதால் புலமாவதைக், கண்ணால் புலமாக்குவதே, வரி. மிகு பிணைப்பும், பின்னலும், மிடைவும், அடைவுமுடைய மொழியின் ஆக்க அணுக்களே, ஒலியன்கள். இவற்றின் தொடரே, மொழி. தொடரிடைப்பட்டதே, இலக்கணம்.

ஒரு மொழியில், பொருள் விளக்கத்திற்கு உதவுவனவாகிய ஒலி அல்லது ஒலியன்கள், அம்மொழியில் தெளிவுடையன. இவற்றிடை ஒலிப்பு அல்லது ஒலியியல்பு ஒற்றுமையும், வேற்றுமையும் காணப்படும். (Resemblances and differences). ஒற்றுமையுடையன, மாற்றொலிகள். வேற்றுமை (Contrast) உடையன அம்மொழி ஒலியன்கள். தெளிவுள்ள இயல்புடைய (Distinctive feature), பகுக்க முடியாத, மிகச் சிறிய, பொருளற்ற ஒலிக்கூறே, ஒலியன். தெளிவுள்ள இயல்புகளின் சேர்க்கை அல்லது செறிவின் ஈட்டமே, ஒலியன் - (Bloomfield, Leonard, 1955 : 79). ஒரு மொழியின் ஓரொலியன், அம்மொழியின் பிற ஒலியன்களிலிருந்து வேறுபட்டது. ஒலி வேறுபாடு, பொருள் வேறுபாட்டை ஆக்குவது. ஒன்றும், பலவுமாகக் கலந்து, மொழிக்குத் தக்க வகையில், பலவகைப் பிணைப்புக் (Types or patterns) கொண்டு, மீண்டும் மீண்டும் ஒன்றனுள் ஒன்றெனும், உறுப்பும், முதலுமாக வருவதே மொழியின் ஒலித்தொடர்.

ஒலி குறிக்கும் பொருளும், பல வகைப் பிணைப்புக் கொண்டு (Types or patterns) மீண்டும் மீண்டும், ஒன்றனுள் ஒன்றாக வரும் இயல்பினது. ஒலியும், பொருளும் இவ்வாறு இணைந்து பருந்தும், நிழலும்போல் செல்ல, அதுவே மொழியாகும். இவ்விரண்டன் அமைப்பும், மொழிக்கு மொழி வேறுபடும். கீழிருந்து மேலாக,



ஒலிப்பியல்பும், ஒலியனும்

மொழியுறுப்புக்களை இணைத்துச் செல்லல் போல், மேலிருந்து கீழாக, வகுத்தும் காணவியலும். அமைப்பும், வகுப்பும் இடுகுறியளவாக முன்பே மொழியில் அமைந்து கிடக்கின்றன.

5.2. ஒலியன் பகுப்பு முறை (Phonemic analysis)

மொழியில், பொருள் காண உதவும் மொழியின் அடிக் கூறாகிய ஒலியன்கள் ஒவ்வொரு மொழியிலும் ஒரு சிலவே காணும். இவ்வாறான, ஒரு சில ஒலியன்களைக் கொண்டே, உலகப் பொருளைக் குறிக்கும், அகன்று பரக்கும், மொழியை ஆக்கிக்கொள்வது, நூற்றின் சில மிகை கொண்ட, அணு முதற் பொருட்களைக் (Elements) கொண்டு, உலகப் பொருட்கள் அனைத்தையும் ஆக்கிக்கொள்வது போன்றது. மக்களது பேச்சு, முதலில் சொற்றொடராகவும், ஒரு சொல் நிலைப் பேச்சாகவும் இருப்பதியல்பு. இத்தகைய பேச்சுப் பெருங்கூறும், சிறு உட்கூறுமாக, இடையீட்டுடன் காணப்படுவதால், கூறுடன் காணும் தொடர் தெரியவரும். இதன் அடிப்படைக் கூறாகிய, ஒலிப்புக் கூறுகள், உறழ்ச்சி, மாற்றொலிக் கூறுகளாகும். இவை தோன்றும் இடத்தால், ஒலிப்பு ஒருமைப்பாட்டால், இவற்றின் பொதுமை ஒருமை கண்டு, ஓர் ஒலியனாகக் கருதும் முறை தோன்றுகின்றது. இவ்வாறான பிறபல பொது ஒருமைகளால், வேறு அம்மொழி ஒலியன்களிலிருந்து, பொருள் வேறு புலப்படுத்த உதவும் நிலையால், வேறுபடுவதும், அஃதோர் தனியொலியன் என்பதனைப் புலப்படுத்தும். பேச்சின் பேரெல்லை, சொற்றொடர். சிற்றெல்லை, ஒலியன். மிகச் சிறிய, ஒரு வேற்றுமையால், இரு சொற்களின் பொருள் வேற்றுமை செய்வது, இது. ஒரு மொழியின் ஒலியமைப்பு முறையின் ஓர் இன்றியமையாத கூறு இது. இதன் தனித்த நிலையில் அல்லது இணைவு நிலையில் ஒரு பொருள் தருமாயின் அது உருபன் (Morpheme) ஆகின்றது. பொருள் தராத ஒலியன், பொருள் தரும் நிலையில் உருபனாகின்றது.

பொருளோடு தொடர்புறுகின்றது. அதுவே, சொல்லாகித், தொடராகி, மொழியாகின்றது. ஒலியும், பொருளுமாக அமையும் மொழியியல்புக்கு வித்து ஒலியனாகும்.

இத்தகைய ஒலியன்களைப் பழைமையில், ஈராயிரம் ஆண்டுகளின் முன்னேயே பயிற்சி, பழக்கத்தால் பொருள் வேற்றுமைப்படுத்தும், ஒலிவேற்றுமைக் கூறுகளாகச் செவியுணர்வால் கண்டு, உயிரொலிகள் என்றும், மெய்யொலிகள் என்றும் வகை செய்தனர். இன்றைய மொழியியல் முறை ஆய்வறிவு அன்றில்லை. அத்தகைய நிலையிலும், எபிரேயம், அராபியம், எகிப்தியம், கிரேக்கம், இலத்தீனம், சமஸ்கிருதம், தமிழ், சீனம் முதலிய மொழிகளில் பேச்சின் ஒலிக்கூறுகளைக் கண்டு, வகை தொகை செய்து, ஒலிக்கும் உறுப்பிடம், அவற்றின் முயற்சி களையும் தெளிவாக்கியுள்ளனர்.

இன்றைய மொழியியல் முறையில், மிகக்குறைந்த, ஓரொலி வேற்றுமையுடைய, சிறிய சொல்லிணைகளை அல்லது ஒரு வேற்றுமை இணைகளைக் (Minimal pairs) கொண்டு ஒலியன்களைக் காணும் முறை மேற்கொள்ளப்படுகின்றது. ஒருவற்குப் பழக்கமான மொழியில் காண்பது, பழக்கத்திற்குட்பட்டு விடுகின்றது. முன்னறியாத, ஒரு புதிய மொழியின் ஒலியன்களைக் காண்பது, மொழியியற் கலை நுட்ப மாகும். அவ்வாறாயின், புதிய மொழியின் ஒலியன்களை ஆய்வோ னுக்கு, அப்புதிய மொழியைத் தன் மொழியாகக் கொண்ட அல்லது அதனை அறிந்த ஆய்வோனுக்குத் தெரிந்த மொழியில் அறிவுறுத்து வோன் (Informant) ஒருவன் உதவி வேண்டும். ஆய்வோன், அறிவுறுத்துவோனிடம் பல வினாக்களை விடுத்து, ஒரு வேற்றுமை இணைகளை வருவித்துப், பொருளோடு பொருத்திப் பொருள் வேற்றுமையை, ஓரொலி வேற்றுமையால் உணர்ந்து, வகைபடக் குறித்தும், பதிவு செய்தும், இவ்வாறு பல சொல்லிணை ஆய்வால், ஒரு மொழியின் ஒலியன்களை ஒருவாறு காணலாகும். இவ்வகை ஆய்வில் குறையும், தவறும் வரும். காலமும், ஆய்வும் நிறைவும், திருத்தமும் தரும்.

. ஒரு வேற்றுமை இணைகளும் (Minimal pairs), தெரியும் ஒலியன்களும் :

அல், ஆல்	-	அ, ஆ	அலை, இலை	-	அ, இ
அரை, ஆரை	-	அ, ஆ	அர், இர்	-	அ, இ
அழி, ஆழி	-	அ, ஆ	அழு, இழு	-	அ, இ
ஆரம், ஈரம்	-	ஆ, ஈ	அலை, உலை	-	அ, உ
ஆர், ஈர்	-	ஆ, ஈ	அரை, உரை	-	அ, உ
ஆ, ஈ	-	ஆ, ஈ	அழு, உழு	-	அ, உ
ஆழ், ஊழ்	-	ஆ, ஊ	அடு, எடு	-	அ, எ
ஆன், ஊன்	-	ஆ, ஊ	அள், எள்	-	அ, எ
ஆண், ஊண்	-	ஆ, ஊ	அறி, எறி	-	அ, எ

ஆர், ஏர் -	ஆ, ஏ	அடு, ஒடு -	அ, ஒ
ஆ, ஏ -	ஆ, ஏ	அடி, ஒடி -	அ, ஒ
ஆம், ஏம் -	ஆ, ஏ	அழி, ஒழி -	அ, ஒ

ஆர், ஓர் -	ஆ,ஓ	அடு, இடு, உடு, எடு, ஒடு	அ, இ, உ, எ, ஒ
ஆடு, ஓடு -	ஆ,ஓ	அன்,இன்,உன்,என்,ஒன்	
ஆய், ஓய் -	ஆ,ஓ	அவ், இவ், உவ், எவ், ஒவ்	

ஆ, ஐ -	ஆ, ஐ	ஆ, ஈ, ஊ, ஏ, ஓ	ஆ, ஈ, ஊ, ஏ, ஓ
ஆயர், ஐயர் -	ஆ, ஐ	ஆர், ஈர், ஊர், ஏர், ஓர்	
ஆயா, ஐயா -	ஆ, ஐ	ஆடு, ஈடு, ஊடு, ஏடு, ஓடு	
ஆவை, ஔவை	ஆ, ஔ		

ஐகாரம், ஔகாரம்		ஐ, ஔ
ஐ ஐ,	ஔ ஔ	ஐ, ஔ

இவ்வாறு தமிழ் உயிரொலியன்களைத் தெரியலாகும் (ஒலி வேற்றுமை, பொருள் வேற்றுமை செய்வதால்).

அக்கு, அங்கு -	க், ங்	அச்சு, அஞ்சு -	ச், ஞ்
அட்டு, அண்டு -	ட், ண்	அத்து, அந்து -	த், ந்
அப்பு, அம்பு -	ப், ம்	அற்று, அன்று -	ற், ன்
ஆய், ஆர் -	ய், ர்	அல், அவ் -	ல், வ்
ஆழ், ஆள் -	ழ், ள்		

ஆக்கு - ஆங்கு, பூச்சு - பூஞ்சு, ஆட்டு - ஆண்டு, சாத்து - சாந்து, காப்பு - காம்பு. சாற்று - சான்று, காய் - கார், இல் - இவ், வாழ் - வாள்-
க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ற், ன், ய், ர், ல், வ், ழ், ள் - இவ்வாறு தமிழ் மெய்யொலியன்களைத் தெரியலாகும் (ஒலி வேற்றுமை, பொருள் வேற்றுமை செய்வதால்).

Medial :

Man - Men - Hit - hot
Pan - Pen - Nit - Not
Tan - Ten - a,e - Pit - Pot - i,o

Pit - Put
Pill - Pull - i,u
Pad - Pud - a,u
Pat, pet, pit, pot, put - a,e,i,o,u

Initial :

Bat	- Pat	- B,P	Fit	- Kit	- F,K
Cent	- Dent	- C,D	Hat	- Mat	- H,M

Go	- No	- G,N	Lot	- Rot	- L,R
Jet	- Set	- J,S	Tan	- Van	- T,V
Guest	- Quest	- G,Q	Xen	- Zen	- X,Z
Wet	- Yet	- W,Y			

bat- cat, dish-fish, good-hood, jar-car(K), kick-sick,lap-map, not-pot, quotation-rotation, sail-tail, vent-went, wet-yet, sister-xyster, seal-zeal.

Final :

cab, cap	- b,p	Face, Fate	- c,t
weed,week	- d,k	beef. beer	- f,r
tag,tan	- g,n	weal, wean	- l,n
teak,team	- k,m	car,cat	- r,t
gas,gap	- s,p	live,lip	- v,p
paw,pax	- w,x	wax, way	- x,y
price,prize	- c,z.		

ஒலி வேறுபாட்டினை, வரியைக் கருதாது, ஒலி அல்லது ஒலிப்பைக் கருதிக் கொள்க. வேறுபாடு காண முதல், இடை, கடை நிலைகளுள் எதனையும் கொள்ளலாகும். ஒரு வேற்றுமையன்றி, இரு வேற்றுமை, முவ்வேற்றுமை இணைகள் (Sub-minimal pairs) இடர்ப்பாட்டினை விளைவிக்கும். எ - டு : பஞ்சு - பந்து - cat - set.

ஓரொலி வேற்றுமையால் பொருள் முழுமையும் வேறுபடல் வேண்டும். பொருள் வேற்றுமையிருந்து ஓரொலியும் வேற்றுமை யில்லாத சொற்களும் (Homonyms), ஒலி வேற்றுமையிருந்து, பொருள் ஒன்றுபடும் சொற்களும் (Synonyms) உள.

எ - டு : கவலை - (உளத் துன்பம், வழிப் பிரிவு முதலியன)
வளை - (கை வளையல், பொந்து முதலியன)
கால் - (நான்கில் ஒன்று, நடையுறுப்பு முதலியன)

இவை ஒலி வேற்றுமையில்லாது, பொருள் வேற்றுமையுடையன (Homonyms) அல்லது ஒரு சொல் பல பொருள். இருப்பினும் பொருள் வேறுபடச் சொல் வேறுபடும்.

எ - டு : குளம், ஏரி - (நீர்நிலை)
பிறை, கலை - (கோள்)
மா, பரி - (குதிரை)

இவை பொருள் வேற்றுமையில்லாது, ஒலி வேற்றுமையுடையன அல்லது, பல சொல் ஒரு பொருள் (Synonyms).

Tap - (sound, stopper)
Bank - (mound, bench or office for exchange) - (Homonyms)
Stem, shoot - (Plant - part)
shop, stall - (Place of work or for sales) - (Synonyms)

இவ்வகைப் பல பொருள் ஒரு சொல்லாகிய ஒலி வேற்றுமையில் சொற்கள், பல சொல் ஒரு பொருளாகிய, பொருள் வேற்றுமையில் சொற்கள் ஒரு மொழியின் ஒலியனை எளிதில் காண உதவா. ஆயின், ஒலியாலும் (ஒரு வேற்றுமையுடைய), பொருளாலும் வேற்றுமை யுடைய சிறிய சொற்களே, ஒலியனை எளிதில் காணப் பெரிதும் பயன்படும்.

ஒலியன் பகுப்பில் மாற்றொலிகளுக்கோ, மொழியுறுப்பல்லாத பிற ஒலிகளுக்கோ, தனித்தனி வரி வடிவம் கொடுத்துவிடலாகாது. இவ்வாறு கொடுப்பது மிகை வேற்றுமைப்படுத்தல் (Over differentiation) ஆகும். இரண்டு அல்லது மூன்று வேறு ஒலியன்களுக்கு ஒரு வரி வடிவமோ, இரு வேறு ஒலியன்களின் மாற்றொலிகளுக்கும் சேர்த்து ஒரு வரி வடிவமோ கொடுத்துக் குறிப்பெடுத்துக் கொள்ளலாகாது. இவ்வாறான மயக்கம் குறை வேற்றுமைப்படுத்தல் (Under differentiation) ஆகும். ஒலியன்களின் இணைவுக்கு ஒரு வரி வடிவமோ, ஓரொலியனுக்கு இணை வரியோ (Digraph) கொடுத்துக் குறித்தல் மயக்கப் பகுப்பாகும் (Wrong segmentation).

சில ஒலிகளின் ஒலிப்பொப்புமை அவற்றை ஒன்றாகவே கருத வைக்கும். அவ்வாறாயின் அவற்றை ஐயப்பாட்டிணையாகக் (Suspicious pairs) கருதிச் செல்ல வேண்டும். அவை ஒன்றன் மாற்றொலியா அல்லது வேற்றொலியா என்பது செயற்பாட்டில் தெளிவாகும்.

தமிழில், ந-ன, ழ-ள, ல-ள, ன-ண, ற-ர, ங-ஞ, முதலியன, பேச்சில் பிற மொழியாளர்க்கு ஒலிப்பொப்புமையால், ஒன்றா, வேறா என்ற ஐயத்தை விளைவிக்கும்.

எ - டு :

பொருநன், வந்தனன் (ந்,ன்)	பழம்,வளம் (ழ்,ள்)
பலம், குளம் (ல்,ள்)	சினம், குணம் (ன்,ண்)
குறம், மரம் (ற்,ர்)	அங்கு, பஞ்சு (ங்,ஞ்)

அக்கம்(க)	அகம்(க)	ஆங்கண் (க)
அச்சம் (ச)	அசல்(ச)	அஞ்சல் (ச)
பட்டம் (ட)	படம்(ட)	பண்டம் (ட)
பத்தம்(த)	பதர்(த)	பந்தர் (த)
அப்பர்(ப)	அபலை(ப)	அம்பர் (ப)
குற்றம்(ற)	குறம்(ற)	குன்றம்(ற)

இன்னோரன்ன ஒலி அல்லது ஒலிப்புக்கள் ஒன்றோ, வேறோ எனும் ஐயப்பாட்டை விளைவிப்பனவாயினும் ஓரிட ஓரொலி வேற்றுமை இணைகளை இட்டுப், பொருள் வேற்றுமை காண வேறு, வேறு, ஒலியன்களாகக் கருதலாகும்.

எ - டு : குழி - குளி, மரம் - மறம், குலம் - குளம் என்பனபோலக் கொள்க.

ஆங்கிலத்தில், [k,g], [s.z], [c,j], [t,d], [p,b], [f,v], [n,ŋ,ñ], [r,ř], [e,ə], [o,ɔ], [a,ɑ], [æ,a], [i,y], [u,w], [v,w].

இன்னோரன்ன ஐயப்பாட்டிணையாகக் (Suspicious pairs) கருதற் குரியன. இவற்றை, ஓரிட, ஓரொலி வேற்றுமை இணைகளை இட்டுப் பொருள் வேற்றுமை காண, வேறு வேறு ஒலியன்களாகத் தெரியவரும். ஒவ்வோர் ஒலியனையும் முதல், இடை, கடை இடங்களில், வெவ்வேறு சொற்களில் காண, உண்மை தெரியவரும். ஒலியன் பகுப்பைப் போன்றே, இன்னோசைக் கூறுகளையும் (Tones or tone units), அவற்றை அடித்தளக் கூறாகக் கொண்ட மொழிகளிலிருந்து கூறு செய்து காண முடியும். இன்னோசைக் கூறுகளுக்கும் மாற்றொலிகள் உள.

பேச்சுக்களத்திலிருந்தும் (Speaking field), அறிவுறுத்துவோனிட மிருந்தும் பேச்சுத் தொடர் வழி, ஓரசையளவாகிய சிறிய சொற்களை, ஒலி வேற்றுமை, பொருள் வேற்றுமைக் கூறுகளோடு (Contrast), சூழ்நிலை மாற்ற ஒலிப்பு வேற்றுமைக் கூறுகளோடு (Complementation), ஒரே சூழ் நிலை, பொருள் வேற்றுமையில் ஒலிப்பு வேற்றுமைக் கூறோடு (Free variation) தொகுத்து வைத்துப் (Gathering) பின், உறழ்ச்சி ஒலிப்பில், சூழ்நிலை வேறுபாட்டொலிப்பில், ஒலிப்பொப்புமை (Phonetic similarity) இருக்கின்றதா என்பதனையும் கருதல் வேண்டும். சில போது, ஒலிப்பொப்புடையனவற்றுள், ஒன்று ஒன்றனோடு, ஒரே சூழ்நிலையில் வந்து, பொருள் வேற்றுமை செய்வது போன்றும் தோன்றலாகும். இதனோடு தொடர்புடைய பிற ஒலிப்பொப் புடையன, சூழ்நிலை வேறுபாட்டால், பொருள் வேற்றுமையின்றியும் வரும். இவ்வாறான கலவை மாற்றொலித் தோற்றங்கள் (Multiple complementation) யாவும், சொல்லிணைகளை மாற்றி மாற்றி ஒப்பிட்டுக் காணத் (Collation) தெளிவடையும். இவ்வாறு ஒப்பிட்டுக் காணும் போது, ஒலித் தொடரில் ஓர் ஒழுங்குமுறை (Pattern) மீண்டும் மீண்டும் வருகின்றதா என்பதனையும் பார்த்தல் வேண்டும். இவ்வாறு, பகுப்பொலியன்களை (Segmental phonemes) இணை ஒப்பீட்டு வேற்றுமையால் காணும் போது, பொருள் வேற்றுமை, ஒலி வேற்றுமை செய்யும் ஒலியழுத்தம் (Stress), இன்னொலி (Pitch) முதலிய மிகைப் பகுப்பொலியன்களையும் (Suprasegmental elements or prosodial features) கண்டு வகைப்படுத்தல் வேண்டும். இப்பகுப்பு முறையில், பொருள் வேற்றுமையில் ஒலிப்பொப்புமையும், பொருள் வேற்றுமை யுடை ஒலிப்பு வேற்றுமையும் இரு இன்றியமையாத அடிப்படைக் கூறுகள். இத்தகைய வேற்றுமைக் கூறு காண முடியாத வகையில், அத்தகைய சொல்லிணைகள் இல்லாத, ஒலி ஒன்றிரண்டு, ஒரு சில மொழிகளில் காணலுமாகும். சில ஒலிகள், மொழி முதலில் மட்டிலும், இடையில் மட்டிலும், இறுதியில் மட்டிலும், ஓரிரு சொற்களில் மட்டிலும், அருவழக்காக வருவதால், ஓரொலி வேற்றுமை இணைகளைக் காணல் அரிதாகும். ஓரொலி, சில ஒலிகளோடு அடுத்து வாராமையும், பகுப்பருமையாக்கும். தமிழில் ட,ற,ங,ண,ன,ர,ல,ழ,ள முதலியன மொழி முதலில் வாராமையும், வல்லொலி, ங் - மொழி

யிறுதியில் வாராமையும், ஞ், ந், வ், மொழியிறுதி அருமையும் காணலாகும். பிற மொழியிலும் இவ்வாறேயாம்.

ஒலிப்பியல்புகளையுடைய ஒலியன்களைக் கூறுகளாகக் (Units or elements) காண்பது, அவற்றை மொழியில் வழங்கு முறையை (Distributional system) அடியாகக் கொண்டது. மொழியின் ஒலித் தொடரும் (Sequence), ஒலியனைக் கூறளவில் அடிக் கொண்டதே. இத்தகைய ஒலித் தொடரில், ஒலியன் வேற்றுமையே, பொருள் வேற்றுமைக்கு உதவுகின்றது. ஒரு மொழியின் ஒலியன்களைப் பிறிதோர் மொழியின் ஒலியன்களைக் கருத்தில் கொண்டு, கணிப்பிட்டுக் கூறு செய்து காணவியலாது. மொழிக்கு மொழி ஒலியன் வழங்கல் முறை வேறுபடும். ஒலியன் சேர் முறையும், தொடர் முறையும், வழங்கல் முறையுமே ஒரு மொழியின் ஒலியமைப்பைத் தெரிவிக்கின்றன. ஒலியலையியல்புகள் ஒலியின் ஆக்கம் காட்டும். ஆயின், மொழி வழங்கியல் முறையில், ஒலியன் செயல் அல்லது அதன் பயன் தெரிய வரும். ஒலியனுக்குத் தனி நிலை வாழ்வில்லை. பேச்சுத் தொடரில்தான் அதன் வாழ்வியல் நிலை. தனித்துக் காண்பது, மொழியில் அதன் செயலையும், அதனையும் தெரிந்து கொள்வதற்காக. மொழியின் ஒலியன்கள் கருதிக் கொள்ளப்படுவனவே என்னும் கூற்று இருப்பினும், ஒலிப்பிருப்பதனால், அதனாலாகிய உறுப்பு அல்லது ஒலிக் கூறு உண்டு என்பது பெறப்படுகின்றது. ஒலித் தொடரில் சொல், உருபன் என்று இடையீடுபடக் கூறுகள் காணப்படுவன போன்று, அவற்றின் அடிக்கூறு, மொழியின் தெரிவுடை வேறுபடு கூறுகளாக, அவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து, பின்னிப் பிணைந்து வருவன தெரிவதால், ஒலியன்கள் உண்மை பெறப்படுகின்றது. இத்தகைய பிணைவும், தொடரும், பின்னலும், முறையும் முன்னமேயே இயல்பாக அமைந்து கிடப்பதனால், முறை அல்லது ஒழுங்குச் சிதைவும், புறனடையும் மொழியில் இல்லாமலில்லை. மொழிக் கட்டில் காணும், கடை வெட்டுத் துண்டு அல்லது ஒலித் துணுக்குகளே, ஒலியன்கள்.

நுரையீரல் காற்றின் உந்து கூறுகள் (Chest pulses) அல்லது ஒலிப்பின் உந்து கூறுகள் (Phonetic syllables) ஒலியனாலாம் உந்து கூறுகள் (Phonemic syllables) ஆவன போல, ஒலிப்புக் கூறுகளே (Phonetic segments), ஒலியன்கள் (Phonemes) ஆகின்றன. மொழியின்கண் வரும் பல்வேறு சூழ்நிலை வேறுபாட்டால் ஒன்றன் ஒலிப்புக்கள் வேறுபடுவதால், அவ்வொன்று, இவ்வேறுபாட்டிற்கு அடித்தளமாக வேண்டும். அவ்வடித்தளக் கூறுபாடே ஒலியன்.

மொழியொலிகளுள், ஒற்றுமை, வேற்றுமைக் கூறுகள் காணப் படுகின்றன. தெளிவான வேற்றுமைக் கூறுகளைத் தெரிந்து, ஒலி வேற்றுமையோடு பொருள் வேற்றுமை கண்டு, வேறு வேறு ஒலியன்களாக வகை செய்து வேறாக்கி, ஒரு தோட்டத்துத் தனித்தனி, வேறு வேறு மரங்கள் போலக் காண்க. பின், ஒரு மரத்தின் கிளைகள் போல, ஒற்றுமையால், ஓரொலியின் கிளைகள் போலத் தோன்று

வனவற்றை வகை செய்து, சூழ்நிலை ஒன்றுபடப் பொருள் வேறாகச், சொல்லிணையில் அல்லது மூன்று சொல் ஒப்பீட்டில் (ஓராலி வேற்றுமை) (Minimal triplet) தெரியின், அவற்றைத் தனி மரங்கள் போலத் தனியொலியன்களாகக் கொள்க. எஞ்சிய ஒற்றுமையுடைய, ஒரு சூழ்நிலையில் வந்து பொருள் வேற்றுமை செய்யாதனவற்றை, ஒரே சூழ்நிலையில் வாராது, வெவ்வேறு சூழ்நிலையிலேயே வருவனவற்றை, ஒரு மரத்தின் கிளைகள் போல, ஓர் ஒலியனின் உறழொலி (Free variant), மாற்றொலிகளாகக் (Positional variants or allophones or phonetic variants) கொள்க. இன்னோசை மொழிகளிலும் (Tone languages) அவற்றின் அடிக்கூறாகிய இன்னோசைக் கூறுகளை (Tonemes), ஏனைய மொழியின் ஒலியன்களைப் (Phonemes) பகுத்துக் காண்பது போலவே பகுத்துக் காண்க. அழுத்தம் (Stress), இன்னோசை (Pitch) போன்றவற்றையும் இவ்வாறே ஒப்பிட்டுப், பொருள் வேற்றுமை செய்து பாகுபடுத்துக. இலத்தீன் முதலாகிய மொழிகளில், காலக் கூறுகளை (Duration) அடியாகக் கொண்டு, வேறுபடுத்திக் காணும் ஒலிக்கூறு களும் உள. இவற்றிற்குக் கால ஒலிக்கூறு (Chroneme) என்று பெயர். இவற்றையும், மேற் குறிப்பிடப்பட்ட முறையில், ஒரு சூழ்நிலைப் பொருள் வேறுபாட்டு முறையில், இணைச்சொற்களை ஒப்புமைப் படுத்திக் காணலாகும்.

5.3. ஒலியனும், குறியும் (சொல்) (Phoneme and sign)

மக்கள் பேசிவரும் இயற்கை மொழிகள் (Natural languages) யாவும் குறிகளின் அமைவேயாகும் (System of signs). இக்குறிகள், செய்தி அல்லது சிந்தனையைச் சுமந்து செல்லுதலால், குறிகளின் பிணைப் பமைவு அல்லது மொழி, செய்திச் சரக்கைச் சுமந்து செல்லும் தொடர் வண்டியாகிய, பொருள் சுமக்கும் கருவியாகின்றது. இதனால், மொழியில், குறிக்கும், பொருளுக்கும், மொழிப் பயன்பாட்டில் ஓர் உறவு ஏற்படுகின்றது. இவ்வாறான சொல், பொருள் என்னும் இருவேறு கூறுகளின் (Sign and concept) பிணைப்பால் அல்லது தொடர்பால் ஏற்படும் ஒலியோட்டமே, மொழி.

விதி : Σ Sign of ; $\check{\Sigma}$ - Meaning of .
குறி (Sign/S)
பொருள் (Meaning/m)
S Σ m (S, 'the sign of ' m). M $\check{\Sigma}$ s (M, ' the meaning of ' s)
- (Shaumyan, Sebastian, 1987: 4)

இவ்வாறான இருவகை அமைவுக் கூறு, இவற்றின் தொடர்பு, தொடர்ச்சி, இவற்றின் கட்டமைவு, இடைப்பட்ட நிலைகள், இடைப்பட்ட விதியமைவு முதலானவற்றால் அமையும் ஒரு கூட்டமைப்பே, மொழி.

குறிப்பிடப்பட்ட குறிகள், சில பல ஒலிக்கூறுகளின் ஆக்கம் அல்லது செயப்படு பொருள். இத்தகைய ஒலிக் கூறுகளே (Linguistic

elements), ஒலியன்கள் (Phonemes or diacritics or distinguishing or distinctive elements). இவற்றிற்குப் பொருளில்லை. இவற்றால் ஆக்கப்படும் குறிகளுக்குப் பொருளுண்டு. ஆகப் பொருட் குறிப்பில்லாத ஒலியன்களால் (Phonemes) ஆக்கப்பட்டுப் பொருளைக் குறிப்பது குறி (Sign). குறி, தன்னிலையும், தன்னுள் ஒலியன் நிலையும் ஆகிய இரு நிலைகளையுடையது. குறி தரும் பொருளும், ஒரு குறியாகி வேறொரு பொருளைக் குறித்தலுமாகும்.

ஒலியலை	> ஒலியன்	>< குறி	> பொருள்	> பொருள்
(Sound waves)	(Phoneme)	(sign)	(Meaning+sign)	(Meaning + sign)

இத்தகைய பொருட்குறிப்பில்லாத ஒலியன்கள், குறிகளை வேறுபடுத்துகின்றன. அஃதாவது, அவற்றின் பொருளை வேறுபடுத்துகின்றன. பொருள் வேறுபாட்டிற்குக் குறி வேறுபாடு. குறி வேறுபாட்டிற்கு ஒலியன் வேறுபாடு. இவ்வாறு, சில பல ஒலியன்களைக் கொண்டு, அவற்றின் வேறுபாடு கொண்டு, பல்லாயிரக் கணக்கான பொருள் வேறுபாடுடைய குறிகளை ஆக்கிப் பெருக்கலாம். இவைகளைக் கொண்டதே மொழியும், மொழி அகர முதலி முதலியனவுமாம். ஆக, ஒலியனின் செயல், குறிகளை வேறுபடுத்தலே அல்லது அவற்றின் பொருள் வேறுபடுத்தலேயாகும்.

ஆண்	ஈம்	ஊண்	ஏம்
ஆம்	ஈன்	ஊன்	ஏன்
ஆன்	ஈர்	ஊர்	ஏய்
ஆய்		ஊழ்	ஏர்
ஆர்			ஏல்
ஆல்			ஏழ்
ஆழ்			
ஆள்			

- ஆ, ஈ, ஊ, ஏ

குறிப்பிடப்பட்டன யாவும் (21 +4 = 25) சொற்கள் அல்லது குறிகள் (Signs). இவை பொருளுடையன. இவை ஆவதற்கு அடித்தளமாகிய, 'ஆண்' முதலியன, பொருளற்ற ஒலியன்கள். அவை 12. இவ்வொலியன்களின் இணைவு, வேறுபாட்டு நிலை காரணமாக, 21 சொற்கள், பொருள் வேறுபட ஆக்கப்பட்டுள்ளன. 'ஆ,ஈ,ஊ,ஏ' என்பன பொருள் தாரா ஒலி நிலையில், ஒலியன்கள். பொருள் தரும் நிலையில், தனி நிலையில், சொற்கள் அல்லது குறிகள் (Signs). உயிருடல் ஆக்கத்தில், ஈருயிரணு நூறாயிரக்கணக்காகப் பெருகுவது போல, ஒரு சில ஒலியன்களால், இணைவு, வேறுபாடுகளால், நூறாயிரக்கணக்கில் சொற்கள் அல்லது குறிகள் உருவாகின்றன. உடம்பில் உயிரணுக்களின் சேர்க்கை, உறுப்பும், அவற்றின் சேர்க்கை உடலுமாவது போல, ஒலியன் சேர்க்கை சொற்களாகி, அவற்றின் சேர்க்கை, சொற்றொடராகி மொழியமைப்பைப் பெறுகின்றது. உடலாக, உயிரணுவின் இன்றியமையாமை போல, மொழி அல்லது தொடராக உயிர்க் காற்றொலியனின் இன்றியமையாமையாகும்.

ஒலி

இயல் | செயல்

காற்றலை (ஒலியியல் Physical feature) → ஒலியன் (ஒலிச்செயல் Function)

ஒலியனின், அவற்றாலாகும் பொருள் தரும் சொற்களின் (குறி) கட்டுக்குள்ளமைந்த, மாற்றி மாற்றிக் கூட்டியாக்கும், பல்வேறு கூட்டமைப்புக் (Polytectonics) கொண்டதே, மொழி. ஒலிவடிவும், பொருளும் ஒரு சேரக் கொண்டதே குறி என்ற கொள்கை மாறி, ஒலியன் இணைவு வேறுபாட்டால் அமையும் வேறுபட்ட குறிகள், வேறுபட்ட பொருளைக் குறிக்கும் அல்லது ஒலியன் இணைவு வேறுபாட்டால் பொருள் வேறுபட அமையும் வேறுபட்ட குறிகள், என்பதாயிற்று. இதனால், குறிகளின் ஒலி வடிவ வேறுபாட்டிற்கும், பொருள் வேறுபாட்டிற்கும் ஒலியனே காரணம் என்பதாகின்றது.

குறியியல் (Semiotic theory) பொருள் தரும் குறிகளில் அல்லது சொற்களில் தொடங்குகின்றது. அது, அதற்கு முன், பின் இரு பார்வைக் கூறுகளைக் கொண்டது. முற்பார்வை, குறியாகிய அது ஆவதற்கு அடிப்படைக் கூறுகளை அல்லது ஒலியன்களைக் குறித்தது. பிற்பார்வை, குறியாகிய அதனாலாகும் தொடர்களைக் குறித்தது. முன்னையது ஒலியிலக்கணத்தைக் (Phonology) கொண்டது. பின்னையது, அதனோடாகிய சொல் (அதன் தொடருமாம்) இலக்கணத்தைக் (Grammar) கொண்டது.

ஒலியன் (Phoneme) ← குறி (சொல்) (Sign or word) → தொடர் (Sentence)

↓

ஒலியியல் (Phonology) | சொல்(தொடர்)இலக்கணம் (Grammar)

1. ஒலிப்பியல்புகள் → ஒலியன் → 2. சேர்க்கை ஒலிப்பியல்புகள் - சொல்லில்

(Distinctive features) (Phoneme) ← (Combinatory variants in signs)

இருவகைக் கூறுகளின் ஒன்றுபாடே ஒலியன். மொழியின் அடித்தளக் கூறுகளாகிய ஒலியனின் கட்டமைப்பு இயல்புகளே ஒலி விளக்கவியல்புகள் (Distinctive features). இவை மொழியின் அடித்தளச் செயற்கூறுகளின் (Functional segments) இயல்புகள். குறியியலில் மொழியின் அடித்தளப் பொருட்கூறு குறி அல்லது சொல் (Sign or word). அதன் அடித்தள ஒலிக்கூறே, ஒலியன். அதன் இயல்பே விளக்கவியல்புகள் அல்லது வேறு பாட்டியல்புகள் (Distinctive features) என்ன, அமைப்பியலில், மொழியின் அடித்தளப் பொருட்கூறு

உருபன் (Morpheme). அதன் அடித்தள ஒலிக் கூறு, ஒலியன். அதன் இயல்பே, விளக்கவியல்புகள் அல்லது வேறுபாட்டியல்புகள் என்னும். இரண்டிடை வேற்றுமை அடித்தளப் பொருட் கூறு குறித்தது. மொழியின் இரு நிலையாகிய ஒலிக் கூறுகள், அவை உணர்த்தும் பொருட்கூறுகள் இரண்டும், தனி நிலையும் (Simple), கூட்டு நிலையும் (Complex) ஆகிய இரு நிலைகளை உடையன. இரு நிலையிலும் அடித்தளத் தனிக் கூறுகளின் பல்வேறுபட்ட, அடுக்கியல் நிலை, கூட்டு நிலைகள் அளவிறந்து காணப்படினும், விதிக்குட்பட்டன. மொழியின் விதிப்படி, அதன் ஒலியடிக் கூறாகிய ஒலியன், உயிர் என்றும், மெய் யென்றும் இரு வேறு முரண்பட்ட எதிர் கூறுகளாகக் (Opposition and contrast) காண்பன போல, மொழியில் பல நிலைகளில், இரு வேறு எதிர் கூறுகள் (Binary oppositions) காணப்படும். உலகின் வட, தென் துருவங்கள் தொடர்புடைய எதிர்நிலைகள் போன்றே, மொழியிலும், அதன் கூறுகள் தொடர்புடைய எதிர் நிலைகளாகத் தோன்றும். இவ்வாறு வேறுபடும் தொடர்பே, மொழி. இத்தகைய வேறுபடு கூறுகளின் இணை தொடரும் சிலபல கட்டுக்குட்பட்டனவே. இத்தகைய கட்டமைவு, ஒலிப்பெளிமைக்கும், ஒரு மொழியின் தனியமைவுப் புலப்பாட்டிற்கும் உதவும்.

ஒலிப்புக் கடலிலிருந்து சில ஒலிக் கூறுகள் அல்லது ஒலியன்கள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு, மொழியாக்குவது, ஒரு நுண் கலையமைவாகும். இத்தகைய ஒலியன் குறித்த ஒலிக் கலைப் பகுதி ஒலியனியல் (Phonemics or phonology, or phonematics or functional phonetics) எனப்படும். ஒலிக் கூறாக உருக்கொண்டு மொழியில் செயல்படுவதால், அல்லது மொழியாவதற்கு அடிப்படையாகப் பயன்படுவதால் இப் பெயர்த்து என்னலாகும். மொழியில், ஒலியன்கள் தம்மிடை வேறுபடுதலே, அவற்றின் செயல். அவற்றின் உள்ளீடு வேறுபடு விளக்கவியல்புகள் (Distinctive features). சில இயல்புகளால் அமைந்த ஒலியன்களின் வேறுபடு செயலே, மொழி.

மாற்றிலக்கணக் கோட்பாட்டின் ஒலியன் பார்வை வேறுபடுகின்றது. பேச்சுக் கடலில் இலக்கணமமைந்த சொற்றொடர்களைக் கண்டு, அவற்றை வகைப்படுத்தி, விதிப்படுத்தி அவற்றால் எவ்வகைச் சொற்றொடரையும் காண்பது. பின், பொருளுக்குச் சிறப்புக் கொடாது புறப்படுத்திச், சொற்றொடரின் அண்மையுறுப்புக்களை (Immediate constituents) காண்பது. இவ்வாறான உறுப்புப் பகுப்பில், இறுதியில் ஒரு பொருளுடைய உருபன் (Morpheme) வர, அதன் அமைப்பை (Morphophonemic structure) ஒலிப்புக் கூறளவில் கண்டு, அதனால் அதன் உறுப்பாகிய ஒலியனைப் பகுத்தறிந்து, பின் அதன் ஒலியியல்பு (Phonetics) காண்பது, ஆக்க இலக்கண (Generative grammar) முறை. அஃதாவது, சொற்றொடரிலிருந்து பகுப்பு முறையால் ஒலியனைக் கண்டு, அதன் இயல்பறிவது.

பொருள் புலப்பாட்டிற்குதவும் ஒலி வடிவமே, ஒலியன். மேடும், பள்ளமுமாகும் அல்லது சிமையமும், சாய்வுமாகும் மொழிக் கூறாகிய

அசையின் ஆக்க அடிக் கூறுகள், ஒலியன்கள். இவை, நிறை தடை, குறை தடை, தடையின்மை, முதலிய பல்வேறு வகை ஒலிப்பியல்புகளை யுடையன. ஒவ்வோர் ஒலியனும் வேறுபடு நிலையால் தன்னோடு பிற ஒலியனையும் உணர்த்தும் இயல்பினது. பேச்சுப் பகுதியைப் பாகுபடுத்திச் செல்லுங்கால், இறுதியாகப், பொருளோடு ஆகும் அடித்தளக் கூறு உருபன் (Morphene). இவற்றைப் பொருளாலும், ஒலியாலும் வேறுபடுத்தும், ஆயின், பொருட் குறிப்பில்லாத, இவற்றின் அடித்தளக் கூறுகளே (ஒலியன்கள்), வேறுபடு விளக்கவியல்புகள் (Distinctive features). வேறுபடு விளக்கவியல்புகள் என்பன, இன்னிசைக் கூறுகள் (Prosodic features), இன்றியமையாத, இயல்பான, அடிப் படைக் கூறுகள் (Inherent features) (ஒலியன்கள்) என இருவகைப்படும். இவ்விரு அடித்தளக் கூறுகளாலும் ஆக்கப்பட்டனவே, உலக மொழிகள் அனைத்திலுமுள்ள உருபன்களின் அல்லது சொற்களின் தொகுதி (Morphological/lexical stock) - (Jakobson, Roman, 1980:14, 33, 40; 1990: 113,256). இதனால், ஒலியன்களும் (Phonemes), அவற்றின் உள்ளீடாகிய, ஒலியாக்கவியல்புகளைப்போல, வேறுபடு விளக்க வியல்புகள் (Distinctive features) எனப் பெயர் பெறுகின்றன. எனவே, ஒலியன்களும், அவற்றின் ஆக்க முதலியல்புகளும் (Bundles and their features) இவ்வாற்றால் ஒன்றுபடுகின்றன. நேர், எதிர் மின்னோட் டங்களின் சேர்க்கை ஒளி விளக்கை உருவாக்குவது போலப், பல வேறுபடு விளக்கவியல்புகளின் சேர்க்கை, ஒலியனை உருவாக்கு கின்றது. மொழி உருவாக ஒலியன் சேர்க்கையோடு (Combination), எவ்வொலியனை மாற்றிச் சேர்க்க வேண்டும் என்ற தேர்வும் (Selection) இரு இன்றியமையாத செயல்களாகும். ஆக, ஒலிப்புறுப்புக்களின் செயலால், பொதுவாக நுரையீரலிலிருந்து, சிறப்பாகக் குரல்வளை யிலிருந்து புறப்படும் ஒலியலை, சிலபல ஒலிப்பியல்புகளைக் கொண்டு வேறுபடு ஒலியன்களாக, உருவாகி, இணைந்து, பொருள் புலப்படுத்தி மொழியாகின்றது. குறியும் அல்லது சொல்லும், தொடரும், பொருளும், இலக்கணமும், செய்திப் பரிமாற்றமும் ஆகிய மொழி குறித்த யாவும் ஒலியனை, அதன் இணைவை அடிக் கொண்டனவே. இவை, ஒலிப்பில், சில அடிப்படையான, சிறப்புடைய (Basic), சில சிறப்பில்லாத (Marginal) வேறுபாடுகளை (Variants- combinational) உடையனவாயினும், தம் நிலையில், என்றும் சொல்லத்தக்க நிலையில் ஒலி வேறுபாடில்லன (Invariants).

5.4. ஒலியனின் உருவும், செயலும் (Phonemic form and function)

மொழி என்பது குறிகளின் அமைப்பு (System of signs). உருபன், சொல், சொற்றொடர், முதலிய எல்லாக் குறி(முறை)களும் தனித் தனியே ஈரியல்புகளையுடையன. அஃதாவது, உணர்வு நிலையும் (Sensible or perceptible), அறிவு நிலை அல்லது செய்தி நிலையும் (Intelligible or communicative) ஆம். அஃதாவது, ஒலியும், பொருளும் (Sound and meaning or the signifier and the signified) உடையன. மொழிக் குறியின் (Sign or semiotic unit) இவ்விருவகை இயல்புகளும் ஒன்றை

யொன்று தழுவிச் செல்லும் இயல்பின. பொருள் குறிக்கும், கடை நிலையாகிய உருபனின் உட் கூறுகளாகிய ஒலியன்களும் (Phonemes) இவ்விருவகை இயல்புகளையுடைய குறிகளே (Signs or semiotic units). இவ்வொலியனாகிய குறியும், உருபன் போல ஒலியிருந்தும், அதனைப் போலக் குறிக்கும் பொருளில்லது. இருப்பினும், மொழியின் உருபன், சொல், தொடர் முதலிய குறிகளைப் போல ஒலியும்,அவற்றிற்கில்லாத மற்றோர் வகைப் பொருள் அல்லது செயற்புலப்பாடும் (Signifier and signified or sensible and intelligible factors or two fold semiotic characters) உடையது. அதன் ஒலியியல்பென்பது, ஒலிப்பியல்புகளால் அமைந்தது. அதன் பொருளியல்பென்பது, அதன் செயலியல்பு. அஃதாவது, ஓரொலியன், ஓர் உருபன் அல்லது சொல்லில் ஓரிடத்தில் நின்று செயலாற்றும் போது, அவ்விடத்திலேயே நின்று செயலாற்றும், அம்மொழியின், மற்றோர் ஒலியனாகிய பொருளை அறிவித்தலே யாகும். தன்னிடத்தில் நின்று, அவ்வுருபன் அல்லது சொல்லின் பொருளை வேறுபடுத்தும், பிற ஒலியனை அல்லது ஒலியன்களை அறிவிக்கும் பொருள் அல்லது செயலுடையது, ஒலியன். எனவே, ஒலியனும் ஒரு குறியே. அதற்கும், ஏனைய குறிகளைப் போல் உணர வைக்கும், அறிய வைக்கும் (ஒலியும், பொருள் அல்லது செயலும்) ஈரியல்புகள் உள (The Phoneme is purely differential and contentless sign)- - (Jakobson, Roman, 1990: 50, 230).

ஒலியன்கள் தம்மில் வகையும், தொகையும், இயைபும், இணைவு முடையன. உயிர் - மெய், உயிருள் குறில் - நெடில், தனியுயிர் - கூட்டுயிர், இதழ் குவிவுயிர் - இதழ் குவியாவுயிர், உயர் நிலையுயிர் - தாழ் நிலையுயிர், முன்னுயிர் - பின்னுயிர், செறிவுயிர் - சிதர்வுயிர், தெளிவுடையுயிர் - தெளிவில்லுயிர் என்பனவாகவும், மெய்யுள், வலி, மெலி, இடை என்பனவாகவும், வகையும், இணைந்த தொகையும் பெறும்.

உயிருள், அ ஆ, இ ஈ, உ ஊ, எ ஏ, ஒ ஓ, ஐ ஔ என்பனவாகவும் அ, ஆ - இ,ஈ,எ,ஏ,ஐ - உ,ஊ,ஒ,ஓ, ஔ என்பனவாகவும், மெய்யுள் கங, சஞ, டண, த ந, ப ம, றன என்பனவாகவும், ல, ன, ற - ள, ண, ட - ழ,ண, ட என்பனவாகவும், பிறவாறும் தம்முள் இயைபு பெறும். ங்க், ஞ்ச், ண்ட், ந்த், ம்ப், ன்ற் என்றிவ்வாறாக இணைவு பெறுமேயன்றி, இவற்றின் மாறிய நிலை இல்லை. க்க், ச்ச், த்த், ப்ப் - இவ்வாறான இணைவு நிலையன்றிப் பின்னைய மெய் பிற மெய்யாமாறிணைவில்லை. இவ்வாறு பிற. ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் உயிர், மெய் என்ற வகையும், அவற்றின் உள்வகையும், தொகையும் உள. ஆங்கிலத்தில், /pb, td, kg, fv, sz/ என்பன போன்ற இயைபும், /qu, sk, sp, st/ போன்ற இணைவும், /sb, sd, sg/ போன்ற இணைவின்மையும், பிறவுமாகிய பல. உலக மொழிகளில் ஒலியன்களின் வகை, தொகை, இயைபு, இணைவு இவ்வாறு பிறபலவாம். ஒலியழுத்தம் (Stress), இன்னோசை (Pitch) முதலிய மிகைப் பகுப்பொலியன்களிலும் (Suprasegmental elements), இன்னோசை மொழிகளின் (Tone languages) அடிக் கூறுகளிலும்

(Tonemes) குறிப்பிடப்பட்ட வகை, தொகை, இயைபு, இணைவுகளைக் காணலாகும். மொழியின் இன்றியமையாத, வேறுபடாத (Inherent and Invariant) அடிக்கூறாகிய பகுப்புடை ஒலியன்களும், அவை தவிர்ந்த இன்னிசைக் கூறுகளாகிய (Prosodial elements) மிகைப் பகுப் பொலியன்களும் இணைந்தே மொழியில் செயல்படும்.

ஓர் உரையாடல் (Discourse) மொழியின் பெரிய உறுப்பு. மிகச் சிறிய உறுப்பு ஒலியனின் உள்ளீடாகிய இயல்புகள் (Distinctive features) என்பதுமாம் - (Jakobson, Roman, 1990: 111). உலக மொழிகள் யாவற்றிலும் உயிர், அ,(a), மெய் /த்,ப்/ (t,p) - காணப்படுகின்றன. உயிர்களுள் /ɛ,ɔ/, மெய்யில் /C/ பல மொழிகளில், இடம் பெறவில்லை. ஒலியன்களில் இவ்வாறு உலகந்தழுவிய ஒன்றுபாடு (Universals) குறிப்பிடத்தக்கதொன்று. ஒலியன்களின் ஒற்றுமை (Reduntant feature), வேற்றுமை (Distinctive feature)யோடாகிய தொடரே மொழியாவது, ஊன்றிக் கருதத்தக்கது.

மொழி, பல நிலை உறுப்பும், செயலும் உடையது. உலக மொழிகளோடு சில நிலை ஒற்றுமையும், பல நிலை வேற்றுமையும் உடையது. இந்நால்வகை நிலையும் மொழியின் அடித்தள உறுப்பாகிய ஒலியனுக்கும் உண்டு. அதன் செயல், அதனைப் போன்ற, அம்மொழியின் பிற ஒலியன்களிலிருந்து, தான் வேறுபடுதலும், அவற்றைக் குறிப்பிட்டு வேறுபடுத்தலும், மொழியின் பிற உறுப்புக் களின் பொருள் வேறுபாட்டிற்குத் தான் காரணமாக நிற்றலுமாகும். ஆக, ஓரொலியனின் செயல், அம்மொழியின் இரு வகை இணை வோட்டமாகிய ஒலி,பொருள் இரண்டன் வேறுபாடு குறித்தலாகும். மொழியின் உயிர் நிலையாகிய இவ்விரு செயல்களையும் செய்கின்றன. அம்மொழி ஒலியன்கள். ஒரு மனிதன், வாழ்வில் பல தோற்றம், பல செயல் செய்யினும், தன் பிறப்பியல்பில் வேறுபடாது நிற்றல் போல, ஒலியனும், செய்திப் பரிமாற்ற மொழி வாழ்வில், பல தோற்றம் (Phonetic variants), பல செயல் செய்யினும், தன் பிறப்பியல்பாகிய வேறுபாட்டுத் தன் விளக்க ஒலிப்பியல்பில் (Distinctive features) திரியாது (Invariant or phonemic constant) நிற்கும். மொழியின், முதல், இடை, கடையாகிய இடங்களில் ஒன்று, பிறிதொன்றற்கு ஈடாகும் (Paradigmatic) நிலையிலான, மொழியின் அடிமுதல் ஒலிக்கூறாகிய ஒலியன்களின் தொடரில் (Syntagmatic), இணைந்தாகும் கூறுகளாகிய சொற்களின் ஈட்டம் (Lexicon), சில வகைகளுக்கு (Categories) உட்படுத்தப்பட்டு, இயைபுபடுத்தப்படும் போது, இலக்கணம் (Grammar) ஆகின்றது. ஒலியன்களின் வேறுபாட்டோடு கூடிய இணைவே, ஒரு மொழியின் சொற்களின் ஈட்டம். இதுவே ஒலியனின் அடிப்படைச் செயல். ஒரு மொழியின் ஒலியமைப்பு, இவ்வொலியனை அடிக்கொண்டது.

மொழியின் ஒலியன்கள், தம்மிடை வேறுபாடு காட்டுவதோ டன்றிச் சொற்களையும், அவற்றின் பொருட்களையும் வேறுபடுத்திக்

காட்டும். ஒலியன்களில் உயிரொலிகளுக்கெனவும், மெய்யொலிகளுக்கெனவும் தனித்தனி ஒலிப்பியல்பின் பொதுமைகள் காணப்படுகின்றன. ஆயின், மொழிகளிடை ஒன்று போன்று தோற்றமளிக்கும் ஒலியன்களிடை, வேற்றுமை ஒலிப்பியல்புகள் உள.

5.5. ஒலிப்பியல்பு வேற்றுமை (Feature phonetic difference)

ஓர் ஒலிப்பியல்பு (Distinctive feature) வேற்றுமையுடைய இணை சொற்களிடைப், பொருள் வேற்றுமைப்படுமாயின், இத்தகைய வேற்றுமையை, நுண் பொருட்பார்வையில், ஓரியல்பு வேற்றுமை (Minimal distinction) என்பது. எ - டு : bill - pill, vill - fill, dill- till, gill-kill - (Initial voice - voiceless feature difference only). தொடர்ந்து இரண்டு, மூன்று முதலிய ஒலிப்பியல்பு (Distinctive feature) வேற்றுமை, ஓரிடத்திலேயே காணுமாயின், அவை, முறையே, ஈரியல்பு (Duple), மூவியல்பு (Triple) வேற்றுமை என்பனவாகப் பெயர் பெறும்.

எ - டு :

bill to till (Duple distinction- initial)

1) bill-dill (Bilabial vs dental or alveolar difference only-both,voiced)
2) dill-till (Voiced vs voiceless, difference only-both,dental or alveolar) Thus, bill to till- (bill-dill, > dill-till)- Duple distinction.

bill-sill - Triple distinction

1) bill-vill (Both voiced - bilabial vs dentolabial, difference, only)
2) vill-fill (Both fricatives - dento labial-voice vs voicelessness difference, only)
3) fill-sill (Both voiceless fricatives - dentolabial vs alveolar - feature difference, only)

Thus bill to sill- (bill-vill > vill-fill > fill -sill) - Triple distinction (feature) - (Jakobson, R., 1990: 224, based on Daniel Jones).

கார் - தார் (முதனிலை-இரண்டும் அதிர்வில் வெடிப்பொலிகள்- மெல்லண்ணம் x பல்- எனும் இட வேற்றுமை ஒன்று. ஓரியல்பு வேற்றுமை)

யார் - வார் - முதனிலை- இரண்டும் அதிர்வொலிகள்-அண்ணம் x பல்லிதழியல்பு, அரையுயிரியல்பு x உரசொலியியல்பு எனும் ஈரியல்பு வேற்றுமைகள்.

தார் - நார் - முதனிலை - இரண்டும் பல்லொலிகள்-அதிர்வின்மை x அதிர்வுண்மை, வாய்வளி x மூக்குவளி, தடையொலி x தொடரொலி எனும் மூவியல்பு வேற்றுமை.

இவ்வாறு இடை, இறுதி நிலையிலும், பிற ஒலிப்பியல்பு வேற்றுமையிலும் காணலாகும்.

ப்/p - ஒலியனின் ஒலிப்பியல்புகளாவன:

1. மெய்யியல்பு (Consonantal)
2. உயிர்ச்சாயலின்மை (Non-vocalic)
3. வாய்வளி (Oral)
4. சிதர்வு (Diffuse)
5. நிறை தடை (Obstruent or abrupt)
6. இறுகொலி (Tense)
7. தெளிவின்மை (Grave)
8. குறை இன்னாவொலி (Non-strident or mellow)

/b/ - குறிப்பிடப்பட்ட ஒலிப்பியல்புகளில் (6) தவிரப் பிற யாவும் உள. (6) நெகிழொலி (Lax). pin, bin- என்ற சொல்லிணையில், முதனிலையில், இறுகல், நெகிழல் (அதிர்வின்மை, அதிர்வுண்மை) ஒலிப்பியல்பில் மட்டும் வேற்றுமை இருப்பதால் ஓர் ஒலிப்பியல்பு வேற்றுமை (Minimal feature distinction).

க்/k- குறிப்பிடப்பட்ட ஒலிப்பியல்புகளில் (4) தவிரப் பிற யாவும் உள.

(4) செறிவு (Compact) - Pin - Kin அல்லது - பன் - கன், என்ற சொல்லிணையில், முதனிலையில், சிதர்வு, செறிவு ஒலிப்பியல்பு மட்டும் வேற்றுமை இருப்பதால், ஓர் ஒலிப்பியல்பு வேற்றுமை. இவ்வாறே பிறவுமாம்.

5.6. ஒலியன், முதன்மையும், துணைமையும் (Phoneme, primary and secondary)

இத்தகைய ஒலிப்பியல்புகள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிய நிலையில், ஒளிக்கதிர்கள் போலச் செறிந்து, ஒரு கட்டு அல்லது கூட்டாக, இவ்வமைப்பு முதனிலையாக (Primary) ஒலியனாகி, அது தொடர் செயல் நிலையில், துணைமையாகக் (Secondary) குறியாகின்றது. இத்தகைய இன்றியமையாத (Primary) பகுப்புடை ஒலியன்களோடு, ஒன்றன் மேல் ஒன்று அடுக்கிய நிலையில், துணைமையாகப் (Secondary), பகுப்பில் ஒலியன்கள் (Prosodial features) இணைந்து செயல்படக், குறியாகின்றது. மொழியமைகின்றது.

ஒலியன்களில் உயிரொலிகள் முதன்மை நிலையும் (Primary), மெய்யொலிகள் துணைமை நிலையும் (Secondary) பெறுகின்றன. உயிரொலிகளையும், மெய்யொலிகளையும் ஒலியன்களின் இரு முகங்கள் என்னலாம். ஒன்று, இன்னொலியது; மற்றையது, இன்னா வொலியது (மனிதனது நற்குணம், தீக்குணம் போல) அல்லது எடுப்பும், படுப்புமுடைய ஒலியன, அவை. இவற்றிடை இயைபும் பல. உயிரொலி ஒரு புறமாக, வெடிப்பொலி, உரசொலி மற்றோர் புறமாக ஒலியன் களிடை இரு துருவங்களாகும். மூக்கொலி,இடையொலி (Liquids), வழுக்கொலி (Glides) அல்லது அரையுயிர்கள், (Semi vowels) முதலியன இரு துருவங்களின் இடைப்பட்டன. உயிருள் - அ/a - நிறைவுடையது. மெய்யுள் - க்/k- நிறைவுடையது. உயிரொலியும், மெய்யொலியும்

இயைபும், இடைப்பட்ட வேற்றுமையும் உடையனவாயினும், மொழிக் குடும்ப வாழ்க்கையுள் இரு பான்மையன உயிரொலியும், மெய்யொலியும் கூறிய இயல்புகளையுடையனவாயினும், மொழி யிடைக்கலப்பில், சார்பில் ஒன்றன் சாயல் ஒன்றற்காம். ஒன்றன் ஒலிப்பியல்பில் மற்றொன்றன் ஒலிப்பியல்பு கலந்து, ஒன்று மற்றதன் கூறாகும். உயிருள் /i,u/ போன்றன மெய்ச் சாயல் சிறிதுடையன போன்று, மெய்யுள் /y,w/ போன்றன உயிர்ச் சாயலுடையன. மெய்யுள் மூக்கொலி, அதிர்வில் ஒலி போன்று, உயிருள்ளும் மூக்கொலியும், அதிர்வில் ஒலியும் மொழியுள் உள. ஒன்றனால் உலகப் பொருளாக்கம் இன்றி இரண்டன் இணைவாலாகும் ஆக்கம் போன்று, உயிர், மெய்யொலிகளின் இணைவால் மொழியாக்கம் ஆகும். அ → எ, ஒ → இ, உ → ய், (y), வ் (w), அரையுயிர் → ர, ல முதலிய இடையினம் (Liquids) → மூக்கொலி → உரசொலி → வெடிப்புரசொலி → வெடிப்பொலி → (ப், த், ற், ட், ச், க்) (அ → க) - என ஒலியன்களுள் இம் முறையில் ஒருவாறு ஒலிப்புத் தடையேற்றம் காணலாகும்.

6 இயல்பு (வேறுபாட்டியல்பு) ஒலிப்பியல் (Feature (distinctive) phonetics)

6.0. ஒலிப்பியல்பு/வேறுபாட்டியல்பு (Phonetic feature/distinctive feature)

ஒலியுறுப்புக்களின் அமைவு (Organic settings), *செயலால், ஒலிப்புறுப்புக்களின் அடித் தளத்திலிருந்து தோன்றி, அவற்றின் வழியாகப் பல வகை ஒலிப்பியல்புகளோடு* (Phonetic features) *வெளிவந்து, காற்று மண்டலம் வழிச் சென்று, காதில் விழும் ஒலியலைகள், பல்வேறு வடிவம் கொண்டு வருவன, அவ்வடிவிலேயே காதில் வீழ்கின்றன. வடிவங்கொள விடுப்பதும், வடிவங்கொளப் பெறுவதும் இல்லையேல் பொருள் புலப்பாடு அல்லது செய்திப் பரிமாற்றம் இல்லையாகும். வடிவங்கொள்ளவில்லையாயின் வெற்றொலியாகும். ஒலி, வடிவங்கொள்ள, அதனால், அதன் வழிச் செலுத்தப்பட்ட பொருளும் வடிவங்கொள்கின்றது அல்லது உருப்படுகின்றது. பொன் என்னும் பொருளால் வெவ்வேறு உருப்படியாவது போல, ஒலியென்னும் பொருளால் ஒலியன்கள் என்னும் உருப்படிவம் அல்லது வடிவங்கள் ஆகின்றன. பொன், பல உள்ளீடுகளாகிய இயல்புகளை அல்லது குணங்களைக் கொண்டிருப்பது போல, ஒலியும் பல உள்ளீடாகிய ஒலிப்பு இயல்புகளால்* (Phonetic features) *அல்லது குணங்களால்* (Characteristics) *ஆக்கப்பட்டது. பல இயல்புகளின் அல்லது குணங்களின் அல்லது உள்ளீடுகளின் கட்டு அல்லது கட்டமைப்புப் பொன்னாவது போல, பல ஒலிப்பியல்புகளின் அல்லது ஒலிப்புக் குணங்களின் கட்டு அல்லது கட்டமைப்பு* (Bundle) *அல்லது சேர்க்கை* (Combination) *ஒலியாகின்றது. பல இயல்புகளைக் கொண்ட பொன்னே வடிவங் கொள்வது போலப் பல ஒலிப்பியல்புகளைக் கொண்ட ஒலியே அல்லது ஒலியலையே* (Phone or sound) *ஒலியனாகின்றது. ஆக, ஒலியன்* (Phoneme) *என்பது பல ஒலிப்பியல்புகளால் ஆக்கப்படும் ஒலிக் கூறு* (Segment or unit). *இத்தகைய ஒலிப்பியல்புகள்* (Phonetic features - articulatory and acoustic) *தம்மில் வேறுபடுவதால், அல்லது தம்மில் முரண்படுவதால், ஒலியன்களை வேறுபடுத்துவதால், வேறுபாட்டியல்புகள்* (Distinctive features) *என்று பெயர் பெறுகின்றன. இவை ஒலியன்களின் இயல்புகளாக, அவற்றை விளக்குவதால், ஒலியன்களின் விளக்கவியல்புகள்* (Defining features) *எனினுமாம். குறிகளின்* (Signs) *பொருளை வேறுபடுத்துவதால் வேறுபாட்டியல்புகள் எனினுமாம்.*

6.1 வேறுபாட்டியல்புகளும், வேறுபாட்டுக் கூறுகளும் (உறுப்புக்கள்) (Distinctive features and distinctive components)

(1) பொன் என்பது ஒரு பொருள். அது, வண்ணம், நெகிழ்வு, அடர்த்தி முதலிய இயல்பு அல்லது குணங்களால் ஆக்கப்படுவது போலச் சில பல ஒலிப்பு இயல்புகளால் (Features) ஆக்கப்படுவது ஒலி அல்லது ஒலியன் என்பது ஒன்று. (2) கயிறு என்பது ஒரு பொருள். அது, பல துரும்புகளால் ஆக்கப்படுவது அல்லது முறுக்கியாக்கப் படுவது போலப் பல உள்ளுறுப்புக்களால் (Components) ஆக்கப் படுவது ஒலி அல்லது ஒலியன் என்பது ஒன்று.

வேறுபாட்டியல்புகள் (Distinctive features) என்பன, மேலும் பகுக்க முடியாத, மொழியின் கடைநிலை உறுப்புக்கள் அல்லது கூறுகள். இவற்றின் கூட்டாகிய கட்டே ஒலியன். இது, இதைவிடச் சிறிய கூறுகளாக அல்லது உறுப்புக்களாகப் (Components) பகுக்கப்படுவது (Jakobson, Roman, 1990: 245, 246, 398).

வேறுபாட்டியல்புகள் (Distinctive features) வேறுபடு கூறுகளின் (Distinctive oppositions) குணவியல்புகள். ஒலியனின் குணம் அல்லது இயல்பு, வேறுபாட்டியல்புகளால் விளக்கப்படுகின்றது. வேறுபாட் டியல்புகள், உறுப்பொலிப்பியல் (Articulatory), அலையொலிப்பியல் (Acoustic) வகையால் ஒலிப்பியல்புடையன. ஒலியனே, ஒலி வடிவத்தின் மிகச் சிறிய கூறு. வேறுபாட்டியல்புகள், ஒலியனின் உறுப்புக்கள் (Components) அல்ல. ஆயின், அதன் குணவியல்புகள் - (Shaumyan, Sebastian, 1987: 40, 48, 65). இதனால், மொழியின் மிகச் சிறிய கூறு ஒலியனே. அது, மீண்டும் உட்கூறுகளாகப் பகுக்கப்படாதது. வேறுபாட்டியல்பு கள், அதன் குணவியல்புகளே. ஒலியன் இயல்பினை விளக்குவன. மற்றொன்றிலிருந்து வேறுபடுத்துவன. குறியின் பொருள் வேற்றுமை குறிப்பன. அவை, ஒலியனின் உறுப்புக்களும் அல்ல. மொழியின் கடை நிலை உறுப்புமல்ல. வேறுபாட்டியல்புகள், ஒலியலைகளில் காணப் படுவன. இவை சேர்ந்த கட்டு, ஒலியனாகும் - (Bloomfield, Leonard, 1955: 79).

6.2. ஒலியும், ஒலியனும் (Phone and phoneme)

பேச்சின் ஒலிக் கூறு இரு நிலைகளையுடையது. இரு முகங்களை யுடையது எனினுமாம். ஒன்று, அதன் உள்ளீடாகிய பொருள் நிலை அல்லது அமைப்பு நிலை (Physical or material form). மற்றையது, அதன் செயல்நிலை (Functional). இரண்டும், மனிதனது உடலமைப்பும், அவன் செயலும் போல எனலாம். பேச்சொலிக் கூறுபாட்டின் அமைப்பு நிலை, ஒலி (Sound or phone). அதன் செயல் நிலையைக் குறிக்கும் போது ஒலியன் (Phoneme) என, ஒன்றே, இரு நிலை அல்லது முகங்களையுடையதாகின்றது.

ஒலியென்பது, பேச்சுறுப்பு முயற்சியால் ஏற்படும் ஒலியலை யாலாகியது, அல்லது பேச்சுறுப்பு முயற்சியால் ஏற்படும் ஒலியலை,

ஒலிப்பியல்புகளால் (Phonetic features) ஆகுவது. இது, சிந்தனையின் செயற்பாட்டினால், வடிவுடன் வெளிப்படுத்தப்பட, அது, காற்றில், ஒலியலையாக, ஒலிப்பியல்புகளாகச் செல்வது, தொலைபேசியில் வடிவுடன் பேசப்பட்ட பேச்சு, அலை வடிவாக, ஒலிப்பியல்புகளுடன், கம்பி வழிச் செல்வது போல என்க.

ஒலிப்பு → ஒலியலை → ஒலிப்பியல்பு → ஒலி (Articulation → sound wave → phonetic feature → sound)

ஆக, ஒலிப்பியல்புகளை (Phonetic features) கொண்டது ஒலி (Phone or sound). மற்று, இத்தகைய ஒலிப்பியல்புகளைக் கொண்ட ஒலியே, மொழியில், அதன் செயற்பாட்டில் (Function) ஒலியனாகின்றது. அஃதாவது, குறிப்பிடப்பட்ட ஒலி, பொருள் வேறுபாடு செய்யப் பிறவற்றோடு முரண்பட்டு, அல்லது பிறவற்றிலிருந்து வேறுபட்டு (Distinctive opposition), வடிவால் வேறுபடுகின்றது. முன் வேறுபாடு தெரியாத ஒலி, மொழியில் செயல்படும் போது, பிறவற்றிலிருந்து வேறுபட்டுத் தனிவடிவங் கொள்வதால், முன்னைய ஒலியிலிருந்து வேறுபட ஒலியனாகின்றது. ஒலியனாவது, வேறுபாட்டு எதிர்கூறு (Distinctive opposition) ஆவதால், வேறுபடு எதிர் கூறாவது, வேறு பாட்டியல்புகளால் (Distinctive features). எனவே, வேறுபாட்டியல்பு களால், வேறுபடு எதிர்கூறுகள், அவற்றால் ஒலியன்கள் ஆகின்றன.

வேறுபாட்டியல்புகள் → வேறுபடு எதிர் கூறுகள் → ஒலியன்கள் (Distinctive features → distinctive oppositions → phonemes).

ஆக, வேறுபாட்டியல்புகளைக் கொண்டது ஒலியன். மொழியில், குறிகளின் பொருள் வேறுபட, வேறுபாட்டியல்புகளால் அல்லது அவ்வியல்புகளைக் கொண்ட ஒலியனால், ஒலி வேறுபடச் செயல்படு வதால், வேறுபடு கூறாயிற்று.

வடிவுடன் தொலைபேசி வழி அனுப்பப்பட்ட கம்பி வழி வந்த ஒலியலை ஒலிப்பியல்புகள், அனுப்பப்பட்ட வடிவுடன் செவியில் விழுவது போலக், காற்றில் ஒலியலை ஒலிப்பியல்புகளாக வந்தன, வேறுபடு ஒலிப்பியல்புகளாக அல்லது ஒலியன்களாக, அனுப்பப்பட்ட வடிவிலேயே செவியில் வீழ்கின்றன. ஒலிப்பியல்புகளாலாகிய ஒலியே, வேறுபாட்டியல்புகளாலாகிய ஒலியனாகின்றது. அமைப்பு நிலை யாகிய அதுவே செயல் நிலையாகின்றது. நிலை வேறுபாட்டை விளக்கும் பெயர் வேறுபாடே தவிர, அதுவே, இது. ஒலிப்பியல்புகளே, செயலால் வேறுபாட்டொலிப்பியல்புகளாகின்றன. முன்னையதன் குணவியல்புடைய ஒலியே, செயலால், பின்னைய குணவியல்புடைய ஒலியனாகின்றது. பொருள், செயல் வேறுபாட்டால், இவ்வேறுபாடே யன்றி, இரண்டும் ஒன்றே.

1. அமைப்பு (Physical or formal)- தோற்ற நிலை :
   சிந்தனை-(Thought) → வடிவு பெற ஒலிப்பு (Articulation-formal) → ஒலியலை (Sound waves) → ஒலிப்பியல்புகள் (Phonetic features) →

ஒலி (Phone or sound) ⇒

2. செயல் (Functional)- மாற்ற நிலை :
வேறுபாட்டியல்புகள் (Distinctive features) → வேறுபாட்டு எதிர் கூறுகள் (Distinctive oppositions) → ஒலியன்கள் (Phonemes)- (based on Shaumyan, Sebastian, 1987: 40, 42).

3. ஒலிப்பியல்புகள் = வேறுபாட்டொலிப்பியல்புகள் = தம்மில் வேறுபடும் ஒலியன்கள்.

வேறுபாட்டொலிப்பியல்புகள் (ஒலியன்கள்) தம்மில் வேறுபடக் குறிகள் அனைத்தும் பொருள் வேறுபட்டு, எண்ணிறந்த குறிகளா வதால், குறிக் கலைக்கு அல்லது செய்திப் பரிமாற்றக் கலைக்கு (Semiotics) அடிப்படை வேறுபாட்டியல்புகளே எனலாம்.

6.3. இருவேறு முரண்பாடுகள் (Binary oppositions)

வேறுபாட்டியல்புகளின் வேறுபட்ட செறிவுத் திரள்கள் (ஒலியன்கள்) விதி அல்லது ஒழுங்குக்குட்பட்டும்-படாதும், பெரும் பான்மையும்-சிறுபான்மையும், தனிநிலையும்-கலவை நிலையும், விதி நடையும் - புறனடையும், எளிமையும் - அருமையும், முதன்மையும்-துணைமையும் என்றிவ்வாறான முரண்பட்ட கூறுகளாக வரும். (மொழி முழுமையும் இவ்வாறு காணலாகும், பிற கூறுகளிலும்) இவை முறையே, இயல்புடையதும் (Unmarked), வேறுபட்டதும் (Marked) ஆகும். மொழியில் ஒவ்வொன்றும் வேறு வேறு நிலைகளில் வேறு வேறாக இப்பெயர் பெறுதலுமாம்.

தமிழ்

1. தனியொலிகள் (Simple) இயல்பு (Unmarked) / கூட்டொலிகள் (Complex) - வேறுபட்டது (Marked) - அ,ஆ/ ஐ.ஔ.

2. வாயொலிகள் (Orals)- பெரும்பான்மை. இயல்பு (Unmarked) / வாயல் ஒலிகள் அல்லது மூக்கொலிகள் (Nasals). சிறுபான்மை-வேறுபட்டது (Marked) - க்,ச் / ங்,ஞ்.

3. வாயுயிர்கள் (Oral vowels)- எளிமை-இயல்பு (Unmarked) / மூக்குயிர்கள் - (Nasal/nasalised vowels)- அருமை-வேறுபட்டது (Marked) / a,ɛ,ɔ,œ/ã,ɛ̃,ɔ̃,œ̃/

4. உயிர்கள் (Vowels) - விதிக்குட்பட்டன - இயல்பு (Unmarked) / உயிர்ச்சாயலின (Approximants) - விதிக்கு ட்படாதன-வேறுபட்டது (Marked) - / a,e,o / y,w,h /.

5. புறஞ்செல்வளியன (Egressives)- விதி நடை - இயல்பு (Unmarked) / அகஞ்செல்வளியன (Ingressives) புறனடை - வேறுபட்டது (Marked)- உயிர், மெய் ஒலியன்கள்/'கிளிக்'குகள் (Clicks). /a,k /x/kl/.

6. உயிர், மெய்- முதன்மை அல்லது இன்றியமையாதன -இயல்பு (Un-

marked) / ஆய்தம் - துணைமை அல்லது இன்றியமைவது, வேறுபட்டது (Marked) /அ,க்/ / / ஃ/.

இவ்வாறு, வேறுபாட்டியல்புகள், சொற் பொருள் வேறாகச், சொற் பெருக்கத்திற்கு அடித்தளம் என்பது மட்டுமன்றி, அவை தம் திரட்சிகளாகிய ஒலியன்கள், இயல்பு - வேறுபட்டது, எனும், இரு முரண்பாட்டு வகைகளுக்கும், வழி வகுப்பனவாகும். இவ்வாறு, ஒலியன்கள் அல்லது வேறுபாட்டியல்புகளின் வேறுபட்ட திரள்கள் அனைத்தினையும் இவ்விருவகை (Binary) களுக்கு உட்படுத்தி, அல்லது இரு முரண்பாட்டிற்கு (Oppositions) உட்படுத்திக் காணவியலும் (Binary oppositions).

இதன்கண் மற்றோர் கூற்றும் கருதத்தக்கது. மேல் நிலை ஒலிப்பியல் அளவில், யாவற்றிலும், இருவேறு முரண்பாட்டுப் பாகுபாடு செல்லாது என்பது - (Ladefoged, 1971 - cited by Brakel, Arthur, 1983:8).

இருவகை வேறுபாட்டு நிலை (Binary oppositions)

1. உயிர் (Vocoids or vowels) vs மெய் (Contoids or consonants) /அ/vs/க்/
2. தனியுயிர் (Simple or monophthongal) vs கூட்டுயிர் (Complex or diphthongal) ஐ,ஔ ஒழிந்தன vs ஐ,ஔ
3. நெகிழுயிர் (Lax) vs இறுகுயிர் (Tense) /அ vs ஆ/ - அல்லது குறில் (Short) vs நெடில் (Long)
4. குவிவுயிர் (இதழ்) (Rounded) vs குவியாவுயிர் (Unrounded) /உ, ஊ, ஒ, ஓ, ஔ vs இ, ஈ, எ, ஏ, ஐ/
5. தாழ்நிலையுயிர் (Low vowels) vs உயர்நிலையுயிர் (High vowels) அ,ஆ vs அ,ஆ ஒழிந்தன. அல்லது திறப்புயிர் (Open vowels) vs மூடுயிர் (Close vowels). /அ,ஆ vs அ,ஆ/ ஒழிந்தன.
6. முன்னுயிர் (Front vowels) vs பின்னுயிர் (Back vowels)- /இ,ஈ,எ,ஏ, ஐ, vs உ,ஊ,ஒ,ஓ,ஔ/
7. நடுவுயிர் (Central vowels) vs நடுவல்லுயிர் (Non-central vowels) /அ, ஆ, vs அ,ஆ/ வொழிந்தன.
8. இடையுயிர் (Mid vowels) vs இடையல்லுயிர் (Non-mid vowels) / எ, ஏ,ஒ,ஓ,ஐ,ஔ vs அ,ஆ,இ,ஈ,உ,ஊ/
9. நிறை உயிர் (Full vowels) vs குறை அல்லது அரையுயிர் (Semi vowels) /உயிர் vs ய்/
10. செறிவுயிர் (Compact vowels) vs சிதர்வுயிர் (Diffuse vowels)- /அ,ஆ vs இ,ஈ,உ,ஊ/
11. தெளிவுயிர் (Acute vowels) vs தெளிவில் உயிர் (Grave vowels) /இ,எ vs உ,ஒ/.
12. செறிவில், சிதர்வில்லுயிர் (Non-compact and non-diffuse) vs செறிவு அல்லது சிதர்வுயிர் (Compact or diffuse) - /எ,ஏ,ஒ,ஓ, ஐ,ஔ vs அ,

ஆ (Compact) or இ,ஈ,உ,ஊ, (Diffuse)

13. இதழ்ச் சாயலில்லன (Non-labialised) vs இதழ்ச்சாயலின (Labialised or spread/ rounded) - அ,ஆ, vs இ,ஈ,எ,ஏ,ஐ- (Lip spread) /அ,ஆ vs உ, ஊ,ஒ,ஓ,ஔ (Lip rounded).

14. அதிர்வுடைமெய் (Voiced consonants) vs அதிர்வில் மெய் (Voiceless consonants) - மூக்கினம், இடையினம் (Nasals and liquids) vs வல்லினம் (Stops).

15. வாய்வளியன (Orals) vs மூக்குவளியன (Nasals) /வலி, இடை vs மெலி (மூக்கினம்)/

16. செறிவுடையன (Compact) vs சிதர்வுடையன (Diffuse) /க்,ங்,ச்,ஞ்,ய், ழ் vs ட்,ண்,த்,ந்,ப்,ம்,ர்,ல்,வ்,ள்,ற்,ன்/

17. தெளிவுடையன (Acute) vs தெளிவில்லன (Grave) /ச்,ஞ்,ட்,ண்,த்,ந்,ற், ன்,ய்,ர்,ல்,ள் → vs ப்,ம்,வ்,க்,ங்,ழ்/

18. தொடரொலிகள் (Continuants) vs தொடரல்லொலிகள் (Non-continuants or abrupt or obstruent) /மெலி, இடை vs வலி,

19. இயைபொலிகள் அல்லது ஓரிடவொலிகள் (Related sounds or homorganic sounds) vs இயைபில்லொலிகள் அல்லது வேறிடவொலிகள் (Non-related sounds or Heterorganic sounds) /கங,சஞ, டண,தந,பம,றன vs ய,ர,ல,வ,ழ,ள

20. இறுகொலிகள் (Tense sounds) vs நெகிழொலிகள் (Lax sounds) / வலி vs மெலி, இடை/

21. கடுப்பொலி (Strident) vs கடுப்பில்லன (Mellow)- / வலி vs மெலி, இடை/

22. நிறை மெய் (Full consonants) vs குறை மெய் (Half consonants) /வலி vs மெலி,இடை/

23. மெய் (Consonants) vs மெய்ச் சாயலின (Consonant-like) /ய வ் வொழி மெய் vs ய்/

24. வாய்நடுவழியன (Centrally released orals) vs வாய்ப்பக்க வழியன (Laterally released orals) - / வலி,ய்,ர்,வ் vs ல்,ழ்,ள்/

25. வாய் நிறை தடையின (Orally full stops) vs வாய்க் குறை தடையின (Orally partial stops)- /வலி,மெலி vs இடை/

26. இதழினம் (Labials) vs இதழல்லினம் அல்லது நாவினம் (Non labials or linguals) /ப்,ம்,வ் vs ப்,ம்,வ் ஒழிந்தன/

ஆங்கிலம்

1. செறிவு (Compact) vs சிதர்வு (Diffuse) /a vs i,u)/

2. செறிவில், சிதர்வில் உயிர் (Non-compact and non-diffuse vowels) vs செறிவு அல்லது சிதர்வுயிர் (Compact or diffuse vowels) /e,ɛ,o,ɔ/ vs /a/ - (Compact) /i,u/ - (Diffuse)

3. தெளிவுயிர் (Acute) vs தெளிவில்லுயிர் (Grave) - /i,e,ε vs u,o,ɔ/

4. இறுகுயிர் (Tense vowels) vs நெகிழுயிர் (Lax vowels) - /e, vs ε, o vs ɔ, i,u vs others/

5. தனியுயிர் (Simple or monophthongal vowels) vs கூட்டுயிர் (Complex or diphthongal or triphthongal vowels) - a,e,ε,i,o, ɔ, u, vs ai,εi, əi,ie,εə, au,əu,uə,ɔə and aiə,auə/

6. உயர்நிலையுயிர் (High vowel) vs தாழ்நிலையுயிர் (Low vowel)- /i,u, vs a / அல்லது மூடுயிர் (Close vowel) vs திறப்புயிர் (Open vowel)

7. இடையுயிர் (Mid vowels) vs இடையல்லுயிர் (Non-mid vowels) /e,ε,o,ɔ, vs a,ɑ, i,u/

8. முன்னுயிர் (Front vowels) vs பின்னுயிர் (Back vowels)- /i,e,ε,a vs u,o,ɔ,ɑ̃/

9. நடுவுயிர் (Central vowels) vs நடுவல்லுயிர் (Non-central vowels) - / ɨ,ʉ,ə,ɜ,ɐ vs i,e,ε,a (Front) u,o,ɔ,ɑ (Back)/

10. குவிவுயிர் (இதழ்) (Rounded vowels) vs குவியாவுயிர் (Unrounded vowels) - /u,o,ɔ vs i,e,ε,a,ɑ/

11. உயிர் (Vowels) vs உயிர்ச் சாயலின (Approximants). /a,ɑ,i,u,e,ε,o,ɔ vs y,ʝ,w,h,ɦ,r/

12. அதிர்வுடை மெய் (Voiced consonants) vs அதிர்வில் மெய் (Voiceless consonants) - / b,ḏ,d,j,g,β,ð,z,ʒ,l,m,n,ŋ,r,v,w,y vs p,ṯ,t,c,k,q,ɸ,θ,s,ʃ,h,f/

13. மூக்குவளியன (Nasals) vs வாய்வளியன (Non nasals or Orals) - m,n,ŋ, vs others.

14. நிறை தடையொலி (Occlusives) vs தொடரொலி (Continuants)- /p,b,ṯ,ḏ,t,d,k,g,c,j, vs others/.

15. கடுப்பொலி (Strident) vs கடுப்பில்லொலி (Nonstrident) வெடிப்புரசொலி (Affricates), உரசொலி (Fricatives) vs வெடிப்பொலி (Stops), மூக்கொலி (Nasals), பிரிவளியொலி (Laterals), வருடொலி (Flap), ஒற்றொலி (Taps), உருட்டொலி (Trilled), வழுக்கொலி (Glides).

16. இறுகொலி (Tense) vs நெகிழொலி (Lax) / p,ṯ,t,c,k,q,ɸ,θ,s,ʃ,f vs b,ḏ,d,j,g,β,ð,z,ʒ,v,l,m,n,r,w,y/

17. 'ஸ்'- ஒலி (Sibilant) vs 'ஷ்' - ஒலி (Shibilant) /s,z vs ʃ,ʒ/

18. இதழொலிகள் (Labials) vs இதழல்லொலிகள் அல்லது நாவொலிகள் (Non-labials or linguals) /p,b,ɸ,β,f,v,w,m vs others/

19. தூய மெய்கள் (Pure consonants) vs உயிர்ச் சாயல் மெய்கள் (Vocalic consonants)- Stops, affricates, fricatives and nasals vs liquids (l,r) and h,y,j,w/

20. இயைபுடை மெய்கள் (Related consonants) vs இயைபில் மெய்கள் (Non related consonants) /pbm,tdn,kgŋ,cjñy,fvw,sz ʃʒ vs l,r,h),

21. வல்லொலி (Fortis) vs மெல்லொலி (Lenis) /p,ṭ,t,c,k,q,ɸ,θ,s,ʃ,f vs b,ḍ,d,j,g,β,ð,y,z,ʒ,v)

22. தடையொலி (Obstruent) vs அஃதல் வழியது (Sonorant) வெடிப்பொலி, வெடிப்புரசொலி, உரசொலி vs அவையொழிந்தன.

23. செறிவுடையன (Compact) vs சிதர்வுடையன (Diffuse) /k,g,ŋ,c,j,ñ, vs p,b,m,f,v,t,d,n,l,r,w/

24. தெளிவுடையன (Acute) vs தெளிவில்லன (Grave) /c,j,ñ,t,d,n,l,r vs p,b,m,k,g,ŋ,f,v,w/

25. தட்டையொலி (Flat) vs அஃதல் வழியது (Non-flat). வாய் முன் அல்லது பிற்பகுதி இடுகிய ஒலிப்புடையன (Narrowed slit) vs விரிவொலிப்புடையன (Wider slit) - இதழ்ச் சாயல் (Labialisation), இதழ் குவிவு (Roundedness), மிடற்றுச் சாயல் (Pharyngealisation), வளைநாவியல்பு (Retroflexion), மெல்லண்ணச் சாயல் (Velarisation) இவற்றால் ஏற்படும் வாயின் இடுகிய அளவால் தோன்றும் உயிர், மெய்யொலிகள் vs இயல்பான உயிர், மெய்யொலிகள். 1. / w vs u / - 2. / ṭ,ḍ vs t,d /. தட்டையொலி (Flat) vs அஃதல் வழியது (Grooved). /θ,ð,f,v vs s,z,ʃ,ʒ/ என்பதுமாம்.

26. கூரொலி (Sharp) vs அஃதல் வழியது (Non-sharp) - அண்ணச் சாயலது (Palatalised) vs இயல்பானது (Plain) /t^j,d^j, vs t,d/

27. தடையில்லன (Vocalic & non-consonantal) vs தடையுள்ளன (Consonantal and Non-vocalic) உயிர் vs மெய்.

28. மெய்யொலிகள் (Consonantal and non-vocalic) vs உயிர்ச்சாயலும், மெய்ச்சாயலுமுடையன (Vocalic and consonantal) வெடிப்பொலிகள், வெடிப்புரசொலிகள், உரசொலிகள், மூக்கொலிகள் vs இடையொலிகள் (Liquids).

29. உயிர்ச்சாயல், மெய்ச்சாயலுடையன (Vocalic and consonantal) vs உயிர்ச் சாயல், மெய்ச்சாயலில்லன (Non-vocalic and Non-consonantal)- இடையொலிகள் (Liquids) vs வழுக்கொலிகள் (Glides).

30. முன்னொலிகள் (Anterior) vs பின்னொலிகள் (Posterior) - இதழ் முதல் பல்முகடு வரை vs அண்ண முதல் பின் பகுதி வரையுள்ள ஒலிகள்.

31. புறஞ்செல்லொலிகள் (Egressives) vs அகஞ்செல்லொலிகள் (Ingressives) - உயிர், மெய் vs 'கிளிக்' ஒலி.

32. மெல்லண்ண முன்னொலிகள் (Pre-velar) vs மெல்லண்ணப் பின்னொலிகள் (Post-velar) - வாயொலிகள் vs வாய்க் கீழ் ஒலிகள். பிற பல.

மொழிகளில் இவ்வாறான இரு வேறு முரண்பட்ட கூறுகள் (Binary oppositions), வேறுபாட்டியல்புகள் அல்லது ஒலியன்களிடைக் காணப்படும், இயல்பும் (Unmarked), வேறுபாடும் (Marked) ஆகிய இருவேறு முரண்பாடுகளைப் புலப்படுத்துகின்றன.

6.4. வேறுபாட்டியல்புகள் (Distinctive features)

பேச்சொலிக் கூறாகிய ஒலியன்கள், (Invariants or phonemes) வேறுபாட்டியல்புகளின் (Distinctive features) கட்டுக்கள். இத்தகைய ஒலியன்கள், சூழ்நிலைத் திரிபுகள் (Contextual or combinational variants) அல்லது மாற்றொலிகளின் (Redundant features) கட்டுக்கள் அல்லது பொதுமைகள். முன்னைய வேற்றுமை இயல்புகளாலும், பின்னைய ஒற்றுமை இயல்புகளாலும் அமைந்ததே ஒலியனாயினும், அதனை யாக்கும் ஒலிப்பியல்புகளின் மறுபடிவமாகிய வேறுபாட்டியல்புகள் மொழியில் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளாகின்றன. குறியின் அடிப்படைப் பொருள் வேற்றுமைக்கு இவையே காரணமாகின்றன.

6.4.1 வேறுபாட்டியல்புகளின் திரள்கள் அல்லது ஒலியன்கள் (Bundles of distinctive features or phonemes)

பகுப்பில் அல்லது மிகைப் பகுப்பொலியன்(Prosodic features) களாகிய, ஒலியழுத்தம் (Stress or force or amplitude), கால வளவு (Quantity or duration), இன்னொலி (Tone or pitch or frequency) அடிப்படையில், எடுப்புடை ஒலிப்பியல்பு (Sonority features), காலவளவு ஒலிப்பியல்பு (Protensity features), இன்னொலியியல்பு (Tonality features) என மூவகையாகப் பகுக்கப்பட்டு, அவை முறையே, 8, 1, 3 எனத் துணை வகை செய்யப்பட்டு, ஆகப் பன்னிரண்டு இணை முரண்களாகப் பாகுபடுத்தப்பட்டு, எம்மொழியோடும் பொருத்திக், கூறு செய்து காணலாகும் - (Jakobson, Roman and Morris, Halle, 1980: 40). அவை :

1. எடுப்புடை ஒலிப்பியல்பு (Sonority feature)

1. தடையில் வாய்நடுவழி ஒலிப்பு (Vocalic)/அஃதல் வழியொலி (Non-vocalic) - உயிர்/அல்லாதன.

2. தடையொலிப்பியல்பு (Consonantal)/ அஃதல் வழியன (Non-consonantal)- மெய்/அல்லாதன.

3. மூக்குச் சாயலின (Nasalised)/ மூக்குச் சாயலில்லன (Non-nasalised)- மூக்குவழியன (Nasals or nasalised)/ வாய்வழியன (Orals)

4. செறிவுடையன (Compact)/ சிதர்வுடையன (Diffuse) - வாய் நடுவழிக், குறுகிய போக்கில், ஆற்றல் மிகப், பின் குறுகி, முன் அகன்ற, வாயமைப்பில், வெளிப்படும் ஒலிப்பு/வாய்ப் பக்கம் வழிச், சிதர்வுற்று, ஆற்றல் குறைந்த, முன் குறுகிப் பின்னகன்ற வாயமைப்பில், தோன்றும் ஒலிப்பு. திறப்புடை உயிர்,

மெல்லண்ண, வல்லண்ண மெய்கள்/மூடுயிர், இதழ், பல், பல் முகட்டு மெய்கள்.

5. விரை தடையொலிப்பு (Abrupt)/ தொடரொலிப்பு (Continuant) நிறை தடையுடன், விரை திறப்புடன், ஆற்றல் மிக, வெளிப்படும் ஒலிப்பு/குறை தடையுடன் தோன்றும், தொடரும், ஒழுகிச் செல்லும் ஆற்றலோடு, வெளிப்படும் ஒலிப்பு. வெடிப்பொலி/ உரசொலி, பிரிவளியொலி முதலியன. வெடிப்பொலியில் வாய், மூக்குத்தடை, பின் வாய் முழுத்திறப்பு. எனவே, வெடிப்பொலிப்பு. மூக்கொலியில், வாய்த்தடையிருக்க, மூக்குத் திறந்திருக்க, மூக்குவழி ஒலிப்பு ஒழுகிச் செல்வதால், அவையும் தொடரொலி என்பதுமாம்.

6. கடுப்பொலி (Strident)/கடுப்பில் ஒலி (Non-strident or mellow). மிக்க இன்னாவொலி / அதன் மறுதலை. வெடிப்புரசொலி உரசொலி/ வெடிப்பொலி முதலிய பிற.

7. தடுக்கப்படுவது (Checked)/ தடுக்கப்படாதது (Unchecked). குறுகிய கால, மிக்க ஆற்றல் வெளிப்பாட்டொலிப்பு/ நீண்ட காலக் குறையளவு ஆற்றல் வெளிப்பாட்டொலிப்பு. குரல்வளைப் புறஞ்செல் மெய்யொலிப்பு (Ejective or glottalised consonants), அகஞ்செல்வளியொலிப்பு (Implosives), 'கிளிக்'கொலி (Clicks)/ இயல்பான மெய்கள் (Plain consonants).

8. அதிர்வொலிப்பு (Voiced)/அதிர்வில்லொலிப்பு (Voiceless). ஒலித்தசை அதிர்வலையுடைமை/அஃதின்மை. - மூக்கொலி, பிரிவளியொலி முதலியன / வெடிப்பொலி, உரசொலி முதலியன.

2. காலவளவு ஒலிப்பியல்பு (Protensity features)

9. இறுகொலிப்பு (Tense)/நெகிழ்வொலிப்பு (Lax). நீண்ட கால அளவு ஒலிப்பு. ஒலியழுத்தம் கூட, வேண்டிய தசை நார் இறுக்கத்தோடு ஒலிப்பது/குறுகிய கால அளவு. அழுத்தம் குறைந்த, தசை நார் நெகிழொலிப்பு. நெடில்/ குறில்.

3. இன்னொலி இயல்பு (Tonality features)

10. தெளிவொலிப்பு (Acute)/ தெளிவில்லொலிப்பு (Grave). வாயின் நடுப்பகுதி ஒலிப்புக்களாகிய அண்ண, பல், பல் முகட்டொலிப்புக்கள் (Palatal, dental and alveolar articulations)/வாயின் முன், பின் அல்லது முதல், கடையாகிய இதழ், மெல்லண்ண வொலிப்புக்கள் (Labial and velar articulations)

11. தட்டையொலிப்பு (Flat/அஃதல்வழியது (Non-flat). வாயின் முன் அல்லது பிற்பகுதி இடுகிய ஒலிப்பு (Narrowed slit)/ விரிந்த ஒலிப்பு (Wider-slit). இதழ்ச்சாயல் (Labialised), குவிவு (Rounded), மிடற்றுச் சாயல் (Pharyngealised), வளைநா (Retroflexed), மெல்லண்ணச் சாயல் (Velarised) உயிர், மெய்யொலிப்புக்கள்

(குறுகிய வாயளவுடையன)/இயல்பான உயிர், மெய் ஒலிப்புக்கள் / w / vs/ u /, /ṭ,ḍ vs t,d/.

12. கூரொலிப்பு (Sharp)/அஃதல் வழியது (Non-sharp). அண்ணச் சாயல் (Palatalised) பெற்று, வாய்ப் பகுதி நடுத் தடையால், இரு பகுதி மீட்டொலிப்பால், அதிர்வலை மிகப் பெற்றுக், கூரொலிப் பாவது/அஃதல் வழி, இயல்பான ஒலிப்பாவது (Plain articulation). Palatalised/non-palatalised t^j,d^j/t,d.

6.4.1.1 ஒலிப்பு விளக்கம் (Articulatory definition)

1. தடையில் வாய் நடுவழியொலிப்பு **(Vocalic)**

உயிரொலிகளுக்கு வாய்நடு வழி எவ்வகைத் தடையுமில்லை. இவை அதிர்வுடையன. இவற்றின் ஒலிப்பு விரை தொடக்கமுடையதன்று. அலைச் செறிவு விரைவில் அழிவதன்று. தாழ் நிலை அலைச் செறிவுகள் (Formants) மிகுந்த அழுத்தமுடையன. எப்போதும் அசையின் சிறப்பிடமாக அமைவன.

2. தடையொலிப்பு **(Consonantal articulation)**

நிறை தடை அல்லது குறை தடையோடு இன்னாவொலி செய்வன. குறைந்த ஒழுங்குடைய ஒலியலையமைப்பைக் கொண்டன. இடை அல்லது நெகிழொலிகளாகியன (Liquids l,r). உயிரொலியினும் அழுத்தம் குறைவுடையனவாயினும் அவை, உயிரியல்பும், மெய்யியல்பு முடையன. /y,w/ ஒலிகள், வழுக்கொலிகள் எனப்படுவதினும், அசையழுத்தமில்லா உயிரொலிகள் என்பதே ஏற்புடையது. வழுக்கொலிகள் (Glides/h,?/ உயிரியல்பும், மெய்யியல்பும் இல்லன.

3. மூக்கொலிப்பு **(Nasal)**

வாயொலிப்பை விட மூக்கொலிப்பு அலை வரைவில் மிகு அடர்த்தியைக் காட்டும். மூக்குயிருக்காயின், முதலிரண்டு அலைச் செறிவு வரிசையிடையில் வேறோர் அலைச் செறிவு வரிசை தோன்றுவதால், முதலிரு அலைச் செறிவின் அழுத்தம் குறைகின்றது. மூக்கொலிப்பு மெய்யாயின், இரு, நிலையான தெளிவான அலைச் செறிவு வரிசையினை உடையதாகின்றது.

4. செறிவொலிப்பு **(Compact)**

செறிவொலிப்பாயின் அலை வரைவில் ஒப்பிட்டுக் காண, நடுவில் ஓர் அலைச் செறிவு வரிசையின் எடுப்பான அமைப்பைக் காட்டும். மறுதலையாகச் சிதர்வொலிப்பில் ஒன்றோ, அதன் மிகுந்தோ, நடுவின் நீங்கிய, ஓர அலைச் செறிவு வரிசையினைக் காணலாகும். திறப் புயிர்கள், வல், மெல்லண்ண மெய்கள் அல்லது வாயின் உள் பின் புறத்தில் தோன்றுவன, செறிவுடையன. மாறாக மூடுயிர்கள், வாயின் உள் முன்புறந்தோன்றும் இதழ், பல்லொலிப்புக்கள், சிதர்வுடையன.

5. விரைதடையொலிப்பு **(Abrupt or interrupted)**

விரைதடையுடைய மெய்களாகிய வெடிப்பொலிகள் (Plosives or stops), தொடரொலிகளாகிய குறை தடை மெய்களி (Constrictives)

விருந்து முரண்பட்டன. நிறை விரை தடையொலிகள், ஒலியின்மையிலிருந்து, தெளிவான ஒலியலைத் தொடக்கமுடையன. நெகிழொலிகளில் (Liquids) வருடொலி (Flap /r/ விரைதடையது. பிரிவளியொலி (Lateral/l/) தொடரொலி.

6. கடுப்பொலிப்பு **(Strident)**

இது, ஒழுங்கற்ற அலை வடிவமுடையது. காற்றோட்டத்தில் (ஒலிப்பு) பெருந்தடை ஏற்படும். இதனால் இன்னாவொலியோடு உரசல் ஒலிப்புத் தோன்றும். உரசொலியிலும், வல்லுரசொலியாகிய /s/, மெல்லுரசொலியாகிய /θ/ என்பதனோடு ஒப்பிடும் போது, முன்னையது கடுப்பொலி. பின்னையதில், முன்னையதைவிட, ஒழுங்கான அதிர்வலையோட்டம் காணப்படும். வெடிப்பொலியினும், உரசொலி ஒழுங்கற்ற அதிர்வலையுடையது.

7. தடுக்கப்படுமொலிப்பு **(Checked)**

குரல்வளைக் குழி மூடப்படுவதால், இது தடுக்கப்படும் ஒலிப்பாகின்றது. மெல்லண்ணக் குழியிலும் தடுப்பேற்படுதலுமாம். இயல்பான மெய்கள், வாயொலிப்பில். ஆயின், தடுக்கப்படும் ஒலிப்பு, மிடற்றினுள் முன், பின், இடங்களில் ஏற்படுவது.

8. அதிர்வொலிப்பு **(Voiced)**

குரல்வளை ஒலித் தசை அதிர்வால் ஏற்படும் ஒலிப்பு. ஒலியலை வரைவின் அடிப்பகுதியில், இதன் வெளிப்பாடாக, ஒரு தாழ் அலைவரையுடையது.

9. இறுகொலிப்பு **(Tense)**

நெகிழொலிப்பை விட, நீண்ட ஒலிப்புக், கூடுதல் ஒலிப்பாற்றல், தெளிவு, மிகையழுத்தம் இவை கொண்டது, இறுகொலிப்பு. காலவளவில், நீண்டு செல்லும் அலையதிர்வு கொண்டது.

10. தெளிவொலிப்பு **(Acute)**

ஒலியலை வரைவில் மேற்பகுதி எடுப்பாகத் தெரிவது. முன்னோக்கிய நாவெழுச்சியால் தோன்றும் முன்னுயிர்கள், இதழ், மெல்லண்ணமாகிய வாயின் கடை, முன், பின் பகுதியொழிய, இடைப் பகுதி முயற்சியாகிய வல்லண்ணம், பல், பல் முகடு இவற்றின் ஒலிப்புக்கள், தெளிவொலிப்புக்களாகும்.

11. தட்டையொலிப்பு **(Flat)**

இதழ் குவிந்து அளவில் சுருங்கலாலோ, மிடற்றகத்தின் சுருக்கத்தாலோ இத்தகைய ஒலிப்பு ஏற்படும். இதனால் ஒலியலை வரைவில் சில அல்லது எல்லா ஒலியலைச் செறிவும் கீழ் நோக்கி வருவன காணப்படும். வளை நா, மெல்லண்ணச் சாயல், மிடற்றுச் சாயல், இதழ்ச் சாயல் என்பனவும் இவ்வொலிப்புக்குக் காரணமாகும்.

12. கூரொலிப்பு **(Sharp)**

ஒலியலை வரைவில் இரண்டாவது அல்லது மேல் நிலை ஒலியலைச் செறிவுகள் மேல் நோக்கிச் செல்வது காணப்படும். வல்லண்ணத்தை,

நா நடு, மேலெழுந்து சேர (Palatalisation) இவ்வொலிப்புத் தோன்றும். இவ்வியல்புகளின் மாறுபட்ட இயல்புகளையுடையன, இவற்றின் மறு தலைகள்.

6.4.2. ஒலிப்பியல்புகளும், வேறுபாட்டியல்புகளும் (Articulatory/ phonetic features and distinctive features)

வேறுபாட்டியல்புகளில் (Distinctive features) வேறுபட்ட கொள்கைகள் பல. ஒலியுறுப்புக்களின் ஒலிப்பியல்புகளே (Articulatory features) அவை என்றும், ஒலியலையியல்புகளே (Acoustic features) அவை என்றும் இருவேறு கொள்கைகள். இவையிரண்டும் கலந்தனவே அவை, என்பது மற்றொன்று. ஒலிப்புறுப்புக்களின் அடித்தளத்தி லிருந்து காற்றலை; குரல்வளையிலிருந்து ஒலியலை; அதன்பின் வாயுறுப்புக்களால் உருப்படுத்தப்பட்டு, வடிகட்டப் பெற்றுப் பெருக்கப் பெற்ற ஒலியலை; தொடர்ந்து வெளியுலகக் காற்றில் அவ்வலையதிர்வு; அதுவே, மொழியில் வேறுபாட்டியல்பலை யாகின்றது. இவ்வகை நிகழ்வுகள் யாவும், ஒன்றன் கூறுடைய, வேறுபட்ட நிகழ்வுகளேயாகும். ஆக, உறுப்பமைவு ஒலிப்பிலிருந்து தொடங்கிய ஒலியலையே, வேறுபாட்டியல்பலையாக உருவாகின்றது. ஒலிப்புக் காற்றலையே, வேற்றலையாகின்றது.

உறுப்பொலிப்பும், ஒலியலையும் கூடியாகும் ஒலிப்பியல்பு, மொழியில் செயல் நிலையில் (Functional), பயன்பாட்டில், வழங்கி யலில் (Distribution), குறியியல் அல்லது செய்திப் பரிமாற்றக்கலை (Semiotics)யடிப்படையில், குறிகளின் பொருள் வேற்றுமை செய்யும் அளவிலேயே, ஒலி வேற்றுமைப்படும் போதே, வேறுபாட்டியல்புகளா (Distinctive features)கின்றன. அன்றியும், பேச்சு ஒலிப்புக்களை இரு வேறு முரண்பாட்டுக் கூறுகளாகப் பகுத்துக் காணல் என்பதுதான், மொழியைக் கற்பதற்கு ஒரேவழி என்பதன்று. இம்முறை, சிறப்பான, வலுவான கொள்கை என்பதுமன்று. மொழியின், மொழி குறித்த மனிதனின் இயல்பு இதுதான் என்பதுமன்று. ஒலியன் அமைப்பில், வேறுபாட்டியல்பு, ஓர் ஒலிப்பியல் விதி. வேறுபாட்டியல்பு கொள்கை, ஒலிப்பியல் (Phonetics), ஒலியனியல் (Phonology), குறியியல் (Semiotics) ஆகிய மூன்றனையும் தழுவியமைந்ததேயாகும் - (Brakel, Arthur, 1983: 20, 22, 60, 64).

6.4.3. வேறுபாட்டியல்பு வகை (Categories of distinctive features)

இரு வேறு முரண்பாட்டுக் கொள்கை, தொடர்ந்து வளர்ந்து, இதுவே உலக மொழிகளின் ஒலியனமைவுகளைக் காண ஒரு கருதுகோள்; இதைத் தவிர, வேறொன்று இது போன்றது இல்லை, என வகை செய்து, வேறு பாட்டியல்புகள் காணப்பட்டன. அவை,

1. பெருவகை இயல்புகள் (Major class Features)

(1) எடுப்பொலி (Sonorant) *(2)* வாய்த்தடையில்லது (Vocalic) *(3)*

வாய்த் தடையுடையது (Consonantal).

2. உள்வாயியல்புகள் (Cavity features)
(4) உச்சித் தொடர்புடையது (Coronal) *(5) முற்பகுதியது* (Anterior) *(6) வளைவுடையது* (Round) *(7) பரப்புடையது* (Distributed) *(8) மூடியல்புடையது* (Covered) *(9) குரல்வளைத் தடையுடையது* (Glottal constriction)

3. துணைமைத் திறப்புக்கள் (Secondary apertures)
(10) மூக்குவழியது (Nasal) *(11) வாய்ப்பக்க வழியது* (Lateral)

4. நாக்கு-வாய் இயல்புகள் (Tongue - Body (mouth) features)
(12) உயர்நிலை (High) *(13) தாழ்நிலை* (Low) *(14) பிற்பகுதி* (Back)

5. தோற்றநிலை இயல்புகள் (Source features)
(15)அதிர்வு (Voice) *(16) கடுப்பொலி* (Strident) *(17) குரல் வளையின் கீழ்ப்பகுதியின் மிக்கழுத்தம்* (Hightened subglottal pressure)

6. முயற்சிமுறை இயல்புகள் (Manner features)
(18) தொடரொலி (Continuant) *(19) காலந்தாழ்ந்த விடுப்பு* (Delayed release) - *முதன்மை* (Primary) *(20) துணைமை* (Secondary) *(21) துணைச் சேர்க்கை* (Supplementary) - *உள்வாங்கல்* (Suction) *(22) மெல்லண்ணஞ் சார்ந்தது* (Velaric) *(23) உள்ளீர்ப்பு* (Glottalic Implosive) *(24) அழுத்தம்* (Pressure)- *மெல்லண்ணஞ் சார்ந்தது* (Velaric) - *புறமுந்தல்* (Ejective)- *(25) இறுக்கம்* (Tension)

7. இன்னோசை இயல்புகள் (Prosodic features)
(26) ஒலியழுத்தம் (Stress) *(27) இன்னொலி* (Pitch) *(28) கால நீட்சி* (Length).

இவை ஒலியாக்க வேறுபாட்டு அடித்தள இயல்புகள் (Phonological Primes) - (Chomsky and Halle (S.P.E) after Jakobson, Fant and Halle's. Preliminaries to speech analysis).

6.4.4. அடித்தள இயல்புகள் (Primes or primary features)

திருத்தியமைக்கப்பட்ட வேறுபாட்டு அடித்தள இயல்புகள் (Primes) (Jakobson, Fant and Halle) :

(1) தடையுடையன (Consonantal) *(2) மூக்கொலி* (Nasal) *(3)அதிர்வில் மெய்* (Surd) *(4) செறிவு* (Compact) *(5) சிதர்வின்மை* (Nondiffuse) *(6) தெளிவின்மை* (Grave) *(7) தட்டை* (Flat) *(8) கூர்மை* (Sharp) *(9) விரைதடை* (Interrupted) *(10) உரசல்* (Friction) *(11)பக்கவழி* (Lateral) *(12, 13) காலந்தாழ்த்த இடமாற்றம்* (Delayed transition 1 & 2) *(14) அகல் குரல்வளை* (Wide glot) *(15) தடுப்பு* (Checked) *(16) அகல் சிறுவழி* (Slit) *(17) உள் வாங்கல்* (Suction) *(18) மெல்லண்ணத் தொடர்பு* (Velaric) *(19) குரல்வளைத் தொடர்பு* (Glottalic).

6.4.5. அடித்தள இயல்பு வகை (Categories of primes)

இவ்வாறு வளர்ந்து வந்த, வகை வேறுபட்ட வேறுபாட்டியல்பு

களைத் தொடர்ந்து, ஒலிப்பே (Articulation) வேறுபாட்டியல்புகளின் தோற்றம் எனக் கொண்டு, எல்லா மொழிகளுக்கும் இயைவனவாகப் பத்தொன்பது வேறுபாட்டியல்புகள் (Articulatory Primes or Fundamental articulatory features), திருத்தியாக்கப்பட்டனவாகக் கொள்ளப்பட்டன - (Brakel, Arthur, 1983: 46, 63, 119). அவை,

1. பெருவகை இயல்புகள் (Major class features) இரண்டு
  1. ± வாய்த் தடையுடைமை (Contoid)
  2. ± மூக்கொலிப்பு (Nasal)

2. ஒலிப்பு முறை இயல்புகள் (Manner features) எட்டு
  1. ± விரை நிறை தடை (Occlusion)
  2. ± உரசல் (Friction)
  3. ± அகல் சிறுவழி (Slit)
  4. ± பக்கவழி (Lateral)
  5. ± காலந்தாழ் இடப் பெயர்ச்சி *1* (Delayed transition 1)
  6. ± காலந்தாழ் இடப் பெயர்ச்சி *2* (Delayed transition 2)
  7. ± அகல் குரல்வளை (Widened glottis)
  8. ± குரல்வளைச் சுருக்கம் (Glottal constriction)

3. ஒலிப்பியல்புகள் (Articulation features) ஐந்து
  1. ± இதழ்த் தொடர்பு (Labial)
  2. ± உயர்நிலை (High)
  3. ± எழுச்சி (Raised)
  4. ± கடைநாத்தொடர்பு (Dorsal)
  5. ± அண்ணத் தொடர்பு (Palatal)

4. பின்புல இயல்புகள் (Back drop features) ஒன்று
  1. ± அதிர்வில் மெய் (Surd)

5. காற்றோட்ட இயல்புகள் (Air stream features) மூன்று
  1. ± மெல்லண்ணத் தொடர்பு (Velaric)
  2. ± குரல்வளைத் தொடர்பு (Glottalic)
  3. ± உள்வாங்கல் (Suction)

ஆக *19* அடிப்படை இயல்புகள் (Primes).

6.4.5.1. இயல்பு விளக்கம் (Feature definitions)

1. வாய்த் தடையுடையன (Contoid)

இதழ் முதல் உள் நாக்கு வரையிலான இயங்குமுறுப்புக்கள், இயங்கா உறுப்பாகிய மேல் வாயை, மிக அணுகப் பிறப்பன, இவை. வெடிப்பொலி, உரசொலி, மூக்கொலி, பிரிவளியொலி (பக்கவழியொலி), வருடொலி, ஒற்றொலி, உருட்டொலி முதலியன இவ்வகையின. ஏனைய, இவற்றின் முரண்பட்டன.

2. மூக்குவழியன (Nasal)

மூக்குவழி வளி செல்வன, மூக்கொலிகள்.

3. அதிர்வில் மெய் (Surd)

குரல்வளை ஒலித்தசை அதிர்வடையாது (Nil-phonation) *பிறக்கும் ஒலிகள்.*

4. நிறை தடை வாயொலி (Occlusion)

புறஞ்செல் அல்லது அகஞ்செல்வளி, வாயில், மிடற்றில் அல்லது குரல்வளையில் நிறை விரை தடை தோன்றப் பிறப்பன.

5. உரசொலி (Friction)

இயங்கும் ஒலிப்புறுப்பு, இயங்காத மேல் வாயை உரசல் ஒலிப்புத் தோன்றுமளவில் அணுகப் பிறப்பன. உயிர்ப் போலிகளுக்கும், இவற்றிற்கும் இடையில் சிறு வேற்றுமையே உளது.

6. அகல் சிறுவழி (Slit)

இவை உரசொலிகளுள் ஒரு வகை. வாயின் பக்கம் அகன்று மேல் கீழ்ச்சிற்றிடை தோன்றக், காற்றோட்டஞ் செல்ல வொலிப்பன. /f,v,θ,ð,g,χ/.

7. பக்கவழி (Lateral)

நாவின் ஒருபுறம் அல்லது இருபுறம் வழியாகக் காற்றோட்டம் செல்ல ஒலிப்பன.

8. காலந்தாழ்த்த இடப் பெயர்ச்சி 1 (Delayed transition 1)

கூட்டு மெய் அல்லது நீட்டுயிர் காணின், அதனை ஈரொலிச் சேர்க்கை அல்லது தொடர்ச்சி என்று கருதாது ஒருறுப்பாகவே கருதுவது.

9. காலந்தாழ்த்த இடப் பெயர்ச்சி 2 (Delayed transition 2)

காலந்தாழ்த்த பெயர்ச்சியென்பது, நீளொலியின் மறு பெயர். கலப்புக் கூறுகளில் (Complex segments) *நீண்ட கூறுகளை* (Long segments), *நீட்சியல்லாக் கூறுகளி*(Non-long segments)*லிருந்து வேறு படுத்திக் காண இப்பெயர்ச்சி உதவுகின்றது. முன்னையதில், முதன்மை யும், துணைமையுமாகிய* (Primary and secondary) *இரு பெயர்ச்சி களுமாகக் (ஒலிப்புக்கள்) குறிக்கப்படும்.*

வெடிப்புரசொலி, ஒரு கலவைக் கூறு. அதில், நெடிலும் (Delayed transition), *குறிலும் உள ஒன்றிலிருந்து ஒன்றை இவ்வொலிப்பியல்பால் வேறுபடுத்தலாம்.* /č: vs č/ tš: vs tš/.

10. அகல் குரல்வளை (Widened glottis)

அதிர்வு, அதிர்வின்மை கருதாது, இயல்பான ஒலித்தசை அகற்சியைவிடக் கூடுதலான அகற்சியைக் குறிப்பது. இறுகிய ஒலிப்போடாகிய வெடிப்பொலி, உரசொலி, முனகலோடாகிய அல்லது 'ஹ்' ஒலியோடாகிய வெடிப்பொலிகள், நெகிழ்வோடாகிய தடையில்லொலிகள் இதனால் ஆகும்.

11. குரல்வளைச் சுருக்கம் (Glottal constriction)

குரல்வளைச் சுருக்கம், அதனினும் குறைந்த சுருக்கம் ஆகிய

இவற்றில் தோன்றும் ஒலிப்புக்களிடை வேற்றுமை காண இச்சுருக்கம் உதவுகின்றது குரல்வளைக் 'கிரீக்' (Laryngeal creak) ஒலிப்பைக் குறிப்பதோடு, வன்மையோடு கூடிய இறுகிய 'ஹ்ற' ஒலியல் (unaspirated) அதிர்வில் வெடிப்பொலிப்பை இறுகிய 'ஹ்ற' ஒலியோடாகிய (aspirated) அதிர்வில் வெடிப்பொலிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்ட உதவுகின்றது. குரல்வளை ஒலியல்லாத (Non-glottalic sounds), குரல்வளைச் சாயல் (Glottalised) ஒலிப்புக்களையும் குறிக்கின்றது.

12. உள்வாங்கல் (Suction)

மெல்லண்ணத்தோடு அல்லது குரல்வளையோடு தொடர்புடைய உள்வாங்கொலிப்புக்களைக் குறிப்பிடுகின்றது.

13. இதழ்த் தொடர்பு (Labial)

இதழ்ச் சுருக்கம், மூடல், குவிவு அல்லது வாய்த்தடை/ வாய்த் தடையல் ஒலிப்புகளுக்கு மிடற்றுச் சுருக்க இயல்பினை உணர்த்து கின்றது.

14. எழுச்சி (நா) (Raised)

மேற்பல்லளவினும் உயர்ந்து நாச் செல்லும் ஒலிப்புக்களை உணர்த்துகின்றது. /t.d,s,θ,ð/ முதலிய பல்லொலிகள் இதனைச் சார்ந்தனவல்ல. மிடற்றொலிப்புக்களும், குரல்வளை ஒலிப்புக்களும் இத்தகையனவே (Raised).

15. உயர்நிலை (High)

பல் முகட்டின் பின்புறம் அல்லது மேல்நிலையிலுள்ள முன் னண்ண, அண்ண, மெல்லண்ண ஒலிப்புக்களை உணர்த்துவது.

16. அண்ணநிலை (Palatal)

வல்லண்ணத் தடையொலிகளையும் (Contoidal), தடையில் ஒலிகளையும் (Non-contoidal) குறிக்கின்றது, இது.

17. கடை நாவொலிப்பு (Dorsal)

கடை நாவொலிப்புக்களைக் குறிப்பதிது.

18. மெல்லண்ணவொலிப்பு (Velaric)

மெல்லண்ணத்தின் இயக்கத்தால் ஆகும் காற்றியக்க ஒலிப்புக் களைக் குறிக்குமிது.

19. குரல்வளை ஒலிப்பு (Glottalic)

குரல்வளை இயக்கத்தால் ஆகும் காற்றியக்க ஒலிப்புக்களை உணர்த்துவதிது. இவ்வாறான பத்தொன்பதும் ஒலிப்புறுப்பு அடியாகக் கொண்ட, ஒலிப்புக் குறித்த, வேறுபாட்டியல்புகள் அல்லது அடிப்படை ஒலிப்பியல்புகள் (Distinctive features or physiological primes) ஆகும்.

7 ஒலி, ஒலியன் (வேறுபாட்டியல்பு) அமைவு முறை (Phonemic (distinctive feature) system)

7.0. ஒலி/ஒலியன் தொடரியல்பு (Syntagmatic feature of phoneme)

ஒலிப்புறுப்பின் இயக்கத்தால் ஏற்படும் ஒலிப்பியல்பு, அவ் வொலிப்பு உறுப்பிலிருந்தே அலை வடிவாகித் தம்முள் இயைந்து ஆக்கங் கொண்டு ஒலியுருவாகியன, மொழி நிலையாகத் தொடருங்கால், மொழியுறுப்புக்கள் பொருள் வேறுபடலால், முன்னைய ஒலிப்பியல்புகள், வேறுபாட்டு ஒலிப்பியல்புகளாகி, இயைந்து ஆக்கங் கொண்டு, ஒலியன் உருக்களாகித், தம்முள் வேறுபடுகின்றன. மொழியுறுப்புக்கள் தம்மிடையே ஏற்படும் பொருள் வேறுபாடும், ஒலி அல்லது, ஒலியன் வேறுபாடும் ஒலியனது தனிநிலையிலன்றித் தொடர் நிலையிலேயேயாகும். ஒலியன் தனி நிலையில், அதனுக்கு மதிப்பில்லையாகத் தொடர் நிலையிலேயே, பெரு மதிப்பைப் பெறுகின்றது. பொருள் தரும் மொழியுறுப்பு அல்லது மொழி ஆவதனைத்தும் ஒலியன்களின் தொடர் நிலையிலேயேயாகும். ஓரொலியன் இருக்குமிடத்தில், அதனை நீக்கி வேறோர் ஒலியனைத் தேர்ந்தெடுத்து (Selection) முன்னையதற்கு மாற்றாக (Substitution) அவ்விடத்திலிட்டு, வேறோர் மொழியுறுப்பை அல்லது சொல்லையாக்கிக் கொள்வதும் (Paradigmatic), இம் முறையில் ஒரு மொழியிலுள்ள அனைத்துச் சொற்களையும் (Lexicon) ஆக்கிக் கொள்வதும், யாவும், ஒலியன் தொடர் நிலையிலேயே (Syntagmatic). ஓரொலியனை, வேறுபாட்டு முறையால், மற்றோரொ லியனிலிருந்து ஒலியால் வேறுபடுத்திக் காட்டுவதும் இவ்வாறே. அம் மொழியின் அனைத்து ஒலியன்களையும் தம்முள் ஒலி வேறுபாடு காட்டுவதும், யாவும், ஒலியன் தொடர் நிலையிலேயே. ஆகு, ஒலியன் ஒன்றன் தனி நிலை, உயிரற்ற உடல்நிலை. அதன் தொடர் நிலையே, உயிருற்ற உடல் நிலையாகின்றது, மொழியில்.

7.1. சேர்க்கைத்தொடர் (Syntagmatic sequence)

ஒலியன்களின் தொடர்நிலையே (Linear contiguity or combination) அசை (Syllable), உருபன் (Morpheme), சொல் (Word), குறை, நிறை சொற்றொடர் (Phrase, clause,sentence) முதலிய கூறுகளோடு, உரை (Utterance), உரைப் பகுதி (Discourse), மொழி (Language) என்பனவற்றையும் ஆக்குகின்றது. இவை மொழியின் கூறுகள் அல்லது

உறுப்புக்கள் ஆகுங்கால் இவற்றிடை ஏற்படும் இடைவெளிகளும் (Pauses) மொழியில் கருதத்தக்கன. ஒலியன் சேர்க்கைத் தொடரும், தொடரிடையீடும் ஆகிய இருவேறு முரண்பட்ட கூறுகளின் இணைவே மொழி. இத்தகைய கூறுகளை ஒலிப்பு நிலை (Phonetic), ஒலியன் நிலை (Phonemic) ஆகிய இருவேறு முரண்பட்ட நிலையாலும் காண, அவற்றிடை ஒன்றுபாடும், வேறுபாடுமாக இரு வேறு முரண்பட்ட நிலைகளைக் காணலாகும். இவ்வுறுப்புக்கள், ஒன்றனுள் ஒன்றாக, உறுப்பும், முதலுமாக இணைந்து, தொடர்ந்து செல்வன உடல் என்னும் முதற்பொருள், கை கால் முதலிய சினைகளை யுடையதாயினும், யாவும் உயிரணு இயைவால் ஆக்கப்பட்டன போல, மொழியென்னும் முதற் பொருள் அசை, சொல் முதலிய சினைகளை யுடையதாயினும், யாவும், ஒலியன் என்னும் அணு இயைவால் ஆக்கப்பட்டன. இவ்வாறான ஒலியன் தொடரில் சில முறைகள் அமைந்து கிடப்பனவும் கருதத்தக்கன.

கலை, மலை, நிலை, விலை, தலை, அலை, இலை, உலை, வலை எனவும் கண், மண், பண், தண், உண், எண் எனவும் இம்முறையே தொடரும் என்பதன்றி, இவற்றின் மாறிய நிலைத் தொடர் மொழி வழக்கில்லை இவ்வாறே பிற தொடர் நிலைக் கூறுகளுமாம். ஆகவே, ஒலியன் தொடர் நிலையும் சில கட்டுப்பாட்டில் (Redundancy) நடைபெறுகின்றது. இதனோடு, சொல்லின் முதல், இடை, கடையில் எல்லா ஒலியன்களும் வரும் என்பதின்றிச் சில கட்டுக்குட்பட்டு வரும் வழக்கியலையும் (Convention), வழங்கியலையும் (Distribution) உடையது, மொழியின் ஒலியன் தொடர். இவற்றோடு, தொடரிடை ஒலியன்கள் ஒன்றையடுத்து மற்றொன்று வந்து இணையும் போது, இதனையடுத்து இது தான் வரும் என்ற இணைவுக்கட்டும் சிலவுள. இவ்வாறாக, முறை, இடம், இணைவு ஆகிய நிலைக் கட்டுக்களை யுடையது, ஒலியன் தொடர். இத்தகைய கட்டுக்களோடு கூடிய தொடர் யாவும் உயிர், மெய் என்னும் இரு வேறு முரண்பட்ட, தடையில், தடையுடை ஒலியன்களாகிய முதன்மைக் கூறுகளாலேயே (Primary or inherent features) ஆகும். இவற்றோடு, ஒலியழுத்தம் (Stress), இன்னொலிக் கூறு (Pitch) ஆகிய, இரு வேறு முரண்பட்ட, எடுப்பும், தொடுப்புமாகிய துணைமைக் கூறுகளாகிய (Secondary or prosodic features) இன்னோசைக் கூறுகளும், பகுப்பில் ஒலியன்களாகப், பகுப்புடை ஒலியன் தொடரோடு, தொடர் நடையிடும் இயல்பின. ஆக, முதன்மைக் கூறுகளும், துணைமைக் கூறுகளுமாகிய இருவேறு முரண்பட்ட கூறுகளின் இயைபாலாகிய தொடர் நிலையுடையது, மொழி. இத்தகைய தொடரமைவுகள், மொழி வழக்கில், இயல்பாகவே அமைந்து கிடக்கின்றன. அவற்றைக் காண்கின்றது, மொழியியற்கலை. தொடர் நிலைகள் மொழிக்கு மொழி வேறுபடும். தொடர் நிலை முறைகள் ஒலிப்பெளிமைக்கு உதவுகின்றன. விதிகளுக்கும் உட்பட்டன வாக உள்ளன. பண்ணும், தாளமும் போலமையும், தொடரும், இடைமுறிவும் கொண்ட தொடரில், பொருட் கூறுடைய சொல்லும்,

பொருட் கூறில்லாத அசையும் ஆகிய இரு மொழிக் கூறுகளும் சிறப்புடைய செயற்பாடுடையன.

7.2. இடைமுறிவுகள் (Pauses or junctures)

இடைமுறிவுகள் (Pauses) உயிர்ப்போய்வு, பொருள் தெளிவு, தொடர்த் தெளிவு, ஒலியழுத்தத் தெளிவு, இன்னோசைத் தெளிவு, கூறுபாட்டுணர்வு, சேர்க்கையமைவுகள், ஒலிப்பெளிமை முதலான வற்றிற்கு உதவுகின்றன. அசையும், உருபன்களும் சொல்லுட் காணும் சிற்றிடை முறிவுகள் உடையன. அத்தகைய முறிவுகள் மூடு நிலை முறிவுகளாகும் (Closed pauses or junctures). பேச்சில் சொற்றொடராகிய முடிமுறிவுகள் (Terminal pauses) இடை ஏற்படும் திறப்பு முறிவுகள் (Open pauses or junctures) சொல்லிடை முறிவுகளாகும். குறை சொற்றொடர்களின் (Phrases and clauses) முடிவில் ஏற்படும் முறிவுகள், சொல் முடிவினும் சிறிது கூடுதல் இடைவெளியுடையன. ஆக, அசை, உருபன், சொல், குறை சொற்றொடர், நிறை சொற்றொடர் முடிவில் ஏற்படும் இடை முறிவு இடைவெளிகள், முறையே, காலத்தால் சிறு, சிறு நீட்சியுடையன. அசை, உருபன் இடை முறிவுகள் கருதத்தக்கனவல்ல. எஞ்சியன கருதத்தக்கன. அவற்றுள் சொல்லிடை முறிவும், நிறைசொற்றொடரிடை முறிவும் சிறப்பாகக் கருதத்தக்கன. சொல் முறிவு குறிப் பொருள் முடிவும், சொற்றொடர் முறிவு, செய்தி முடிவும் சுமந்து செல்வனவாகும். குறை சொற்றொடர்கள் இரண்டனுள் முன்னையது, சொல் போன்று பொருள் சுமந்தும், பின்னையது சொற்றொடர் போன்று செய்தி சுமந்தும் செல்வன வாகும். ஒலியன் தொடரில், இவ்வாறான தொடர்க் கூறுகள் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. தொடர் வண்டியும், இடைப் பெட்டிகளும், அவற்றிடை அறைகளும், எங்கும் நிறைந்து தொடரும் இருக்கைகளும் போலமைந்த சொற்றொடர் முதல் ஒலியன் வரையுள்ள அமைப்பு முறையைக் காணலாகும்.

7.3. ஒலியன் அமைவு முறையும், வழங்கியலும் (Phonemic system and distribution)

உலக மொழிகள் அனைத்திலும், உயிரொலிகளும், மெய் யொலிகளும் காணப்படுகின்றன. ஒரு மொழியின் உயிரொலிப்பு, மற்றொரு மொழியில் மெய்யொலிப்பாகவும், ஒரு மொழியின் மெய்யொலிப்பு மற்றொரு மொழியில் உயிரொலிப்பாகவும் இருக்கலாம். உயிர், மெய்யொலிகள் என்பன முற்றிலும் ஒலிப்பு அடிப்படையில் மட்டும் அமைந்த இருவேறு முரண்பாடுகள் அல்ல. மொழியில், வழங்கியல் அல்லது வருகை அடிப்படையிலும் அமைந்தனவாகும். ஓர் உயிர் நெடில் அல்லது மெய் நெடில் ஓர் மொழியிலுள்ளது மற்றொன்றில் ஈரொலியன்களின் இணைவாகக் கருதப்படுதலுமாம். ஒரு மொழியின் ஈரொலியன்களின் இணை தொடர், மற்றொரு மொழியில் ஓரொலியனாகக் கருதப்படுதலும்

வழக்கியல். ஓர் ஒலியன், சிலபோது, மெய், உயிர் ஆகிய இரண்டன் கூட்டாகக் கருதப்படுதலும் மொழியியல். மொழிகளில் உயிரொலி இயல்பாக அதிர்வுடையனவாகும். அதிர்வில்லன, சில மொழிகளில் அருவழக்கு உயிரொலிகள் இயல்பாக வாய் வழியன. சில மொழிகளில், அருவழக்காக, மூக்குயிர் அல்லது மூக்குச் சாயலுயிர்களும் மூக்கு வழியனவாகக் காணப்படும். உயிரொலிகள், தடையின்மையால், இயல்பாக ஒலிப்புக் காற்றின் வெளிப்பாடு, ஆற்றல் (Energy) கூடியிருக்கும் (மெய்யொலிகளை விட). சில மொழிகளில், அருவழக் காக, உயிரொலிகள் ஆற்றல் குறைந்தும் வெளிப்படும். இவ்வாறு பல நிலையில் முறையே மொழியியல்பும் (Unmarked), மொழிப் புறனடையாகிய வேறுபாடும் (Marked) காணப்படுவது, ஒலியன் அமைவு குறித்த பகுதியாகும். மெய்யொலிகளுள் வெடிப்பொலிகள் உலக மொழிகள் அனைத்திலும் உள்ளன. உரசொலிகள், எல்லா மொழிகளிலும் இல்லை. வெடிப்புரசொலிகளும், உரசொலி போன்றனவே. /ல்,ர்/ (l,r) பல மொழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. /ம்(m),ந் (n)/ என்னும் மூக்கொலிகளும் பரவலாகக் காணப்படுவன.

சில மொழிகளில் /l/ இடையொலி (Liquid) யாகவும், சில மொழிகளில் உரசொலியாகவும், சில மொழிகளில் உயிரொலி யாகவும் ஒலிக்கப்படுகின்றது. /r/ இவ்வாறே இடையொலியாகவும், வழுக்கொலியாகவும், உயிரொலியாகவும், ஒற்றொலியாகவும், வருடொலியாகவும், உருட்டொலியாகவும் ஒலிக்கப்படுகின்றது. /y,w,h/ ஒலிகள் வழுக்கொலி அல்லது அரையுயிராகவும், உரசொலியாகவும், /y,w/ உயிரொலியாகவும் ஒலிப்படைகின்றன.

மெய், உயிர்ப் பகுப்புப் பழைமையாகப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பிருந்தே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. ஒலியழுத்தம், இன்னொலிக் கூறுகள் அத்துணைப் பழைமையுடையனவாகத் தெரிவதில்லை. சில மொழிகளில் ஒலியன் பகுப்புக்கள் தெளிவாக வரையறைப்படுத்த முடியாதனவாக உள்ளன. சில கூட்டொலிகள், தனியொலியன்களா அல்லது ஒலியன்களின் இணைவா என்று பகுத்துக் காண்பதில் இடர்ப்பாடுகள் இல்லாமலில்லை. சில மொழிகளின் ஒலியன்களின் தொகையை வரையறை செய்ய முடியவில்லை. ஒலியழுத்தக் கூறு, இன்னொலிக் கூறுகள் சில மொழிகளில் பயன்பாடில்லை.

சில மொழிகளில் /a,e,o/ என்பன முழுவுயிர்கள் (Full vowels). /i,u/ என்பன அரையுயிர்கள் (Semi vowels). காலிபோர்னியாவில் பேசப்படும் 'விஷ்ராம்' (Wishram) மொழியில் /a/ ஒன்றே முழுவுயிர். ஏனைய உயிர் போன்ற ஒலியன்கள், அரையுயிர்கள். சில மொழிகளில் /m,n,ŋ/ போன்ற மூக்கொலிகளும், /r,l/ போன்ற இடையொலிகளும் மெய்யாகக் கருதப்படாது, அரையுயிர்களாகவே கருதப்படுகின்றன. சிலவற்றில் /w,j/ அரைமெய்கள் (Semi consonants). சிலவற்றில் /m,n,ŋ/ அரை மெய்கள். சிலவற்றில் /w/ இணையுயிர் (Covowel). சிலவற்றில் /y/ அரையுயிர் (Demi vowel).

ஆங்கில மொழியில் /ŋ,ž/ மொழி முதலிலும், /h/ இறுதியிலும் வாரா. மொழி முதலில் /v,ð,z,č,ǰ/ என்பன பிறிதோர் மெய்யோடு இணையாது தனி நிலையிலேயே வரும். மொழி முதலில் தனிமெய்யும், இரண்டு அல்லது மூன்று மெய்யிணைந்தும் (Cluster) வரும். அவ்வாறு வரும்போது /b,d,g,s,š,θ/ என்பன மெய்யிணையின் முதலுறுப்பாக வரும். /y,w,r,l,m,n/ என்பன மொழி முதலிணையின் இறுதி மெய்யாக வரும். /f/ / என்பது, இணை முதலிலோ, இறுதியிலோ வரும். /p,t,k/ மொழி முதலிணை மெய்யின் முதல், இடை, இறுதியில் வரும். இணை மெய்யாகக் குறிப்பிடப்பட்டன யாவும், தனி நிலையில் மொழி முதலில் வரும். /tl,dl/ மொழி முதலிணையாக வாரா. /q/ என்பது /u/ ஒலியோடு இணைந்தே வரும்.

பெரும்பான்மை பாலினேஷிய மொழிகளில் மெய்யிணை (Consonant clusters) வாரா. இடாகோ (Idaho) மொழியில் 2,3,4 அளவில் மெய்கள் இணைந்து வரும். பெல்ல கூலா (Bella Coola) மொழியில் (கனடா) உயிரொலியின்றியே எண்ணிறந்த சொற்கள் அமையும். உயிரொலிகளுக்கும், மெய்யொலிகளுக்கும் இடையே குறிப்பிடப்பட்ட வேற்றுமை இன்மையும், சிறு வேற்றுமையுடைமையும், ஒலிப்பில் (Phonetic) வேற்றுமையின்மையும், ஒலியனில் (Phonemic) வழங்கியல் வேற்றுமையுடைமையுமாக உள்ளன, பல மொழிகள்.

மொழி, ஒலியன்களின் தொடராயினும், அவற்றின் சேர்க்கைக் கூறுகளே (Sound or phonemic groups) சிறப்புடையன. மொழிகளில், மொழியியற் கூறுகளும் (Linguistic segments), புற மொழியியற் கூறுகளும் (Non-linguistic segments) கலந்திருக்குமாதலால், அவையிரண்டனவற்றையும் வேறுபடுத்திக் காணல் இன்றியமையாதது. ஒலியன் சேர்க்கைக் கூறுகளின் ஒலிப்புக் கலைத் (Phoniatrics) திறன் மேம்பட, இவற்றால் தோன்றும் பொருள் திரிபு, மயக்கங்கள் குறைந்து, மொழித் தெளிவு ஏற்படும்.

இன்றைய மொழியியல் தெரிவின்படிப் பாப்புவான் மொழியாகிய 'ரோட்டோக்காஸ்' (Rotokas) என்பதில், உயிர் 5, மெய் 6, ஆகப் 11 ஒலியன்கள், உலகின் மிகக் குறைந்த எண்ணமுடையதாகத் தெரிகின்றது. ஹாவாயன் (Hawaiian) மொழி 5 உயிர், 8 மெய் (/a,i,u, e,o,+,p,k,m,n,w,j,h,?/) எனப் 13 ஒலியன்களையுடையதாகவும், உலக மொழிகளில் மிகுதியாக, அங்கோலா, நமீபியாவில் பேசப்படும், 'சூ' (xu) மொழி, உயிர் 46, மெய் 95, ஆக 141 ஒலியன்களையுடையதாகவும் தெரிகின்றன.

உயிரொலிகள், மொழிகளில், ஒன்று முதல் பலவாகச் செல்கின்றன. 3,5 உயிரொலிகளில் பின்னையது பரவலாகப் பல மொழிகளில் காணக்கிடக்கின்றன. நாவின் பொது மேலெழுச்சி, முன், பின் மேலெழுச்சி, இதழ் குவிவு ஆகிய மூன்று வேறுபட்ட வகையில் உயிரொலிகளை வகை செய்து, வரையறைப்படுத்தி, முறையே ஒன்றனால், ஓரளவு (One dimensional), இரண்டன் இணைவால் ஈரளவு

(Two dimensional), மூன்றன் இணைவால் மூவளவு (Three dimensional) என உலக மொழிகளை அளவிடலாம். இவற்றாலும் உட்படுத்த முடியாதனவற்றை நான்காவது, ஐந்தாவது, ஆறாவது என மூக்குயிர் வகை, வளை நாவுயிர் வகை, அதிர்வில்லுயிர் வகை முதலியவற்றிற் குட்படுத்தி அளவிடலாமாக, உலக மொழிகளின் உயிரொலிகளின் அமைவுகள் உள்ளன. முக்கோண, நாற்கோண வடிவிலமைய அளவிடும் உயிரொலிகளையுடையன மொழிகள்.

எல்லா உயிரொலிகளையும், செறிவுயிர் (Compact vowels), சிதர்வுயிர் (Diffused vowels) என்றும், தெளிவுயிர் (Acute vowels), தெளிவில்லுயிர் (Grave vowels) என்றும் இருவகையாக அளவிட்டு, உட்படுத்திக் கூறலாகும். இவ்வகை, உலக மெய்யொலிகளுக்குமாம். தனியொலி (Simple), கூட்டொலி (Complex) எனவும், இறுகொலி (Tense), நெகிழொலி (Lax) எனவுமாகிய இருவேறு வகையிலுமாக உலக, உயிர், மெய்யொலிகளை வகை செய்து அளவிடுமாறு அமைந்துள்ளன, மொழிகள். அதிர்வு, இடம், முயற்சி நிலையிலும் மொழிகள் அளவிடப்படும்.

7.4. ஒலியன் தொடர்க் கட்டுப்பாடு (Redundancy in Phonemic sequence)

மொழியில், ஒலியன் மீண்டும் மீண்டும் வருகையில் கட்டுப்பாடு (Redundancy) எல்லா மொழிகளிலும் உள்ளது. முதல், இடை, இறுதியில், இணைவில், தொடரில், முன்பின் முறையில், வாராமையில் பல கட்டுப்பாடுகள் உள. உயிர்,மெய் ஒலியன் தொகையிலும் இதுவாகும். கட்டுப்பாடே இல்லாமல் எவ்வொலியனும், எங்கும், எவ்வாறும் வரும் என்ற கட்டுப்பாடின்மை (Zero redundancy), மொழியில் இல்லை. எல்லா உயிரொலியன்களும், எல்லா மெய் யொலியன்களும் மக்களால் ஒலிக்க முடிவன யாவும் எல்லா மொழியிலும் வாரா. மொழிக்கு மொழி வரையறை வேறுபடும். இவ்வொரு முறையிலேயே வரும் என்ற நிறை கட்டுப்பாடும் (Absolute limitation), இம்முறை பெரு வழக்கு, இம்முறை சிறு வழக்கு என்ற ஒப்பீட்டு வருகையும் (Relative limitations) உள. ஒலியன்களிலும், இவை அளவில் மிக வரும், இவை குறைய வரும் என்பதுமாம். இவை, விழுக்காடளவில் கணிப்பிற்குட்பட்டன. எல்லாவற்றையும் போல், இக்கட்டுப்பாடு அளவிலிருப்பின், ஒலிப்பெளிமையாகும்.

இவ்வாறான கட்டுப்பாட்டோடு கூடிய ஒலியன் தொடரொழுங்கு (Pattern or type), பலவகை முறைகளோடு, மொழிக்கு மொழி வேறுபடலும், ஒன்றுபடலும் ஆம். எல்லா மொழிக்கும் பொது நிலை ஒழுங்கு முறைகளும் உள. இத்தகைய முறைகளை ஒலியன் வருகைக் கட்டுப்பாடும், பிறவும் வகை செய்கின்றன. ஹாவாய் (Hawaiian) முதலிய பாலினேஷிய மொழிகளில் சில உருபன்கள் (Morphemes) ஒவ்வோர் அசையாலும், பல இரண்டு அல்லது மூன்று அசைகளாலும் ஆக்கப்பட்டுள்ளன. சில காக்கேசிய மொழிகளில் சொல்லின்

ஒவ்வோர் ஒலியனும் ஒவ்வோர் உருபனாகும். ஹாவாய் மொழியில் ஓருயிர் அல்லது ஒரு மெய்தொடர்ந்த உயிர், ஓரசையாகும். இவ்வாறு ஒன்றோ, பலவோ அசை கொண்டது சொல். அசையாக்கம்,மொழியின் ஒரு முதன்மையான ஒலியன் சேர்முறை (Pattern) ஆகும்.

7.5. ஒலியன் சேர்க்கைக் கூறுகள் (Phonemic groups)

ஒலியன் சேர்க்கைக் கூறுகள் ஒலிப்பியற் கூறுகள் (Phonetic groups), ஒலியனியற் கூறுகள் (Phonemic or phonological groups), இலக்கணக் கூறுகள் (Grammatical groups), சொற் பொருளியற் கூறுகள் (Semantic groups), இன்னொலிக் கூறுகள் (Rhythmic or intonation groups), நுண்ணிசைக் கூறுகள் (Musical groups) என அறுவகைப்படும். இறுதியது செய்யுளிசை குறித்தது. இன்னொலிக் கூறுகள், ஒலியழுத்தம் (Stress), இன்னொலி (Pitch), காலம் (Duration) இவற்றையடிக் கொண்ட பகுப்புக்கள். சொற் பொருட் கூறுகள் அகர முதலிப் பொருளை அடிக்கொண்ட சொற் (Word or lexeme) பகுப்புக்கள். பெயர், வினை, அடை, இடை முதலியன இலக்கணக் கூறுகள். ஒலியன் அடிப்படையில் கூறுபடுத்தும் அசைகள், அசைச் சேர்க்கைக் கூறுகள் முதலியன, ஒலியனியற் கூறுகள். ஒலிப்பியற் கூறுகள் என்பன, ஒலியன் சேர்க்கை கருதாத, ஒலிப்பு அடிப்படையில், காற்றின் அலை வெளிப்பாட்டு முறையில் காணும் அசைகள், அவற்றின் சேர்க்கைகள் முதலியன. ஒலிப்பு, ஒலியன், இன்னொலியியற் கூறுகள் மூன்றும் தம்மில், ஒலிப்பு, ஒலியன், இன்னொலியன் என்ற நிலையில் வேறுபடினும், இவை ஒன்றன் நிலை வேறுபாடுகளே தவிர, ஒன்றன் தோற்ற வேறுபாடுகளே தவிர, மூன்றும் ஏறத்தாழ ஒன்றே. ஒலியன், இன்னொலியன் கூறுகள் இரண்டும் ஒலியன் கூறுகள் எனும் அளவில் ஒன்றே. வேறுபாடும் இவற்றிடைச் சிறிதாம். ஆறும் பல நிலையில் ஒன்றுபடும். ஆயினும், பல பார்வையில் வேறுபடும். இவை ஒலிக்கூறுகள் என்பதனை, வரையறை செய்வது, இவற்றிடைப்பட்ட இடைவெளி அல்லது இடைமுறிவே (Pause or juncture). சில மொழியில் சொற்பகுப்புத் தெரிவதில்லை. சில மொழிகளில் ஒலிப்புக் கூறு (Breath or phonetic group), ஒலியழுத்தக் கூறு (Stress group), பொருட்கூறு (Sense group) ஆகிய மூன்றும் சொல் முடிவுடையன.

7.6. இன்னொலியன்கள் (Tonemes)

உலகின் பல மொழிகளில் சொற்களோடு இன்னொலிக் கூறுகளைச் (Tones) சேர்த்துச் சொல், பொருள் வேறுபாடு கொள்வதும் உள்ளது. இத்தகைய இன்னொலியன்கள் (Tonemes) பலவகை பெறுவன. இவைகளுக்குச் சூழ்நிலைச் சேர்க்கை ஒலிப்பு வேறுபாடுகளும் (Allotones) உள. இவை மொழியிலக்கணக் கூறுகளாகவும் பயன் படுத்தப்படுகின்றன. இத்தகைய இன்னொலிக் கூறுகள் மொழிக்கு மொழி வேறுபட்ட வகையுடையனவாகும். அவை :

1. உயர்-உயர்ச்சி (High-high), உயர்-நடு (High-mid), உயர்-தாழ்ச்சி (High-low)

2. *உயர்வு* (High), *நடு* (Mid), *தாழ்வு* (Low), *எழுதல்* (Rising), *வீழ்தல்* (Falling)

3. *நடுவீழ்ச்சி* (Mid falling), *தாழ் வீழ்ச்சி* (Low falling), *உயர் வீழ்ச்சி* (High falling), *உயர் எழுச்சி* (High rising), *தாழ் எழுச்சி* (Low rising)

4. *உயர் மட்டம்* (High level), *உயர் எழுச்சி* (High rising), *தாழ் வீழ்ச்சி* (Low dipping), *உயர் வீழ்ச்சி* (High falling)

5. *உயர் எழுச்சி* (High rising), *தாழ் வீழ்ச்சி* (Low falling), *உயர் வீழ்ச்சி* (High falling), *தாழ் வீழ்ச்சி-உயர்ச்சி* (Low falling- rising)

6. *உயர்ச்சி* (High), *தாழ்ச்சி* (Low), *இடைமை* (Mid), *எழுச்சி* (Rising), *வீழ்ச்சி* (Falling)

7. *நடுவீழ்ச்சி* (Mid falling), *தாழ்-வீழ்ச்சி* (Low falling), *உயர் வீழ்ச்சி* (High falling), *உயர் மட்டம்* (High level), *நடு எழுச்சி* (Mid rising)

8. *வீழ்ச்சி* (Falling), *எழுச்சி* (Rising), *வீழ்ச்சி-எழுச்சி* (Falling - rising), *எழுச்சி-வீழ்ச்சி* (Rising-falling), *எழுச்சி-வீழ்ச்சி-எழுச்சி* (Rising-falling-rising), *வீழ்ச்சி-எழுச்சி-வீழ்ச்சி* (Falling-rising-falling)

என்றிவ்வாறான பலவகை இன்னொலியன்களை (Tonemes) உடையன, பல மொழிகள்.

7.7. தமிழ் ஒலியன் வழங்கியற் கட்டுப்பாடு (Redundancy in phonemic distribution in Tamil)

தமிழ் மொழியில் எல்லா உயிரொலியன்களும் சொல்லின் முதல், இறுதி, இடையில் வரும். மெய்யொலியன்கள் தனி நின்று உயிர் தொடர வருமன்றிப் பிறிதோர் மெய் தொடர மொழி முதலில் வாரா. அஃதாவது, ஒரு மெய்யன்றி, இரண்டு, மூன்று என்று மெய்கள் தொடர, மொழி முதன்மை இல்லை. க,த,ந,ப,ம என்னும் ஐந்து மெய்யும் 12 உயிரும் தொடர்ந்துவர முதலாகும். /ச/கர மெய், பழைமையில், /அ, ஐ,ஔ/ என்னும் உயிர் தொடர முதலாகாது. இன்று /அ/கரந் தொடர்ந்துமாம். /ஐ,ஔ/ தொடர வருவது, கடன்பெற்ற சொற்களில் ஆம். /வ/ என்னும் மெய், அதனைப் போன்ற இதழ் சேர் ஒலிகளாகிய /உ,ஊ,ஒ,ஓ/ எனும் நான்குயிரும் தொடர முதன்மையாகாது. பழைமையில், /ஞ/கரம் /ஆ,எ,ஒ/ எனும் மூன்றுயிர் தொடரவும், இன்று அவற்றோடு, அ, இ, தொடரவும் மொழியின் முதலாம். /ய/கர மெய் /ஆ/ காரம் ஒன்றோடேயே மொழி முதலாம். பிற தொடர வருவது, கடன் பெற்ற சொற்களிலாம்.

/எ,ஒ,ஔ/ எனுமுயிர் இறுதி வருவது அருகிய வழங்கியல். இன்று மொழியிறுதியில் /ங/ கரமொழிந்த மூக்கினம் ஐந்தும், இடையினம் ஆறும் ஆகிய பதினொன்று மெய்யொலியன்களுமே வரும். வல்லொலிகள் வாரா. ஆயின் பழந்திராவிட மொழியில் வல்லொலிகள் இறுதியில் வருவன, இன்று /உ/கரஞ் சேர்ந்து, பின் குற்றுகரமாக

முடிய வருகின்றன. /வ/கர இறுதி அருவழக்கு; பரவல் வழக்கன்று. தனிமெய்யே இறுதியாகுமன்றி இரண்டு, மூன்று சேர்ந்து முடியா. /ண ம்/ன் ம்/ ண் ண்/ ன் ன்/ என்பன செய்யுள் அருவழக்கு. பதினெண் மெய்யொலியன்களுள் /ர,ழ/கரம் நீங்கிய பதினாறும், தம் முன் தாம் வரத் தொடரும் (Identical sequence). /ர,ழ/ எனும் இரண்டன் முன், பிற மெய் ஒன்று வரத் தொடரும் (Non-identical sequence). தம் முன் தாம் வரத் தொடரா. /க,ச,த,ப/ எனும் நான்கும் தம்முன் தாம் வரவே தொடரும் (Identical sequence only). பிறவரத் தொடரா. (க்க், ச்ச்,த்த், ப்ப்) என)

வேற்றுநிலை (Non-identical)

1. ட்,ற் + க்,ச்,ப்

2. ள்,ல் + க்,ச்,ப்-ய்,வ்

3. ண்,ன் + க்,ச்,ப் - ய்,வ்-ஞ்,ம் - தொடர வரும்
   ள் > ண் > ட், ல் > ன்> ற் - இடை > மெலி > வலி ஆகும் இயைபுடையன
   ள் > ட் > , ல் > ற் - இடை > வலி

4. ஞ்,ந்,ம்,வ் +ய் - தொடர வரும்

5. ம் + வ் - தொடர வரும் (ஞ்,ந்,ம் - ய்,வ் - மொழி முதல் வரும் மெலி, இடை)

6. ங்,ஞ்.ண்,ந்,ம்,ன் + க்,ச்,ட்,த்,ப்,ற் - முறையே தொடர வருவன (Homorganic sequence) (ங்க், ஞ்ச், ண்ட், ந்த், ப்ம், ன்ற் - என)

7. ய்,ர்,ழ் + க்,ச்,த்,ப் - ங்,ஞ்,ந்,ம்-ய்,வ் - தொடர வரும்.

8. ய்,ர்,ழ் + க்,ச்,த்,ப் / ங்,ஞ்,ந்,ம் - வலி அல்லது மெலி அல்லது இன மெலி-வலி என மூன்று மெய் தொடர வருவன.

ஆகக் /க,ச,த,ப/ தம்மொடு தாமே தொடர்வன. /ர,ழ/ தம்மொடு பிறவே தொடர்வன. எஞ்சியன இரு வழியிலும் தொடர்வன. இவையன்றிப் பிறவாறாக மெய்கள் தொடர்வது தமிழ் மொழி வழக்கில்லை. இன்னோரன்ன தொடர் நிலைக் கட்டுப்பாடுகள் மொழி அமைவையும், ஒலியனமைவையும் காட்டுவன.

உயிருள் /ஔ/காரமும், மெய்யுள் /ங/கரமும், /ஞ/கரமும், /ந/கரமும் இறுதியிலும் அருவழக்கு. /ங்,ஞ்/ இன வலி தொடர் நிலையில் (ங்க்,ஞ்ச்) பெருவழக்கு. /ங/கரம் வேறு எந்நிலையிலும் வருவதில்லை. /ங்க> ஙு/ ஆகத் திரிந்த நிலையில், /அ/கரந் தொடர, இவ்வொரு நிலையில் மட்டும் வரும். /ஞ/கரமும் இனவலியோடு (ஞ்ச்) இணைந்த நிலையிலன்றி எவ்வரவிலும் அருவழக்கே.

7.8. அசை (Syllable)

7.8.1. சொல்லும், அசையும் (Word and syllable)

செய்திப் பரிமாற்றக் கலையில் (Semiotics) பொருள் குறிக்கும் சொல்லுக்கு (Sign) மிக்க சிறப்புண்டு. அதுவே, அக்கலை வழி, மொழிப் பார்வையின் தொடக்கம் என்னலாம். சொல் ஒலியும், பொருளும், இணைந்த வடிவம் என்பதனினும், ஒலித் தொடர், பழக்கத்தால், செய்திப் பரிமாற்ற நிலையில், உலகப் பொருட் கூறுபாட்டினைக் குறிக்கும் போது, ஒரு வடிவங் கொண்டு, சொல் அல்லது குறி (Sign) எனும் பெய்ரைக் கொள்கின்றது. அதன் ஒலித் தொடரும் ஓர் அமைப்பை அடைகின்றது. பொருளைக் குறியாதபோது, அவ்வொலித் தொடர் ஓரமைப்பையும் பெறாது. வடிவையும் பெறாது. மொழிக் குட்பட்டும் வாராது. குறி என்னும் பெயரினையும் பெறாது. வெற்றொலித் தொடராகவே முடியும். ஆகவே ஒலித்தொடர், ஒரு நிலையில், பொருளைக் குறிக்கும் போதே, குறி என்னும் பெயரினைப் பெறுவதனோடு, ஒலித் தொடர் ஓர் அமைவினையும் பெறுகின்றது. இத்தகைய குறி உலகப் பொருளைக் குறிக்கும் போது, பொருட் குறிப்பு மொழி நிலை (Object language) அடைகின்றது. மாறாகத் தன்னைக் குறிக்கும் போது, அஃதாவது, அதன் வடிவ நிலை, வகை நிலை, இலக்கண நிலை, பொருள் நிலை, அமைப்பு நிலை, சூழ்நிலை, முதலிய பிறவாறான (சொல் தன்னைக் குறிப்பதாவது, மரம் என்பது பெயர்ச் சொல், ஓரறிவுயிர் என்பன போல) தற்குறிப்பு மொழி (Meta language) நிலை அடைகின்றது. இவ்வாறான இரு செயல்களாகிய பொருட் குறிப்பு, தற்குறிப்பு அல்லது பொருண்மை தெரிதல், சொன்மை தெரிதல் என்னும் இரு பார்வைகளை உடையதாகின்றது, சொல் அல்லது குறி (Sign). இதன் மேல் நிலை அல்லது புறநிலை, இதன் தொடராகிய சொற்றொடர். இதன் கீழ்நிலை அல்லது இதன் அகநிலை, உருபன், அதனோடு, அசைநிலையுமாம்.

7.8.2. ஒலிப்பசை (Phonetic syllable)

அசை நிலையே, சில போது உருபனாகலாம். ஆயினும், இயல்பாக அசை நிலைக்கு, உருபனுக்குப் போலப் பொருள் இல்லையாகும். அசை நிலை என்பது, உலக மொழிகளில் எல்லாம் காணும் மொழியின் ஒலி நிலையான, முதல், தொடர்க் கூறாகும். பொருள் கருதாத ஒலி அல்லது ஒலியனின் மொழியளவிலான மிகச் சிறிய தொடர் முடிவுடையது. இத்தகைய அசையமைப்பு மொழிக்கு மொழி வேறுபாடுடையதுமாம். மொழியொலித் தொடரில், ஒலிக்குன்றுகளின் தொடராகத் தோன்றுவனவே, அவை. ஒலித் தொடரில் இரு புறமும் வீழ்ச்சி கொண்ட எழுச்சிகளே அவை. ஒலித் தொடரில் எடுப்பும், படுப்பும் கொண்ட ஒலியமைவுக் கூறுகளே அவை. இவை ஒருபுறம், வாயமைப்பால் ஏற்படும் ஒலிப்போடு தொடர்புடையன (Phonetic). மறுபுறம், வேறுபடு கூறாகிய ஒலியனோடு தொடர்புடையன (Phonemic). இத்தகைய அசைகள், ஒரு சொல்லில் ஒன்றோ, பலவோ காணும்.

ஒலிப்புக் காற்றின் துடிப்புக்கள், அசைகளாக வடிவங்கொள்கின்றன, சொல்லில் அல்லது அவற்றின் தொடராகிய மொழியில். ஆக ஒலிப்பு, ஒலியன் ஆகிய ஒலித் தொடரின் அடிப்படைத் துணுக்கு அசை. இத்தகைய அசைகளின் இடைவெளி மிக நுண்ணியது. இடைமுறிவு என்று கருத முடியாதது.

நுரையீரல் துடிப்புக்களால் ஆவன அசையென்றும், நுரையீரலின் உள்ளமைந்த சிறு, சிறு காற்றறைகளின், விலாவெலும்பிடைத் தசைகளின் அழுத்தம், சுருக்கங்களால் ஆவன அசைகள் என்றும், இவற்றிற்கும், அசையாக்கத்திற்கும் தொடர்பில்லையென்றும், வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. இவ்வாறாக்கப்பட்ட அசைகளின் சேர்க்கைக் கூறுகள் (Breath groups), நுரையீரலின் கீழுள்ள தசைச் சுவரின் (Diaphragm) சுருக்கத்தால், இடைமுறிவோடு (Juncture) அமைகின்றன, என்பதுமாம். இடையீடுபடும் தசைகளின் சுருக்கத்தால், அழுத்தம் பெற்ற இடையீடுபடும் காற்றாற்றல் துடிப்புக்களே, அழுத்தத்தை நடுநிலையாகக் கொண்ட அசைகளாக ஆகின்றன, என்பது. எவ்வாறும், அழுத்தம் பெற்ற காற்றலையின் எழுச்சியும், வீழ்ச்சியுங் கொண்ட துடிப்புக்களே, அசைகளாக ஆகின்றன. ஒலிப்புறுப்புக்களால் ஏற்படும் ஒலிப்பியல்புகளே, ஒலி, பொருள் வேறுபாட்டை விளைவிப்பதால், வேறுபாட்டியல்புகளாகி, ஒலியன் களாகின்றன போல, ஒலிப்பலைகளின் துடிப்புக்களாகிய ஒலிப்பசை களே (Phonetic syllables), வேறுபாட்டியல்புகளாகிய ஒலியன்களின் தொடராகும் போது, ஒலி(ஒலியன்)யசைகள் (Phonemic syllables) ஆகின்றன. உச்சியும், சரிவுகளும் கொண்ட ஒலிப்புக் கூறாகிய அசை, உயிர் உச்சி, மெய்ச் சரிவுகளாகக் கருதப்படும் நிலையில், ஒலியன் கூறாகிய அசையாகின்றது. ஒலியலைப் பகுதி, ஒலியன் எனும் வடிவு பெற (தொடர் வடிவு) ஒலியனசைப் பகுதியாகின்றது. உச்சங் கொண்ட ஒலிப்பியல்பு (Culminative feature), சொற்சிறு கூறுபாட்டியல்புக்கு (Configurative feature) வருவதே, ஒலியனசைக் கூறுபாடு.

இத்தகைய அசைக் கூறு இரு கூறுகளைக் கொண்டது. ஒன்று நடுப் பகுதி (Central or nuclear). மற்றையது ஓரப்பகுதி (Marginal or non-nuclear). நடுப் பகுதியாகிய உச்சிப் பகுதி (Crest) தெளிவுடையது (Distinctive). மற்றையது, தெளிவில்லது (Non-distinctive). முதலது நிறையொலிப்புடையது (Sonorous). மற்றையது அதன் மறுதலையது (Non-sonorous). முன்னையது, அழுத்தமுடையது (Stressed). ஏனையது, அதன் மறுவியல்பினது (Unstressed). அஃதாவது, அசையை உருவாக்குவதும் (Syllabic), அல்லதும் (Non-syllabic) ஆகும். பெரிதும் முன்னையது, உயிரொலியாகவும், பின்னையது, மெய்யொலியாகவும் அமையும். அருவழக்காக /m,n/ முதலிய மூக்கொலிகளும் /l,r/ முதலிய இடையொலிகளும் உயிர் போல அசையுச்சமாதலுமாம்.

உயிர்ப்புறுப்புக்களின் தசைச் சுருக்கத்தால் ஏற்படும் புறஞ்செல் வளியின் (Egressive air) துடிப்புக்களே, அசைகள் என்ற கருத்துக்கு

மாறுபட, ஈரசையுடைய சொல்லொலிப்பில், சில போது ஒன்றும், ஓரசையுடைய சொல்லில், சில போது, இரண்டுமாக, உயிர்ப்புறுப்புத் தசைச் சுருக்கமும், அவ்வாறான மின்னியக்க உந்தலும் ஏற்படுவதனால், அசையாக்கத்திற்கும், உயிர்ப்புறுப்புத் தசைச் சுருக்கத்திற்கும், அதன் விளைவாலாகிய மின்னியக்க உந்தலுக்கும் நேர் தொடர்பு தெரிவ தில்லை. இருப்பினும், தசைச் சுருக்க மின்னியக்க உந்தலுக்கும், அசையாக்கத்திற்கும் பெரிதும் இயல்பான, பொதுவான தொடர்பு காணப்படுகின்றது. சிறப்பாக, அசையாக்கத்திற்கும், அதன் கண் காணும் ஒலியழுத்தத்திற்கும், அலையதிர்வு மேம்பாட்டிற்கும் குரல்வளை ஒலித்தசை அடிப்படைக் காரணம் என்பதும் தெரிகின்றது. அசையோசை எடுப்பமைப்பில், மிகு ஒலியலையதிர்வு (Higher pitch), கால நீட்சி (Longer duration), மிகை ஒலியழுத்தம் (Greater intensity) இவை மூன்றும் கூடிய ஒலிச்சேர்க்கைத் தரம் (Segmental quality) காணப்படுகின்றது. அன்றியும், ஒலியழுத்தம், தடையில் வாயொலிப் போடும் (Vocoid) இயைந்து காணப்படுகின்றது - (Fry, 1955: 58, 65- cited by Laver, John, 1994: 513).

ஆங்கிலம் போன்ற மொழிகளில் ஓரசையுடைய சொற்களோ, இரண்டு முதலாகிய அசையுடைய சொற்களோ இருப்பின் ஒரு சொல்லில் எடுப்பான அழுத்தமுடைய அசை (Stressed syllable) ஒன்றே காணும். எஞ்சியன யாவும், ஒப்பீட்டில் எடுப்பில் அசை (Unstressed syllables) ஆக இருக்கும். ஓரசைச் சொல்லாயின், அதுவே எடுப் புடையதாகும். ஒரு சொல்லுக்கு ஒன்றே எடுப்பசையாகச் சொற் றொடரின் சொல் தொகை காண அதுவே வாய்ப்பளிக்கும். இவ்வாறாகும் எடுப்பசை, சொல்லழுத்தம் (Word or lexical stress) எனப்படும். இத்தகைய எடுப்பசையும், அவ்வசையழுத்தமும் உச்ச நிலைச் செயலைச் (Culminative function) செய்வனவாகும். இச் சொல்லது, அசையது அழுத்தம் நடுநிலையழுத்தமாகும் (Nuclear stress). தொடரழுத்தம் (Sentence stress) இதிலிருந்து வேறுபடலுமாம்.

7.8.3. ஒலியனசையும், அமைவும் (Phonemic syllable and structure)

அசையமைவின் உயிர் நிலை அல்லது நடுநிலை அதன் உயிரொலி. இது அசை நடுநிலையுயிர் (Nuclear vowel) அல்லது அசையுச்சி (Peak) எனப்படும். இதுவே, அசையின் இன்றியமையாத எடுப்பான பகுதி. இது முன், பின் மெய்யொலி தொடரவும் வரும். இதன் முன் மெய், தொடக்கவுறுப்பு (Onset) என்றும், பின்மெய், முடிவுறுப்பு (Coda) என்றும் பெயர் பெறும். அசை, முற்பகுதி (Onset), பிற்பகுதி, சிறப்புடை உள்ளீடு (Core) அல்லது இசைப் பகுதி (Rhyme) என இரு வகைப்படும். பிற்பகுதி மீண்டும், உச்சநிலை (Peak or nucleus) என்றும், முடிவு (Coda) என்றும் இரு வகைப்படும். உச்சி அல்லது நடு (Central) உயிராகவும், ஓரங்கள் அல்லது சாய்வுகள் (Marginals) மெய்யாகவும் இருப்பதே அசையமைவாகும்.

அசை (Syllable)

தொடக்கவுறுப்பு (Onset)

இசையுறுப்பு அல்லது சிறப்புறுப்பு (Rhyme or Core)

நடுவுறுப்பு (Nucleus or peak)

முடிவுறுப்பு (Coda)

- (Shaumyan, Sebastian, 1987: 72)

இவ்வசைகள்,

(1) ஒரு குறிலுயிர், மிகையாக ஒரு குறில் மெய் தொடர வருவது, மெல்லசை (Weak syllable) அல்லது ஒலிப்பெளியது (Light syllable) (2) ஒரு நெடிலுயிர், முடிவுறுப்புடன் அல்லது அஃதின்றி வருவது, அல்லது ஒரு குறிலுயிர், இரண்டோ அதன் மிகுந்தோ முடிவுறுப்புத் தொடர வருவது, அல்லது ஒரு குறிலுயிர், குறைந்தது ஒரு நெடில் மெய் தொடர வருவது, வல்லசை (Strong syllable) அல்லது ஒலிப்பரியது (Heavy syllable) என இரு வகைப்படும். இவை, முறையே ஓரளபும் அல்லது ஒரு மாத்திரை(Mora)யும், அதன் மிக்கதுமாம். குறிலசையும், நெடிலசையுமாம்.

நிறையொலிப்பு அல்லது எடுப்பொலிப்பு (Sonority), ஒலிப்புறுப்பின் மிகு திறப்பு, மிகு ஒலிப்பாற்றல், தடையின்மை முதலியவற்றால் ஏற்படுவது. தடையுடைய, மிகு திறப்பில்லாத ஒலிகளாகிய விரைதடையொலி (Stops), தடையுரசொலி (Affricate), உரசொலி (Fricatives) ஆகிய நிறை தடையோடு, குறைதடையாக வரும் மூன்றொலிகளும் நிறையொலிப்பற்ற (Non-sonorous) ஓர ஒலிகளாகவே (Marginals) அசையில் வரும். மூக்கொலி (Nasals), இடையொலி (Liquids /l,r/), வழுக்கொலி (Glides), இம்முறையே தடை குறைந்து வருவனவாகிய இடைத்தர மெய்களும் நிறையொலிப்பற்ற (Non-sonorous) ஓர ஒலிகளாகவே அசையில் வரும். அருகிய வழக்காக இடையொலிகளும், மூக்கொலிகளும், சில சொற்சூழலில் நிறையொலிப்பு (Sonorous) ஆகும். இவற்றின் மாறாக, உயர் நிலை உயிர் (High vowels), நடு நிலை உயிர் (Mid vowels), தாழ் நிலை உயிர் (Low vowels) எனும், இம்முறையே நிறையொலிப்புடையன (Sonorous) எப்போதும் அசையுச்சியாகவே (Central or nuclear) வரும்.

மொழிகளில் அசைகள் உயிர், மெய்த் தொடரில் பல வகைகளை மேற்கொள்ளும். உ (v), மெஉ(cv), மெ-மெ-உ (ccv), உ-மெ (vc), உ-

மெ-மெ (vcc), மெ-உ-மெ (cvc), மெ-மெ-உ-மெ (ccvc), மெ-மெ-உ-மெ-மெ (ccvcc), மெ-மெ-மெ- உ-மெ-மெ-மெ (cccvccc), மெ-மெ-மெ-மெ-(cccc-), - மெ-மெ-மெ-மெ (-cccc) என்று பலவாறான தொடர் நிலைகளைக் கொள்வதியல்பு. இவ்வாறான ஒன்றோ, பலவோ அசைகளைக் கொண்டிருப்பன சொற்கள் சொல்லசைகளில், ஒன்று முதலழுத்தம் (Primary stress), மற்றொன்று துணையழுத்தம் (Secondary stress), அழுத்தமின்மை (Unstressed) கொண்டிருத்தலுமாம்

7.8.4. அசையும், இன்னோசையியல்புகளும் (Syllable and prosodic features)

சொல்லசைகளில் நிலையான அசையழுத்தம் (Fixed lexical stress), வேறுபடும் அசையழுத்தம் (Variable lexical stress) என இருவேறுபட்ட அசையழுத்தங்கள் உள. முதலசையழுத்தம், இரண்டாமசையழுத்தம், ஈற்றயலின் முந்திய அசையழுத்தம், ஈற்றயலசையழுத்தம், ஈற்றசையழுத்தம் என்றிவ்வாறான எடுப்புடை நிலையான அசையழுத்தமுடைய சொற்களைக் கொண்ட மொழிகளே பல. மாறாகச் சூழலுக்குத் தக்கவாறு வேறுபடும் அசையழுத்தமுடைய சொற்களைக் கொண்ட மொழிகளும் ஒரு பகுதியன.

அழுத்தத்தால் எடுப்புடைய அசைகளைப் போல, இன்னொலித் தரமுடைமை (Pitch-value) யால் எடுப்புடைய அசைகளையுடைய சொற்களமைந்த மொழிகள், இன்னொலி மொழிகள் (Tone languages) என்பன. இத்தகைய அசையடியாக அமைந்த இன்னொலிகள் (Syllable - based tones), அம்மொழிகளின் சொற்களை வரையறை செய்யும். இவ்வசைகளையுடைய மொழிகளை இருவகைப்படுத்தலாகும். *(1)* நேர் இன்னொலியமைவு (Register tone system) *(2)* வளை இன்னொலியமைவு (Contour tone system). இவ்விருவகையும் கலந்த இன்னொலியசைகளையுடைய சொற்களாலாகிய மொழிகளும் உள.

ஒலித்தரம் (Quality), கால அளவு (Duration), ஒலியழுத்தம் (Stress or amplitude), இன்னொலி (Pitch or frequency) எனும் நால்வகை ஒலியலைக் கூறுகளில், இரண்டாகிய, இன்னோசைக் கூறுகளாக (Prosodic features) அமைந்தனவாகிய ஒலியழுத்தம், இன்னொலி எனும் இரண்டன் அடிப்படையில் ஆகும், இரு வேறு எடுப்புடைய அசைகளையுடைய மொழிகள், இரு வேறுபட்ட அமைவுகளையுடையன (Languages of stress features and of tone features of phonemic and tonemic sequences).

· தனியுயிரும், கூட்டுயிரும் எப்போதும் அசையழுத்தம் பெற்று உச்சமாக, ஆங்கிலத்தில் /p,t,k,b,d,g,ʧ,dʒ,f,θ,s,ʃ, h,v,ð,z,ʒ/ என்பன, அசையில் அழுத்தம் பெறாதனவாய், ஓரங்களாகவே வரும். /m,n,l,r/ சில போது அசையழுத்தம் பெறுவன (eg) bottom, button, bottle, butter. உயிர் போன்றனவாகிய உயிர்ச் சாயலின /j,y,w,r,h/ என்பன, அச்சாயலிருந்தும் உயிர் போல அசையழுத்தம் பெறா. அசையுச்சமடையா (Consonants-semi vowels, non-syllabic or consonantal vocoids).

சொல்லில் அசைகள் அழுத்தமுடையன/இல்லன, நீளசை/குறுகசை, உயரொலிப்பசை/தாழொலிப்பசை என்றுமாம். எல்லா அசைகளும், அசையொலிகளும் சூழ்நிலையால் சிறு மாற்றமடைதலுமாம். எல்லா மொழிகளிலும் ஒலிப்பசை உளது. அது ஒலிப்பை அடியாகக் கொண்டது. எல்லா மொழிகளிலும் ஒலியனசையுளது. அது ஒலியன் சேர்க்கை அல்லது ஒலியன் கூறாகும் இது மொழியின் உயிர், மெய் ஒலியன்களை வகை செய்து காணவும் உதவுகின்றது. இரு வகையசையிலும் பொதுக் கூறாகிய, ஒலியழுத்தம், இன்னொலிக் கூறு, காலக்கூறு, ஒலித் தரம் இவற்றுள் ஒன்றோ, பலவோ, சிறப்புக் கூறாகவிருக்கும். இக்கூறுகளை, அசைகளுடைமையால், அசையாக்கத்தில், ஒலியலையின் நான்கு கூறுகளின், அல்லது இன்னோசையின் மூன்று கூறுகளின் சிறப்புத் தெரியவரும். அசையாக்கத்தில் ஒலியன் பங்குகளும் தெரியவரும். ஒலிப்புக் காற்றின் துடிப்புக்கள் (Pulses) ஒலிப்பசைகளாகி (Phonetic syllables), ஒலியனசைகள் (Phonemic syllables) ஆகுவன, குறிப்பிடப்பட்ட உயிர் மெய் ஒலியன்களாலும் (Inherent features), ஒலியழுத்தம், இன்னொலி, காலக்கூறு முதலிய இன்னோசைக் கூறுகள் (Prosodic features) ஆகிய ஒலியன்களாலும் ஆக்கப்படுவன. அசைகளின், இடை வெளியை ஒலிப்பு மாற்ற முணர்த்தும். அசைகள், ஒலியழுத்தம், இன்னொலி, காலக் கூறுகளை உறுப்பாகவுடையனவாயினும், அவற்றின் அமைவிடங்களையும் புலப்படுத்தும்.

அசையழுத்தம் (Syllabic stress) அல்லது அசை இன்னொலி (Syllabic tone) அல்லது அசை நீட்சி (Syllabic quantity or duration), இவற்றின் ஆக்கக் கூறுகளாகிய ஒலியழுத்தச் சேர்க்கைகள் (Stress groups), இன்னொலிச் சேர்க்கைகள் (Tone or intonation groups), இன்னிசைச் சேர்க்கைகள் (Rhythmic groups) முதலானவற்றை வரையறைப்படுத்திக் காண உதவும். சொற் கூறுகள் (Lexical units), இலக்கணக் கூறுகள் (Grammatical units) இவற்றையும் வரையறை செய்ய உதவுவன அவை. அஃதாவது, இக்கூறுகளின் இடை முறிவுகளையுணர்த்தி இவற்றை வரையறை செய்யும் என்பது. இயல்பாக ஒலியழுத்தம். இன்னொலிக் கூறு, காலக் கூறு என்பன அசையின், அதுவும் அதன் உயிர் நிலையாகிய உயிரொலியின் சிறப்புக் கூறு என்னலாம். ஆகவே, ஒலியனும் ஆய்ந்து காணுங்கால் இம்மூவியல்புகளோடு, தரம் (Quality) என்னும் இயல்பினையும் கொண்டு, வேறுபாட்டியல்புகளோடு (Distinctive features) இந்நான்கனவற்றையும் கொண்டது என்னலாகும். அசையில், ஒலியன்களின் சேர்க்கை முறை, அசைகளாலாகும் பெருங்கூறுகளாகிய ஒலியனியற் கூறுகள் (Phonological units), இலக்கணக் கூறுகள் (Grammatical units), சொற்கூறுகள் (Lexical units) இவற்றின்கண் அமைந்த ஒலியன் அமைப்பு முறைகள் (Patterns), அவற்றின் உட்கூறுகளின் தொகை, அவற்றின் வகைப்பாடுகள் (Types), தொடர் முறைகள் (Sequencial norms), இடைவெளிகள் (Pauses or junctures)

முதலானவைகள், ஒலியனமைவுகளாகும் (Phonemic systems). ஒலியன் தொடர் நிலையில் தோன்றும் இடைமுறிவுகள், இவற்றிற்கான குறிப்பிடத்தக்க பங்கினைப் பெறுவனவாகும்.

7.8.5. அசையும், ஒலியன்களும் (Syllable and phonemes)

சில காக்கேசிய மொழிகளில் ஒலித் தொடரின் ஒவ்வோர் ஒலியனும் ஓர் உருபனாகும். பெல்ல கூலா மொழியில், உயிரொலியாகிய உச்சி இல்லாதவாறே, தொடக்க நிலை (Onset) மெய்யே அசையாகும், பலவிடங்களில், அம்மெய்யொலிப்பின் முடிவு உயிர்போல் ஒலியைத் தோற்றுவிப்பினும், அசையுச்சியன்று. மொழிக்கு மொழி அசை யமைவுகள் வேறுபடுதலுமாம். அசை முதன் மெய்யின்மை (Zero onset), அசை கடை மெய்யின்மை (Zero coda), அசையிடை மெய்யின்மை (Zero interlude) முதலியன காணலுமாம். தனியுயிரும், கூட்டுயிரும் அசையுச்சியாக, அசைகளின் முதல், இடை,கடை மெய்கள் (Onsets, interludes and codas) அசையோரங்களாகவே, கூட்டுயிரின் (Complex peak) முதலுயிர் முதலுச்சியாக (Peak nucleus), இரண்டாவது, துணையுச்சி (Peak satellite)யாகும். ஓரசையே, ஒருருபனாவதும், சொல்லாவதுமாம்.

சில மொழிகளில் /a,e,o/ என்பன, முழுவுயிர்கள், எப்போதும் அசையுச்சியாகவேயிருக்கும். /i,u/ என்பன அரையுயிர்கள், சில விடங்களிலேயே அசையுச்சியாகும். முழுவுயிர்கள் எப்போதும் முதலுச்சியாகவே வர, அரையுயிர்கள், முதல், துணையாகிய இரு வகையுச்சிகளாகவும் வரும். சில மொழிகளில், இணையுயிராகிய (Covowel - /w/) அசையின் துணையுச்சியாகவே வரும் /m,n,ŋ,r,l/ என்பனவாகிய மூக்கொலிகளும், இடையொலிகளும், அரையுயிராக, அசையின் முதல், துணையுச்சிகளாக வரும் அசையோரங்களாக வாரா. சீன மொழியில் /y/, அரையுயிர் (Demi vowel), அசையின் முதலுச்சியாகவும், ஓரமாகவும் வரும். /m,n,ŋ/ அரை மெய்யாக (Semi consonants), அசையின் துணையுச்சியாகவும், ஓரமாகவும் வரும். /i,u,r/ என்பன அதன்கண் அசையின் மூவிடத்தும் வரும்.

7.8.6. அசை வகைகள் (Syllable types)

(1)அசையுச்சிக்குச் சிறப்புக் கொடுத்து, முதல், முடிவு கருதாத அசையமைவுக்கு உச்சி வகை (Peak type) என்று பெயர் (ஆங்கிலம்). (2) ஒரு மெய்ம் முதல், ஓர் உயிர் தொடர வருவ (ஒரு மெய் முடிய அதுவே வரினுமாம்)தனை இயல்பாகக் கொள்வது, முதலுச்சி வகையது (Onset peak type) (Yawelmani - California) (3) எல்லா அசைகளும் முதல் மெய் கொண்டது. உச்சி வருவதனைக் கருதாத இயல்பினது. இது, முதல் மெய் வகையது (Onset type) (Bella Coola-Canada) (4) மெய் + உயிர் இணைந்த அசை போன்றே, மெய் மட்டும் உடையதும், கால நீட்சியால், உயிர் தொடர வருவது போல், தனியசையாகக் கருதப்படும். இது, கால (நீட்சி) வகை (Duration-


type)யாகும் (Japanese) (5) இடைமுறிவு அல்லது சந்தி (Juncture) யால் பாகுபடுத்தப்பட்ட கூறுகளே (Segments) அசைகளாக வருமது, அசை-இடைமுறிவு வகை (Syllable-juncture type) எனப்படும் (Cantonese). இவ்வாறு அசையமைவு வகைகள் மொழிகளில் வேறுபடவரும். அழுத்த வகையும் (Stress-type), இன்னொலி வகையும் (Tone-type), எனப் பிறவாறுமாம் - (Hockett, Charles, 1970: 94, 99, 100) அசைகளின் ஒலிப்பு அடிப்படையமைவு, ஒலியன் அடிப்படையில், தெளிவான வரையறையில்லாமலிருப்பதும் சில மொழிகளில் ஒலித் தொடரில் உளது.

7,8.7. அசை–திறப்பு–அடைப்பு (Syllable-open-closed)

அசை, உயிரீறாக வருவது, திறப்பசை (Open syllable). மெய்யீறாக வருவது, மூடசை (Closed syllable). இயல்பாக, மெய் தனியாக ஒலியா. ஆகவே, உயிர் சார்ந்து, பக்கங்களில் வருவதனால் அசையாக்கம் பெறுகின்றது. தனியொலிப்புடைய உயிர், மெய்த் துணையோடு ஒலிக்கின்றது. அசையமைவு, உயிர், மெய்யின் பகுப்பைத் தருகின்றது. எனினுமாம். வாய்த் தடையின்மை, அதனால் வாய்த் திறப்பு, அதனால் எடுப்பொலி, அதனால் அசையுச்சி, அதனால் அசையமைவு. உச்சியென்பது, பிறவற்றோடாகிய ஒப்பு நோக்கில் பெறப்படுவது. ஒப்புக்குக் காணப்படுவது, உச்சியையமைக்கும் ஒலியாகிய உயிரொலியின் வேறுபட்ட மெய்யொலி. இவை தொடர, இத்தகைய அசையாக்கம் ஏற்படும். வாய் திறப்பு அல்லது தடையின்மையும், வாய் அடைப்பு அல்லது தடையுடைமையுமே தொடர்ந்து வர, அசையமைப்பையும், உயிர், மெய்ப் பாகுபாட்டையும் ஏற்படுத்துகின்றன.

அசை திறப்பு / அடைப்பு :

1.




திறப்பு + அடைப்பு

அல்லது

2.

அடைப்பு + திறப்பு

என்பன முடிவுடைய அசைகளாகும்.



என்பது போன்ற வடிவுடையதே, அசையமைவு. ஒலிப்புறுப்பின்

முயற்சி பெருக, அழுத்தம் உயர்ந்து, முயற்சி சிறுகச் சாய்வது, அசை. ஒலிப்பு அல்லது ஒலித் தொடரின் (Phonetic group) முதல் கூறு, அசையேயாக, ஒலித் தொடராகிய மொழி செல்கின்றது. அசைகளிடை மெய்கள் (Interludes) முன்னசையோடு முடிவாகச் செல்வதும், பின்னசையோடு தொடக்கமாகச் செல்வதும், பாகுபட்டு இருவழியும் செல்வதுமாம். சூழ்நிலை முறிவுகள், இவற்றை, மொழி ஒலித்தொடர் முறைக்குத் தக்கவாறு வகை செய்து தெரிவிக்கும்.

7.8.8. தமிழில் அசை (Syllable in Tamil)

தமிழில், செய்யுளசை இதனின் வேறுபட்டது. மொழியசை, தனியாகக் குறில் அல்லது நெடில் உயிராகவோ, ஒரு மெய்யை உயிர் முன் பெற்றோ, ஒன்று அல்லது இரு மெய் பின் பெற்றோ வருவதியல்பு. செய்யுளில், வழக்கில் அழுத்தம் கொடுத்து அல்லது, ஊன்றிச் சொல்லத் தனிமெய்யும் அரிதாக அசையாக்கம் பெறும். மொழியிடை மூன்று மெய்வர, பின்னையது தொடரசையின் முதலாகப் பிரிந்து செல்வதாகும். ஓருயிர் உச்சங் கொண்டது, தனித்தோ, முன் ஒரு மெய் இணைந்தோ, பின் ஒன்று அல்லது இரண்டிணைந்தோ அன்றிப் பிறவாறில்லை. (மெ) உ (மெ 1/2) - ((c) v/v (c) / (c c)).

7.8.9. அசைகளிடை, அசையில் ஒப்பீடு (Intersyllabic and intrasyllabic comparison)

ஓரசையில் ஈருயிர் இயல்பாக வருவதில்லை. இரண்டிணைந்த கூட்டுயிர் வரும். வேறுபட்ட உயிர், மெய் இரண்டன் இணைவாக்கத்தைக் காட்டுவதே அசை. அதுவும், எடுப்பும் (Crest), சாய்வும் (Slope) கொண்ட ஒலித் தொடராகும். அது, விடுப்பும், உச்சமும், தடுப்பும் (நிறுத்தல் அல்லது முறிவு) கொண்டது. உலக மொழிகளில் மெ+உ (cv) - வடிவமே பெருவழக்குடைய அசையமைவாகும். உயிர், மெய்யாகிய இன்றியமையாத ஒலியன்களும் (Inherent features), ஒலியழுத்தம், காலம், இன்னொலி முதலியன முன்னையவற்றோடு தொடர்ந்து, இணைந்து வரும் இன்னிசையொலியன்களும் (Prosodic features) இணையவரும் அசையமைப்பில், பின்னைய மூன்றும், தனித்தனியாக ஓரொலித் தொடரில் ஓரசையில் வருவதனை, மற்றோர் அசையில் வருவதனோடும் (Intersyllabic), அதே அசையில் வருவதனோடும் (Intrasyllabic) ஒப்பிட்டுக் காண்பதுமாகும்.

1. ஒலியழுத்த இயல்பு (Force feature)

ஓர் ஒலித் தொடரின் ஓரசையில் வரும் ஒலியழுத்தத்தை, அதே தொடரில் வரும் மற்றோர், அசையின் ஒலியழுத்தத்தோடு ஒப்பிட்டுப் பார்ப்பது, அசைகளிடை ஒப்பழுத்தப் பார்வை (Inter syllabic comparison of stress). மாறாக, ஒரே அசையில் வரும் உயிர் முதலாகிய ஓரொலியனை, அதே அசையில் வரும் துணையுச்சியோடு (Peak satellite) அல்லது அதே அசையில் வரும் மெய்யோடு, அல்லது அதே அசையிலுள்ள ஓரொலியனின் முற்பகுதி ஒலிப்பை அதன் பிற்பகுதி

யொலிப்போடு அழுத்தநிலையில் ஒப்பிட்டுப் பார்ப்பது, அசை யுறுப்புள் ஒப்பழுத்தப் பார்வை (Intrasyllabic comparison of stress) யாகும்.

2. காலவளவியல்பு **(Quantity feature)**

ஓர் ஒலித் தொடரின் ஓரசையின் உச்சி ஒலிப்பின் கால அளவை (Duration) அதே ஒலித் தொடரிலுள்ள மற்றோர் அசையின் உச்சி ஒலிப்பின் கால அளவோடு ஒப்பிட்டுப் பார்ப்பது, அசைகளிடை ஒலிப்பொப்புக் காலவளவுப் பார்வை (Intersyllabic comparison of duration). மாறாக, ஓர் ஒலித் தொடரின், ஓரசையிலுள்ள உச்ச ஒலியனை, அதன் துணையுச்ச ஒலியனோடோ (Peak satellite), அடுத்து வரும் மெய்யொலியனோடோ, ஒருச்ச ஒலியின் முற்பகுதியைப் பிற்பகுதி யோடோ, கால அளவு அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பது, அசையுறுப்பிடை ஒப்புக் காலவளவுப் பார்வை (Intrasyllabic comparison of quantity) யாகும்.

3. இன்னொலி இயல்பு **(Tone feature)**

ஓர் ஒலித் தொடரின், ஓரசையின், உச்ச ஒலிப்பின், நேர், எழும், விழும் இன்னொலிக் கூறுகளை (Level rising and falling pitches or tones) அதே ஒலித் தொடரின், மற்றோர் அசையின், அத்தகைய ஒலிப்புக் கூறுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது, அசைகளிடை ஒப்பின்னொலிப் பார்வை (Intersyllabic comparison of tones). மாறாக, ஓரொலித் தொடரின், ஓரசையின் உச்ச இன்னொலிக் கூறுபாட்டியல்பை, அதே அசையின் துணையுச்ச ஒலிப்பின் (Peak satellite), இன்னொலிக் கூறுபாட்டோடோ, தொடர்ந்து வரும் ஒலியனின் அக்கூறுபாட்டி யல்போடோ அல்லது அதே உச்ச ஒலிப்பின் முற்பகுதி இன்னொலி யியல்பை, அதன் பிற்பகுதி இன்னொலி இயல்போடோ, இன்னொலி யியல்பு அடிப்படையில் ஒப்பிட்டுப் பார்ப்பது, அசையுறுப்பிடை ஒப்பு இன்னொலியியல்பு பார்வை (Intrasyllabic comparison of tones) யாகும். இவை, அசை அகப், புறப்பார்வையாகும் - (Jakobson, Roman and Halle, Morris, 1980: 34, 35).

7.8.10. அசையுருவும், செயலும் (Syllable-form and function)

ஒலியன் தொடரமைவில் அதன் கட்டமைப்பும் (Structure), உறவும் (Relationship) தெரிகின்றது. இவ்விரண்டனாலும், இணை முறைகள் (Patterns) தெரிவதன்றிச் சேர்க்கை உருவும் (Form) அடைகின்றது. இத்தகைய உருவே பொருள் சுமந்து செய்திப் பரிமாற்றம் செய்கின்றது. மொழியில் உருக்கொள் முறையும் (Structuring), செயன் முறையும் (Functioning) இரு இன்றியமையாக் கூறுகள். ஒலித் தொடர்ச்சியும், இடையீடும் இணைந்து இவ்விரண்டனையும் ஆக்குகின்றன. உடலும், உயிரும் போல, உருவும், செயலும் மொழி வாழ்வை மேற்கொள் கின்றன. உருவில்லையேல் பொருள் அல்லது செயலில்லை. பொருள்

அல்லது செயலில்லையேல் அவ்வுருவும் இல்லையாகும். பொருளற்ற, பயனற்ற ஒலித் தொடராகும்.

1. ஒலிப்பு > ஒலி(யன்) > ஒலித் தொடர் > உரு > பொருள் > செய்தி (Communication).

2. உரு (Sign with meaning) > செய்தி (Communication-semiotic level)

ஒலிப்பாலாகிய ஒலியனைத் தேர்ந்து (Selection), சேர்க்க (Combination) உருவாகிப் பொருள் தந்து, செய்தியாக, மொழி முழுமையடைகின்றது. மொழியின் தொடக்கம், ஒலிப்பு, செய்தியாகப் பயன்படுவது, அதன் முடிவு. மொழிச்செயல் இதுவாகும். ஒலிப்பிறப்பு, செய்திச் செயலில் சிறப்பு.

அசையின் உச்சத்தை, அசையை, முறையே, அகச் சூழலில் (Internal context), புறச்சூழலில் (External context) பார்க்க வேண்டுமேயொழியத் தனித்துப் பார்த்தலாகாது. ஒலியனைத் தனித்துப் பார்த்தல் பயன் தாராதது போலவே, அசையையும், அதன் உசசத்தையும் என்க. மொழியுறுப்பில் எதற்கும் தனி நிலைச் செயற்பாடில்லையாகும். அசையுச்சத்தை முன், பின் ஒலிச்சூழலில், அசையைப், பிற அசைத் தொடர்ச் சூழலில், காண்பதே மொழியியல்பும், பயன்பாடுமாகும். ஆக, ஓரசை, ஒலியனாகிய முதலுறுப்பும், பகுப்பில் ஒலியனாகிய துணையுறுப்பும் இணைந்த அமைப்பும், செயற்பாடுடையதும் ஆகிய இவ்விரண்டனுள்ளும், ஒன்று, ஒன்றனுக்குச் சூழலை அமைத்துக் கொடுக்கின்றது. அசையின் அமைப்புச், செயற்பாட்டுக்கு, அவ்வம் மொழியின் பொதுக் கட்டமைப்புச் செயற்பாட்டுச் சூழலும் கவனிக்கத்தக்கது.

அசை அல்லது அதன் தொடர், உருபனாகச், சொல்லாக உருக் கொள்ளும் போது, பொருள், அவற்றின் உயிர் நிலையாகின்றது. அப் பொருளும், பொது நிலையில் வேறுபாடற்று (Invariance), சூழ்நிலையில் வேறுபாடுற்று (Variance) வரும். வேறுபாட்டியல்புடைய (Distinctive feature) ஒலியன், பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக இருப்பினும், அதற்கென்ற பொருளில்லாதது, தொடர் நிலையடையும் போது, உருபன், சொல்லாகப் பொருளியல்பு (Significant feature) அடையும் உருவாக, இவ்விரண்டன் இடைப்பட்ட, பொருளற்ற, ஒலியன் தொடர் நிலையே, அசை. எனவே, ஒலியன், அதனை அடுத்து வரும் அதன் தொடர் நிலை, அசை ஆகிய இரண்டும் ஒலிப்பு, ஒலியன் நிலையுடைய பொருளற்ற கூறுகள். இவற்றிலிருந்து பொருட் குறிப்பால் வேறுபடும், மொழிக் கூறுகளாகிய ஒலியன் தொடர் நிலைக் கூறுகள், உருபன், சொல் முதலியன. முன்னைய இரண்டும் ஒலியியல்பின. பின்னைய இரண்டும் ஒலியியல்போடு, பொருளியல்பும் உடையன (Distinctive and significant features).

உயிர்த் தொடக்கமில்லாத, மெய்ம் முடிவில்லாத அசையுடைய மொழிகளும் உள. மாறாக, மெய்த் தொடக்கமில்லாத, உயிர்

முடிவில்லாத அசையுடைய மொழிகளில்லை. அசையமைப்பு, உயிரொலியின் முதன்மைக் கூறு. மெய், அதன் துணைமைக் கூறே. உயிர், மெய்யின் உறவு முறை, அசையமைவில் தொடங்குகின்றது. ஒலிப்பலைகளால் ஆக்கப்பட்டது ஒலியன். அசையலைகளால் ஆக்கப்பட்டது பேச்சு (Utterance). அசையில், ஓரொலிக்கு உயர்ச்சி போன்று, சொல்லில் ஓரசைக்கு உயர்ச்சி. இத்தகைய உயர்ச்சி, இன்னொலிக்கும் (Pitch), இடை முறிவுக்கும் (Juncture), இன்னோசைக்கும் (Rhythm), அவற்றை அளவிட்டு வரையறைப் படுத்துவதற்கும் துணை செய்கின்றது.

7.8.11. அசையில், முதன்மையும், துணைமையும் (Syllable, primary and secondary)

குறியியலில் அசைக்கன்றிச் சொல்லுக்கே சிறப்பு. சொல், அசைகளால் ஆக்கப்படுவதால், சொல்லசைகளுள் ஒன்றே. உயரழுத்தத்தால் எடுப்புடையதாக, அதுவே, சொல்லின் நடுப்பகுதியாக (Centre), எஞ்சியன, அம்முதன்மையசைக்குத் துணையசைகளாக (Satellites) அமையும். முதன்மையசைக்கு எஞ்சியன வேறுபட்டனவாகும் (Stressed vs unstressed or primary vs secondary). இவ்வாறே, அசையுள், ஓருயிர் அல்லது ஒரு கூட்டுயிர், அவ்வசையின் நடுப்பகுதி(Centre)யாக, எஞ்சிய முன், பின் ஒலியன் களாகிய மெய், துணை ஒலிகளாக அமையும். முதன்மை ஒலியாகிய அவ்வுயிர்க்கு எஞ்சியன வேறுபட்டனவாகும் (Stressed or syllabic vs unstressed or non-syllabic or primary vs secondary). ஓரசையின் நடுப்பகுதி கூட்டுயிராயின், அதன் முற்பகுதியது, நடுப்பகுதி (Centre)யாகப், பிற்பகுதி துணைமை (Satellite) ஆகும் (Stressed vs unstressed or primary vs secondary). அசையின் நடுப்பகுதி ஒரு தனியுயிராயின், ஒலிப்பில், அதன் முற்பகுதி அழுத்தம் கூடியும், பிற்பகுதி குறைந்தும் இருக்கும். ஓரசையில் தொடக்க மெய்யினும் (Onset), முடிவு மெய் (Coda) இவ்வாறே ஒலிப்பில் சிறிது மிகுந்தும், குறைந்தும் இருக்கும். இவை யாவும், ஒப்பீட்டு முறையால் அமைவன. அசையில், தொடக்கம் எழுச்சியாகி, உச்சமடைந்ததும் வீழ்ச்சி யாவதால், எழுபகுதியனைத்தும் ஒலிப்புயர்ந்தும், விழுபகுதி யனைத்தும் ஒலிப்புத் தாழ்ந்தும் காணப்படுவதியல்பு. அசையில், நடுநிலை ஒலியும், துணைநிலை ஒலியும் போலவே, சொல்லில் நடுநிலையசையும், துணைநிலையசையுமாகும். அசையில், உயிரொலி யழுத்தம், உச்சநிலைச்செயலை (Culminative function) முதன்மை யாகவும் (Primary), பிறவற்றிலிருந்து வேறுபடுத்தும் செயலை (Distinctive function) துணைமையாகவும் (Secondary) கொண்டது. பொருளின்மையால் குறி(Sign)யாகாத அசையால் ஆக்கப்படுவதே, பொருளுடைய, குறியாகிய சொல்.

வியட்நாம் பேச்சு மொழிகளில், யாவும் ஓரசைச் சொற்களே. அசையாகப் பொருளில்லன. சொல்லாகப் பொருள் பெறுகின்றன.

உலக மொழிகள் அனைத்திலும் அசையுள்ளன. ஆயின், அவை எல்லாவற்றிலும் சொற்கள் ஓர் உயர் அழுத்தமுடைய அசையை யுடையன என்று கூறவியலாது. உயர் அழுத்தம் பெறாத அசையுடைய சொற்களும் உள மொழிகளில் முதற் சொற்கள் அழுத்தம் பெறத், துணைச் சொற்கள் இயல்பாக அழுத்தம் பெறா. சில மொழிகளில் துணைச் சொற்களும், சொற் கூறுகளும் அழுத்தம் பெறும். சில மொழிகளில் சொற் கூட்டத்தில் ஏதேனும் ஓரிடத்தில் அசையழுத்தம் பெற்று, ஏனையன, பெறாதனவாகும் இம் மொழிகளில் தனிச் சொற்கள் அசையழுத்தம் பெறாதனவாம். சொற் கூறுகளாகிய அசைகளும், வேறுபட்ட அழுத்த இயல்புகளையுடையனவாகும் மொழிகளும் பல சொல்லில், அசையில் அழுத்தம் இடம் மாறப் பொருள் மாறும் மொழிகளும் பல. சொல்லில் குறிப்பிட்ட அசையழுத்தமும், சொல்லின் அசையழுத்த வேறுபாடுகளும், சொல்லுள் அசையின் தொகையைக் குறிப்பனவுமாம். அசையழுத்தம் சொல்லை வரையறை செய்தலுமாகும். அசையில் உயிரும், மெய்யும் முரண்படும் (Contrast). உயிரோடு உயிரும், மெய்யோடு மெய்யும், உயரழுத்தத்தோடு உயரழுத்தமும், என்று, தம்முள் தாம் வேறுபடும். (Opposition). முரண்பாடு, தொடர் நிலையில் (Syntagmatic). வேறுபாடு மாற்று நிலையில் (Paradigmatic).

இயல்பாக ஓரசை, அதன் நடுநிலை உயிராகவிருக்கலாம். ஆயின், அதன் தொடக்கநிலை அல்லது முடிவு நிலை மெய்யாக இராது. தொடக்கவுறுப்பும் (Onset), சிறப்புறுப்பும் (Core) முதல் நிலை வகை. நடுநிலையுயிரும் (Nucleus), முடிவுறுப்பும் (Coda) இரண்டாம் நிலை வகை முடிவுறுப்புக் கொண்ட அசை பல மொழிகளில் இல்லை அல்லது அருவழக்கு. எல்லா அசைகளும் உயிர்த் தொடக்கமாக அல்லது உயிர் மட்டுமே உடையதாக உள்ள மொழிகள் இல்லை. தொடக்கவுறுப்பும், சிறப்புறுப்பும் வேறுபடுவது ஏறத்தாழ எல்லா மொழி வழக்குமாம். இது அசையின் அடிப்படைக் கூறு. நடுவுறுப்பும் முடிவுறுப்பும் வேறுபடுவது அசையடிப்படையன்று. இவை யிரண்டின்றி உயிர் முடிவு கொள்வதுமாம். அசையுச்ச அழுத்தம், கால நீட்சி, இன்னொலி இவற்றின் உறவு, அசை நடுவுறுப்பில் காண்பதும் கருதத்தக்கது. ஒலிப்பெளியது (Light syllable), ஒலிப்பரியது (Heavy syllable) என்பது, ஒலிப்பையும், ஒலியழுத்தத்தையும் பொறுத்தது. அசைகளிடை மெய் (Interlude) என்பது, ஈருயிரிடை மெய்கள் (Inter vocalic consonants). இது, ஒரு மெய்யாகவும் (Unary), இரு மெய்யிணைவாகவும் (Binary) இருக்கும். முதலது தொடர்ந்து வருவதன் தொடக்கக் கூறாக (Onset), இரண்டாமதன் முன் மெய், முந்தியதன் இறுதிக் கூறாகவும் (Coda), பின் மெய் தொடர்ந்து வருமசையின் தொடக்கக் கூறாகவும் (Onset) அமையும் இயல்பின. அசையின் கூறுகள் அனைத்தும், அஃதாவது, முதல், இடை, கடைக் கூறுகள் சொல்லுக்குமாம். இதன்கண் மொழியின் ஒலியமைவு, முறிவு முறைகளும், முதல், இறுதி, தொடர் முறைகளும் கருதத்தக்கன. மொழி விதிக்குத்தக்கவாறு அசையின் முதல், இறுதி அமையும்.

உலக மொழிகளில், பொதுவாக அசையமைவில் உயிரொலிகளே உச்சமாகுவதும் (Culminative function) அல்லது முதன்மையாகுவதும் (Primary), மெய்யொலிகள், அசையாக்கத் துணையொலிகளாகுவதும் (Satellites) அல்லது துணைமையாகுவதும் (Secondary) இயல்பு. சில மொழிகளில், இதன் மாறாக, மெய்யொலிகள் உச்சமாவதும், உயிரொலிகள் துணைமையாகுவதுமாம். ஒரு மொழியிலேயே, ஓரொலியனே, சிலபோது உச்சமாயும், சிலபோது அதனின் வேறுபட்டும் அசையமையும். ஆக, மொழியசையில், உயிரொலிகள் உச்சமாவது (Syllable nuclear) அதன் முதன்மைச் செயல் (Primary function). அதனின் வேறுபட வருவது, அவற்றின் துணைமைச் செயல் (Secondary function). மெய்யொலிகள், அசையமைவில், உச்சத்திற்குத் துணை (Satellites) செய்வதே அவற்றின் முதன்மைச் செயல் (Primary function). அசையின் உச்சமாவது, அருகி வருவது, அதன் துணைமைச் செயல் (Secondary function).

7.8.12. அசைப்புற மெய் (Extra syllabic consonant)

சில மொழிகளில், சில போது அருகிய நிலையில், நீண்ட மெய்க் கூட்டுக்கள் தோன்றும்போது, முதல் மெய், முன்னசையின் முடிவுறுப்பாக, இறுதி மெய் பின்னசையின், தொடக்கவுறுப்பாகச் செல்லத், தொடர்பில்லாத இடை மெய் முன், பின் அசையுறுப்பாகச் செல்லாது, தனித்து நின்று வற்றுமாயின், அது, அசைப் புற மெய் (Extra syllabic consonant) என்று பெயர் பெறும்.

எ - டு : வேய்-ங்-குறை, வேர்-ங்-குறை, தாழ்-ங்-குலை, தாழ்-ஞ்-சினை, தாழ்-ந்-தளிர், தாழ்-ம்-பயிர்.

இவற்றுள் - ங்,ஞ்,ந்,ம்- எனும் இடைமெய்கள் அவ்வகைப்பட்டன. Khmer Rouge, Phnom Penh, Psalm, Pneumonia, Psychology- முதலானவற்றுள்- முன்னிற்கும் /k,p/ என்பன, தொடர்பில்லாத நிலையில் மெய்க் கூட்டாகின்றன. ஒன்றில் இத்தகைய மெய், உயிர் முடிவுடையதாக அல்லது இரு மெய்யிடை வழுக்குயிர் வருவதாகக் கொண்டு, ஒலிப்பில், மெய்யுயிர் ஓரசையாகக் கொள்ளல் வேண்டும் (khi, phi, pi, pi). அன்றில், இச்சூழலில் இன்னோரன்ன மெய்கள், தனி நின்று, துணைமைச் செயலாக (m,n,l,r - போன்று) அசையுச்சம் (Syllabic) பெறுவதாகக் கொள்ளல் வேண்டும். அன்றி, இன்னோரன்ன மெய்கள் அசைப்புற மெய்கள் என்பதனினும், உயிரொலி போல உச்சம் கொள்வன என்பதனினும், சில போது, சில மெய்கள், தம் நிலையிலேயே (Not vocalic, but consonantic) அசையாக்கம் பெறுவனவுமாம், என்க - (Shaumyan, Sebastian, 1987: 57)

எ - டு : கண், ண் பொன், ன் (ண், ன்) - அசைகள்

இவ்வாறு அசையாக்கம், பல விதிகளுக்கு உட்பட்டு வரும்.

8 இன்னிசை ஒலிப்பியல் (Prosodial phonetics)

8.0. ஒலியிசை (Phonetic tone)

பேச்சு மொழியில் இரு வகையான ஒலியன்கள் இணையாகத், தொடர் நிலை பெறுகின்றன. சிறப்புடைய, இன்றியமையாக் கூறாக (Inherent), ஒன்று தெரிநிலையில் தொடர்ந்து செல்லக், குறிப்பாக, மற்றொன்று, இன்னிசைக் கூறாக (Prosodial), முன்னதனை அடிக் கொண்டு, மேற்பட்டு அதனோடு இணைந்து, தொடர்ந்து செயல்படுவது. முன்னையது உயிர், மெய் முதலிய பல பகுப்புக்களை யுடையதாகப், பின்னையது, அவ்வாறான பகுப்பின்மையால், பகுப்பில் கூறுகள் அல்லது மிகைப்பகுப் பொலியன்கள் (Supra segmental elements) எனப்படும். குறிப்பிடப்பட்ட முதன்மையொலியன்கள் (Primary phonemes) போல், பகுப்பில்லையாயினும், துணைமையொலியன்கள் (Secondary phonemes) ஆகிய இசைக் கூறுகள், அளவு நிலையால், மிகுதி/குறைவு, உயர்வு/தாழ்வு, நீட்டம்/குறுக்கம், செறிவு/திறப்பு என்றின்னோரன்ன வகையில் வேறுபாடுடையன. சிறப்பாக, ஒலியழுத்தம் (Stress), இன்னொலி (Pitch or intonation) ஆகிய இரண்டும் இன்னிசையமைவில் பெரும் பங்கு பெறும். இவற்றோடு, காலவளவும் (Duration), இடைமுறிவு அல்லது சந்தியும் (Juncture) இன்னிசையமைவில் பங்கு பெறுவனவாகும். இந்நான்கு இன்னிசைக் கூறுகளும், சிறப்பாகச் சொற்றொடரை அடிக் கொண்டு அமைவன. சொல்லையுமாம். அசையாக்க ஒலியழுத்தமும், இன்னிசைக் கூறாகிய ஒலியழுத்தமும் உயிரொலியை அடிக் கொண்டதாயினும், முன் னையது அசையாக்க அளவில் காணப்படுவது. பின்னையது, அதன் தொடராக்க அளவில் கணிக்கப்படுவது. இசைக்கூறு, தனிநிலை யிலன்று, தொடர்நிலையில் என்க. இவை, அசையின் தொடர் நிலை அல்லது சொல், தொடர் நிலை இசைக் கூறுகளாகும்.

இசைக் கூறுகளில் (Prosodemes), ஒலித்தரமும் (Quality) ஒரு கூறாகும். மொழி ஒலியில், ஒலிப்புக் கூறுகள் (Phonetic segments), ஒலியன் கூறுகள் (Phonological or phonemic segments) என்பன, இன்னொலி மொழிகளில் (Tone languages) இன்னொலிப்புக் கூறுகள் (Tonetic segments), இன்னொலியன் கூறுகள் (Tonemic segments) என்பனவான வகைக் கூறுகள், ஒலிப்பு/ஒலியன் முதலாக, அசையில், சொல்லில், அவற்றின் தொடர்கள் ஈறாக, எல்லா மொழிக் கூறு களிலும், அவ்வம் மொழியில்புக்குத் தக்கவாறு காணப்படுவனவாகும். மொழியிசைக் கூறுகளிலும் (Prosodemes) இவ்விரு வேறு ஒலிப்பு/

ஒலியன் கூறுகளைக் காணலாகும். இவை, ஒலிப்பால் ஏற்படும் ஒலியலை நிலையிலிருந்து, பொருள் வேறுபாட்டு நிலையால் ஒலி வேறுபடும் போது, உயிர், மெய் முதலாகிய இன்றியமையாத ஒலியன்களைப் போல, இசைக் கூறுகளாகிய அவையும் ஒலிப்புக் கூறாகிய நிலையிலிருந்து, பொருள் வேறுபாடு, அதனால் ஒலி வேறுபாட்டு நிலையால், ஒலியன் கூறாகின்றன. ஆக, மொழியின் எல்லாக் கூறுகளும் ஒலிப்பியல்பாகத் தொடங்கி, ஒலியன் இயல்பில் மொழியில் செயல்படுகின்றன.

இசைக் கூறுகளை, அசைத் தொடர் நிலையிலும், சொல் தொடர் நிலையிலும், மொழி வழக்கிற்குத் தக்கவாறு காணலாகும். ஒலியழுத்தம், அசை அல்லது சொல் தொடர் நிலையில், அசையின் இயல்பாகவே வரும். இன்னொலி (Pitch or intonation) இயல்பாகச் சொல்/தொடர் நிலையோடு தொடர்புடையது. இன்னொலி மொழிகளில் (Tone languages) இன்னொலி இயல்புகள் (Tones) அசையின், சொல்லின் தொடர் நிலையோடு தொடர்புடையன. அசைத் தொடர் நிலையே, சொல் தொடர் நிலையாதலால், இசைக் கூறுகளை, அவ்வடிப்படையில் காண்பது அமைவுடையதாகும்.

8.1 கால அளவு (Duration or quantity)

உயிர், மெய்களுள் எவ்வொலியனையும் நீட்டி ஒலிக்க இயலும். இவ்வொலியன்களின் ஒலிப்புக் காலத்தை ஒரு நொடிப் பொழுதின் நூற்றில் அல்லது ஆயிரத்தில் ஒரு கூறளவாகவோ, பிறவாறாகவோ, கால அளவுக் கருவியால் அளந்து காண முடியும். (Objective quantity). ஒவ்வோர் ஒலியனையும், வெவ்வேறு சூழ்நிலையில், ஒலிப்புக் காலத்தைக் கணக்கிட்டுப் பின், அவற்றின் கூட்டு வகைக் கூறுகண்டு, அதனை, அவ்வொலியனின் பொதுவொலிப்பு அல்லது தனி யொலிப்புக் காலம் (Absolute quantity) என அறுதி செய்யலாகும். ஓரொலியனின் ஒலிப்புக் காலத்தை, மற்றோர் ஒலியனின் ஒலிப்புக் காலத்தோடு ஒரே சூழ்நிலையில், அல்லது ஒரே ஒலியனின், இரு வேறு சூழ்நிலையின் ஒலிப்புக் காலங்களை, அல்லது இரு வேறு தனியொலியன்களின் ஒலிப்புக் காலங்களை அல்லது ஓரொலியனின் ஒலிப்பைக் கிளை மொழிகளில், வெவ்வேறு சூழ்நிலைகளில் அல்லது, ஒரே ஒலியனின் தனிநிலை, சூழ்நிலை ஒலிப்புக்களை அல்லது ஓரொலியனின் ஒரு சூழ்நிலையின் முற்பகுதி, பிற்பகுதி ஒலிப்புக் களைத், தம்மில் ஒப்பிட்டு, அல்லது பிறவாறு ஒப்பிட்டு ஒன்றனில் ஒன்று குறிது, நெடிது என்று காண்பது, ஒப்பீட்டளவு (Relative quantity).

ஒவ்வோர் ஒலியனின் ஒலிப்புக்கால அளவு, அவ்வொலியனின் அமைவைப் பொறுத்தது. ஒலிப்பின் தரத்தை, ஒலிப்போனைக், காலத்தை, இடத்தைப் பிறவற்றைப் பொறுத்ததுமாம். ஒலிப்பின் விரைவு கூட, ஒவ்வோர் ஒலியனின் ஒலிப்புக் காலம் குறையும். ஒலியன் தொடர்க் கூறுபாட்டின் நீளம் கூட, ஒவ்வோர் ஒலியனின் ஒலிப்புக்

காலம் குறையும். ஒலிப்புக்கால நீட்சி இவ்விரண்டன் மாறுபட்ட நிலையிலாகும். உயர்நிலை அல்லது மூடுயிர்கள், ஏனைய நடுநிலை, தாழ்நிலை அல்லது திறப்புயிர்களைவிட ஒலிப்புக் காலம் குறைவு டையன. பின்னுயிர், அதே நிலையிலுள்ள முன்னுயிரினும், ஒலிப்புக் காலம் குறைந்தது. தனியுயிர், கூட்டுயிரினும் ஒலிப்புக் காலம் குறைந்தது.

ஒலிப்பியற்கால அளவு (Chrone or duration), ஒலியனியற் காலவளவு (Chroneme or quantity or length) என வேறு பெயர் பெறினும், முன்னையது, ஒலிப்பு நிலையளவாகப் பின்னையது, பொருள், ஒலிவேறுபாட்டு நிலையளவாக, அதனிலிருந்து வேறுபடுகின்றது. பெரிதும், உயிரொலியில், வேறுபடு காலவளவு குறில், நெடில் எனக் காணப்படுவது போல, மெய்யொலிகளிலும் இவ்விரு வகை உள்ளன. பல மொழிகளில், உயிர், மெய்யில் இவ்விரு வகையான ஒலியன்கள், தனித் தனியாக உள்ளன. சூழ்நிலைக் குறுக்கம், நீட்சிகளும் பல உயிரொலியில், கூட்டுயிர் (Diphthong) நீட்சி போல, மெய்யில், இரட்டிப்பு (Gemination) மெய்ந் நீட்சியும் ஒரு வகை. அதனோடு, இரட்டை மெய் (Consonantal cluster)யின் நீட்சியும் ஒரு வகை. தனி மெய்ந் நீட்சி இவற்றிலிருந்து வேறுபட்டது. உயிர், மெய்யில் குறில் (Short), நெடில் (Long), கழி நெடில் (Extra or over long) எனும் மூவகையும் சில மொழிகளிலுள. இவை மூன்றும், பொருள் வேற்றுமை செய்யும் வேறுபட்ட ஒலியன்கள். பொருள் வேற்றுமை செய்யாத உயிர், மெய் அளபெடைகள் வேறு. அழுத்தம் அல்லது பொருளை மிகுத்துக் காட்டலுக்கும் நீட்டம் கொடுப்பதுமாம். காலவளவு, பிறவற்றோடு ஒப்பிடாத தனிநிலை (Absolute quantity), பிறவற்றோடு ஒப்புக் காணும் இயல்பினது (Relative quantity) என இரு வகையுடையது. குறில், நெடில் என்பன, பின்னையதைச் சார்ந்தது. ஒலியழுத்தம், இன்னொலி என்பனவும் தனிநிலை, ஒப்புநிலை எனும் இரு பார்வைகளையுடையன. வன்மை (Strong), மென்மை (Weak) எனும் ஒலியழுத்தங்கள், உயர்வு (High), தாழ்வு (Low) எனும் இன்னொலி வேறுபாடுகள், என்பனவும், ஒப்பீட்டுப் பார்வை வகையாகும். தொடர் முறிவுகளும் (Pauses) ஒப்பீட்டு நிலையில் குறிது, நெடிது முதலிய வகை பெறும்.

அதிர்வு வெடிப்பொலிகள், அதிர்வு உரசொலி, மூக்கொலியினும் ஒலிப்பு நீட்சியுடையன. அதிர்வில் உரசொலிகள், அதிர்வில் வெடிப்பொலிகளினும், ஒலிப்பு நீட்சியுடையன. வெடிப்பொலி முன் வரும் உயிரின் ஒலிப்பைவிட, அவ்வுயிர், உரசொலியின், முன்வரச் சிறிது நீண்டொலிக்கும். மூக்கொலி, பிரிவளியொலியின் முன் வரும் உயிர் ஒலிப்பை விட, 'ர்'- ஒலியின் (/r/) முன், அதே உயிர், சிறிது நீண்டொலிக்கும். இவ்வாறான உயிர், மெய், ஒலிப்பின் குறுக்கம், நீட்டம் ஒலிப்பில் தவிரப் பொருள் வேற்றுமை செய்யா.

உயிர், மெய் ஒலிகளில், பொருள் வேற்றுமை செய்யும் கால அளவு வேறுபாடுகள், பல மொழிகளில் உள்ளன. ஏனைய ஒலியன்கள்,

ஒன்றிலிருந்து மற்றொன்று, பொருள் வேற்றுமை செய்து, ஒலி வேற்றுமைப்படுகின்றதோ, தனியொலியன் ஆகின்றதோ அது போன்றே, உயிரில், மெய்யில் குறில், நெடில், கழி நெடில் என்பன மொழியில் ஒன்று, மற்றொன்றோடு பொருள் வேற்றுமை செய்து, ஒலி வேற்றுமைப்பட்டு, தனியொலியன்களாகின்றன. இவ்வாறான, மொழியொலியன்களின் குறில், நெடில் கால அளவு, அம்மொழியின் பொருள் அல்லது செயற்பாட்டு அல்லது பயன்பாட்டு அல்லது அம்மொழியியற் கால அளவு (Subjective or functional or linguistic quantity) என்று பெயர் பெறும். தமிழில் அ/ஆ, இ/ஈ போன்ற குறில், நெடில் வகை ஒலியன்கள் இவ்வியல்பின. இத்தகைய உயிர்க்குறில், நெடில் கால அளவு வேறுபாடு, திராவிட மொழிகளில், இந்தோ-ஐரோப்பிய மொழிகளில், பின்னோ-உக்ரேனிய மொழிகளில், செர்மானிய மொழிகளில், இலத்தீனம் முதலிய எண்ணிறந்த மொழிகளில் உள. 'எஸ்தோனிய' மொழியில் (Estonian) உயிரில் குறில், நெடில், கழி நெடில் (Very long) எனும் மூன்று வேறுபடு கூறுகள் உள (/a,a:,a::/). அம் மொழியில், மெய்யொலியிலும், இம்மூன்று வேறு கால அளவுகள் உள -(/n,n:, n::/). 'ஸ்காட்டிஷ் கேலிக்' (Scottish Gaelic) மொழியில், உயிரொலியில், மூவேறு கால அளவுகள் உள. இத்தாலியன், அங்கேரியன், மலே, பின்னிஷ் (Finnish) முதலிய மொழிகளில், மெய்யில் குறில், நெடில் உள.

சில மொழிகளில் மெய்யிரட்டிப்பு, அசை முறிவால், இரு கூறாக்கப்படுமாறும் உள்ளன. இத்தகையன, ஒரே மெய்யின் (Identical consonant) இரட்டிப்பு அல்லது மிகுதலாக இருக்கும். முன் மெய், உள்ளீர்ப்பொலியாகவும் (Implosive), பின்னையது புறஞ்செல் வளியதாகவும் (Explosive) இருக்கும். இவை அகம் (Internal), புறம் (External) எனும் புணர் மொழியிடைத் தோன்றுவனவாதலே இயல்பு. இத்தகைய மெய்யிரட்டிப்புக்களும் (Geminated consonants or double consonants) நீள் மெய்களே (Long consonants). இவை, இருபுற அசைகளோடும் தொடர்புடையன (Ambisyllabic).

எ - டு : எல், லாம் (ல்ல்), உண், ணல் (ண்ண்), காட், டாறு(ட்ட்), ஆற், றோரம் (ற்ற்) . Cut,ting (tt)- Cop,per (pp)

சில மொழிகளில் ஒன்றனை மிகுத்துச் சொல்வதற்காகவும் கால நீட்சி பயன்படுத்தப்படும்.

எ- -டு : அடி (டி:), இடி (டி:), சொல் (ல்ல்), நில் (ல்ல்) God (-O: -) Bad (-a:-)

இவ்வாறு, ஒலி அல்லது அசைத் தொடராகிய மொழியில், தொடருறுப்புக்கள், குறுகியும், நீண்டும், எடுத்தும், படுத்தும், உயர்நிலை கொண்டும், தாழ்நிலை கொண்டும், புணர்ந்தும், பிரிந்தும், தரம் கூடியும், குறைந்தும் செல்லும் இயல்பின. இத்தகைய வேறுபடு கூறுகளே, இன்னிசைக் கூறுகள் (Prosodemes). இவை, ஒலிப்புக் கூறுகளோடு (Phonetic units) இயைந்து, இணைந்து வரும். பல ஒலிப்புக் கூறுகள், சொற்களாக முடிதலுமாம்.

பேச்சொலியைக் கீழ்நிலை ஒலிக்கூறு (Subsegmental), மேல் நிலை ஒலிக் கூறு (Suprasegmental), தன்னிலை ஒலிக்கூறு (Segmental), இரண்டிடைப்பட்ட ஒலிக்கூறு (Intersegmental) என நான்கு நிலைகளில் காணலாகும். மேற்குறிப்பிடப்பட்டன, தன்னிலை ஒலிக் கூறுகளோடு, மேல் நிலைக் கூறுகளும் இணைந்து செயல்படுமாறாகும்.

உயிரொலியில் குறில், நெடில் பகுப்பு, உலக மொழிகள் பலவற்றில் உள. மெய்யில் அத்தகைய பகுப்புச் சில மொழிகளிலேயே உள. 'எஸ்டோனியன்' (Estonian), 'பின்னிஷ்' (Finnish), 'மால்டீஸ்' (Maltese) முதலிய சில மொழிகளில் உயிரிலும், மெய்யிலும் அப்பகுப்புக்கள் உள. உயிரில், மெய்யில் மூவகைப் பகுப்புக்கள் உள்ளன, 'எஸ்டோனியன்' போன்ற ஒரு சில மொழிகளே. இப்பகுப்புக்கள், பொருள் வேறுபாட்டு நிலையில் (Subjective), ஒன்றோடொன்று ஒப்பீட்டளவில் (Relative) அமைந்தன. மொழிக் கூறுகளின் ஒலிப்பில், கால அளவு இதனால் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது. ஒலிப்பை, ஒலியன் முதலாய கூறுகளைக் கால, இட அளவில் (Temporal and spacial) காண்பது, அடிப்படையமைப்பாகும். பேச்சுக் கூறுகளைத், தனிநிலையில் அல்லது தெரிந்து வேறிசைத்தலில், சூழ்நிலையில் அல்லது மொழிப்படுத் திசைத்தலில் என இரு வேறு வகையில், காலவளவால் கணக்கிடலாம். ஒவ்வோர் ஒலியன் ஒலிப்பிலும் காலம், அழுத்தம், இன்னொலி, தரம் என்பன உள. ஒலியன் அசையாக, அசைத்தொடராகத் தொடரும் போதும், அவை, புணர்முறிவு அல்லது சந்தியோடு வரும். அவை, அத்தகைய தொடர் நிலையிலேயே சிறப்படையும்.

8.2. ஒலியழுத்தம் (Stress)

அசைத் தொடராகிய மொழிக் கூறுகளில் ஒலியழுத்தம் மிகச் சிறப்பான பங்கினைப் பெறுகின்றது. ஏனைய அசைகளோடு ஒப்பிட்டுப் பார்க்குங்கால் (Relative) இவ்வொலியழுத்தமுடைய அசை, உச்சங் (Culmination)கொள்ளும். எடுப்பொலி (Sonority) ஆகும். சிறப்புக் (Prominence) கூறாகும். பிறவற்றிலிருந்து வேறுபடும் (Distinctiveness). பொருள் வேறுபட (Sense discrimination) உதவுதலும் ஆகும். மொழி இன்னோசைக்கும் (Linguistic melody), செய்யுளின்னிசைக்கும் (Metrical melody), இன்னிசைக்கும் (Musical melody) உதவும். மொழியின் இன்னிசையமைவின் (Intonation) உள்ளீடாகும் இடை முறிவு அல்லது சந்தி (Juncture) இதனை அடிக் கொண்டே வரையறை செய்யப்படும். இவ்வழுத்தம், ஒலி நீட்சிக்கு உதவும். இவ்வாறு பல நிலையில் ஒலியழுத்தம் (Stress) மொழியின் கண் செயல்படுகின்றது. இத்தகைய ஒலியழுத்தம் பல தரங்களை (Stress levels) உடையது.

ஆடு	- (பெயர் - ஒரு விலங்கு) -	ஆடு (வினை - கூத்தாடு)
ஓடு	- (பெயர்-தரை, கூரை ஓடு) -	ஓடு (வினை- ஓடுதலைச்செய்)
கட்டு	- (பெயர்- முடிச்சு) -	கட்டு(வினை-கட்டுதலைச் செய்)

பெயரில் முன்னழுத்தம், வினையில் பின்னழுத்தமே சொற் பொருள் வேற்றுமை (Lexical and semantic difference), இலக்கண வேற்றுமை (Grammatical or categorial difference) செய்கின்றன.

அழுத்தம்-முதல் - Noun	இறுதி - Verb
C´onduct	Condu´ct
C´onvert	Conve´rt
P´ermit	Perm´it
Pro´duce	Produ´ce
A´ddress	Addre´ss
A´ffix	Affi´x
முன்னசையழுத்தம்	பின்னசையழுத்தம்.

இவற்றில் உயிர், மெய்யாகிய ஒலியன்களின் தொடரில் வேற்றுமை இல்லாதிருந்தும், பொருள் வேற்றுமை இருப்பதால், இவ்வகையான வேற்றுமை, ஒலியழுத்த வேற்றுமையால் அமைந்தமையால், ஒலியழுத்தமும், உயிர், மெய் ஒலியன்கள் போன்று, வேறுபாட்டியல் புடைய ஓரொலியனாகின்றது. அதுவும், முதன்மையொலியன்களாகிய உயிர்க்கு மேற்புறம் நின்று, அவற்றின் துணைமையாகச் செயல்படு வதால் (அவையின்றி அழுத்தமில்லை) ஒலியழுத்தம் ஒரு துணைமை ஒலியன் (Secondary phoneme) ஆகின்றது.

8.2.1. ஒலியழுத்த அமைவு (Stress feature or formation)

அசைத் தொடராகிய சொல்லில் ஓரசையே முதன்மையான ஒலியழுத்தம் (Primary stress) பெறுகின்றது. எஞ்சிய அசைகள், முதன்மையினும் குறைந்தும், அழுத்தமின்றியும் இருக்கும். முதன்மை யினும் குறைந்த அழுத்தமுடையது, துணைமை ஒலியழுத்தம் (Secondary stress) என்றும், எஞ்சியது, அழுத்தமில்லது (Unstressed) என்றும் மூவகைத் தரம் பெறும். முதன்மை, / ´/, துணைமை / `/ ஆகிய இரண்டும் குறிப்பிடத் தகுந்த வகை பெறும் - (Hockett, Charles. 1970: 50). ஓரசையேயுடைய முதன்மைச் சொற்கள் முதன்மையழுத்தம் ஒன்றே கொள்வன அத்தகைய துணைமைச் சொற்கள் அழுத்தமின்றி வருவன. எனவே, ஒலியழுத்த வேறுபாடுகள் ஈரசை, மூவசைச் சொற்கள் முதலானவற்றில் அமைவனவேயாகும். ஒலியழுத்தத் தரங்களை வேறொரு வகையில் குறிப்பிடுவதுமுண்டு.

முதன்மை (Primary) - / ´ /

துணைமை அல்லது இரண்டாவது (Secondary) -/ ^/

மூன்றாம் தரம் (Tertiary)- / ˇ/

மெல்லழுத்தம் (Weak stress) / ` /

- (Gleason, H.A.Jr., 1970: 41, 42, 45)

ஆக, முதன்மையும், அஃதின்மையும் என இருவகை. அஃதின்மையே துணைமை முதலாகிய பிற வகை பெறுகின்றது. அஃதின்மையாகிய துணைமையே பிற எனினுமாம்.

'சுவீடிஷ்' (Swedish), 'நார்வேஜியன்' (Norwegian) மொழிகளில், தனிமை (Simple), கலப்பு (Complex) அழுத்தங்கள் என இரு வேறுபட்ட அழுத்தக் கூறுகள் உள. முன்னையது, எழுதல் (Rising), வீழ்தல் (Falling) எனும் இன்னொலிக் கூறுகளால் அழுத்தம் (Accent) பெறுவது. பின்னையது. எழுதல் - வீழ்தல் (Rising-falling), வீழ்தல்-எழுதல் (Falling-Rising) என்பனவாகிய இன்னொலிக் கூறுகளால் அழுத்தம் பெறுவது. சில மொழிகளில் மூக்குச் சாயல் ஒலிகள் (Nasalised), மூக்குச் சாயலின்மை (Non-nasalised) என்பனவும், 'லெட்டிஷ்' (Lettish), 'டேனிஷ்' (Danish) மொழிகளில் குரல்வளை வெடிப்பொலிகள் என்பனவும் ஒலியழுத்தம் (Accent) கொடுப்பனவாகும். ஒலியழுத்தம், இயல்பாக உயர் இன்னொலியோடும் (Higher pitch), கால நீட்சியோடும் (Long quantity) தொடர்புடையது.

சொல்லோடு கட்டுற்ற நிலையான ஒலியழுத்தம் (Bound stress) ஒலிச்சிமையங்குறித்துச் சொல்லின் தொடக்கம், முடிவு காட்டிச் சொற்றொடரின் சொற்றொகையை வரையறை செய்யுமேயன்றிக், கட்டற்ற ஒலியழுத்தம் (Free stress) போன்று, பொருள் வேற்றுமைக்கு உதவாது. சில ஒலியழுத்தங்கள், பெயர், வினை, அடைச் சொற்களில் மட்டும் இருப்பதால், ஒட்டுக்களில் (Fixes- prefix, suffix, infix), இணைப்புச் சொற்களில் (Conjunctions), துணை வினைச் சொற்களில் (Auxiliary verbs), வேற்றுமையுருபுகளில் (Pre and post positions). இடைச் சொற்களில் (Clitics), ஒன்றன் குறிப்பில் (Article) இல்லாமையால், இலக்கணக் கூறுகளை வரையறை செய்யவும் அவை உதவும். இசைக் கூறுகள் (Prosodic elements), மொழிக் கூறுகளைச் சேர்க்கவும், பிரிக்கவும், இசை கொடுக்கவும், சிறப்புக் கொடுக்கவும், பொருள் வேற்றுமை செய்யவும், மொழியியல்பை, அமைவைக் காட்டவும், உணர்வு நிலையை உணர்த்தவும், உயிர், மெய்யாகிய சிறப்பொலியன்களோடு இணைந்து உதவுகின்றன.

'செக்' (Czech) மொழியில், நிலையழுத்தமாக (Fixed stress), சொல்லின், முதலசையில் ஒலியழுத்தமிருக்கும். 'டர்க்' (Turk) மொழியில், எப்போதும், சொல்லின் இறுதியசையில் அழுத்தமிருக்கும் (Oxytone). இலத்தீன மொழியில் (Latin) சொல்லின் ஈற்றயலசையில் (Paroxytone) அல்லது அதன் முந்திய அசையில், (Proparoxytone) (ஈற்றயலசையின் அமைப்பைப் பொறுத்து) ஒலியழுத்தமிருக்கும். மாறாக, ருஷ்ய மொழியில் (Russian) ஒலியழுத்தம் சொல்லின் அமைப்பைக் கருதாது, பொருள் வேறுபாடு குறித்து, எவ்வசையிலும் நிலையாக இராது, மாறி வருமியல்பினது (Free stress). இதன்கண் ஒலியழுத்தம், ஒலிப்பிறுக்கத்தோடு வருவது (Dynamic or strong). உலக மொழி பலவற்றில் இத்தகைய ஒலியழுத்தம் உளது.

இன்றைய கிரேக்க மொழியில், கால அளவையழுத்தம் (Quantitative stress) சில சொற்களில் காணும். இது, அவ்வசையில் உயிரொலி நீட்சியோடு பிறப்பது. அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆசியப் பழங்குடி மக்கள் மொழிகள் பலவற்றில் இன்னொலி அல்லது இன்னிசை யழுத்தம் (Tonal or Musical pitch) சொற்களில் காணப்படும். சொல்லில், அசையில் காணும் இன்னொலி (Pitch) மாற்றத்தால் ஏற்படுவதிது.

இரண்டு அல்லது பலவசைச் சொல் இருவகையான அழுத்தங்களை யுடையனவாகும். அவை, அழுத்தமுடைமை (Accentual), அழுத்த மின்மை (Non-accentual) என்பன. இத்தகைய சொற்களின் அசைகளில் ஒன்றே அழுத்தமுடையதாக, எஞ்சியன அழுத்தம் இல்லன அல்லது குறைந்தனவாக, அல்லது முறையே முதன்மை, துணைமை யுடையனவாக அல்லது, ஒன்று, இரண்டு, மூன்று தரமுடையனவாக, எஞ்சியன அழுத்தமில்லனவாக வரும். சொன்மை அல்லது ஒலிப்பு அல்லது ஒலி நிலையில் எடுப்புடையதாகப் பொருண்மை நிலையிலாயின், வேறுபடுத்துவதாக வரும். உணர்வு நிலையில் (Emotional/emphatic) ஆக, முரண்பாட்டு நிலையிலாக அல்லது மறுப்பு நிலையிலாக (Negation) வருதலுமாம்.

ஒலிப்பழுத்தம் (Phonetic stress) என்பது, ஓரசையின் ஒலிப்பழுத்த மிகுதி, குறைவு என்பதனை, மற்றோர் அசையோடு ஒப்பு நிலை ஒலிப்பால் காண உதவுவது. அழுத்தத்தை, அசையின் ஒலியனமைவால் காண்பது, ஒலியனழுத்தம் (Phonological stress). அழுத்தமுடைமை, இன்மையாகிய இருவகை அழுத்தங்களையுடைய அசைகளை, ஒலியனழுத்தத்தால் வேறுபடுத்திக் காணவியலும். ஒலியனழுத்தம், ஒரு சொல்லின் ஓரசைக்குக் கொடுக்க, அதனால் அச்சொல் வரையறை செய்யப்படுமாயின் அது சொல்லழுத்தம் (Word stress or lexical stress) எனப்படும்.

எ - டு : க´லங்கல் (பெ) கலங்´கல் (வி)
´Object (n) Obj´ect (v)

இத்தகைய சொல்லழுத்தம், ஒலிப்பியல்பால், மொழிக்கு மொழி வேறுபடுதலுமாகும் ஒலிப்பியல்பு ஒலிப்புறுப்பமைவு, அதன் இயக்கங்களைப் பொறுத்தது. ஆதலால், சொற்றொடர் ஒலியழுத்தம் (Sentence stress or nuclear stress) என்பது, சொல்லழுத்தத்திலிருந்து (Word or lexical stress) வேறுபட்டது. இன்னிசைத் தொடரில் (Intonational phrase) அல்லது நெடுந்தொடரில் (Macro segment) நடுப் பகுதியாகிய அசை, மிக்க ஒலியழுத்தம் பெற்று, ஏனையவற்றின் சிமையமாக இருப்பதே சொற்றொடர் அழுத்தம். இது, இயல்பாகச் சொல்லழுத்தமாகவே இருக்கும். இத்தகைய இன்னிசைத் தொடரில் பிற சொல்லழுத்தங்களும் காணப்படும். தொடரில் சொல்லழுத்த மாகிய ஒலியனழுத்தம் (Phonological stress), அழுத்தம் உடைமை, இன்மையாகிய இருவகையான அசைகளை வேறுபடுத்திக் காட்ட உதவும் என்பதனோடு, சொல்லின் கண், முதன்மையழுத்தம் (Primary

stress), துணைமையழுத்தம் (Secondary stress), அழுத்தமின்மை (Unstressed) ஆகிய மூவகை அழுத்த வேறுபாட்டசைகளை வகைப் படுத்தும், என்பதுமாம்.

உ´ழைப்பு வா´ழ்வி`ல் உ´யர்வைக் கொ´டுக்கும். Th`is li´bra`ry is the t´emp`le of this pla´ce - (கொடு-சொற்றொடரழுத்தம்). அதுவே அச்சொல்லழுத்தமுமாம். ஏனைய சொல்லழுத்தங்களையும், அழுத்த மின்மையையும் காணலாகும்.

மிகையுணர்வழுத்தம் அல்லது சிறப்பழுத்தம் அல்லது ஊன்றி யுணர்த்தும் அழுத்தம் (Emphatic stress) முன்னையவற்றிலிருந்து வேறுபட்டு, ஒன்றற்குச் சிறப்பு அல்லது மிகுதி அல்லது ஒன்றனைத் தனித்து எடுத்துக் காட்ட அல்லது மனஉணர்வு காட்டக் கொடுக்கும் அழுத்தமாகும்.

எ - டு : மா´வின் காய்கள் வீழ்ந்தன
மாவின் கா´ய்கள் வீழ்ந்தன
மாவின் காய்கள் வீ´ழ்ந்தன

இவ்வாறு, ஒவ்வொரு சொல்லிலும் அழுத்தம் கொடுத்துச் சிறப்புக் கொடுக்கப்பட்டது. இதனால் பிற மரம், இலை அல்லது பூ, வெதும்பின, கனிந்தன என்பனவற்றிலிருந்து இவை நீக்கியுணர்த்தப் பட்டன.

சொல்லழுத்தத்தில், அழுத்த மாற்றத்தால் பெயர், வினை மாற்ற மடையும்போது, அசையழுத்தம் குறையும்போது, உயிர்க்குறுக்கம் (Vowel reduction) ஏற்படுவதையும் காணலாகும்.

எ - டு : ´Insult (n) - Ins´ult (v)
´Import (n) - Imp´ort (v)

வினையில், அழுத்தமில்லாத முதலசையில், உயிர், பெயர்ச் சொல்லின் முதலசை உயிரொலிப்பினுக்கும் குறுகியொலித்தவாறு.

சொல்லில் உயிர்க் குறிலும், ஒரு தனிமெய்யும் கொண்ட மெல்லசை (Light or weak syllable)யை விட, மெய் தொடர வரும் அல்லது வாராத உயிர் நெடில், உயிர்க் குறிலோடு மெய்ந் நெடிலும், அல்லது இரண்டு அல்லது அதன் மேற்பட்ட மெய்யும் சேரவரும் வல்லசை (Heavy or strong syllable) எடுப்பொலியதாகத் தோன்றும். நிலையான சொல்லழுத்தம் (Fixed lexical stress) உடைய மொழிகளில், ஒலியழுத்தம், சொல் முதலில், ஒன்று அல்லது இரண்டாவது அசையிலோ, சொல்லிறுதியில், மூன்றில் ஓரசையிலோ இயல்பாக, மாறாது வரும். இவை, சொல்லின் முதல், இறுதிகளை வரையறை செய்யும். 'பின்னிஷ்', 'செக்', மொழிகள், சொல் முதலிலும், பிரெஞ்சு, 'டர்க்', 'இரேனியன்', 'ஆர்மீனியன்' மொழிகள் சொல் இறுதி யசையிலும், 'போலிஷ்', 'ஸ்வாஹிலி' மொழிகளில் ஈற்றயலிலும், 'மாசிடோனியன்' மொழிகளில் ஈற்றயலுக்கு அயலிலும் அழுத்தம்

பெறும். 'மெசோ' அமெரிக்க மொழிகளில், ஈறு அல்லது அயலில் பெறும்.

சில மொழிகளில் குறில், நெடில் அளவை அடிக் கொண்டு அழுத்தம் செல்வதுமாம். நிலை மாறும் சொல்லழுத்தம் (Variable lexical stress) உடையன, 'அசாமீஸ்', 'டச்சு', 'ஆங்கிலம்', 'கிரீக்', 'இத்தாலியன்', 'ஸ்பானிஷ்', 'ஸ்வீடிஷ்', 'ருமேனியன்', 'ரஷ்யன்' போன்ற மொழிகள் பல - (Laver, John, 1994: 522).

'டெரீனா' (Terena-Brazil) மொழி போன்ற ஒரு சில மொழிகளில், சொல்லழுத்தம், சொற்றொடரிலுள்ள சொற்களின் இலக்கணக் கூறுகளை வரையறை செய்யும்.

இசையில், செய்யுளில், பேச்சில் இன்னிசை அல்லது இன்னோசை (Rhythm)யமைவது, ஓரமைப்புக்கு (Pattern) உட்பட்டு, ஏதேனும் ஒன்று அல்லது பல, குறிப்பிட்ட காலக் கணக்கில் (Isochrony) வருவதாகும். இது, அசையை (Syllable based), ஒலியழுத்தம் (Stress-based), கால அளவு (Mora or quantity based), ஒலியுச்சம் (Prominence based), என்றிவ்வாறான பலவற்றின் அடிப்படையில் அமைவதால், இன் னிசைக்கு ஒலியழுத்தம், இன்றியமையாத அடிப்படையாகும்.

8.3. புணர்முறிவு (சந்தி) (Juncture)

அசைத் தொடராகிய சொற்றொடர் அல்லது பேச்சு மொழியில், உயிர், மெய்யாகிய முதன்மைக் கூறுகளும்,அவற்றோடு இணை தொடராக, அழுத்தம், இன்னொலி, கால அளவு முதலிய இசைக் கூறுகளும் மாறி, மாறித் தொடர்ந்து செல்லும். வெளிப்படையான, பகுப்புடைய, சிறப்புக் கூறுகளாகிய உயிர், மெய்யொலிகள் ஒன்றையொன்று தொடர்ந்து செல்லுங்கால் இடையீடு அல்லது இடைமுறிவுகள் ஏற்படுவது, மொழியியல்பும், ஒலிப்பியல்புமாகும். இத்தகைய முறிவுகள், ஓரொலியிலிருந்து இன்னோர் ஒலியை ஒலிக்க ஏற்படும் ஒலிப்புறுப்பின் இடமாற்றத்திடை (Transition) ஏற்படுவன வாகும். ஒலியன் தொடரில், ஒவ்வோர் ஒலியனையும் ஒலித்து முடிந்ததும் ஏற்படும் முறிவு அல்லது அடுத்ததனை ஒலிக்க முயலும் முன் இரண்டிடை ஏற்படும் இடைவெளி முறிவாகும். ஒலியன் + முறிவு + ஒலியன் - என்றிவ்வாறு, இடைவெளி தோன்றத் தொடர்ந்து செல்லும் ஒலியன்கள். தொடரொலியன்களின் ஒலிப்பிடைவெளி அல்லது இடையீடே அம் முறிவு. இத்தகைய முறிவுகள் அல்லது ஒலிப்பிடப் பெயர்ச்சி இடைவெளிகள், செறிந்ததும் (Close transition), திறந்ததும் (Open transition) என இரு வகைப்படும். அஃதாவது, இடைவெளி, சிறிதும் பெரிதுமாக, அல்லது நுண்மை, பருமையாகக் காண்பன, அவை. அவற்றுள், செறிவுடையது, இயல்பான தொடர்ச்சி. ஒலியனியல்பில் பொருள் வேறுபட வராது. ஆகவே, குறிப்பிடத்தக்க தன்றாதலால், தெளிவில்லாத இடைவெளியாகக் (Muddy transition) கொள்ளப்பட்டு, மொழியியலில் ஒரு கூறாகக் கருதப்படாது.

மாறாகப் பின்னையது, பொருள் வேறுபாட்டியல்பில், தெளிவுடையதாக (Sharp transition) வருவதனால், அது, ஏனைய ஒலியன்களைப் போன்று ஒரு கூறாகக் கருதப்படும். இது, சந்தி (Juncture /+/) அல்லது புணர் முறிவு அல்லது புணர்ச்சி என்னப்படும்.

1. குன்று + ஏறாமா, குன்றேறு + ஆமா, குன்றேறா + மா, குன்று + ஏறு + ஆ + மா

2. செம்பொன் + பதின்றொடி, செம்பு + ஒன்பதின்றொடி

3. பெரு + முதலைக் குளம், பெரு முதலை + குளம், சிறு + மலைப்பழம், சிறுமலைப் + பழம்

4. திருமந்திரம் + சொன்னாள், திரு + மந்திரம் சொன்னாள்

5. குற்றால + மரம், குற்று + ஆலமரம்

6. பழ + முதிர்சோலை, பழம் + உதிர் சோலை

7. களவு + இல்வாழ்வு, களவில் + வாழ்வு, கள + வில் வாழ்வு

8. பொறி + வாயில், பொறிவாய் + இல்

Blackbird	-	Black + bird
Foolscap	-	Fools + cap
Whitepaper	-	White + paper
Blue mountain + express	-	Blue + mountain express
Turnkey	-	Turn + key

இன்னோரன்ன தமிழ், ஆங்கிலத் தொடர்களில் புணரியல் மாற்றத்தால் பொருள் வேறுபடக் காணலாகும். ஆகவே, புணர்முறிவு (Juncture / + /) ஏனைய ஒலியன்களைப் போன்று, ஓர் ஒலியன் ஆகும்.

இத்தகைய புணர்முறிவு, சொற்களிடை முறிவாகும் எனக் கருத இடந்தரும். பலபோது, புணர்முறிவும் (Juncture), சொல் முடிவாகிய முறிவும் ஒன்றுபடும். இருப்பினும், இரண்டும் வேறுபட்டன. புணர்முறிவு முற்றிலும் ஒலிப்பை அடிக்கொண்டது. ஒலியழுத்தத்தைக் குறித்து வருவது, அஃதாவது, இரண்டு அண்மை அல்லது சேய்மையிலுள்ள முதன்மை ஒலியழுத்தங்களின் (Primary stresses) இடையில் எங்கேனும் வருவது. (/ ′/ + / ′/). ஒரு சொல்லிடையும் வரும். சொல் தொடரின் பின்னும் வரும். ஒலிப்பிடை, முதன்மை ஒலியழுத்தங்களிடை, இடங்கொள்வது. சொல் முடிவிடத்தன்று. சொல் முடிவிடமும் தற்செயலாக அமையலாம்.

ஊ + சல்,	காய் + வு ,	ஓய் + வு
நா + வல்,	வா + வல் ,	சே + வல்
Sly + ness,	Man + 's + going	
Vi + rus,	Mea + ning	

என, ஒரு சொல்லுள் புணர்முறிவு வந்தவாறு.

கருங்கல் + கட்டிடம்,	தீக்குழி + இது
மாமரம் + சாயும்,	பாய்மா + வோட்டம்
Sunday + morning,	Findher + a place
Get, aboard + (get a board),	Good morning +

எனச் சொற்றொடர் முடிவில் புணர் முறிவு வந்தவாறு. இத்தகைய புணர்முறிவுகள் பொருள் வேறுபடுத்தவும் உதவுவனவாயினும், பேசுவோரை, இடத்தை, மொழியைப் பொறுத்து ஒலிப்பில் வேறுபடும் இவ்வகை முறிவு, மொழி, செய்யுள் முதலியவற்றின் இசைக்கு உதவுவனவாகும். ஒலியழுத்தம், சிறப்பாக முதன்மை (Primary) அழுத்தத்தோடு தொடர்புடையது இவையிரண்டும், இன்னோசையின் (Intonation) உள்ளுறுப்புக்கள். காலவளவும் (Duration), ஒலித்தரமும் (Voice quality) இம்மூன்றனையும் தழுவி வர, இவ்வைந்தும், இன்னிசைக் கூறுகள் (Prosodemes) ஆகும்.

8.4. இன்னோசை (Intonation)

ஒரு மொழியில், உயிர், மெய்யாகிய அகவுறுப்புக்கள் இன்றியமையாதன என்பது போல, மொழியின் புறவுறுப்பாகிய, அதற்கு இசையூட்டும் உறுப்புக்களும், மொழிக்குத் துணை செய்கின்றன இவ்வாறு மொழிக்கு இசைக் கூறாவதில் மிக்க சிறப்புடையது, இன்னோசைக் கூறு (Intonation). பல மொழிகளில் இதன் இசைப் பங்கு போல, இன்னொலி மொழிகள் (Tone languages) ஆகிய பல மொழிகளில், வேறொரு வகையான இன்னொலிக் கூறு (Tone), அம்மொழிகளின் இசையமைவுக்கு உதவுகின்றது. ஆக, மொழியின் உள்ளுறுப்பும், இசையுறுப்பும் அதன் இரு அடிப்படைக் கூறுகளாகும். இவற்றால் ஆக்கப்பட்டனவே, உலக மொழிகள் அனைத்தும்.

8.4.1 இன்னோசையமைவு (Intonational feature or formation)

இவ்விரண்டு இன்னிசைக் கூறுகளுள், முன்னையது (Intonation) ஒலியழுத்தத்தையும் (Stress), புணர் முறிவு அல்லது சந்தியையும் (Juncture) தன்னுள்ளுறுப்பாகக் கொண்டு வரும். அதனால், பின்னையதனுள் இவ்விரண்டும் இல்லையென்பதில்லை. முன்னையதனுள் இவ்விரண்டன் செயற்பாடுபோல், பின்னையதனுள்ளில்லை என்பதே. ஆயின், அவ்விரண்டு இன்னோசைக் கூறுகளும் (Intonation and tone) இன்னொலி நிலைகளை (Pitch levels) உடையன. இத்தகைய இன்னோசைக் கூறுகள் சொற்றொடர் அல்லது அசைத் தொடரோடேயே தொடர்புற்று வரும். ஓரசையில் அல்லது ஒரு சொல்லில் அவற்றின் செயற்பாடில்லை. ஓரசையே, ஒரு சொல்லாகி அல்லது ஒரு சொல்லே, தொடர் நிலை இயல்பு பெறும்போது அதனோடு தொடர்புற்று வரும். அஃதாவது, இன்னோசைக் கூறுகள் தொடர் நிலை அமைவிலேயே என்க.

(1) (நீ) - கல். சொல். நில் என்னும்போது, மூன்றும் அசை நிலையளவாகிய சொல்லாயினும் (நீ) கல், சொல், நில் - என எழுவாய், புதை நிலை அல்லது மறை நிலையாக, வினை முடிவாகிச் சொற்றொடர் இயல்பினைப் பெறுவதால், அசை அல்லது சொல்லளவாயினும், சொற்றொடரே. இவ்வியல்பில், அசை அல்லது சொல், தன்னியல்பில் நீங்கித் தொடரியல்படையும் போதே இன்னிசைக் கூறுகள் இயைகின்றன.

முருகன் முருகன்! முருகன்?

எனும் மூன்றும், உயிர், மெய்யென்னும் அகவுறுப்புக்களால் ஒரேயாக்கமுடையன. ஆயின், முடிவு வரைக் குறிகள் அம்மூன்று சொற்களின் பொருளை வேறுபடுத்துகின்றன. இவ்வரைக் குறிகளாகிய வரி வடிவங்களைக் கருத்திற் கொள்ளாது, அவை தரும் முடிவொலிப்புக்களையே கருத்திற் கொள்க. முடிவொலிகளின் வேறுபாட்டினைக் காட்டுவனவே, அவ்வரி வடிவங்கள். இத்தகைய ஒலிப்பு வேற்றுமை அல்லது ஒலி வேற்றுமையே, அம்மூவகையான பொருள் வேற்றுமையினைச் செய்வன. அம்மூவகையான முடிவு, ஒலி வேற்றுமைகளே. இவ்வகையான பொருள் வேற்றுமை செய்வன, அவ்வொலி வேற்றுமையாதலால், அவ்வொலிகள், ஏனைய பொருள் வேற்றுமை செய்யும் உயிர், மெய் ஒலியன்களைப் போன்ற ஒலியன்களாகின்றன. இவ்வாறான தொடர் முடிவொலியன்கள், இன்னோசைக் கூறுகளாகும் (Intonational elements or segments). இவை, தொடர் முடிவில் வரும் இன்னோசைக் கூறாகையால், தொடர் முடிவு (Clause terminal) அல்லது முடிவியற் கூறு (Terminal contour T.C) என்னப்படும். எல்லாத் தொடரும் ஏதேனும் ஒரு முடிவியற் கூறாகிய இன்னோசை கொண்டே முடியும். இத்தகைய முடிவுக் கூறு, இன்னோசையின் ஒரு பகுதி.

இத்தொடர் முடிவு இன்னோசைக் கூறு, இயல்பாக மூவகைப்படும். அவை, எடுப்பியல்பு, படுப்பியல்பு, நேரியல்பு அல்லது தொடரியல்பு என்பன (Rising, Fading and Sustained, respectively).

(2) முருகன் ? - எடுப்புக் கூறு / ↑ / (/ ↑/) முருகன் ↑
(3) முருகன் . - படுப்புக் கூறு / ↓ / (/↓/) முருகன் ↓
(4) முருகன் ! - நில் - நேர் அல்லது தொடர்கூறு / | / (/ → /)

(அதனோடு முடியாது, தொடர்ந்து செல்வதனைக் குறிக்கும் கூறு)

முருகன் | வா.

மூவகையான இன்னோசை முடிவுகளைக் காட்டுவதற்காகும் வரிகள் இவை (↑↓|).

இது, ஒரு தொடர்க் கூறுபாட்டின் முடிவுக் கூறு ஆதலினால், இம்முடிவுக்கு முன்னுள்ள தொடர் கூறு என்பதொன்றும் இன்னோசைக் கூறுபாட்டின் ஒரு பகுதியாகும். இன்னோசை (Intonation) யின் முற்பகுதி தொடர் கூறு. அதன் பிற்பகுதி, முடிவு கூறு. இவ்விரு பகுதிகளையும் கொண்டதே இன்னோசை (Intonation or in-

tonation contour). *இதன் முற்பகுதியாகிய தொடர் கூறு, குறைந்தது இரண்டு, இயல்பாக மூன்று, கூடுதலாக நான்கு இன்னொலி நிலைகளைக்* (Pitch levels. P.L) *கொண்டது. அவை, தாழ்நிலை-1* (Low level) *இடை நிலை-2* (Mid level), *உயர் நிலை-3* (High level), *மிக்குயர் நிலை-4-* (Higher or extra high level) *என்பன. எண்களை மாறிய முறையிலிட்டுக் குறிப்பினுமாகும். நிலைகளைக் கோடிட்டுக் காட்டினுமாகும். 1,2,3,4- எண்கள், இன்னொலி நிலைகளின் படிப்படியான உயர்வு குறிப்பன.*

எ - டு :

(5) 3 *முருகன்* 2 ↑

(6) 3 *முருகன்* 1 ↓

(7) 3 *முருகன்* 1 | 3 *வா* 1 ↓

இவற்றின் கண், இரண்டு, நான்கு இன்னொலி நிலைகள் (Pitch levels) *தொடரின் கண் வந்து, ஒரு முடிவு கூறு* (Terminal contour) *கொண்டு முடிந்தன, இன்னோசைக் கூறுகள்* (Intonation contour).

(8) 3 *வா* 1 ↓

(9) 3 *போ* 1 ↓

(10) 1 *ஆம்* 1 ↑

(11) 3 *இல்லை* 1 ↓

(12) 1 Yes 1 ↓

(13) 3 No 1 ↓

(14) 3 Never 1 ↓

(15) 3 Water 2 ↑ (PLS.2 and T.C.1.)

(16) 3 *அவன்* 1 *நன்கு கற்பான்* 1 ↓

(17) 3 *அவன்* 2 *நன்கு கற்பான்* 1 ↓

(18) 2 *அவன்* 3 *நன்கு கற்பான* 1 ↓

(19) 2 My name is 3 Salt 1 ↓

(20) 2 Is your name 3 Kaveri 3 ↑

(21) 2 What is your 3 name 1 ↓ - (PLS.3. and T.C.1)

(22) 2 *நீ என்ன* 3 *கற்கின்றாய்* 1 | 1 *திருவள்ளுவர்* 2 ↑

(23) 2 What are you 3 reading 1 | 1 Shakespeare 2 ↑ (P.LS with two clauses and clause terminals or Tcs)

(24) 2 *இப்போது* 2 *மணி* 3 *பத்து* 2 | 2 *நான்* 3 *வீடு செல்ல* 3 *வேண்டும்* 1 ↓

(25) 2 He is a 2 good 3 professor 1 | 1 in the 1 technical 1 university 1↓ (PLS. 4 + 4 and Tcs.2)

(26) 2 *இது* 2 ↑ 2 *ஒரு* 2 ↑ 2 *நல்ல* 2↑ 2 *ஆற்றங்கரைப்* 2↑ 3 *பூந்தோட்டம்*1 ↓

(27) 2 Elephant 2↑ 2 and 2 ↑ 2 whale 2 ↑ 2 are 2↑ 2 the 2 ↑ 2 biggest 2 ↑ 2 beings2 ↑ 2 on 2 ↑ 2 the 2 ↑ 2 earth 2 ↑ 2 and 2 ↑ 2 in 2 ↑ 2 the 2 ↑ 2 water 2 ↑ 3 respectively 1 ↓. (In dictation and the like ones).

(28) 2 உன் 2 பெயர் 4 கங்காவா 1 ↓

(29) 2 உன் பெயர் 4 கங்காவா 4 ↑

(30) 4 உன் 2 பெயர் கங்காவா 4 ↑

(31) 2 Is 2 your name 4 Ganga 1 ↑

(32) 2 Is your name 4 Ganga 4 ↑

(33) 2 Is 4 your name Ganga 4 ↑

(34) 2 I'm 4 going home 1 ↓

இயல்பாக முதல் மூன்று இன்னொலி நிலைகளாகவே வரும். நான்காவது வருவது அருவழக்கு. இயல்பாக /231 ↓/ எனும் இன்னொலி வருவதே பெரு வழக்கு.

அசைத் தொடர் அல்லது சொற்றொடர் இரு வகையின. *(1)* நெடுந்தொடர் அல்லது பெருந்தொடர் (Macro segment) *(2)* குறுந்தொடர் அல்லது சிறு தொடர் (Micro segment). இவற்றுள், ஒரு நெடுந்தொடர் என்பதும், ஓரின்னோசை (Intonation) என்பதும் ஒன்றே. இத்தகைய நெடுந்தொடர் அல்லது ஓரின்னோசை, ஒவ்வொன்றும் ஓரின்னோசை முடிவுறுப்புக் (Terminal contour) கொள்வது. இன்னோசை முடிவுறுப்புத் தனியாக வாராது. நெடுந்தொடரோடு வரும். குறைந்தது இரண்டு, கூடுதல் நான்கு இன்னொலி நிலைகளோடு (Pitch levels) தொடர்ந்தே முடியும். ஆக, எல்லா நெடுந்தொடர்களும் இரண்டு முதல் நான்கு வரையிலான இன்னொலிகளோடும், முடிவுறுப்பு ஒன்றனோடும் முடியும். முடிவுறுப்பென்பது, நெடுந் தொடரை முடிவு செய்வது. இத்தகைய நெடுந்தொடரிடையே சந்தி (Juncture) இல்லையாயின் அந் நெடுந் தொடர், ஒரு குறுந்தொட (Microsegment)ராலாகியது எனலாம். நெடுந் தொடரிடையே ஒரு சந்தி வருமாயின், அது, இரண்டு குறுந்தொடராலும், இரண்டு, சந்தி வருமாயின் மூன்று, குறுந்தொடராலும், இவ்வாறே பிறவற்றாலும் ஆகியது என்னலாம். இரண்டு முதன்மை ஒலியழுத்தங்களிடையே (Primary stresses) ஒரு சந்தி வருமாதலால், இன்னோசை (Intonation), ஒலியழுத்தங்களையும், சந்திகளையும் உள்ளடக்கியது ஆகும்.

ஒரு நெடுந்தொடர் (Macrosegment) அல்லது ஓரின்னோசை (Intonation or intonation contour) ஏதேனும் ஓரசையில், மிக்க (Most prominent) ஒலியழுத்தங் கொள்ளும். அவ்வசை அல்லது அவ்வசைச் சிமையமாகிய உயிர் அவ்வின்னோசையின் நடுப்பகுதி (Centre)யாக, இந்நடுப்பகுதி ஓரின்னொலி நிலை (Pitch level) எண் பெறும். அவ்வின்னோசையின் முடிவு, மற்றோரின்னொலி நிலை எண் பெறும்.

இதனைத் தொடர்ந்தே முடிவுறுப்பு (T.C) வரும். அவ்வின்னோசையின் நடுப்பகுதி முதல் (அதனை உள்ளடக்கி) அதன் முடிவு வரை, அவ்வின்னோசையின் தலை (Head)யாகும். எனவே, இன்னோசை ஒன்றன் நடுப்பகுதியை உள்ளிட்டுத் தொடங்கிய, முடிவு வரையுள்ள தலைப் பகுதி, இரண்டு இன்னொலி நிலைகளையும், ஒரு முடிவுறுப்பையும் (2 PLS + 1 T.C.) எப்போதும் கொண்டு வரும். அதன் நடுப்பகுதியின் முன் வேறு அசைத் தொடர் வருமாயின் அப்பகுதி, அவ்வின்னோசையின் (Intonation) முன்னிணைப்பு அல்லது தொங்கற் (Pendant) பகுதி என்னப்படும் இதன் தொடக்கம், மற்றோர் இன்னொலி நிலை எண் பெறும். இப்போது, மூன்று இன்னொலி நிலையும், ஒரு முடிவுறுப்பும் (3 PLS + 1 T.C.) பெற்றதாகும் அது. நான்காவது ஓர் இன்னொலி நிலை (P.L) பெற நேரின், அது நடுப்பகுதிக்கும், முன்னிணைப்பின் தொடக்கப்பகுதிக்கும் இடை வந்து, அதற்குரிய எண்ணைப் பெறும். எப்போதும் நடுப்பகுதி இன்னொலி நிலை, இறுதி இன்னொலி நிலைக்கு முந்தியதாகவே இருக்கும். அஃதோர் முதன்மையழுத்தமும் பெறும்.

ஓர் இன்னோசையின் நடுப்பகுதி மிகக் கூடிய ஒலியழுத்தம் / ´ / பெறும் இதுவே, இவ்வின்னோசையின் சிமையமாகும் இது போன்ற மிகக் கூடிய முதன்மையழுத்தம் /´/, அதே இன்னோசையின் பிறவிடத்தும் இருக்கலாம். பிற துணைமையழுத்தமும் / ` /, அழுத்த மின்மையும் அவ்வின்னோசையின் பிற அசைகளில் காணும். இதனாலும், இன்னோசையென்பது ஒலியழுத்தங்களையும், இரு முதன்மையழுத்தங்களிடைச் சந்திகளையும் பெறும் இயல்பினது எனலாம் எப்போதும் முதன்மையழுத்தம், உயரின்னொலி நிலை எண்ணையே பெறுமென்பதில்லை. இன்னொலி நிலை குறைந்த எண்ணுடைய, இன்னொலி நிலை எண் பெறாத, முதன்மை ஒலியழுத்தமுடைய, அசைகளையுடைய இன்னோசைகளும் பல. எனவே, முதன்மை ஒலியழுத்தங்களையும், உயர் இன்னொலிகளையும், அவற்றின் எண்களையும் இணைத்துக் காண வேண்டும் என்பதில்லை. இன்னோசையின் நடுப்பகுதி இன்னொலி நிலை (P.L). ஒரு முதன்மை ஒலியழுத்தம் கொண்டிருக்கும் என்பதே.

எ - டு :

(35) 2 The w´aves + r`olled ´over + the 3 r´ock 1 ↓

(36) *2 ம´ரங்கள் + கா´ற்றால் + வே´ரோடு + 3 ப´றிக்கப்பட்டன.* 1 ↓

இன்னிசைப் பாடல்களில், இன்னிசையை (Musical melody) யொட்டி, ஒலிப்புச் செல்வதால், தாளத்துக்குத் தக்க நிறுத்தல் செல்வதால், பேச்சிசையைத் (Speech melody) தொடர்ந்து செல்லும் இன்னோசைக் கூறுகளைக் காணவியலாது. ஏற்ற, இறக்கமில்லாத ஒரே ஒலிப்பில் (துப்பறியும் வினாக்கள்), அடக்கமான, பிறரறியக் கூடாத பேச்சில், 'கிசுகிசு' என்று பேசும் பேச்சில் இன்னிசைக் கூறுகளைக் காண்பதரிது.

மிகவுயர்ந்த இன்னொலி நிலை (4) அருவழக்காக வரும்போது, பெரிதும், இன்னோசையின் (Intonation) நடுப்பகுதியில் வரும். அதனோடு பிறவிடத்தும் வரலாம். அது, ஒலிப்பைப் பொறுத்தது. இன்னோசையின் நடுப்பகுதி மிகுந்த ஒலியழுத்தம் அல்லது முதன்மை ஒலியழுத்த (Primary stress) உடையதாகவே வரும். அதனால், அவ்வின்னோசையின் நடுப்பகுதியாகிய, மிக்க ஒலியழுத்தமுடைய அசைப்பகுதி, மிகவுயர்ந்த இன்னொலி நிலை (P.L) உடையதாக இருக்க வேண்டுமென்பதில்லாது, பிற பகுதியில் இதனின் உயர்ந்த இன்னொலி நிலைகளும் வரலாகும்.

எ - டு:

(37) 3 Y´ou + 1 d´on't + eat 1 th'at 2 ↑

(38) 3 கல்´லாது + கா´லத்தைக் + 1 கழியா´தே 2 ↑

ஆக ஓர் இன்னோசைக் கூறு (Intonation) அல்லது நெடுந்தொடர் (Macro segment) நடுப்பகுதியையும், இறுதிப் பகுதியையும் கொண்டே வரும். இவ்விரு பகுதிகளும், முன்னும், பின்னும் இரண்டு இன்னொலி நிலைகளைப் (P.L.S.) பெற்றே வரும். இறுதியது, அதனோடு, மூன்று முடிவுக் கூறுகளில் (Terminal Contours / ↑↓ | /) ஒன்றைப் பெற்றே முடியும். நடுப்பகுதியின் முன், அசைத் தொடர் முன்னிணைப்பாக வருமாயின், அதன் தொடக்கம் ஓர் இன்னொலி நிலையினைக் கொள்ளும். இதனுக்கும், நடுப்பகுதிக்கும் இடையே, ஓரின்னொலி நிலை பெறுதலுமாகும். இவ்வாறு, இன்னொலி நிலைகளும் (P.L.S.), முடிவுறுப்பும் (T.C.) ஆகிய இரு கூறுகளும் கொண்டதே, இன்னோசை (Intonation).

இன்னோசையின் நடுப்பகுதி உச்ச ஒலியழுத்தம் பெற, பிற அசைகளும் அது போன்ற அல்லது அதனினும் குறைந்த துணைமை ஒலியழுத்தமும், அழுத்தமின்மையும் பெற, முதன்மை ஒலியழுத்தங்கள் இரண்டிடைச் சந்திகளையும் பெற அமைவதால், இன்னோசை, ஒலியழுத்தங்களைச், சந்திகளை உள்ளடக்கியது. இத்தகைய மொழியிசைக் கூறுகள், காலவளவை (Duration or quantity) அடிக்கொண்டு, ஒலித்தரம் (Voice quality) கொண்டு வருவதால் அவ்விரண்டும் மொழியிசைக் கூறுகளே (Prosodemes)யாம்.

8.4.2. இன்னொலியதிர்வெல்லை (Pitch-range)

தொடரில், எடுப்பொலிப்பு (Accent) அல்லது ஒலி, இன்னொலியால், அழுத்தத்தால், கால நீட்சியால் வருவதால் அவை, முறையே, இன்னொலிச் சிமையம் (Pitch accent), அழுத்தச் சிமையம் (Stress accent), கால நீட்சிச் சிமையம் (Quantity accent) என, எடுப்பொலிகள் மூவகைப்படும். இவை மூன்றும் கூடி ஓரசையில் அமைவதுமாகும். இவற்றிற்குத், தொடரிடை முறிவோடு, ஒலிப்புத் தரமும் துணை நிற்க, ஒலித் தொடர் நடையிடும். இத்தொடரில், ஒலியெடுப்பும் (Prominence or sonority), இனிமையும் (Speech melody) குறிப்பிடத்தக்கன. இவை

யாவும், உயிர், மெய்யாலமைந்த அகக்கட்டின் புறப்பொலிவுகளாகும் அல்லது அடிக்கட்டின் மேற் கூரையாகும் (Segmental with supra segmental elements).

பேச்சின் இன்னோசைப் பொலிவு அதன்கண்ணமையும் இன்னொலிக் கூறுகளைப் (Pitches) பொறுத்ததாகும். அது, குரல்வளை ஒலித்தசையதிர்வின் அடிப்படையளவை (Fundamental frequency in Hertz (HZ) or cps) அடிக்கொண்டது. இதனால், ஒவ்வோர் ஒலியனுக்கும் பொதுவாக அமைந்த இன்னொலியமைவினை (Intrinsic pitch) ஒலிப்பியல்போடு இணைத்துக் காணவியலும். ஒப்பு ஒலிப்பியல்பாக, உயர் நிலையடையுந்தோறும், உயிரொலிகளின் இன்னொலி (Pitch) யமைவு கூடும் அதிர்வில் மெய், சிறப்பாக, அதிர்வில் உரசொலி, ஒலிப்பு முடிவில் மிக்க இன்னொலி (Pitch)யமைவைக் காணலாகும் ஒலிப்புறுப்பின் அணுக்கம் அதிர்வை மிகுதிப்படுத்துகின்றது-(Ohala, 1978: 28; Lehiste, 1976: 230-1, cited by Laver, John, 1994: 454, 455).

இன்னொலியதிர்வு (Pitch) ஒன்றோடொன்றை ஒப்பிட்டுக் (Relative) காண்பதும் அதுவும், பேசுவோரது அதிர்வெல்லைக்கு (Pitch range) உட்படுத்தி அளவிடுவதும், ஓரசையின், உயர்நிலை, தாழ்நிலை, இடை நிலையளவான அதிர்வு அல்லது இன்னொலியைக் கணக்கிடுவதும், அசைத் தொடரில் அடுத்து வரும் அசையோடு சார்த்தியளப்பதும், யாவும், ஒப்பீட்டு இயல்பில் குறிப்பதாகும். ஒருவரது ஒலிப்பதிர்வு எல்லை, அவரது ஒலிப்புறுப்பளவையும் (Organic range), அவ்வப்போது தோன்றும் இன்பம், துன்பம், அதிர்ச்சி, சினம், வியப்பு முதலிய உள்ளுணர்வளவையும் (Paralinguistic range) பொறுத்தது. அஃதாவது, உடல், உளத்தைப் பொறுத்தது. சமூகப் பண்பளவும் (Cultural range) ஓரொலிப்பதிர்வை வரையறை செய்யலாகும். மொழிக்கு மொழி வேறுபட்ட அதிர்வெல்லையுள்ளது. இவ்வாறான மொழியியல்பில் அமைந்த அதிர்வெல்லையும் (Linguistic range) உளது. அவ்வப்போது ஏற்படும் பேச்சுத் தொடருக்குத் தக்கவாறு, அமையும் அதிர்வெல்லை (Pitch range)யும் உளது. அது, ஒலியனமைவால் ஏற்படும் இன்னொலியதிர்வெல்லை (Phonological pitch-span)



I would like to have some fruits and nuts




கல்வி வாழ்வின் செல்வி

இன்னொலி அதிர்வெல்லை

எனப்படும். இது, மிக இன்றியமையாதது. இதுவே, பேச்சு மொழியின் இன்னோசையை (Speech melody or intonation) வரையறுப்பது.

மேல், கீழ்ப் புற நேர் கோடுகள் மொழியதிர்வெல்லை (Linguistic pitch range). அவற்றின் உட்பட்ட படிநிலைக் கோடுகள், தொடர் (ஒலியன் தொடர் அல்லது அசைத் தொடர்) இன்னொலி அதிர் வெல்லை (Phonological pitch span). அவற்றின் மேல், கீழ்நிலைக் கோடுகளுள், கீழன அடித்தளம் (Base line). மேலன, மேல்முகடு அல்லது சிமையம் (Top line or plateau). இவற்றின் இடைப்பட்ட அளவு, இன்னொலியதிர்வெல்லையின் (Pitch-span) அகலம் எனப்படும். கீழ், மேல் இன்னொலி நிலைகள் இறுதியில் வீழ்ச்சியடைவதனை வரை விளக்கத்தில் காணலாகும். இத்தகைய இறுதி இன்னிசை வீழ்ச்சியை (Declination) உலகின் பெரும்பான்மை மொழிகளில் காணலாகும். தொடர் கூறுகளின் இன்னொலி நிலைக்குத் தக்கவாறு, இன்னொலிக் கோடுகள் தொடர்ந்து சென்று, வீழ்ந்து, முடிவதனை வரைவில் காணலாகும். இத்தகைய இன்னொலித் தொடர் மொழி, பண்பாடு, பேசுவோர் உடல், உள்ளம், சூழ்நிலை, பேசுந் தொடருக்குத் தக்கவாறு வேறுபட்ட நிலை கொண்டு தொடர்ந்து முடியும். இன்னொலித் தொடர், இயல்பாக, மேல்நிலை, கீழ்நிலை, இடைநிலை கொண்டு வீழ்ந்து முடிவதன்றிப் பிறவாறும் வரும். பொதுவாகப் பல மொழிகளில் சாய்ந்து முடியும்.

ஒலித் தொடரின், இன்னொலி எல்லைக்குள் (Pitch-span) வெவ்வேறு இன்னொலியமைவு அல்லது, வடிவமைவுகள் (Pitch patterns), இன்னொலி உயர்ச்சிகள் அல்லது நிலைகள் (Pitch heights), இன்னொலி இயக்கப் போக்குக்கள் (Pitch contours) முதலானவற்றைக் காணலாகும். இன்னொலிகள், இன்னோரன்ன அமைவு, நிலை, இயக்கங்களையுடையன.



இன்னொலித் தொடர்ச்செலவு


- (Laver, John, 1994: 460 - after Vaissiere, 1983: 55)

8.4.3. இன்னொலியமைவுகள் (Pitch patterns)


1. மேலிருந்து கீழ் வீழ்ச்சி (Fall, from high to low)

2. இடையிலிருந்து கீழ் வீழ்ச்சி (Fall, from mid to low)

3. இடையிலிருந்து மேல் எழுச்சி (Rise, from mid to high).
4. கீழிருந்து இடைநிலைக்குத் தாழ் எழுச்சி (Low rise, from low to mid)
5. கீழிருந்து மேல், (பின்) கீழ், (பின்) மேல் நிலைக்கு, எழுச்சி - வீழ்ச்சி - எழுச்சி (Rise-fall-rise-from low to high to low to high)
6. மேலிருந்து இடை நிலைக்குப், (பின்) மேல், (பின்) இடைநிலைக்கு வீழ்ச்சி - எழுச்சி - வீழ்ச்சி (Fall - rise - fall, from high to mid to high, to mid)



7. மேல் நிலை (High level)
8. கீழ் நிலை (Low level)
9. கீழிருந்து மேலெழுச்சி (Rise, from low to high)



-(Laver, John, 1994: 461)

10. மேலிருந்து இடைநிலைக்கு வீழ்ச்சி (Fall, from high to mid)
11. மேலிருந்து தாழ்நிலைக்குப் (பின்) மேல்நிலைக்குப் (பின்) கீழ் நிலைக்கு வீழ்ச்சி - எழுச்சி - வீழ்ச்சி (Fall- rise- fall from high to low, to high, to low)
12. கீழிருந்து நடுநிலைக்குப் (பின்), கீழ்நிலைக்குப் (பின்), நடுநிலைக்கு எழுச்சி-வீழ்ச்சி-எழுச்சி (Rise-fall-rise, from low to mid to low, to mid)
13. இடை அல்லது நடுநிலை (Mid level)- எனப் பலவாம்.

இன்னொலி உயர்ச்சி அல்லது நிலை (Pitch height) என்பது, இன்னொலி எல்லைக்குள் (Pitch span) அசைகளின் ஒப்பு நிலையாகும். இவை, உயர்நிலை (High), இடைநிலை (Mid), தாழ்நிலை (low), உயர்-இடையின் இடைநிலை (Mid high) தாழ்- இடையின் இடைநிலை (Mid-low) எனப் பலவாகும்.

இன்னொலி இயக்கம் (Pitch contour) அதன் போக்கு மாற்றத்தைத் தெரிவிப்பது. இது, கால அளவில் அசையின் ஒலிப்போடு செல்வது, ஒரே நிலையில் செல்வது (Level), எழுச்சி (Rise), வீழ்ச்சி (Fall), வீழ்ச்சி-எழுச்சி (Fall-rise), எழுச்சி-வீழ்ச்சி (Rise-fall), எழுச்சி-வீழ்ச்சி-எழுச்சி (Rise-fall-rise), வீழ்ச்சி-எழுச்சி-வீழ்ச்சி (Fall-rise-fall) எனப் பலவாம்.

இன்னொலி நிலையும் (Pitch level), இன்னொலி இயக்கமும் (Pitch contour) கலந்த கலப்பியல்பில் இன்னொலி அமைவைக் காண்பது

மாகும். உயர்நிலை (High level), உயர்நிலையிலிருந்து கீழ் வீழ்ச்சி (High to low fall), கீழ்நிலையிலிருந்து மேலெழுச்சி (Low to high rise), கீழ்நிலையிலிருந்து இடைநிலைக்கு எழுச்சி (Low to mid rise) மேல் நிலையிலிருந்து இடைநிலைக்கு வீழ்ச்சி (High to mid fall) எனப்பல பிற. திடுமெனும் வீழ்ச்சி, நீளெழுச்சி, மெல்லெழுச்சி, செங்குத்தான வீழ்ச்சி எனும் பிறபலவாறான இன்னொலி இயக்கங்கள் (Pitch contours) உள. இத்தகைய இன்னொலி நிலைகளும், இயக்கங்களும் ஓரசையின் முதலில், இடையில், இறுதியில் தொடங்கலும், ஓரசை அல்லது அசைத் தொடர் முழுமையும் செல்லலுமாகும்.

8.4.4. இன்னொலி, இன்னோசை முறைமைகள் (Tone and intonational systems)

இன்னொலியமைவுகளைக் (Pitch-patterns) கொண்டு, பேச்சு மொழியின் கூறுகளை வகை செய்து விளக்க முடியும். இன்னொலிகள் (Pitches), மொழிப் பயன்பாட்டில், இருவகையான முறைகளோடு, இருவகையான மொழியமைவுகளைப் புலப்படுத்துகின்றன. ஒன்று, இன்னொலி முறைமை(Tone system)யுடைய இன்னொலி மொழிகளில் (Tone languages), இன்னொலிகள் அசை, சொல்லளவில் வேறுபட்டு விளக்கந்தரும். மற்றொன்று, இன்னோசைக் கூறுமுறைமை (Intonation system)யுடைய, இன்னோசைக் கூறுடைய மொழிகளில் (Intonation languages), இன்னொலிகள் குறை சொற்றொடர் (Phrase), நிறை சொற்றொடர் (Sentence) அளவில் வேறுபட்டு விளக்கந்தரும்.

இன்னொலி முறைமையுடையனவற்றில் சொல்லின்னொலி (Lexical tone) சொல்லளவில், அசையளவில் என இரு வகையளவில் செயற்பாடுடையது. இவ்விருவகையானவற்றுள், சொல்லடிப்படையிலான இன்னொலி முறை(Word-based tone system)யில் இன்னொலி இயக்க முறையிலான அமைவைக் (Contour pattern) காணலாகும். இத்தகைய சொற்கள், இரண்டு அல்லது இரண்டின் மிகையான அசையுடையன. இது சொல் முழுமையும் செல்வது. இம் முறையை 'ஸ்லோவேனியன்' (Slovenian), 'லேவிஸ் கேலிக்' (Lewis gaelic) மொழிகளில் காணலாகும். இத்தகைய இசை முறையில் மற்றொரு வகையுமுண்டு. அது ஒரு பகுதி இன்னொலி மொழிகள் (Partial tone languages). இதன்கண், இன்னொலிகள், சொல் முழுமையும் செல்லாது, சொல்லின் சில அசையளவில் செல்வன. 'லித்வேனியன்' (Lithuanian), 'செர்போ குரோஷியன்' (Serbo-Croatian) முதலிய மொழிகளில் இம்முறையைக் காணலாம். இவ்வாறு, சொல்லளவின்னொலி இரு வகையின.


அசையடிப்படையிலான இன்னொலி முறை (Syllable-based tone system) உலகின் பெரும்பான்மை மொழிகளில் காணப்படுகின்றன. நடு அமெரிக்கா, ஆப்பிரிக்கா, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் இத்தகைய மொழிகள் பல. அசையளவிலான இன்னொலியே சொல்லை வரையறை செய்யும் அசைகளே இன்னொலியைச் சுமந்து செல்வன.

இது, நிலையளவு இன்னொலி முறை (Register tone system), இயக்கவளவு இன்னொலி முறை (Contour tone system) என இரு வகைப்படும். இவையிரண்டின் கலப்பு முறையுமாம். 'யொரூபா' (Yoruba), 'எட்சாகோ' (Etsako) என்னும் நைஜீரியா மொழிகளில் நிலையளவு இன்னொலி முறையைக் காணலாகும். இயக்க அளவு இன்னொலி முறையைச் சீன, தாய், வீயட்நாம் மொழிகளில் காணலாகும்.


சில, ஆப்பிரிக்க மொழிகளில் இன்னொலிகள் (Pitches) தனித்தனியாக நின்று, (Discrete level tone systems) ஒன்று, ஒன்றோடு தொடர்புற்றுச் செல்வன. எ - டு: 'நவாஜோ' மொழி (Navajo - Mexico) தாழ்படி முறையில் (Down step), 'உர்ஹோபோ' (Urhobo-Nigeria) முதலிய மொழிகளில், வரவரத் தாழ்ந்து வரும் நிலையில், அடுக்கித் தொடரும் இன்னொலி முறையும், இதன் மாறாக, உயர் படி முறையில் (Upstep), வரவர உயர்ந்து அடுக்கித் தொடரும், 'சூலு' (Zulu) முதலிய மொழிகளில் காணும் இன்னொலி முறையும், தாழ் ஈர்ப்பு முறையில் (Down drift), 'எட்சாகோ' (Etsako-Nigeria) முதலான மொழிகளில் காணும், முன்னைய உயர் இன்னொலிகளுக்குப் (High tones) பின்னுள்ள, தாழ் இன்னொலியைத் தொடர்ந்து வரும், உயர் இன்னொலிகள் அனைத்தும், முன்னைய உயர் இன்னொலியை விடத் தாழ்நிலை ஒலிப்புடையனவாகும் இன்னொலி முறையும் எனப் பலவேறு வகையாம். இவை, சொற்றொடரில் வருவன.

'தாய்' மொழியில் இன்னொலி முறையும் (Tone system), இன்னோசைக் கூறு முறையும் (Intonation system) கலந்த கலப்பு முறை காணப்படுகின்றது. இன்னொலிகள் (Tones), சில மொழிகளில் இலக்கணக் கூறுகளையுணர்த்தவும் பயன்படுத்தப்படுகின்றன. இன்னொலி மொழிகள் சில, காலஞ் செல்ல, இன்னொலி இழப்பு (Atonogenesis) ஆகலுமாம். மாறாக, இன்னொலியில் மொழிகள், இன்னொலியாகலும் (Tonogenesis) ஆம்.

1. தாழ்படி முறை (Down - step)



2. உயர்படி முறை (Up - step)



3. தாழ் ஈர்ப்பு முறை (Down - drift)



அமெரிக்கப் பழங்குடி மக்களது பல மொழிகளின் துணை மொழியாக, இன்னொலிகளைக் (Tones) கொண்டு, வாயூத்தொலியால்


(Whistling tones), செய்திப் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. 'லாகொமேரா' (Lagomera) என்ற தீவில், வாயூத்து மொழி (Whistling speech) உளது. ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில், இன்னொலி, தாளத்தைக் கொட்டின் உதவியால் ஒலித்துக், கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளும், பேசும் கொட்டும் (Talking drums/drum signalling) உள்ளது. குழலும், கொம்பும் கூட, இன்னொலியால் (Tones) கருத்துப் பரிமாற்றம் செய்ய, உலகின் பலவிடங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இன்னொலி (Tones), இவ்வாறு, பல இனத்துள், பல மொழிகளில், பலவாறாகக் கருத்துப் பரிமாற்றத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாயின, அனைத்தும், இன்னொலி மொழிகளே.

இன்னோசைக் கூறு (Intonation) இருவகையினது. *(1)* ஒலியிசை யடிப்படையிலமைந்தது (Tune based) *(2)* ஒலித்தரம் அல்லது ஒலியியல்பு அடிப்படையில் அமைந்தது (Tone based).

இசையடிப்படையிலமைந்தது (Tune based), இயல்பாக, இரு வகைப்படும். *(1)* தொடர் முடிவசையில், அல்லது முடிவில் இன்னொலி (Pitch)யின் வீழ்ச்சி (Fall) *(2)* தொடர் இறுதியில் இன்னொலியின் எழுச்சி (Rise). இவையிரண்டும் தொடர் முடிவியல்களைத் (Terminal contours) தெரிவிப்பன.

மொழிகள், தொடர்களுக்குத் தக்கவாறு, இன்னொலிகள் (Pitches) வடிவங்கொண்டு முடியும்.

ஒலித்தரம் குறித்த (Tone based) இன்னோசைக் கூறு (Intonation), தொடரின் ஒலியன், அசை, சொல் முதலானவற்றோடு இயைந்து, தொடருக்குத் துணை செய்யும். இது, இன்னொலிகளால் (Pitches)



1. இறுதி வீழ்ச்சி

2. இறுதி எழுச்சி

3. இறுதி எழுச்சி


இன்னொலித்தொடர் முடிவுகள்

(Dash and dots - stressed and unstressed syllables of sentences,respectively)

பிணைக்கப்பட்டு முடிவோடு இயையும். அதனோடு, முதன்மை, துணைமை, அழுத்தங்களோடும், அழுத்தமின்மையோடும், பொரு ளோடும், பொருட் சிறப்போடும் பொருந்தித் தொடரிசை கொண்டு

முடியும். இத்தகைய தொடர் உயிர், மெய்யென்னும் மொழியின் இன்றியமையாத உறுப்புக்களின் தொடராகிய சொற்றொடர், அதன் மேற்பட்டு, இன்னொலியால் தொடரும் இசைத் தொடர், இவ்விரண்டினாலும், சூழ்நிலையாலும் குறிக்கப்படும் பொருள்

இன்னோசையின்



1. - எழுச்சி - இறுதி

2. - வீழ்ச்சி - இறுதி

1. - எழுச்சி - இறுதி

2. - வீழ்ச்சி - இறுதி

1. - எழுச்சி - இறுதி

2. - வீழ்ச்சி - இறுதி

இன்னொலி வடிவங்கள்

- (Laver, John, 1994 : 485, 487, 488, 489)

தொடர், ஆகிய, மூன்று கூறுகளையுடையது. இவ்வின்னோசை, இறுதியசையாலும், தொடரிடை மிகக் கூடிய ஒலியழுத்தத்தாலும் சிறப்படையும். இத்தகைய தொடர், அதன் கூறுபாட்டால், இணைப்பால், பின்புறப் பண்பாட்டால், பொருட் குறிப்பால், செய்திப் பரிமாற்ற முறையால் மொழிக்கு மொழி வேறுபடலாகும்.

இவ்வாறமையும் ஒலித்தர ஓசைத் தொடரின் (Intonational Phrase) ஓரசை, தொடரின் மிகக் கூடிய ஒலியழுத்தம் கொண்டு, தொடரின் மிகச் சிறப்புடைய பகுதியாக, அது, அவ்வோசைத் தொடர்நடு (Intonational nucleus)வாகும். இது பெறும் இன்னொலி (Pitch), அத்தொடரின் நடு இன்னொலி (Nuclear tone) அல்லது நடு இன்னொலித் தரமாகும். இதன் முன்வரும் ஓசைத் தொடர் முற்பகுதி (Pre-nucleus), இதன் பின் வரும் ஓசைத் தொடர்ப் பிற்பகுதி (Post nucleus) என்பனவாக அமையலாகும். ஓசைத் தொடரின் நடுப்பகுதி பெறும் சிறப்பின்னொலி, சிறப்பழுத்த இன்னொலி உந்தல் அல்லது இன்னொலியெடுப்பு (Pitch obtrusion) என்றும், இன்னொலியழுத்தம்

(Pitch accent) என்றும் பெயர் பெறும். பேச்சுத் தொடரின் இன்னோசைத் தொடரைக் (Intonational phrase or tone group) கூறுபடுத்திக் காணும் முறைக்கு, இசைத் தொடர்க் கூறாக்கம் (Tonality) என்று பெயர். அத்தொடரின் நடுவணது (Tonic syllable) காணும் முறைக்கு, உச்சம் காணல் (Tonicity) என்று பெயர். இத்தகைய நடுவணதிலுள்ள இன்னொலியமைவைக் காணும் முறைக்கு, நடுவண் இன்னொலி (Nuclear tone)யமைவு காணல் என்று பெயர். இம்மூன்றும் கூடியதே, இசைத் தொடர் (Tone group). இத்தகைய இன்னோசைக் கூறுபாட்டால், நிகழ்வுரைத்தல், வினா,விடை, ஏவல், வியப்பு, உடன்பாடு, எதிர்மறை முதலிய பேச்சுக் கூறுகள் தெரிய வரும். இதனால், பண்பாட்டு (Cultural), மொழி (Linguistic) இயல்பும், பேசுவோர் உணர்வு குறித்த மொழிச் சாயற் குறிப்புக்களும் (Para linguistic behaviour) தெரிய வரும். இவ்வாறாக, ஒலியிசை (Tune), ஒலித் தரம் (Tone) ஆகிய இருவகை கொண்டு, இயைந்து முடியும், இன்னோசைத் தொடர் (Intonational phrase or tone group).

தொடர் முழுமையும் தொடர்ந்து, செல்லும் இன்னிசை, ஒலியழுத் தங்களையும் தொடர்ந்து வரக் கொள்வதாகும். இன்னொலியும் (Pitch), ஒலியழுத்தமும் (Stress) இணைந்து, தொடர்ந்து, முடிவிசையோடு முடிவது இன்னோசைத் தொடர்.

ஓரசையின்கண்ணமைந்த ஒலியன்களின் அமைவால் ஏற்படும், உட்படு அமைப்பெடுப்பும் (Intrinsic sonority), பிற அத்தகைய வற்றோடு, ஒப்பீட்டு முறையில், அழுத்தங்கள் எடுப்பும், படுப்புமாகத் தொடரும், அவ்வழுத்தத்தின் சாய்வும் (Loudness declination), பேசுவோரின் ஒலிப்பழுத்த எல்லைக்கும் (Loudness range), பேச்சுத் தொடரின் ஒலிப்பழுத்த எல்லைக்கும் (Loudness span) உட்பட்ட ஒலியழுத்த எழுச்சியும், மொழியழுத்தம் (Language loudness), பண்பாட்டு ஒலிப்பழுத்தம் (Cultural loudness) முதலானவற்றோடு சார்த்தியுணரத்தக்கன.

பேச்சுத் தொடரில் காணும் ஒலியழுத்தத்தின் அடிநிலையும் (Baseline), முடிநிலையும் (Topline) பேசுவோரது இன்னொலி, ஒலியழுத்தமும், இவற்றின் பொதுநிகர்வு சமனிலை (Pitch mean and Loudness mean) (அத்தகைய பிறரோடாகிய ஒப்பீட்டு முறையில்) இன்னோசையில் கருதத்தக்கன ஆக, எடுப்பும், படுப்புமாகிய அசை கொண்டு. உயர், தாழ் நிலையிலமைந்த, இன்னொலி நடை கொண்டு இறுந்தொடர், இன்னோசைத் தொடர்.

8.4.5. தமிழில் ஒலியழுத்தம், இன்னோசை (Stress and intonation in Tamil)

தமிழ் மொழியில், வரையறை செய்யப்பட்ட, மொழி ஒலியழுத்தம், இன்னோசை என்பன செய்யுளில் இருப்பன போல இல்லையெனினும், அவற்றிற்குரிய குறிப்புக்கள் இலக்கண நூல்களில், உரைகளிற்

காணப்படுகின்றன. "இசையில் திரிதல்" (தொல்காப்பியம் - 39), "எடுத்தல், படுத்தல், நலிதல்" (நன்னூல் - 88) என்பன போன்றன, இன்னோசை, ஒலியழுத்தம் போன்றனவற்றைக் குறிப்பன. ஏ,ஓ முதலிய இடைச் சொற்கள், ஒலிப்பிசை வேற்றுமையால் வெவ்வேறு, பொருளை உணர்த்துகின்றன. பொருள் வேறுபடுதல் "குறிப்பினிசை யால் நெறிப்படத் தோன்றும்" (தொல்காப்பியம் - 766) என்பதனால், பொருள் வேறுபாட்டிற்கு இசை காரணம் என்பதும் தெரிகின்றது. இசையெச்சம் என்பதும் இதனோடு கருதத்தக்கது.

எடுத்தல், படுத்தல், நலிதல், விலங்கல் (வடமொழியில், உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம், பிரசயம்) உரப்பல், கனைத்தல் முதலியன இன்னொலிகளாகக் குறிப்பிடப்படுகின்றன எடுத்தல், படுத்தல் எனும் இரண்டும் மிகச் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன.

உண் (வினை)	ஊண் (பெயர்)
கொள்	கோள்
படு (துன்புறு)	பாடு (துன்பம்)
அடு (வெல்)	ஆடு (வெற்றி)
விடு	வீடு
பெறு	பேறு

முதலியனவாக ஒலியழுத்த வேற்றுமை, குறில், நெடில் வேற்றுமையோடு இயைந்து வினை, பெயர் வேறுபாட்டை விளைவிக்கின்றன.

பலவசைச் சொல்லாக, வினையில், வினையெச்சத்தில் முதலசை அழுத்தம் பெற, ஈற்றசை அது குறையப், பெயரில், பெயரெச்சத்தில் ஈற்றசை அழுத்தம் பெற, முதலது குறைய வரும்.

எ - டு : வ'ந்தா'ன் (வி) வ'ந்தா'ன் (பெ)

வ'ந்து' (வி.எ) வ'ந்'த (பெ.எ)

இவ்வாறு மொழி வழக்கில், இவற்றைக் காணலாகும். தொடரில், செப்பலில் (Statement or declaration) இறுதியில் வீழ்ச்சியிசையும், அகவலில் (Interrogation), தொடரிறுதியில் எழுச்சியிசையும், உலக மொழிகள் போல், தமிழ் மொழியிலும் காணப்படுகின்றன.

9 புணரொலிப்பியல் (Combinatory phonetics or phonetics of juncture or transition)

9.0. ஒலிப்புணரியல்பு (Phonetic combinatory feature)

மொழியில் ஒலியன்கள் அடுத்து வரும் போது அல்லது ஒலியன்களின் தொடர் நிலைப் புணர்வில், அவை, தம்மியல்பு அல்லது தம் ஒலிப்பியல்பு, அடுத்ததன் சாயல் சிறிது பெறுவதும், முழுமையும் மாற்றமடைவதும், ஆக, இருவகையான ஒலி மாற்றமடையும். உலகியல்பில், ஒரு பொருளின் தனி நிலை வேறு, புணர்நிலை வேறாகும். இவ்வியல்பே, ஒலியன்கள் சேர்க்கை அல்லது புணர்விலுமாம். இத்தகைய புணர்நிலை ஒலிப்பு மாற்றம் இயைபு அல்லது தொடர்பு (Relative) *அடிப்படையிலேயே நிகழும் இயல்புடைமையால், இவ்வாறான மாற்றங்கள், பெரிதும், சிலபல விதிகளுக்குட் பட்டனவாகும். அதுவும், ஒலிப்பெளிமை, முயற்சிச் சுருக்கம் முதலானவற்றிற்குட்பட்டனவாகும். இத்தகைய மாற்றங்களைப் புணரியல் என்பதுமாம். இது, ஒரு சொல்லினகப்பட்ட உருபன்களிடை ஏற்படுவது, அகநிலைப்* (Internal) *புணரியல் என்றும், இரு சொற்களிடை ஏற்படுவது, புறநிலைப்* (External) *புணரியல் என்றும் பெயர் பெறும்.*


ஒலியன்களின் புணர்வில் (Fusion) *இணைப்பு* (Linking), *வழுக்கொலியாதல்* (Gliding), *பிறிதோர் ஒலி தோன்றல்* (Addition), *ஒலிகெடல்* (Omission), *ஒலித் திரிவு* (Adaptive change), *குறுகல்* (Reduction), *நீளல்* (Elongation), *இரட்டிப்பு* (Gemination), *இடமாற்றம்* (Displacement), *வேறாதல்* (Dissimilation and differentiation), *ஒன்றாதல்* (Assimilation), *மரூஉவாதல்* (Haplology), *இதழினமாதல்* (Labialisation), *பல்லினமாதல்* (Dentalisation), *பல் முகட்டினமாதல்* (Alveolarisation), *அண்ணவினமாதல்* (Palatalisation), *வளை நாவினமாதல்* (Retroflexion), *மெல்லண்ணவினமாதல்* (Velarisation), *மூக்கினமாதல்* (Nasalisation), *சமமாதல்* (Equalisation), *இடங் கொடுத்தல்* (Accommodation), *கூட்டுயிராதல்* (Diphthongisation) *முதலிய பல புணரியல்புகளை அல்லது மாற்றங்களைப் பெறும்.*

9.1. புணரியல்பும், மாற்றுருபும் (Combinatory feature and allomorphs)

ஒலிப்படிப்படையில் மட்டுமன்றிப், பொருளடிப்படையிலும் புணரியல் மாற்றங்கள் ஏற்படும். இத்தகைய மாற்றங்கள் ஒன்றன்

மாற்றுருபுகளைப் (Allomorphs) புலப்படுத்துகின்றன.

எ - டு : கல் + வட்டு
கல் (ல்) + ஆறு
கற் + குறை
கன் + முரி
கஃ + றீது - எனக்,



என்று, நான்கு மாற்றுருக்களைக் கொள்வது, புணர் நிலையில்தான். ல்,ற்,ன்- பல் முகட்டொலிகள் (Alveolars), முறையே இடை, வலி, மெலி.

1. கல் + உயிர், இடையினம் வர.
2. கல் > ற் + வல்லொலி வர - ல் (இடை) > ற் (வலி) < வலிவர- வலிவர, /ல்/ இடை, தன் பிறப்பிடவல்லொலியாகியது, ஒலிப்பெளிமை யாக்கும் ஈண்டு, இருபுறமும் இயைபு காணலாகும்.
3. -ல் (இடை) > ன் < மெலிவர - மெலிவர /ல்/- இடை, தன் பிறப்பிட மெல்லொலியாகியது, ஒலிப்பெளிமைக்காக. ஈண்டு இருபுறமும் ஒலி ஒற்றுமை காணலாகும்.
4. -ல் (இடை) > ஃ < தகரவொலி வர (ல்,ள்,வ் > ஃ + வலிவர- இவ்விடையொலிகள், வரும் வெடிப்பொலியை, உரசொலியாக்கி, ஒலிப்பெளிமையாக்க, ஆய்த ஒலியாக மாறும் (Pre-aspiration or pre-friction).

இவ்வாறு இடைவெளி தோன்ற ஒலியன் புணரும் புணர்வில், ஒலிப்பெளிமை கருதி, முயற்சிச் சுருக்க நிலையில், அண்மை யொலியன்களோடு ஒலிப்பால் அல்லது ஒலியனால் இயைபு கொண்டு, ஒலிப்பு அல்லது ஒலியன் மாற்றமடையும். இது, தொடர்பால், தொடர் நிலையால், சூழ்நிலையால் ஏற்படுவது. ஒலியனுக்கு மொழியில் தனிநிலை இல்லை. தொடர் நிலையே மொழி. இந்நிலையிலாகும் இவ்வகை மாற்றமே, உருபன்களின் முதல், இறுதி மாற்றங்கொடுக்க, அதனால் மாற்றுருபுகள் (Allomorphs) ஒவ்வோர் உருபனுக்கும் தோன்ற, ஓர் உருபன், புணரியல்பால், பலவேறு மாற்றுருப் பெறுகின்றன. இப்புணரியல் மொழியியல்பு, மாற்றுருவியலாகிய உருபொலியனியலாகும் (Morphophonemics).

In + organic
Il + literate
Im + mortal , Im + proper
Ir + regular

In → In - n + o
In → Il - l + l
In → Im - m + m / p - labials
In → Ir - r + r

தொடரும் ஒலிக்குத்தக்க மாற்றம் காணலாகும்.

9.2. புணரியல் மாற்றங்கள் (Combinatory changes)

மொழியின் உறுப்புக்களைத் தேர்தலும் (Paradigmatic selection), பின் அவற்றின் சேர்தலும் (Syntagmatic combinations) நிகழும் மொழியியற்கையில், புணரியல் திரிபுகள் (Combinatory variations) ஏற்படுவதும் அதனியற்கை. இத்தகைய திரிபும், திரிபின்மையும் கொண்டு நடக்கும் மொழியுள், இவ்வாறடையும் ஒலி மாற்றத்துள், புதிதாக ஒன்று தோன்றுதலும், இருப்பதில் ஒன்று, கெடுதலும், ஒன்று மற்றொன்றாகத் திரிதலும், சிறப்புடையனவாகும். திரிபுகள், நிறை நிலையிலும், குறை நிலையிலும் நிகழும். ஒவ்வொரு புணரியல் திரிபும் மொழியின் செயலாகும். திரிபை ஒவ்வொரு மொழியின் அமைவுக்கு உட்படுத்திக் கருதலும் வேண்டும். சிலபோது அம்மொழியின் ஒலியமைவுக்கு உட்படாத திரிபும் ஏற்படலாம். புணர்வில், மாற்றொலி (Allophone)யாவது இப்புணர்வியல் மாற்றத்திற்குட்படாது. ஒரொலி யனின், மாற்றொலியாகும் பிரிவும் (Allophonic split), மாற்றொலிகள் இரண்டிணைந்து சில போது, ஒரு மாற்றொலியாகும் இணைவும் (Allophonic merger) ஆகிய மாற்றங்கள் புணரியல் மாற்றமாகக் கருதப்படா.

ஒரு மொழியில் எல்லா ஒலியன்களும் புணர்நிலை மாற்றமடையும் என்பதில்லை. இயல்பாக உயிரொலிகளின் மாற்றத்தைவிட மெய் யொலிகளின் மாற்றம் மிகுதியாகும். தமிழ் மொழியில், புணர்வில்,

1. தோன்றுவன அல்லது இரட்டிப்பன, (Addition or gemination) - மெய்யில் /ர், ழ்/ ஒழிந்தன.
2. கெடுவன (Omission or elision) /ண், ம், ன், ல், ழ், ள்/-என்பன.

3. திரிவன (Adaptive change or re-placement or substitution). த், ண், ந், ம், ன், ல், வ், ழ், ள் - என்பன.

இவை திரியும்போதும் சில விதிகட்கு உட்பட்டே திரிவனவாகும்.

1. வல்லொலி (Plosives)

(1) த் > ற் (2) த் > ட்

2. மெல்லொலி (Nasals)

(1) ம் > ங் (2) ம் > ஞ் (3) ம் > ந் (4) ம் > ன்
(5) ன் > ங் (6) ன் > ஞ் (7) ன் > ம் (8) ந் > ங்
(9) ந் > ஞ் (10) ந் > ண் (11) ந் > ன் (12) ன் > ற்
(13) ண் > ட்

3. இடையொலி (Liquids)

(1) ல் > ன் > -ற் (2) ள் > ண் > ட் (3) ழ் > ண் > ட்
(4) ல் > ன் (5) ல் > ற் (6) ள் > ட்
(7) ழ் > ட் (8) வ் > க்,ச்,த்,ப்,ஞ்,ந்,ம் (9) ய் > ஞ்
(10) ல், ள், வ் > ஃ

எனத் திரிபடையும்.

/ ர, ழ / வொழிந்தன இரட்டிப்பு அடையுமாயின், /ங்க், ஞ்ச், ண்ட், ன்ற், ந்த், ம்ப்-/ என இனமெலி, வலி இணைவு (Homorganic N + P) ஏற்படுமாயின் அவை, அகநிலை அல்லது புற நிலைப்புணர்வு குறிப்பனவாகும். இப்புணர் நிலை மாற்றங்கள், விதியோடு, கட்டுக்குட்பட்டுத், தொடர்போடு நிகழும். பிற மொழிகளிலும் இவ்வாறான நிகழ்வுகளைக் காணலாகும்.

பேச்சு மொழியில் ஒலிப்பு மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே யிருக்கும். இவ்வாறான மாற்றங்களில் பல, கால அடிப்படை யிலிருப்பன (Historical or diachronic or evolutionary phonetic and phonological changes). அவையன்றிப், பல, மொழியொலிப்பு அமைவுக் குட்பட்டுக் காலங்கருதாத மாற்றங்கள் (Descriptive or synchronic phonetic or phonological changes), புணர்வியல் மாற்றங்களில் (Combinatory phonetic changes) வரும். இவை ஏறத்தாழ நிலையான மாற்றங்களாகக் கருதற்குரியன. அம்மொழி பேசப்படும் எல்லாவிடங்களுக்கும், எக்காலத்திற்கும் உரியன. இவை, மொழியின் அகநிலை மாற்றங்கள் (Internal changes). புணர்நிலை மாற்றங்களுள் சில, வரலாற்று மாற்றங்களுக்கும் அடியாவன உள. ஒலியன்களின் ஒலிப்புவன்மை, அசையின் கண் அவை பெறும் சிறப்பிடம் முதலியனவற்றால், அடுத்துள்ள ஒலிப்பு மென்மை, அசையின்கண் அவை பெறும் சிறப்பில் இடம் இவற்றால், முன்னையவற்றின் ஆற்றல் மிகுந்து, ஆற்றல் குறைந்தவற்றை ஒலி மாற்றமடையச் செய்யும். வன்மை வழி, மென்மை சாயும். மிகுவழக்குடைய ஒலியனும், சேர்க்கையும் அருவழக்குடையனவற்றைவிட ஒலி மாற்றம் குறையும். நிலை நிற்கும். ஒரு மொழியின் ஓரொலியன், ஒரு சூழ்நிலையில் அடையும் ஒலி

மாற்றம், அம்மொழியில், அதே சூழ்நிலை, எங்குவரினும், அதே மாற்றமடையும்.

ஒரு மொழியின், ஒலியமுத்தமில்லாத, குறை சொற்களாகிய, ஒருமையுணர்த்துவன (Articles), இணைப்புச் சொற்கள் (Conjunctions), உருபுகள் (Pre and post positions), இடப் பெயர்கள் (Pronouns) முதலியன பெயர் வினை, அடை முதலாகிய நிறை சொற்களை விட ஒலிப்புக் குறைவுடையன. ஒவ்வொரு மாற்றமும், ஒலிப்பியல்பு (Articulatory tendency), ஒலியனமைவியல்பு (Structural feature) என்பனவற்றை அடிக் கொண்டது. இருப்பினும், மொழியின் எல்லா வகையான ஒலி மாற்றங்களையும் விதிக்குட்படுத்தவோ, வரையறை செய்து அறுதியிடவோ இயலாது. புணர்நிலை மாற்றங்களில், அகநிலை மாற்றங்களினும், சொற்களிடையேயும், புணர்முறிவு அல்லது சந்திகளிலும் ஏற்படும் மாற்றமே பெரிதும் குறிப்பிடற்குரியன. சொல்லின் அகநிலை மாற்றங்கள், சிலபோது, புணர் நிலையால் எளிதில் புலப்படாதனவும் பல.

9.2.1 ஒன்றாதல் (Assimilation)

ஒலிப்புணர்வில் முதன்மையானது, ஒன்றாதல், அல்லது, ஒன்றுதல் (ஒற்றுமை அல்லது ஒப்புமைப்படுதல்) (Assimilation or phonetic similarity) ஆகும். இதன் மாறுபாடு, வேறாதல் அல்லது வேற்றுமைப் படுதல் (Dissimilation or phonetic dissimilarity or phonetic distance). முன்னது, மொழியில் பெருவழக்குடையது. இணையும் இரண்டொலி யன்களிடையே ஏற்படும் இணை முயற்சியாகும். அதுவும், இடைவெளியின் இருபுற ஒலியன்களில் ஒன்றன் ஒலிப்பியல்பில் ஏற்படும் மாற்றம் குறித்த மற்றொன்றின் ஒலிப்பாற்றலாகும். சில போது, இரண்டொலியன்களும், ஒன்று மற்றதன் ஆற்றலால், ஒலிப்பு அல்லது ஒலியன் மாற்றமடைதலுமாகும். இடம், முயற்சி, அதிர்வு, மூக்குச் சாயல் முதலிய பல ஒலிப்பியல்புகளால் இரண்டும் ஒன்றாகும் அல்லது ஒப்பாகும். அல்லது இயைந்து இணையும் (Intersegmental co-ordination). இதனால், இரண்டும் இணைந்த கூட்டு ஒலிப்பு முயற்சி (Co-articulation) அல்லது ஒன்று போன்ற ஒலிப்பு (Similitude) நடைபெறும். இது முயற்சி மெலிவாக்கம் (Articulatory smoothing) என்றுமாம். இவற்றிடைப் பின்னையதன் ஆற்றலால் முன்னையது மாற்றமடையும் முயற்சி, முன்னோக்கிய கூட்டு முயற்சி (Anticipatory co-articulation). விளைவு, பின்னையதனால், முன்மாற்றம் (Anticipatory assimilation or right - to - left change). மாறாக, முன்னையதன் ஆற்றலால், பின்னையது மாற்றமடையும். முயற்சி, பின்னோக்கிய கூட்டு முயற்சி (Preservative co-articulation). விளைவு, முன்னையதனால், பின்னையதன் மாற்றம் (Preservative assimilation or retention-carry over or left-to-right). முன், பின் ஆகிய இரண்டன் ஆற்றலால், இரண்டுமே மாற்றமடையுமாயின், அது, இருபுறமாற்றம் (Coalescent assimilation) எனப்படும்.

சொல்லின் ஈறு, முதல் புணர்வாதலினால், ஈறுதிரிதல் (Regressive assimilation), முதல் திரிதல் (Progressive assimilation), ஈறு முதலாகிய

இரு வழியும் திரிபு (Reciprocal assimilation) என்றுமாம். இவற்றில், பெரிதும், ஈறுதிரிதலாகும். சூழ்நிலையால் ஏற்படும் திரிபு இவை யாதலின், இவை சூழ்நிலை ஒன்றுபாடு (Contextual assimilation) என்றுமாம். காலத்தால் ஏற்படுவன, இவற்றின் வேறுபாடுடையன.

இத்தகைய அண்மை நிலையால் அல்லது அடுத்தடுத்து வருவதனால் ஒன்றன் ஆற்றல் மற்றதனுக்கு ஏற்பட்டு ஒலிமாற்றம் ஏற்படுமாயின், அது, அண்மை நிலைத் திரிவு (Contact assimilation) என்பது. ஒன்றாதல் (Assimilation) பெரும்பான்மையும் இவ்வண்மை நிலையால் அல்லது அடுத்தடுத்த நிலையால் ஏற்படுவனவே. ஒரு சில, அடுத்த அண்மை நிலையிலில்லாது சேய்மையில் நின்றும் திரிபை ஏற்படுத்துமாயின், அது, சேய்மை நிலைத் திரிபு (Distant assimilation or dilation) என்னப்படும். இது மெய்யிலும், உயிரொலியிலும் நிகழும் (Consonantal and vocalic dilations or metaphony or umlaut). ஒருயிரொலியின் ஆற்றலால், மற்றோர் உயிரொலி, வேறுபடு நிலையிலிருந்து நீங்கி ஒன்றுபட ஒலிக்குமாயின், அது, உயிரொலி இயைபு (Vowel or vocalic harmony) எனப்படும். இவ்வாறு மெய்யொலி யியைபுமாம். இருபுற ஆற்றலால் இடைநின்ற ஒன்று, தன் ஒலிப்பியல்பில், இரண்டன் சாயலும் பெற்று மாற்றமடைதலுமாம். ஒலிப்புக்குச் சிறப்புக் கொடுக்காத சிறப்பில் மாற்றம் (Negligent assimilation) ஏற்படுவதும் உண்டு.

9.2.1.1 இறுதி திரிபு (Anticipatory or regressive assimilation)

hand kerchief > haŋkerchief nd > ŋ + k
horse shoe > hoʃʃu - s + ʃ > ʃʃ -
let me > lemme - t + m > mm
that girl > thaggirl - t + g > - gg -
that boy > thabboy - t + b > - bb -
foot ball > food ball > foobball - t + b > db > bb
Book - box > boogbox - kb> gb

மண் + குடம் > மட்குடம் - ண் + க் > ட் க்
வெரிந் + குறை > வெரிங்குறை - ந் +க் > ங் க்-
மரம் + காய்ந்தது > மரங்காய்ந்தது - ம் + க் > ங் க்
மரம் + சாய்ந்தது > - மரஞ்சாய்ந்தது - ம்+ ச் > ஞ் ச்
மரம் + தாழ்ந்தது - மரந்தாழ்ந்தது - ம் + த் > ந் த்
பொன் + குடம் > பொற்குடம் - ன் + க் > ற் க்
கல் + படி > கற்படி - ல் + ப் > ற் ப்
கல் + முரி > கன்முரி - ல் + ம் > ன் ம்
தெவ் + முனை > தெம்முனை - வ் + ம் > ம்ம்
முள் + கரை > முட்கரை - ள் + க் > ட் க்
முள் + மரம் > முண்மரம் - ள் + ம் > ண்ம்

9.2.1.2. முதல் திரிபு (Preservative or progressive assimilation)

Cat + s > Cats (- ts - both, Voiceless) but
dog + s > dogz (- gz - both voiced - g + s > gz - g(vd) + s(vl) > -gz (both voiced)
love + d > lovd (loved) (-vd- both, Voiced) - but
like + d > likt (liked) (kt - both, voiceless- kd > kt) - k (vl)+d(vd)>-kt (both voiceless)
big + kite > biggite - g + k > gg- (-gh-) - g(vd)+k(vl)>-gg- (both voiced)
mid + sea > midzea - ds > dz - d(vd) + s - (vl) >- dz - (both voiced)

எண் + திசை > எண்டிசை - ண் + த் > ண ட்-
மான் + தோல் > மான்றோல் - ன் + த் > -ன்ற் -
கண் + நோய் > கண்ணோய் - ண் + ந் > ண்ண்
பொன் + நகர் > பொன்னகர் - ன் + ந் > ன்ன் -
கோல் + தீது > கோறீது - ல் + த் > ற் -
கோள் + தீது > கோடீது - ள் + த் > - ட் -
கோல் + நன்று > கோனன்று - ல் + ந் > - ன்-
கோள் + நன்று > கோணன்று - ள் + ந் > -ண் -
இதழ் + தீது > இதடீது - ழ் + த் > - ட் -
இதழ் + நன்று > இதணன்று - ழ் + ந் > -ண்- என வரும்.

/ண்,ன்,ல்,ள்,ழ்/ + /த, ந/-, என வரும் சூழ்நிலையில் மட்டுமே /த்,ந்/ ஆகிய முதல் மட்டும் திரியும். பிறவாறில்லை.

9.2.1.3. இறுதி முதல் திரிபு (Coalescent or reciprocal assimilation)

pen + kin > peŋgin - n + k > ŋg-
ban + king > baŋging - n + k > ŋg -

மண் + தூண் > மட்டூண் - ண் + த் > ட் ட் -
எள் + துகள் > எட்டுகள் - ள் + த் > ட் ட் -
பொன் + துகள் > பொற்றுகள் - ன் + த் > ற்ற்
கல் + தூண் > கற்றூண் - ல் + த் > ற் ற் -
முள் + நுனி > முண்ணுனி - ள் + ந் > ண்ண்
கல் + நுனி > கன்னுனி - ல் + ந் > ன்ன் -

இறுதி, முதலாகிய இருபுறத் திரிபும், /ண,ன்,ள்,ல்/+/த,ந/ > எனவரும் போதேயாம். தமிழ் மொழியில் முதல் திரிபும், அதனையுள்ளிட்ட இறுதி- முதல் திரிபும் /த,ந/- முதல் வரும் போதே. அதுவும் /ண்,ள்,ன், ல்/ இறுதி வரத் திரியும் திரிபேயன்றிப் பிறவாறில்லை. இவையாவும் அண்மை நிலை ஒலி மாற்றம் (Contact assimilation).

9.2.1.4.1. சேய்மை நிலை ஒலி மாற்றம் (Distant assimilation) - உயிர் மாற்றம் (Vowel change)

எ - டு :

Woman (Wuman) - Singular
Women (Wimen) - Plural - (o > i) - by /e/ in men -
- machine [məshen]- (a > ə)-by /i/ in- 'chine'

மாடிக்குப் போனான் > மாடிக்கிப் போனான்.
(கு > கி) - 'மாடி' என்பதன் கண்ணுள்ள 'இ' -கர ஆற்றலால் [கு > கி] - என ஒலிப்பில், உயிரொலியியைபு வேண்டி, மாறியது.

இன்றைக்குக் காலையில் > இன்னிக்கிக் காலையில் (இ-இ)
இட்டலி > இட்டிலி - இகரம், இகரமாக்கியது.
இவை சேய்மை உயிரொலி மாற்றம் அல்லது உயிரொலியியைபு (Distant Vocalic dilation or metaphony).

அடைவு > அடவு (அ-அ), அரைவு > அரவு (அ-அ)
இரு > இரி (இ-இ), கொடுத்தான் > குடுத்தான். (உ - உ) - அ,இ,உ முறையே பிறவொலியைத் தம்மொலியாக மாற்றின.

இவை, ஒரு தனி மெய் இடைவர உயிரியைபு வந்தமையால் அண்மை நிலை மாற்றமுமாம் - யாவும் உயிரியைபு (Vowel or vocalic harmony). உயிரொலியியைபு உலகின் பல மொழிகளில் காணப்படும் ஒலிப்பியல்பாகும்.

'நைஜீரியா' வில் பேசும் 'இக்போ' (Igbo) மொழியில், சில புறநடை தவிரப் பலவகைச் சொல்லுள், ஒன்றில், (1) / i,ɛ,u,o/(2) /e,a,θ,ɔ/ எனும் இரு வகையுள், ஒன்றன் உயிரொலிகளே வரும் உயிரொலியியைபின் கட்டுப்பாடுள்ளது. 'டர்க்கி' (Turkish) மொழியில், பலவகைச் சொல்லில் ஒன்றில் முன்னுயிர்கள், அன்றில், பின்னுயிர்களே வரும். இது போன்றே, இதழ் குவிவுயிரும், குவியாவுயிரும் கலந்து ஒரு சொல்லில் வருவதில்லை. ஆங்கிலத்தில் Man - Men, foot - feet என்பன போன்ற இலக்கண உயிரொலி மாற்றமும் இவ்வகைச் சார்பாகக் (Umlaut or metaphony) குறிப்பிடப்படும்.

9.2.1.4.2. மெய்ம் மாற்றம் (Consonantal change)

Five pens > [Fife pens] என்பதில், / Five/> [Fife] - என /F/, /P/ ஒலிப்பாற்றலால், (V > f) என ஒலிப்பு மாற்றமடைகின்றது. இது சேய்மை நிலை மெய்ம்மாற்றம் அல்லது மெய்யொலியியைபு (Distant consonantal harmony or dilation) ஆகும். Five fingers > [Fif fingers] இரு புற ஆற்றலால் [v > f] என மாறியது.

'எட்சாகோ' ('Etsako'- Nigeria) மொழியில், மெய்கள் இறுகொலியன, நெகிழொலியன, பொதுவொலியன என மூவகையுள்ளன. சொல்லில், ஒன்றில், இறுகொலி மெய்கள், அன்றில், நெகிழொலி மெய்களே வரும். மாறிக் கலந்து வருவதில்லை. பொதுவொலிகள் கலந்து வரும். இத்தகைய மெய்யொலியியைபு (Con-

sonantal harmony) ஒரு சில மொழிகளிலுளது. தமிழில், குளம் + கரை > குளக்கரை (ம் + க் > க்க) குளம் + கள் > குளங்கள் (ம் + க் > ங் க்) என , க்க, ங்க, ச்ச, ஞ்ச, த்த, ந்த, ப்ப, ம்ப - இவ்வாறு மாறி இயைந்து ஒலிப்பன யாவும் மெய்யொலி இயைபே (Consonant harmony). இவை விதிக்குட்பட்டு (Regular or established) வருவன.

9.2.1.5. சிறப்பில் ஒலி மாற்றம் (Negligent assimilation)

எ - டு :

Government > Govment
standpoint > Sta(m)point

இருக்கிறான் > இருக்கா(ன்)
வருகிறாள் > வாறா (ள்)
கருப்புக்கட்டி > கருப்டி, கருப்பட்டி, கருப்புட்டி-

இவை விதிக்குப் புறம்பாக (Irregular) வருவன. இவ்வாறு ஒலிப்பெளிமை, முயற்சிச் சுருக்கம், காலக் குறைவு கருதி வரும். ஒலித் தொடரில் ஒன்றுபாடும், அதனாலாகும் ஒலித் திரிபும், (Assimilation) புணர் நிலையாக (Combinatory) நிகழ்வது உலக மொழியியல்பு. அவை விதியோடும், விதியின்றியும் என இரு வகையாக வரும். ஒலித் தொடரில், ஒலியன்களின் ஒன்றுபாடும் (Segmental or phonemic harmony), ஒலிப்பொன்றுபாடும் (Phonetic harmony) மொழியில் வருவது அதனியல்பாகும். அஃதாவது, பேசுவோர் இயல்பாகும்.

9.2.2 வேறாதல் (Dissimilation / differentiation)

அடுத்து வரும் இரண்டன் ஒலி வேற்றுமையை நீக்கும் அல்லது குறைக்குமது ஒன்றாதல். இதனின் மாறுபட, வேறாதல் (Dissimilation) என்பது, தொடரும் இரண்டன் ஒலியை வேறுபடுத்திக் காட்டும். அஃதாவது, ஒலிப்பு வேற்றுமையை மிகுக்கும் அல்லது ஆக்கும். பிற ஒலியிடை வர, இரண்டன் ஒலிவேறுபடுதல், வேறாதல் (Dissimilation). இடைப் பிறவரலின்றி, இரண்டொலி அடுத்து நின்று, ஒலி வேறுபடுதல், வேற்றுமையாதல் (Differentiation) என்னப்படும். இவை அருவரவின.

எ - டு :

Currere (Lat) - Corridor (Eng) Correre (It) - Corridor.
Couroir (Fr.old) Couloir (Fr.mod) - இரண்டு /r/ - வருகையை வேறுபடுத்துவதற்காக, ஒன்று /l/ - ஆக்கப்பட்டது.

Arbor (Lat , tree) arbol (sp)
Marbre (Fr) marble- (Eng)- /r-r/ > / r - l/

ஓரொலி இரு முறை வருகை தவிர்க்க ஒன்று வேறொலியாகியது- வேறாதல் (Dissimilation).

நூலன்று பிடியா நுணங்கிய கேள்வியர், கலையின்று பிறவா நாளுடைய நல்லார். - நூலன்றிப் பிடியா- கலையின்றிப் பிறவா- என இலக்கண முறையால் வர வேண்டுவன,

/- றிப்பி / - இ - இ > / உ - இ / - என, இரண்டு /இ/ - கர வருகையைத் தவிர்க்க ஒன்று வேறொலியாகியது.

இவையாவும், இடைப் பிறவர, இரண்டு ஒரொலி வருகை தவிர்க்க, ஒன்று வேறாகியதால், வேறாதல் (Dissimilation) ஆயிற்று.

9.2.3. வேறாதல் – உயிர் (Differentiation - vowel)

வேற்றுமையாதலை (Differentiation), கூட்டுயிர் முதலானவற்றுள் காணலாகும்.

/ e i / - (in 'mei' Fr) > moi (mod . Fr)
/e i/ - (in 'rei' - Fr) > roi (Mod Fr.) - /ei > oi/-/ei/- ஒலி ஒற்றுமையை வேறுபடுத்த - / o i / - எனவாயிற்று.
- /o/ - / i/ - ஒலிப்பு வேறுபாடுடையன.
- /ei/ - in 'mein' - (Ger.- 'my') > ai [main]
- /ei/ - in 'Bein' - (Ger. - 'leg') > ai [bain]
- mine [mein > main] - (Eng) - ei > ai / ei/- ஒலிப்பொற்றுமையை வேற்றுமைப்படுத்த /ai/- ஆகியது.
- out [out > aut] - (Eng) - ou > au
/ou/- ஒலிப்பொப்புமையை வேற்றுமைப்படுத்த, /a u /- ஆகியது.
கல் + தீது > கற்றீது - /ற்ற/- ஒன்றாதல்
கல் + தீது > கஃறீது - /ஃற/- வேற்றுமையாதல் (Differentiation)
முள் + தீது > முட்டீது - /ட்ட/ ஒன்றாதல்
முள் + தீது > முஃடீது - /ஃட/- வேற்றுமையாதல்

இவ்வாறு அடுத்து வரும் ஒலியன்களை வேற்றுமைப்படுத்தும் அளவில் ஒலிப்பாகுமாயின், அது, வேற்றுமையாதலாம் (Differentiation).

9.2.4. மிகுதல் அல்லது தோன்றல் (Addition)

மா + காய் > மாங்காய் - (ங்)
மா + சோலை > மாஞ்சோலை - (ஞ்)
மா + தளிர் > மாந்தளிர் - (ந்)
மா + பழம் > மாம்பழம் - (ம்)

இவ்வாறு, புணர்வினால் புதிதாக ஒன்று வந்து சேருமாயின், அது, மிகுதல் அல்லது தோன்றலாகும்.

ஆல் + சோலை > ஆலஞ்சோலை, வேல் + காடு > வேலங்காடு- உருபு மிகுதல் (Morphemic addition).

9.2.5. இரட்டித்தல் (Gemination)

Cut + ing > cutting (tt)
Cup + ing > cupping (pp)
run + ing > running (nn)

பூ + காம்பு > பூக்காம்பு (க்க்)
பூ + சட்டி > பூச்சட்டி (ச்ச்)
கா + தடி > காத்தடி (த்த்)
தீ + பெட்டி > தீப்பெட்டி (ப்ப்)

என மிகுதல் வர, ஓரொலியே இரட்டிப்படைதலால், இவை போன்றன இரட்டிப்பாகும். மிகுதல், சிலபோது இரட்டிப்பாக்கும்.

9.2.6. குன்றல் அல்லது கெடுதல் (Elision or omission)

இரு சொற் புணர்வில், சொல்லின் ஒன்றிரண்டு ஒலி கெடுவது,
Dustbin > Dusbin (t) , Post man > posman (t)
kindness > kinnes (d)
I am > I'm (a) He has > he's (ha)
I have > I've (ha) Can not > Can't (no)
Not too > notoo(t) unknown > unown (n)

தேன் + மொழி > தேமொழி (ன்)
மரம் + மலை > மரமலை (ம்)
அகம் + நகர் > அகநகர் (ம்)
நாஞ்சில் + நாடு > நாஞ்சி நாடு (ல்)
வாய் + மடை > வாமடை (ய்)
மேல் + மடை > மேமடை (ல்)
கீழ்வாய் நெல்லி > கீவாநெல்லி (ழ்-ய்)
கீழ்க்காய் நெல்லி > கீழா நெல்லி (க்-ய்)
என்பனவற்றில், ஒலிகள், கெட்டன.

9.2.7. இடப்பெயர்ச்சி (Inversion or metathesis)

அடுத்துள்ள இடம் பெயர்தல் என்றும், இடைப் பிறவர இடம் பெயர்தல் என்றும் இரு வகையன, ஒலியிடப் பெயர்ச்சி (Inversion and metathesis, respectively). *இரண்டனையும் ஒன்றாகக் கருதலுமாகும்.*

எ - டு :

Roland (Lat. Proper name) -> Orlando (It). Formaticum (Lat) > Fromage (Fr) (inversion)
Periculum (Lat) > Peligro (sp)
Miraculam (Lat 'miracle') > milagro (sp) - (Metathesis)

வைசாகி > வைகாசி , தசை > சதை, சிவிறி > விசிறி,
குதிரை > குருதை, இல்முன் > முன்றில் , மதுரை > மருதை.

9.2.8. மரூஉ (Haplology or hapaxepy)

ஒரு சொல்லில் சில ஒலித் தொடர் அல்லது ஒலி, இரு முறை வர, ஒரு முறை ஒலித்து, மற்றையதனை ஒலியாதுவிடல், மரூஉவாகும்.

எ - டு :

Stipipendium (Lat- 'stipend') > Stipendium
Morphophonology > Morphonology
Probablely > Probably
Superintendent > Superindent
Institute > Instute

ஆதன் தந்தை > ஆந்தை
பூதன் தந்தை > பூந்தை
அருமருந்தன்ன > அரும(ா)ந்த
தெங்கங்காய் > தேங்காய்
ஒன்றொன்று > ஒவ்வொன்று
இரண்டிரண்டு > இவ்விரண்டு
பத்துபத்து > பப்பத்து
சோழன்நாடு > சோணாடு
மலையமான்நாடு > மலாடு
பாண்டியன் நாடு > பாண்டிநாடு

இவை விதிக்குட்படாத, ஒழுங்கற்ற புணரியல்பு (Accidental or irregular assimilation).

9.2.9. வழுக்கொலியாதல் (Gliding or linking)

ஒலித் தொடரில் இரண்டன் இடையில் விட்டிசை (Hiatus) ஏற்படுமாயின், அதனை நீக்கி, இணைப்புக் (Link) கொடுக்க, அவற்றில் ஒன்றன் அல்லது அவற்றோடு தொடர்புடைய வேறோர் ஒலி வந்து சேர்வது, வழுக்கொலியாதல் அல்லது உடன்படுத்தல் அல்லது இணைத்தலாகும். இணைப்பு, உயிராகவும், மெய்யாகவும் இருத்தலியல்பு. மெய்வருவது, உடம்படுமெய்யாகும். இவ்வாறு பாலம் போல் ஒலியிடை வருதல், விட்டிசை நிரப்பல் (Hiatus filler) ஆகும்.

பெரிதும், உயிரிரண்டு உடன்பட்டொலியாது விட்டிசைக்கும் போது, இடை ஒரு மெய் வரும். அல்லது இரண்டுயிரில் ஒன்று கெடும் அல்லது இரண்டுயிரும் இணைந்து நெடில் அல்லது அளபெடையாகும். உடன்பட்டொலியாத இரு மெய்யிடை, ஒருயிர் வந்தும், உடன்பட்டு அல்லது இணைந்தொலிக்கச் செய்யும். இயைபில்லாத ஒலி இடை வருவது அருவழக்கு. இறுதியொலியை (பின்) யொட்டி, அதனோடியைந்து வருவது பின் வழுக்கொலி (Offglide). முதல் (முன்) ஒலியையொட்டி, அதனோடியைந்து வருவது, முன் வழுக்கொலி (Onglide).

கனி + அழகு > கனியழகு (ய்) - (இ + ய்)
பலா + இனிது > பலாவினிது (வ்) - (ஆ + வ்)
கோ + இல் > கோவில் (வ்) - (ஓ + வ்)

இவை இறுதியோடியைந்து இடை வந்தனவாதலினால், பின் வழுக்கொலி (Offglide).

கோ + இல் > கோயில் (ய்) - (ய் + இ)
ஆ + ஈரைந்தும் > ஆயீரைந்தும் - (ய்) - (ய் + ஈ)
வேல் + யாது > வேலியாது - (இ) - (இ + ய்)

இவை முதலொலியோடியைந்து இடை வந்தனவாதலினால், முன் வழுக்கொலி (Onglide).

கனி + இனிது > கனியினிது (ய்) - (இ+ ய் + இ)
தே + இலை > தேயிலை (ய்) - (ஏ + ய் + இ)
கா + அழகு > காவழகு (வ்) - (ஆ + வ் + அ)

இவை, இறுதி, முதல் ஆகிய இரு வழியும் இயைந்தன.

பொரு + அன் > பொருநன் (ந்)
அறி + அன் > அறிஞன் (ஞ்)
தோழி + ஆர் > தோழிமார் (ம்)
தாய்மார், தந்தைமார், தோழன்மார் (ம்)
/இ,ய்,வ்,ந்,ஞ்,ம்/ - முதலியன வழுக்கொலி அல்லது இணைப்பொலியாக இடை வந்து ஒலிப்பெளிமையாக்கின.

1. அது + அன்று > அதுவன்று (வ்- இடையிணைப்பொலி வர விட்டிசை நீங்கியது.
2. அது + அன்று > அதன்று (இறுதியுயிர் /உ/ கெட்டு விட்டிசை நீங்கியது).
3. அது + அன்று > அதாஅன்று (இரண்டுயிரும் இணைந்து, ஒன்றன் நெடிலாகி, அளபெடுத்துக், கூட்டுயிராகி (Diphthongisation) விட்டிசை நீங்கியது.

9.2.10. கூட்டுயிராதல் (Crasis or synaeresis)

இராஅக்காக்கை, எழூஉக்கதவு, ஏஎக்கொட்டில், பனாஅட்டு எனக் கூட்டுயிராதல் (Crasis or synaeresis) பல.

மர + அடி > மராஅடி - (அ + அ > ஆ அ) இணைந்து ஒன்றாதலாகும்

9.2.11. இரண்டு ஒன்றாதல் (Fusion)

வாழ் + நாள் > வாணாள் (ழ் + ந் > ண்)
கோல் + தீது > கோறீது (ல் + த் > ற்)
நாள் + தீது > நாடீது (ள் + த் > ட்)
மான் + நோக்கம் > மானோக்கம் (ன் + ந் > ன்)
ஊண் + நீக்கம் > ஊணீக்கம் (ண் + ந் > ண்)

என, இரண்டிணைந்து ஒன்றாதல் (Fusion) காணலாகும். உயிரிரண்டும், மெய்யிரண்டும் இணைந்து புணர்வொலிப்பில் ஒன்றாதலுமாம்.

9.2.12.

தான் + ஐ > தன்னை, தாம் + ஐ > தம்மை, நாம் + ஐ > நம்மை எனக் குறுகலும் (Shortening or reduction) புணரியல்பாம்.

9.2.13.

முன் + பாரம் > முற்பாரம் என /ற்ப்/ இரண்டும் வல்லொலியாக, இடங்கொடுத்தல் (Accommodation) ஆகும்.

9.2.14.

முன் + பாரம் > முற்பாரம் > முப்பாரம் என /ப்ப்/- ஒன்றேயாகச் சமனாதல் (Equalisation) ஆகும்.

நல் + கீரர் > நற்கீரர் > நக்கீரர்
நல் + செள்ளை > நற்செள்ளை > நச்செள்ளை
கல் + காடு > கற்காடு > கக்காடு
முன் + பாட்டன் > முற்பாட்டன் > முப்பாட்டன் என்பனவும், அவை.

9.2.15.

ஒன்று + ஆயிரம் > ஓராயிரம் (ஒன்று > ஓர் > ஓர்)
இரண்டு + ஆயிரம் > ஈராயிரம் (இரண்டு > இர் > ஈர்)
பசுமை + இலை > பாசிலை
கருமை + ஆ > காரா
என ஒலி நீட்சி (Elongation) அடைந்தது.

9.2.16.

பூச்சோலை / பூஞ்சோலை
யாக்கோடு / யாங்கோடு
புளிக் கூழ் / புளிங்கூழ்
என வல்லொலிப்படுதலும் (Hardening-voiceless),

9.2.17.

மெல்லொலிப்படுதலும் (Softening-voiced and nasalised) ஆம்.

9.2.18–23.

யக்கி (யட்சி) கோயில் > இயக்கி கோவில்
ராமர் கோயில் > இராமர் கோயில் என **முதல் தோற்றமும்** (Prothesis),

சொல்கிறான் > சொல்லுகிறான்
உரிஞ் + கடிது > உரிஞுக்கடிது
என **இடைத் தோற்றமும்** (Epenthesis or anaptyxis),

நீ சொல் > நீ சொல்லு
நீ உண் > நீ உண்ணு
என வரும் **கடைத் தோற்றமும்** (Paragoge),

இரவு > ராவு, இறால் > றாலு
தாமரை > மரை, நுமக்கு > உமக்கு
குளறுதல் > உளறுதல்
குலுக்கல் > உலுக்கல்
கூதல் > ஊதல்
முதலிய **முதற் குறையும்** (Aphaeresis or aphesis),

போழ்து > போது
ஓந்தி > ஓதி
ஆகும் > ஆம்
மருளும் > மருள்ம் > மருண்ம்
போலும் > போல்ம் > போன்ம்
என்பன போன்ற **இடைக் குறையும்** (Syncope),

வாழிய > வாழி
நீலம் > நீல்
வேண்டாம் > வேண்டா
சொன்னார் > சொன்னா
வந்தார்கள் > வந்தாக
வாய் > வா,
வாழைக்காய் > வாழைக்கா
முதலிய **கடைக் குறையும்** (Apocope) வழக்கில் வரும் ஒலியின் கூடுதல், குறைவுகளாகும். ஒலித் தொடர்பில் மொழியோடு, ஒலிப்போடு, இயைந்து வரும் இத்தகைய ஒலி மாற்றங்களின் வேறுபட்டன, தனியவர் பேசும், மழலையர் பேசும் ஒலிப்பு மாற்றங்கள். அவை யாவும் விதி செய்யப்படாதன.

9.2.24. இதழ்ச்சாயல் (Labialisation)

வெரிந் + புறம்	>	வெரிப்புறம் (ந் > ப்)
தேன் + பானை	>	தேம்பானை (ன் > ம்)
மேல் + பாலம்	>	மேம்பாலம் (ல் > ம்)
கால் +பு	>	காம்பு (ல் > ம்)
திண் + பு	>	திம்பு > தெம்பு (ண் > ம்)
வன் + பு	>	வம்பு - (ன் > ம்)
ஆடுவாம்	>	ஆடுவோம் (ஆ > ஓ)
கிழவன்	>	கிழவோன் (அ > ஓ)
ந்,ன்,ல்,ண்	>	ப்,ம். அ, ஆ > ஓ.

தொடர் நிலையிலுள்ள /ப்/ என்பது இதழொலி, முன் ஒலிகளாகிய / ந், ன்,ல்,ண்/ என்பனவற்றை / ப்,ம்/ ஆகிய இதழொலிகளாகவும், /வ்/

என்னும் இதழொலி, வாய்ப்பின்னொலிகளாகிய /அ,ஆ/ என்பனவற்றை /ஓ/ ஆகிய இதழொலியாகவும் மாற்றியதால், இதழ்ச்சாயலாயிற்று.

9.2.25. பற்சாயல் (Dentalisation)

குளம் + தாது	>	குளத்தாது (ம் > த்)
இல்லம் + தோல்	>	இல்லந்தோல் (ம் > ந்)
தேன் + தூதை	>	தேந்தூதை (ன் > ந்)
மரம் + தரம்	>	மரத்தரம் (ம் > த்)
வற்றல்	>	வத்தல் (ற்ற > த்த)
வயிற்றுப் பசி	>	வயித்துப்பசி (ற்ற > த்த)
பயற்றங்காடு	>	பயத்தங்காடு (ற்ற > த்த)
காற்று	>	காத்து (ற்ற > த்த)

/த்/ என்னும் பல்லொலி, முன்னுள்ள /ம்,ன்/- ஒலிகளை /த்,ந்/ என்னும் பல்லொலிகளாக மாற்றியது. /ற்ற/-என்னும் பல் முகட்டொலி /-த்த/- என்னும் பல்லொலியாக ஒலிப்பில் மாறியதால், இவை, பற்சாயலாயின.

9.2.26. பல்முகட்டுச்சாயல் (Alveolarisation)

கல் + தொழில்	>	கற்றொழில் (த் > ற்)
மான் + தோல்	>	மான்றோல் - (த் > ற்)
வில் + நுனி	>	வின்னுனி - (ந் > ன்)
பொன் + நகை	>	பொன்னகை (ந் > ன்)

/ல்,ன்/ என்னும் பல் முகட்டொலிகள், தொடர்ந்து வரும் /த்,ந்/ என்னும் பல்லொலிகளை /ற்,ன்/ என்னும் பல்முகட்டொலிகளாக மாற்றியதால் இவை, பல் முகட்டுச் சாயலின.

9.2.27. அண்ணச் சாயல் (Palatalisation)

வெரிந் + செய்கை	>	வெரிச் செய்கை (ந் > ச்)
குளம் + சேறு	>	குளச்சேறு (ம் > ச்)
அகம் + செவி	>	அகஞ்செவி > அஞ்செவி (ம் > ஞ்)
தேன் + சாடி	>	தேஞ்சாடி - (ன் > ஞ்)
தெளிந்தான்	>	தெளிஞ்சான் - (ந்த > ஞ்ச)
குளித்தான்	>	குளிச்சான் (த்த > ச்ச)
குடித்தான்	>	குடிச்சான் (த்த > ச்ச)

/ச/ என்னும் அண்ணவொலி, முன் வந்த /ந்,ம்,ன்/ ஒலிகளை /ச்,ஞ்/ என்னும் அண்ணவொலிகளாக மாற்றியது; /ந்த,த்த/ என்பன முறையே /ஞ்ச,ச்ச/ எனும் அண்ணவொலிகளாக மாறியதால், இவை, அண்ணச்சாயலின.

9.2.28. வளைநாச்சாயல் (Retroflexion)

கள் + தொழில்	>	கட்டொழில் (த் > ட்)
உண் + துறை	>	உண்டுறை - (த் > ட்)

உள் + நோக்கம்	> உண்ணோக்கம் - (ந் > ண)
கண் + நோக்கம்	> கண்ணோக்கம் (ந் > ண)
தோன்றல்	> தோணல் - (ன்ற > ண)
தின்றல்	> தின்னல் > திண்ணல் (ன்ற >ண்ண)
கன்றுக்குட்டி	> கண்ணுக்குட்டி - (ன்ற > ண்ண)

/ள்,ண்/-என்னும் வளை நாவொலிகள், தொடர்ந்து வரும் /த்,ந்/ என்னும் ஒலிகளை, /ட்,ண்/ என்னும் வளை நாவொலிகளாக மாற்றின. /ன்ற/- என்னுமொலி / ண,ண்ண/ என்னும் வளை நாவொலிகளாக மாறியது. எனவே, வளை நாவொலிச்சாயலின.

9.2.29. மெல்லண்ணச்சாயல் (Velarisation)

தேன் + குழல்	> தேங்குழல் (ன் > ங்)
குளம் + கரை	> குளக்கரை (ம் > க்)
வெரிந்+குறை	> வெரிக்குறை, வெரிங் குறை (ந் > க்,ங்)
அகம் + கை	> அகங்கை > அங்கை - (ம் > ங்)
வெட்கம்	> வெக்கம் - (ட் > க்)
மட்குதல்	> மக்குதல் - (ட் > க்)

/க்/ என்னும் மெல்லண்ணவொலி, முன்னுள்ள /ன்,ம்,ந்,ட்/ என்னும் ஒலிகளை/ங்,க்/ என்னும் மெல்லண்ண ஒலிகளாக மாற்றியமையால், இவை மெல்லண்ணச்சாயலினவாம்.

9.2.30. மூக்குச்சாயல் (Nasalisation)

மண் + யாத்த	> மண்ஞாத்த - (ய் > ஞ்)
பொன் + யாத்த	> பொன்ஞாத்த - (ய் > ஞ்)
மா + காய்	> மாங்காய் - (க் > ங்க)
பூ + பொழில்	> பூம்பொழில் - (ப் > ம்ப)
போலும்	> போல்ம் > போன்ம் - (ல்ம் >ன்ம்)
மருளும்	> மருள்ம் > மருண்ம் (- ள்ம் > ண்ம்)

/ண, ன / என்னும் மூக்கொலிகள், தொடர்ந்து வரும் /ய/ கரவொலியை /ஞ்/ என்னும் மூக்கொலியாக்கின. /க்,ப்/ என்னும் ஒலிகளின் முன், புணர்வில், இன மூக்கொலி (Homorganic nasals) தோன்றி, /க்,ப்/ ஒலிகளை /ங்க,ம்ப/ என மூக்குச் சாயல் பெறச் செய்தன. /ம்/ என்னும் மூக்கொலியால், முன் வந்த /ல்,ள்/ என்பன, முறையே /ன்,ண்/ என்னும் மூக்கொலிகளாக மாறின. எனவே, இவை மூக்கொலிச் சாயலின.

இவை யாவும், ஒரு சொல்லின் உருபன்களிடையேயும் (Morphological or internal assimilation), ஒரு சொற்றொடரில் சொற்களிடையேயும் (Syntactical or external assimilation) மொழியின் ஒலிச் சூழ்நிலைப் புணரியல்பு (Synchronic or descriptive) நிலையில் நிகழ்வன. கால நிலையில் (Diachronic or historical or evolutionary) நிகழும் ஒலி மாற்றங்களல்ல. இத்தகைய ஒலிப்பு அல்லது ஒலி மாற்றங்கள் மொழிக்கு மொழி வேறுபடலாம். ஒவ்வொரு மொழியும், ஒவ்வோர் ஒலிப்பியல்பில் சிறப்பாகக் காணப்படுதலுமாம். ஒலிப்பு மாற்றங்

களாகிய இவை, மாற்றொலி (Allophonic) யல்லாத, மாற்றுருபுக்குச் (Allomorphic) சிறப்புக் கொடுப்பன.

9.2.31. தமிழொலி மாற்றம் (Change of phones in Tamil)

1. தமிழ் மொழியில், மெய்யொலிகளுள் திரிவனவும், கெடுவனவும் /ண், ம்,ன்,ல்,ழ்,ள்/- என்பனவே. இவற்றோடு /த்,ந்,வ்/ என்பனவும் திரியும். இவற்றுள் /த்,ந்/ மொழி முதலில் திரியும். மொழியிறுதியில் /ந்/ இரு சொல்லில், /வ்/ நான்கு சொல்லில் வருவனவாதலால் /ந்,வ்/ இறுதி நிலைத் திரிபு, அருவழக்கின.

2. /ர்,ழ்/ தமிழில் யாண்டும், இரட்டிப்போ, மிகுதலோ சொற் புணர்வில் ஆகா. எனவே, எஞ்சியன மிகும். இரட்டிப்படையும். /ர்/ - பல்லடி வருடொலி (Alveolar flap), /ழ்/ - வளை நாப் பிரிவளியொலி (Retroflex lateral)- இவை, மிகா, இரட்டிப்படையா.

3. பல்லொலி (Dental)
/த்/ - பல் வெடிப்பொலி (Dental plosive)
/ந்/ - பல் மூக்கொலி (Dental nasal)

இவை மொழி முதலில் திரியும். /ந/- இறுதியிலுமாம். /வ்/ - இதழ் உரசொலி (Labial (Dento) fricative). -இது, இறுதியில் திரியும்.

4. இதழொலி (Labial)
மூக்கொலி (Nasal) - /ம்/

5. பல் முகட்டொலி (Alveolar)
மூக்கொலி (Nasal) - /ன்/
பிரிவளியொலி (Lateral) - /ல்/

6. வளை நாவொலி (Retroflex)
மூக்கொலி (Nasal) - /ண்/
பிரிவளியொலி (Lateral) - /ழ்,ள்/

இவை திரியும், கெடும்.

ஆகத், தமிழ் மொழியில், புணரியல்பில், பல்முகட்டொலி, வளைநாவொலி இரண்டும் மிகா. இரட்டிப்படையா. பல்லொலி, இதழொலி, பல்முகட்டொலி, வளைநாவொலிகளே, திரியும், கெடும். அண்ண, மெல்லண்ணவொலிகள் திரியா, கெடா. கெடுவன, திரிவன இதழொலி (Labials), நுனி நாவொலி (Apicals) என்பனவாம்.

ஒலித் தொடர்பில் மூக்கொலியைச் சார்ந்தன மூக்கொலிச் சாயலும், அதிர்வு, அதிர்வில் ஒலியைச் சார்ந்தன முறையே அவ்வச் சாயலும் பெறும். மெல்லண்ண, அண்ணமெய்யைத், தாழ் நிலை உயிரைச் சார்ந்தன, செறிவொலிச் (Compact) சாயல் பெறும். மாறாக, இதழ், பல் மெய்யை, உயர் நிலை உயிரைச் சார்ந்தன, சிதர்வொலிச் (Diffuse) சாயல் பெறும். பல், அண்ணமெய்யை, முன்னுயிரைச் சார்ந்தன தெளிவொலிச் (Acute) சாயல் பெறும். மாறாக, மெல்லண்ண, இதழ்

மெய்யைப், பின்னுயிரைச் சார்ந்தன, தெளிவில்லொலிச் (Grave) சாயல் பெறும். இன்னொலிக் கூறுகளைச் (Tones) சார்ந்தனவும் அச்சாயல் பெறும். இவையாவும், ஒலியன்களை ஒலிக்க வேண்டும் ஒலிப்புறுப்பமைப்புக் (Phonetic settings)களின் அடுத்தடுத்த இயக்கத்தாலாகும் மாற்றங்களேயாம்.

10 வரலாற்று முறை (காலநிலை) ஒலிப்பியல் (Historical or diachronic (evolutionary) phonetics)

10.0. ஒலியும், காலமும் (Phone and temporal factor)

ஒலியன்களின் தொடர் நிலையில் ஏற்படும் புணர்நிலை ஒலிப்பு மாற்றங்களிலிருந்து வேறுபட்டன, இடத்தால், காலத்தால் ஏற்படும் ஒலிப்பு மாற்றங்கள். ஒன்றன் இன மொழிகள் (Related languages), கிளை மொழிகள் (Dialects), சமுதாய மொழிகள் (Sociolects) முதலியன இடத்தால் (காலத்தாலும்) பல நிலையில் வேறுபட்டு, ஒலிப்பாலும், ஒலியன் அமைவாலும் முதன் மொழியிலிருந்து வேறுபடலாகும். இவ்வாறான இடத்தாலமையும் ஒலி மாற்றம் (Geographical phonology) வேறு. ஒரு மொழியின் காலத்தாலமையும் ஒலிமாற்றம் (Historical phonology) வேறு. இத்தகைய ஒலிமாற்றத்தை, அவ்வம் மொழியின் ஒலிப்பு, ஒலியன் முறைக்குத் தக்கவாறு, அவற்றுக்குட்படுத்திக் காண்பதே முறை.

ஒலி நிலையில் காலப் போக்கில் ஒன்று இரண்டாகலாம். (Split). இரண்டு ஒன்றாகலாம் (Merger). ஒன்று இன்னொன்றாகத் திரியலாம் (Shift). கூட்டொலி ஒன்று, தனியொலியாக ஒன்று படலாம் (Fusion). தனியொலி ஒன்று ஈரொலிக் கூட்டாகப் பிளவு படலாம் (Fission). அதிர்வு (Voice), 'ஃ' ஒலியியல்பு (Aspiration), மூக்கியல்பு (Nasality), தெளிவு (Acuteness), செறிவு (Compactness), இறுக்கம் (Tenseness), நீட்சி (Length), இதழ் குவிவு (Lip rounding), வன்மை (Fortis feature), உரசியல்பு (Friction), இன்னொலியியல்பு (Tonality) முதலானவற்றை இழக்கலாம் அல்லது பெறலாம்.

10.1. கூட்டொலி ஓரொலியாதல் (Fusion)

ஒலியிரண்டன் கூட்டம், ஓரொலியாதல் (Fusion) என்பது, இரு வகைப்படும். (1) அம்மொழியின் கண் இருக்கின்ற ஓரொலியாதல் (2) அம்மொழியின் கண் இல்லாத புதிய ஓரொலியாதல், என.

பழந்திராவிட மொழியில் (Proto Dravidian) ஐ, ஔ- உயிரொலிகள் இல்லை. அ + இ / அ + ய் - ஒலிகளின் கூட்டமைப்பு, /ஐ/- ஒலிப்பையும், அ+உ/அ+வ்- ஒலிகளின் கூட்டமைப்பு /ஔ/ ஒலிப்பையும் தந்தன. இவ்வாறான கூட்டமைவுகள் பிற்காலத்தில் நீங்கித் தனி /ஐ,ஔ/ ஒலியன்களாக உருவாயின. ஆக, ஒரு காலத்தில் இரண்டன் கூட்டம்,

பிற்காலத்தில் தனிவேறொலியனாயிற்று. இவ்விரண்டும், மொழி யமைவில், முன் இல்லாத, பின் தோன்றல்கள். பிரெஞ்சு மொழியில் /உயிர் + மூக்கொலி/, பிற்காலத்தில், தனி மூக்கொலியுயிராகப் (Nasal or nasalised vowels) புதியதோர் உயிரொலி வகையாயிற்று. சில சீனக் கிளை மொழியுள், /உயிர் + வெடிப்பொலி/, உயிரின் ஐந்தாவது இன்னொலிக் கூறாகத் (5th tone of the vowels). தனி ஒலியுருவாயிற்று. சில சிலேவிக் மொழிகளில் /dl > l/ எனவும், இலத்தீனத்தில் /dw > b/ எனவும் மாறியுள்ளன. சில மொழிகளில் ஒரு நெடிலும், குறிலும் இணைந்து, அளபெடைபோல், புதிய நெடிலாக மாறுவதும், வெடிப்பொலியும், உரசொலியும் இணைந்த கூட்டுத், தனி வெடிப்புர சொலியாக மாற்றங்கொள்வதும் போன்றன பல.

10.2. ஓரொலி கூட்டொலியாதல் (Fission)

ஓரொலி பின், இரு கூறாகி, இணைவாக ஒலிக்குமாயின், அது, பிளவு (Fission) என்னப்படும்.

'செர்போ குரோஷியன்' (Serbo croatian) மொழியில், 'ஐ' நெடில் தனியொலி (ie) பிளவுற்று, /i + e/ என இணைவாக ஒலிக்கின்றது.

இன்றைய தமிழில் /ஐ, ஔ/ என்பன தனி நெடில் ஒலியன் களாயினும், வழக்கில், ஐயர் = அய்யர், ஔவை = அவ்வை என, இரு கூறுடையனவாகவே (அ + ய்/ அ + வ்) கருதப்படுகின்றன, கிளை மொழி வழக்கில்.

உக்ரேனிய மொழியில், அண்ணச் சாயல் இதழொலி (Palatalised labial) ஆகிய தனியொலி, /p + j/- என, இரு கூறுடையதாக மாற்றமடைந்துள்ளது - (Jakobson, Roman, 1990: 195).

10.3. கலத்தல் அல்லது இணைதல் (Merger)

கூட்டொலி, ஓரொலியாதல், ஓரொலி கூட்டொலியாதல் தவிரத், தனியொலியொன்று தன்னிலையிழந்து, வேறோர் ஒலியோடு கலத்தல் அல்லது இணைதல் (Merger or dephonologization or phonological devalorization) ஏற்படலாம்.

சில 'ருஷ்ய' மொழிகளில் /அ (a)/, அண்ண மெய்களின் பின் /எ (e)/ ஆகவும், ஏனைய மெய்களின் பின் /எ (e)/ > /அ(a)/ ஆகவும் மாறி, /அ (a), எ (e)/ இரண்டும் இணைந்து ஒன்றாகின்றன.

சப்பானிய மொழியில் மொழி முதலில், மூக்கின மெய்யின் பின் /Z/ ஒலியாகவும், இரண்டுயிரிடை /z/ ஒலியாகவும் ஒலித்து, இரண்டு வேறுபட்ட ஒலிகளும் இணைந்து ஒன்றுபடுகின்றன.

'போலிஷ்' மொழியில், / š > s, ž > z, č > c, j > Z/ என, இரண்டிரண்டு இணைந்து ஒன்றுபடுகின்றன.

'சுலோவக்' (Slovak) மொழியில், உயிர் நெடில், குறிலாகி, இரண்டும் கால வேற்றுமையின்றி இணைந்து, கலந்து ஒன்றாகும்.

10.4. பிளவுபடல் அல்லது இரண்டாதல் (Split)

ஓரொலியனே, காலத்தால் இருவேறு, ஒலியன்களாகிப் பிளவுறலும் (Split or phonologization or phonological valorization) ஆம்.

'லாத்வியன்' (Latvian) மொழியில் /k,c/ இரண்டும், ஓரொலியின் புணரியல் வேறுபாடாக (Combinatory variants) இருந்தன. பின் இருவேறு தனியொலியன்களாயின.

'போலாபியன்' (Polabian) மொழியில், /x,x/ எனும் இரண்டொலி களும், ஒன்றன் புணரியல் வேறுபாடாக இருந்தன. பின், இரு வேறு தனியொலியன்களாயின.

'ருஷ்ய' மொழியில், /x >x v > v/ ஆகிப், பின் /v,v' . f,f'/ என நான்கு ஒலியன்களாயின.

பழந்திராவிடத்தில் ஆய்த ஒலி /ஃ/ இல்லை. பழந்தமிழில், அது முதல் ஒலியைச் சார்ந்து வரும் சார்பொலியாகவே கருதப்பட்டது. பின், அது ஒரு தனியொலியாக ஆகியது. ஆயின், ஆய்தம் உருபு, சொற்புணர்வில் தான் அதுவும் /ல்,ள்,வ்/- ஒலிகளின் முன் வலிவர / ல், ள்,வ்/ > /ஃ / - ஆக மாறி வருகின்றன (Combinatory variant). இவ்வாறாகப் புணர் மொழியிலன்றிப், பிறவாறாக, வாராத ஆய்தம், தனியொலி யாகக் கருதப்பட்டு வருகின்றது.

ல், ள், வ் - + வல்லொலி > ஃ வல்லொலி

பழந்தமிழில், /ங் க்/- என்று இன மெலிவலியாகவன்றி, வேறு எவ்விடத்திலும் /ங்/ வருவதில்லை.

எ- -டு : ஆங்கனம் , ஆங்கு, யாங்காகியர்- என. பிற்காலத்தில், ஆங்கனம் > அங்ஙனம், ஈங்கனம் > இங்ஙனம்- என்றிவ்வாறு /க்>ங்/ ஆகியது. இவ்வாறன்றி, /ங/ உயிர் மெய் வழக்கில்லை. /ங/கரத் தோடாகிய, பிற உயிர் மெய்யும் வழக்கில்லை. எனவே, இயல்பான /ங்/ வருகை /ங் க/- ஒன்றே. இத்தகைய இன மெலிவலி கூட்டுப், புணர்நிலை வடிவே. /க/ ம் முன், பிறவர, அவை, ஒலிப்பெளிமை கருதிக் /க/ - ம் முன், அதன் இனமெலியாக மாறியதே /ங் க/ அல்லது புணர்வில், ஒலிப்பொன்றுபாடு கருதிக், /க/ ம்முன் /ங்/ தோன்றியதேயாம்.

எ - டு :

மரம் + காய்ந்தது	>	மரங்காய்ந்தது
ஆன் + கு	>	ஆங்கு
தேன் + கலம்	>	தேங்கலம்
வெரிந் + குறை	>	வெரிங்குறை
மா + காடி	>	மாங்காடி

எனவே புணர்மொழியில்,

1. வலிமுன் / ல்,ள்,வ்/ > ஆய்தமாம்.
2. கம் முன் / ம்,ன்,ந்/ > /ங்/ - ஆம்.

3. சும்முன் /ங்/ - ஆம்.

ஆக, /ல்,ள்,வ்/ > ஃ + வலி
/ம்,ன்,ந்/ > ங் + க்
\- + > ங் + க்

/ஃ,ங்/ - தோற்றம், புணர்விலன்றிப் பிறவாறில்லை. எனவே, இவ்விரண்டும் முதலொலியின் புணரியல் வேறுபாடாகத் தோன்றிப் பின் முதலொலியினின்று பிளவுற்றுத் தனியொலியன்களாக மாறியமையால், பிளவு (Split or phonologizaton or phonological valorization) ஆகியது.

10.5. மாறுதல் (Shift)

ஓரொலி காலத்தால் வேறோர் ஒலியாக மாற்றம் (Shift or rephonologization or phonological revalorization) கொள்ளலுமாம்.

பழம் போலிஷ் மொழியின் /r'/ (Palatalised) > / ř / (Hushing) ஆக மாற்றமடைந்தது.

வடமேற்கு, கிழக்கு 'சிலேவிக்' (Slavic) மொழிகளின் /g/, பின் /ɣ/ (Spirant) ஆக மாறியது.

இத்தாலிய மொழியில், 'ஹ்' ஒலி பெற்ற வெடிப்பொலிகள் (Aspirated stops) /f/ - ஒலியாக மாறின. e.g. / bh > f/.

பழஞ் 'செக்' (Proto-Czech) மொழியில், மேலெழும் இன் னொலியோடு கூடிய உயிர் நெடிலும், வீழ் இன்னொலி கூடிய உயிர் நெடிலும், முறையே, நெடில், குறில்களாயின.

சில 'போலிஷ்' (Polish) மொழிகளில், உயிர் /a.ɒ/ > முறையே, /æ,ɑ/ - ஒலிகளாயின.


இந்தோ- ஐரோப்பிய மொழிகளில் 'ஹ்' ஒலியோடு கூடிய, அதிர்வுடை மெய்களும் (Aspirated voiced consonants), 'ஹ்' ஒலியில்லாத அதிர்வுடை மெய்களும் (Non-aspirated voiced consonants) பின், முறையே அதிர்வுடைய, அதிர்வில்லாத மெய்களாயின. 'ஹ்' ஒலியோடு கூடிய அதிர்வில் ஒலிகளும் (Aspirated voiceless sounds), 'ஹ்'- ஒலியில்லாத அதிர்வில் ஒலிகளும் (Plain voiceless sounds) முறையே, இறுகிய (Tense), நெகிழ்ந்த (Lax) 'ஹ்' - ஒலியோடு கூடிய அதிர்வில் ஒலிகளாயின (Aspirated Voiceless sounds). சில 'ருஷ்ய' மொழிகளில், /ie,uo/ உயிரொலிகள், முறையே, /e,o/ ஆக மாறின. - (Jakobson, Roman, 1990 : 187 - 193).

11 ஒலியும், வரியும் (Phone and graph)

11.0. பொருள் வரி அல்லது உருபனெழுத்து (Ideograph or morphemic writing)

ஓவியவரி (Pictograph) ஒரு காலத்தில் பொருளை நேராக உணர்த்தப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இது, காலஞ் செல்லச் செல்ல, நுண் பொருளை உணர்த்தப் போதுமானதன்றாதலால், சிறிது மாற்ற மடைந்து, கருத்துக்கும் வடிவம் கொடுக்கப்பட்டுப், பருப் பொருளையும், நுண் பொருளையும் நேராக உணர்த்தும் வரிவடிவம் (Ideograph) ஆயிற்று. இதுவும், நேராக உலகப் பொருளைக், கருது பொருளைக் குறிப்பது. சீனமொழி, இவ்வரி வடிவத்தைக் கொண்டுள்ளது. இம்மொழியில் சொற்கள் (Words) ஓரசையின (Single syllable). இத்தகைய ஓரசைச் சொல்லே, உருபன் (Morpheme) என்னலுமாம். இவ்வாறான, சொல் அல்லது உருபனாகும் அசை வடிவுக்கு (Sequence of phonemes) ஒரு வரி அல்லது எழுத்தாக (Graph or grapheme), ஓரசைச் சொற்கள் (Monosyllabic words) வரிவடிவால் அல்லது எழுத்தால் தனித்தனியாகவே எழுதப்படும். சில ஈரசை உருபன்கள் (Two syllable morphemes) இரு கூறுடைய ஒரு வரிவடிவத்தாலும் எழுதப்படும். ஆகச், சீன மொழியில், ஒவ்வோர் எழுத்தும் (Grapheme) ஓர் உருபனை அல்லது சொல்லை உணர்த்தும் (Morphemic reference).

சீன மொழியில், சில எழுத்துக்கள், உருபனைக் குறியாது, பேச்சு மொழியின் ஒலியனைக் குறிக்கும் (Phonemic reference or alphabetic writing). இவ்வகையன்றி, எஞ்சிய பெரும் பகுதி எழுத்துக்கள் (Graphemes) ஒலியன் தொடராகிய அசைகளைக் குறிக்கும். இத்தகைய வரிமுறை அல்லது எழுத்துக்கு, அசையெழுத்து (Syllabic writing) என்று பெயர். அசைக்குறி வரி முறைக்கு அசையெழுத்து முறை (Syllabary) என்று பெயர். சீனப் பேச்சு மொழி, இடத்தால் வேறுபடினும், அசையெழுத்து முறையால் பொருள் ஒன்றாகவே புலப்படும். இவ்வெழுத்து முறை, சீன நாடு முழுமைக்கும் ஒன்றாதலால், பேச்சால் வேறுபட்ட அனைவரும் அவ்வெழுத்தைப் படிக்கப், புரிய முடியும். அஃதாவது, ஒரு பொருளைக் குறிக்கும் ஓரெழுத்து, அதே பொருளைக் குறிக்கும், வேறு வேறு ஒலியுருவுடைய உருபன் அல்லது சொல் (Morpheme or word)லுக்காக அவ்வம் மொழியில் பயன்படுத்தப் படும். ஒரு பொருளைக் குறிக்கும், வேறுபட்ட பல பேச்சு மொழிச் சொற்களையுடைய, பல்வேறு கிளைச் சீன மொழிகளில், அதே பொருளைக் குறிக்கும் ஒரே வரி வடிவம் மேற் கொள்ளப்படும் என்பது.



'ஜாப்பனீஸ்', 'கொரியன்' மொழிகளும் சீன முறையையே பின்பற்றின. இவ்வரி முறை, உலகில் சில மொழிகளில் மட்டும் காணப்படுகின்றன. வரிவடிவத் தொடக்கத்தில், சொல், உருபன், அசைகளுக்கு வரிவடிவம் கொடுக்கத் தொடங்கி, இன்று பேசும் ஒலிக் கூறுகளுக்கு வரிவடிவம் கொடுக்கும் நிலைக்கு மாறியது.

11.1 பொருளொலி அல்லது ஒலிக்குறிப்பு (Ideophone or sound symbolism)

ஒலியையன்றிக் கருத்து அல்லது பொருளை நேராகக் குறிக்கும் பொருட்குறி வரியுரு அல்லது எழுத்து (Ideogram or Ideograph) என்பது போன்று, கருத்து அல்லது பொருளை நேராகக் குறிக்கும் பொருள் குறி ஒலியுரு அல்லது பொருட்குறிசொல் (Ideophone) என்பதொன்று. இயல்பாக உலக மொழிகளில் உள்ள ஒலியுரு அல்லது சொல்லுக்கு, அதனோடியைந்த பொருளில்லை. ஆயின், ஒலியின் அல்லது சொல்லின் வேறுபட்ட உருவங்கள், பழக்கத்தால், அவை குறிப்பிடும் பொருள் வேறுபாட்டினைச் செய்கின்றன. ஒலியன் வேறுபாட்டினால் பொருள் வேறுபாடு போன்று, சொல் வேறுபாட்டினால் அவை தரும் பொருள் வேறுபாடென்க. அஃதாவது, சொல்தரும் ஒலித்தொடருக் கும், அது தரும் பொருளுக்கும் இயைபில்லை என்பது. இது, உலக மொழிகளின் சொல்லின் ஒலியியல்பாகும்.

மாறாக உலக மொழிகளில், ஒரு பகுதிச் சொற்களின் ஒலியின் இயல்புக்கும், பொருளுக்கும் நேரான, மறைவான இயைபுகளும் பல. இவ்வியைபு உலக மொழிகளிடைக் காணப்படும் ஒருமைப்பாடுமாம் (Universal). இத்தகைய ஒலி, பொருளியைபை மழலையர் மொழியில், ஆசிய, ஆப்பிரிக்க, ஆத்திரேலிய, அமெரிக்கப் பழங்குடி மக்கள் மொழியில் பெரிதும் காணலாகும். ஒலிப்பியல்புகள் (Distinctive features), உயிர், மெய்யாகிய ஒலியன்கள், இவற்றின் கூட்டமைவு, ஒலியழுத்தம், இன்னோசை, காலநீட்சி, இன்னொலியன்கள் (Tones), சொற்கள் எனும் இவற்றிற்கும், பொருளுக்கும் சிலபோது நேர் தொடர்பு காணப்படுகின்றன. இத்தகைய தொடர்பு,ஒலிக் குறிப்பு, ஒலி-பொருள் இயைபு (Sound symbolism, expressive or impressive phonetics, sound gestures, phonetic symbolism, semantic- sound parallelism, expressives or ideophones) எனப் பலவாறாக விளக்கம் பெறுகின்றன.

இசையில், பண்கள் இன்பம், துன்பம், எழுச்சி, வீழ்ச்சி, சினம், பெருமிதம் முதலிய பல பொருட் கூறுகளையும் புலப்படுத்தக் காணலாகும். செய்யுளிசையிலும், இத்தகைய ஓசை-பொருள் நேர் இயைபுகள் உள்ளன. இவற்றை மொழியிலும் காணலாகும். அஃதாவது, மொழி ஒலியில், சொல்லில், இலக்கணக் கூறுகளில் பொருள் இயைபு தெரிகின்றது.

ஆ - துன்பம், ஐ, ஓ, ஔ- வியப்பு, ஏ- விளி, முதலிய பல பொருட்கள் குறிப்பினிசையால் (இசை அல்லது ஓசைக் குறிப்பு) நெறிப்படத் தோன்றுவனவாகும். (தொல்காப்பியம் - 766) ஆ ஆ , ஓ ஓ, ஏ ஏ, ஔ ஔ என இணைந்தொலிக்கும் போதும், ஓசை, குறிப்பாகப் பொருள் புலப்படுத்துதலை, ஓசைக்கும், பொருளுக்கும் உள்ள தொடர்பைக் குறிப்பினிசையால் தெரிந்துகொள்ள இயலும். பேச்சில், சில ஓசைகள், அழுத்தங்கள், எடுப்புக்கள், படுப்புக்கள், நீட்சிகள், குறுக்கங்கள், மென்மை, வன்மைகள், விரைவுகள் முதலியன, இன்பம், துன்பம், அழுகை, ஆரவாரம், சினம், பெருமிதம், குமுறல், கொந்தளிப்பு, கவலை, கடுமை, வெறுப்பு, விருப்பு, உடன்பாடு, மறுப்பு, அச்சம், அகந்தை முதலிய பல உணர்வுப் பொருளை ஓசை நிலையிலேயே புலப்படுத்தல் காணலாகும். இவ்வாறு உடலுறுப்பு வெளிப்படுத்தும் மொழி சார்ந்தும் (Linguistic), பேசுவோர் உள்ள உணர்வோடு கூடிய மொழிச் சாயல் சார்ந்தும் (Paralinguistic), பேசுவோரது பேச்சுத் தரம், இயல்பு சார்ந்தும் (Extra linguistic) தோன்றும் பேச்சொலிக்கும், அதுதரும் பொருளுக்கும் இடையே தோன்றும் இயைபு, நம் நடை முறை வாழ்வில் தெரிந்து கொள்ள இயல்வது. கண், இதழ், கை, கால் அசைவு முதலியனவும் பேச்சொலியோடு இயைந்து பொருள் தொடர்பைப் புலப்படுத்தும்.

மழலையர் பேச்சில் 'மியா மியா', 'வள் வள்', 'ம்பா', 'காள் காள்', 'காக்கா', 'கொக்கக்கோ', 'குர்ர்', 'டும்டும்' எனப் பயன்படுத்தப்படும் ஒலிகளே, குறிப்பாக, அவ்வொலித் தொடர்புடைய பொருட்களைப் புலப்படுத்துகின்றன. இத்தகையன, உலகளவில், மழலையர் மொழி களில், காணப்படுவனவாகும்.

நாய் குரைப்பொலி விதி (Bow-wow theory), மணியொலி விதி (Ding-dong theory)களும், போலிச் சொற்களும் (Onomatopoeic forms) இத்தகைய ஒலி-பொருள் இயைபை உணர்த்துகின்றன. ஆப்பிரிக்க, கொரியன் மொழிகளில் ஆயிரக்கணக்கிலான சொற்கள் போலிச் சொற்களாகக் (Mimetics) குறிக்கப்பட்டுள்ளன. ஒலி-பொருள் இயைபில், முழுச் சொல்லையோ, அதன் பகுதியையோ, ஒருயிரை அல்லது மெய்யை மாற்றியோ, இரு முறையொலிப்புப் (Reduplication) பெரும்பங்கினைப் பெறுகின்றது.

எ - டு :

1. கிண் கிணி, பரபரப்பு, கரகரப்பு, சுரசுரப்பு, செக்கச் செவேல், வெள்ளை வெளேல், பச்சைப் பசேல், கணீர் கணீர், கிலு கிலுப்பை,

குடு குடுப்பை, திங்கு திங்கென்று, டாம் டாம் போடுதல், கட்டு கட, மொடு மொடுத்தல், பொடு பொடுத்தல், முணு முணுத்தல்.

2. Ding-dong, pooh-pooh, Bow wow , Tik-tik, zig-zag, Murmur.

3. 'கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்' - (தொல்காப்பியம்-6) என்பதில் 'எழூஉதல்'- என நீளொலியும், அது சுட்டும் பொருளும் இயைந்துள்ளன.

வல்லினம் - க ச ட த ப ற
மெல்லினம் - ங ஞ ண ம ன

என்பதில் முறையே வன்மை, மென்மைப் பொருள் ஒலிப்போடு இயைத்துச் சொல்லப்படுகின்றன.

குறில் - அ இ உ எ ஒ
நெடில் - ஆ ஈ ஊ ஏ ஓ ஐ ஔ - எனக் குறுமை, நெடுமைப் பொருள், ஒலிப்போடு இயையச் சொல்லப்படுகின்றன.

4. Stop, Explosive- என்பனவற்றில் தடையும், வெடிப்பும் ஆகிய பொருண்மை, ஒலிப்பிலுள்ளன. Fricative, Sibilant, Shibilant, Oral, Nasal, Affricate, Lateral, Trilled, Click என்பனவற்றில், முறையே, உரசொலி 'ஸ்', 'ஷ்' - ஒலிகள், வாயொலி, மூக்கொலி, தடையுரசொலி, பிரிவளியொலி, உருட்டொலி, 'கிளிக்' - ஒலி என்பனவற்றின் பொருண்மையினைச் சொல் முதலொலிப்புத் தருகின்றன.

5. Crack, break, Flash- என்பனவற்றில் கூட்டொலி (Cluster)- ஏறத்தாழ அவ்வப் பொருண்மையினை இயைபுறுத்துகின்றன.

6. இது - அது (இ - அ), this - that (i,a) - அண்மை, சேய்மை. run- ran, sit-sat, sing-sang, write-wrote, draw-drew, stand- stood, see-saw நிகழ்வு-இறப்பு, man-men, goose-geese, foot-feet, fortis-fortes. ஒருமை-பன்மை என இடையொலி மாற்றம் இலக்கணப் பொருள் மாற்றத்தோடு இயைபுறுகின்றது. இவ்வாறான ஒலி-பொருள் இயைபு, ஒலிக்குறிப்பு (Sound symbolism or ideophone) எனப்படும். ஒலி உள்ளத்தையும், உலகப் பொருளையும் நேராக இயைபுபடுத்துகின்றது அல்லது உள்ளத்தைச் சுமந்து சென்று, நேராகப் புலப்படுத்துகின்றது.

11.2. ஒலியனெழுத்து (Phonemic transcription)

ஓவிய வரி (Pictograph), கருத்து வரி (Ideograph) அல்லது சொல் அல்லது உருபன் வரி (Morphemic writing, அசையெழுத்து (Syllabic writing) என்பனவாகி, ஒலியன் எழுத்து முறைக்கு (Phonemic writing) வந்தது. செமித்திக் (Semitic) மொழிக் குடும்பத்தில் ஒன்றாகிய, எபிரேய மொழியோடு தொடர்புடைய 'பொனீசிய' மொழியில் (Phoenician) அசையெழுத்தாக இருந்தது, மாற்றமடைந்து, ஒலியன் எழுத்தாக (Phonemic or alphabetic writing) உருவெடுத்தது. உலக மொழிகளில் முதன் முதலாக மொழியின் அடிப்படைக் கூறாகிய ஒலியனை வரியுருவில்

பதித்தது இம்மொழியிலேயேயாம். அது, 22 மெய்யொலிகளுக்கு மட்டும் வரிவடிவம் கொடுத்ததே தவிர, உயிரொலிகளுக்கு வரிவடிவம் கொடுக்கவில்லை. இவ்வொலி- வரி எழுத்து முறை, கிரேக்க நாட்டிற்கு வர, அம்மொழியில் உயிரொலிக்கும் வரியுருக் கொடுக்கப்பட்டு, ஓரளவு குறில், நெடில் பகுப்பும் தோன்ற, ஏறத்தாழ ஒலிக் கூறுகளை, வரிக்கூறுகளாக்கும், ஒன்றுக்கு ஒன்று எனும் முறை தொடங்கி வளர்ந்தது. தொடர்ந்து, இன்று, ஒலியழுத்தம், இன்னோசை, காலநீட்சி, இன்னொலி வகைகள் (Tones), ஒலிப்புக் கூறுகள் முதலானவற்றிற்கும் வரியுருக்கொடுத்துப் பேசுவதை அவ்வாறே பதிய வைக்கும் கலை, வளர்ந்து வந்துள்ளது. பேச்சொலி, காற்றோடு கலந்து மறையும். அதனைப் புலப்படுத்திக் காட்டக், காக்க, ஒலிக்கும், வரிக்கும் தொடர்பு வேண்டும். இத்தகைய தொடர்பு உலக மொழிகளில் மேற் கொள்ளப்பட்டு, மொழியியற் கலையோடு வளர்ந்துள்ளது. இவ்வெழுத்துக்கலை (Graphonomy) உலகின் எல்லாக் கலைகளையும் வளர்த்து, மனித வளத்தையும், நூலகத்தையும், பல்கலைக் கழகங் களையும், கலைக் கூடங்களையும், கூட்டங்களையும் ஆக்கிப் பெருக்கியுள்ளது.

எழுத்து முறையில் ஒன்றுக்கு ஒன்றாக, ஓரொலியனுக்கு ஓரெழுத்து என இருப்பதே முறையும், எளிமையும் ஆகும். சிலபோது ஓரொலிக்கு ஈரெழுத்தும் (Digraph), ஈரொலிக்கு (Diphone) ஓரெழுத்தும், ஈரொலி இணைவுக்கு, ஈரெழுத்திணை வரியும் அருமையாக அமைப்பதுமாம். ஆயினும் ஒன்றுக்கு, ஒன்றே உகந்தது. பெரிதும் ஓரொலியனுக்கு ஓரெழுத்தாக அமையும் இவ்வெழுத்து முறைக்கு ஒலியன் அல்லது அகலியல் எழுத்துமுறை (Phonemic or alphabetic or broad transcription) என்று பெயர். இது, ஒருவர் பேச்சின் பதிவாயினும், சமுதாயப் பேச்சின் படியாகவே கருதப்படும்.

11.3. மாற்றொலியெழுத்து (Allophonic transcription)

பேச்சில் ஓரொலியனின் அமைவு முறை (Structural), சூழ்நிலை முறை (Contextual or environmental) வேறுபாடாகிய மாற்றொலி களுக்கும் (Allophonic variants) வரி வடிவு வேறு வேறு கொடுத்து எழுதும் முறைக்கு, மாற்றொலி எழுத்து முறை (Allophonic transcription) என்று பெயர். ஒலியன், மாற்றொலி எழுத்து முறை இரண்டும் ஒலியனை முதன்மையாகக் கொண்டு வரியமைப்பதாகும். இவ் விரண்டும் ஒலியன் வேறுபாட்டு முறைக்கு உட்பட்டன. ஒலியன் எழுத்து முறையில், கட்டமைவு, சூழ்நிலையில் ஓரொலி ஒலிப்பு மாறுபடினும், எவ்விடத்தும், ஒரே எழுத்தே பயன்படுத்தப்படும். மாறாக, மாற்றொலி எழுத்து முறையில் ஓரொலியனின் கட்டமைவு, சூழ்நிலை மாற்றத்தால் ஏற்படும் மாற்றொலிகளுக்கு வெவ்வேறு எழுத்துக்கள் பயன்படுத்தப்படும். ஒலியன், மாற்றொலி போல, எழுத்து, (Grapheme), மாற்றெழுத்து (Allograph) என்று, ஒரு வரியுருவுக்கு, அதனோடியைந்த மாற்று வரியுருக்கள் உள்ளன.

11.4. ஒலிப்பெழுத்து (Phonetic transcription)

ஒரு மொழியின் ஒலியனைக் கருதாது, ஒருவரது, ஒரு காலத்துப் பேச்சொலிப்பை, அம்மொழியின் ஒலிப்பமைவுக்குட்படுத்திய நிலையில் பதிக்கும் வரிவடிவ அல்லது எழுத்து முறைக்கு, ஒலிப்பெழுத்து முறை (General phonetic transcription or impressionistic transcription) என்று பெயர். இதற்கு ஒலியன் எழுத்து முறை போலன்றி, மிகுதியான எழுத்துக்கள் வேண்டும். இதுவும், மாற்றொலி எழுத்து முறையும் நுண்ணிய ஒலிப்பதிவு எழுத்து முறையாதலினால் குறுகியல் அல்லது நுண்ணியல் எழுத்து முறை (Narrow transcription) எனப் பெயர் பெறும்.

11.5. சொல்லொலிப்பு முறை எழுத்து (Canonical transcription)

அகர முதலிகளில் (Dictionaries) மொழியின் சொற்கள், தனித் தனியாக எடுத்துச் சொல்லப்பட்டு, அவற்றின் ஒலிப்பு முறையும், ஒலியன் அல்லது மாற்றொலி வரி முறையில் குறிப்பிடப்படும். இவ்வாறான, தொடர் நிலையிலன்றித் தனித்தனியான சொற்களின் ஒலிக்க வேண்டிய முறையைத் தெரிவிப்பது, சொல் ஒலிப்பு அல்லது ஒலிமுறைப் பதிவு அல்லது வரியமைவு (Canonical transcription) எனப்படும்.

எளிய வரிமுறை, மிகக் குறைந்த எண்ண எழுத்துக்களையுடைய வரி முறை, ஒலியன் வரிமுறையே (Phonemic transcription) ஆகும். இதனின் மிக்கது, மாற்றொலி வரிமுறை (Allophonic transcription). அதனினும் மிக்க எண்ணமுடைய, அரிய, நுண்ணிய வரி முறை, ஒலிப்பு முறை எழுத்தாகும் (Phonetic transcription).

11.6. எளிய வரியும், ஒப்பியல் வரியும் (Simple and comparative transcriptions)

மொழியியலை, எண்ணத்தை அடியாகக் கொண்டு, ஒலியன் முறை, மாற்றொலி முறை என இரண்டாக, வகை பெறும். அச்சு அல்லது எழுத்தின் வடிவை அடியாகக் கொண்டு, எளிய முறை வரிவடிவு (Simple transcription), ஒப்பியன் முறை வரிவடிவு (Comparative transcription) என இரு வகைப்படும். ஒலியன் முறையில், ஓரொலியனின் மாற்றொலிகளையும் உள்ளடக்கி, ஓரொலியனுக்கு ஒரெழுத்து அல்லது கூட்டெழுத்து (Digraph) எனவமைப்பது, மாற்றொலி முறையில், ஓரொலியனின் மாற்றொலிகள் அனைத்திற்கும் வெவ்வேறு வரி வடிவங்கள் கொடுக்க, ஓரொலியனுக்குப் பல எழுத்துக்களாக அமைப்பதினும் எளிய முறை, (ஒலியன் முறை) போல, ஓரொலிய னோடு ஒலிப்புத் தொடர்புடைய பிற ஒலியன்களுக்கும் சேர்த்து, ஒரே வரி வடிவம் கொடுப்பது. எடுத்துக்காட்டாக, [r] ஒலிப்புடைய (Rhotic sounds) வருடொலி (Flap), ஒற்றொலி (Tap), உருட்டொலி (Trilled) அனைத்துக்கும் ஒரே வரி வடிவம் [r]- எனக் கொடுப்பதாகும், அது. மாறாகப், பிற மொழிகளோடு ஒரு மொழியொலிகளை ஒப்பு நோக்கி அறிவதற்காக, மேலே குறிப்பிடப்பட்ட மூன்று ஒலிகளுக்கும்

வெவ்வேறு வரிவடிங்களைத் தனித்தனி வேறுபடுத்திக் [r,ɹ,R] கொடுப்பதாகும். இவற்றை, அதிர்வு, அதிர்வின்மை என வகைப்படுத்தி வேறு வேறு கொடுத்தலுமாம். எல்லாவற்றையும் உள்ளடக்கிய பொதுவெழுத்தைப் (Cover - symbol) பயன்படுத்துவது, எளிய முறை. எல்லாவற்றையும் வேறுபடுத்தி வடிவங் கொடுப்பது, ஒப்பியன் முறை (Typographic). பிற ஒலிகளுக்கும் இவ்வாறே.

11.7. கால அளவு வரியும், தரங்குறி வரியும் (Quantitative and qualitative transcriptions)

அகர முதலி முறையிலமைந்த சொற்களின் ஒலியெழுத்து (Orthographic writing, based on spelling) ஒலிப்பெழுத்து முறையில் வேறுபடும். குறில், நெடில் என்ற கால அளவில், ஒன்றிலிருந்து ஒன்றை வேறுபடுத்திக் காட்டப் பல முறைகள் மேற்கொள்ளப்படும். எ - டு : [i : ii (or ı :)] . [i : :] - (Extra long) - காலவளவு குறித்த எழுத்து முறை (Quantitative transcription) யிலிருந்து, ஒலித்தரம் குறித்த எழுத்து முறை (Qualitative transcription) வேறுபட்டது. ஓரொலியின் பல்வேறு தரங்களைக் குறிக்கப் பல்வேறு வரி வடிவங்களைப் பயன்படுத்துவது, அது. எ - டு : [i:ı], [u:U] , [ɔ: ʌ], [ɑ:ɒ], [e:ɛ], [ə:ɜ]

11.8. உலக ஒலிப்பியல் வரி (International Phonetic Alphabet)

